இஃது

# ஆசிரியர் அமிர்தசாகரர்

செய்தது.

மகாமகோபாத்தியாய, டாக்டர்
உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

யாழ்ப்பாணத்துச் சுன்னாகம்

## அ. குமாரசுவாமிப்பிள்ளை

இயற்றிய புத்துரையுடன்

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 090

...ட்டணம்

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

பிலவங்கஹு பங்குனிமீ.

இதன்விலை ரூபா - க.

(Copyright Registered.)

# முகவுரை.

உலகத்திற் சிறந்த மக்களாற் பேசப்படும் பேச்சு ஓசையும் பொருளுமென இரண்டு கூறுபாடுடைத்து. ஆராய்ந்து பார்க்கின் ஓசையும் இரண்டு கூறுபாடுடையதாகும்: ஒன்று பொருளுணர்த்தற்கின்றியமையாததாயுள்ளது; மற்றொன்று இசையோடு தொடர்புடைத்தாய்ப் பொருணுட்பங்களை அறிவிப்பது. இவற்றுள் பொருளுணர்த்தற்கின்றியமையாத ஓசையே நூல்வடிவமைந்து காணப்படுவது; பொருணுட்பங்களை உணர்த்தும் இன்னிசை அவ்வாறு காணப்படுவதன்று; நூல்கட்கு மூலமுள்ள ஒலியெழுத்து உருவெழுத்துக்கள் இவ்வின்னிசையை உணர்த்த வல்லனவன்மையின்.

நூல்கள் செய்யப்படுவது செய்யுளால். அச்செய்யுள் உரைச்செய்யுள் பாச்செய்யுளென இருவகைப்படும். இவற்றுள் பாச்செய்யுளே சிறந்தது; ஏனெனில், அதுவே மேற்கூறப்பட்ட ஓசையின் சிறந்த கூறாய பொருணுட்பங்களை உணர்த்தும் இன்னிசையையும் ஒருவாறு புலப்படுத்தற்கியைந்ததாமாதலின். பாச்செய்யுளின் உறுப்புக்களாய மோனை, எதுகை, முரண், இயைபு, தூக்கு முதலியனவெல்லாம் இவ்வின்னிசையைத் தோற்றுவிக்க எழுந்தவைகளே. இச்சிறப்புப்பற்றிப் பாச்செய்யுளே உலகிற் செய்யுளென வழங்கப்படும்.

செய்யுளின் இலக்கணமே யாப்பெனப்படுவது. மக்களின் கருத்து வேறுபாட்டை உள்ளபடி ஒருவகையான் உணர்த்தற் கியைந்தது செய்யுளேயாகலின் அதன் இலக்கணவுணர்ச்சி மக்களின் உள்ள நிகழ்ச்சிகளை ஆராயவும் உலகிற் கெடுத்துரைக்கவும் புகுவார்க்கு ஒருதலையான் வேண்டற்பாலதென்பது தெற்றெனப்புலப்படும்.

இத்தன்மைத்தாய சிறந்த செய்யுளிலக்கணத்தை ஆதியில் தமிழில் இயற்றினார் யாவரென்பது இப்போது அறியக்கூடியதாயில்லை. அருந்தவக்கொள்கை அகத்தியனாரே ஆதியில் தமிழிற்கு எழுத்துச் சொற் பொருள் யாப்பு அணி என்னும் ஐந்திலக்கணமும் இயற்றினாரென்று சிலர் கூறுவராலெனின், அற்றன்று. அவர் ஐந்திலக்கணமும் தமிழிற் புதிதாயியற்றினாரல்லர்; வடமொழியில் முன்னுள்ள வியாகரண நூல்களையெல்லாம் ஆராய்ந்து அவைகளெல்லாவற்றினுஞ் சிறக்கத் தாமொரு நூலியற்றிய ஆசிரியர் பாணினியார் போலத், தமிழில் முன்னுள்ள இலக்கண நூல்களையெல்லாம் ஆராய்ந்து அவைகளெல்லாவற்றினுஞ் சிறக்கத் தாமோரிலக்கணம இயற்றினாரென்க.

அகத்தியனாராற் செய்யப்பட்ட அகத்தியத்தில் செய்யுளிலக்கணம் பரந்து கிடந்ததென்றும், அதனைத் தொல்காப்பியர் சுருங்கச்செய்தமையின் அதன் அருமை நோக்கிப் பல்காப்பியர் பகுத்துக் கூறினாரென்றும், நச்சினார்க்கினியர் கூறுவர். ஆசிரியர் பல்காப்பியருக்குமுன் பல்காயனார் முதலாயினாரும், அவரின் பிற்காலத்துக் காக்கைபாடினியார், சிறுகாக்கைபாடினியார், அவிநயர், நக்கீரர், நத்தத்தனார், மயேச்சுரர் முதலாயினாரும் செய்யுளிலக்கணஞ் செய்தனர். யாப்பியல், சங்கயாப்பு, பாட்டியல் முதலிய நூல்களும் இவர்கள் காலத்திலேயே தோற்றும் போலும். இவற்றுள் தொல்காப்பிய மொழிய எஞ்சிவெல்லாம் இறந்தொழிந்தன. தொல்காப்பியமும் இப்போது மிகச்சிறுபான்மையாயன்றி எடுத்தாளப்படுவல்லை. பிற்காலத்துச் சமணர்களாற் செய்யப்பட்ட யாப்பருங்கலமும் யாப்பருங்கலக்காரிகையுமே இப்போது வழக்கின்கணுள்ளன. இவற்றுள்ளும் யாப்பிலக்கணம் கற்போரால் பெரும்பாலும் கற்கப்படுவது காரிகை ஒன்றுமே.

யாப்பருங்கலம் காக்கைபாடினியத்தைப் பின்பற்றியது; தொல்காப்பியத்தின் வழித்தாயதன்று. அது நேர்பசை நிரைபசை வேண்டாது காக்கைபாடினியார்போல நாலசைப்பொதுச்சீர் வேண்டுவதனாலும், தாழிசை துறை

விருத்தங்களைத் தொல்காப்பியனார் முதலாயினார் போலக் கொச்சகக்கலிப்பாற் படுத்தாது பாவினங்களென வகுப்பதனாலும், பிறவாற்றாலும் இனிது புலப்படும். யாப்பருங் கலத்தின் பெருமையினை

சொல்லிற் சுருங்கிப் பொருள்பெருகித் தொன்ஞானம்
எல்லாம் விளக்கி யிருளகற்றும்—நல்யாப்
பருங்கலமும் வல்லவர் தாமன்றே கேள்வி
ஒருங்கறிய வல்லா ருணர்ந்து.

என்று சான்றோர் கூறிய வெண்பா இனிது விளக்கும்.

யாப்பருங்கலக்காரிகை யாப்பருங்கலத்தின் வழிப்பட்டது. இது அதன் பெயர் மாத்திரையானே பெறப்படும். இக்காரிகைக்கு உரை எழுதிய குணசாகரர் இதனை அவினயர் யாப்பிற்கு நாலடிநாற்பது போல யாப்பருங்கலமென்னும் யாப்பிற்கு அங்கமாய் அலங்காரமுடைத்தாகச் செய்யப்பட்டமையால் யாப்பருங்கலக்காரிகை யென்னும் பெயர்த்தாயிற்று என்பர். இந்நூல் செய்தார் அமுதசாகரரென்பது குணசாகரருரையானே விளங்கும்; அது வேறொன்றிற் பெறப்படுவதன்று. யாப்பருங்கலஞ் செய்தாரும் இவரேபோலும். அதன்பாயிரம்

யாப்பருங் கலநனி யாப்புற வகுத்தோன்
தனக்கு வரம்பாகிய தவத்தொடு புணர்ந்த
குணக்கடற் பெயரோன் கொள்கையின் வழாஅத்
துளக்கறு கேள்வித் துகடீர் காட்சி
அளப்பருங் கடற்பெய ரருந்தவத் தோனே

என்று கூறும். அதன் உரையாசிரியர் கடற்பெயர் அருந்தவத்தோன் யாரென்று கூறிற்றிலர். அவர் "விரவியு மருவியும் வேறு மொரோவழி—மருவியும் பெறுது வழங்கு மன்னவையே" என்னும் சீரோத்துச் சூத்திரத்துரையுள் "இந்நூலுடையாரும் 'மாஞ்சீர் கலியுட்புகா' என்னும் புறனடையானும் பிறவாற்றானும் *** விளங்கக் கூறினார்" என்பதனால் யாப்பருங்கலம் செய்தாரே காரிகை செய்தவரும் என்பது பெறுதும்.

காரிகைக்குக் குணசாகரர் உரைத்த உரையிலுள்ள குறைபாடுகளை நோக்கி ஒரு புத்துரை இயற்றித்தந்தார் நல்லிசைப் புலமைவாய்ந்த யாழ்ப்பாணச் சுன்னாகத்துக் குமாரசுவாமிப்புலவர். அவருரை காரிகைகளைப் பிரித்து, முடிபுகளைத் தெரித்து, பொருளை வரையறுத்து, அதற்கின்றியமையாதவைகளை எடுத்துக்கூறி, உதாரணங்கள் இலக்கணமமைந்து கிடக்குமாற்றைப் புலப்படக்காட்டி, செய்யுளுறுப்பாதியவற்றின் பெயர்க்காரணங்களை விளக்கிச் செல்கின்றது. காரிகைப்பொருளைக் கற்றலோடமையாது மேலுமாராய்ச்சி செய்யுமாறு மாணாக்கர்களைத் தூண்டி, தமிழில் பாக்கள் நான்காயினமைக்கும், பாக்களினடிகள் அளவடிகளானமைக்கும், தாழிசை துறை விருத்தங்கள் பாவினமென வகுக்கப்பட்டமைக்கும், மற்றும் இவைபோல்வன பிறவற்றிற்கும் காரணங் கண்டு கொள்ளச் செய்து பெரும்பயன்றருதற்கேற்றதாயமைந்திருத்தலின் அறிஞர் இவ்வுரையை விரும்பிக்கைக்கொள்வரென்று எண்ணுகின்றேன்.

சென்னபட்டணம்
பிலவங்க௵
பங்குனி௴.

தி. த. கனகசுந்தரம்பிள்ளை.

# உபக்கிரமணிகை.

தமிழ்நூல்களையெல்லாம் ஐயந்திரிபின்றி எளிதிற் கற்று மெய்யுணர்வெய்தற்கு இலக்கணம், தருக்கம், நிகண்டு முதலிய கருவிநூல்கள் இன்றியமையாதனவாய் வேண்டப்படுவன. இவற்றுள்ளே இலக்கணமாவது உலகில் வழங்குஞ் சொற்களையும் செய்யுளில் வழங்குஞ் சொற்களையும் ஆராய்ச்சி செய்து முட்டறுத்துப் பொருண் முடிபு தெரிந்துகொள்ளற்கருவி. இலக்கணவுணர்ச்சியின்றி இலக்கியவுணர்ச்சி எள்ளளவேனும் பயன்படமாட்டாது. இலக்கியவுணர்ச்சிக்கு மாத்திரமா? உரைகளைக் கற்று உணர்தற்கும், வாக்கியங்களைப் பிழையற எழுதுதற்கும், பேசுதற்கும், செய்யுள் செய்தற்கும் இலக்கண நூலுணர்ச்சி வேண்டும். பரிமேலழகர், நச்சினார்க்கினியர் முதலிய ஆசிரியர்களாற் செய்யப்பட்ட உரைகளெல்லாம் இலக்கணமுடிபுகளை அங்கங்கே எடுத்துக்காட்டி விளக்கிச் செல்லும் இயல்புடையன. சிவஞானபோதவுரைகளிலே சிவஞானமுனிவர் எடுத்துக்காட்டும் இலக்கண சித்தாந்தங்கள் எத்தனையோ பல! இவைகளையெல்லாம் இலக்கண நூலுணர்ச்சியின்றிக் கற்றுணர்தல் எப்படிக் கூடும்! கண்கூடாக மெய்ப்பொருளைக் காட்டும் வனப்பினால் இலக்கணம், தருக்கம் என்னும் இரண்டும் கண்ணெனத்தகும் என்று கற்றுவல்ல சான்றோர் கூறுவர். வடநூலாருள்ளே காத்தியாயனர் என்பவர் வேதாங்கங்கள் ஆறுவகையுள்ளும் வியாகரணம் எனப்படும் இலக்கணமே முக்கியம் என்பர்.

வெண்பா.

எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு. திருக்குறள்.

எழுத்தறியார் கல்விப் பெருக்க மனைத்தும்
எழுத்தறிவார்க் காணி னிலையாம்—எழுத்தறிவார்
ஆயுங் கடவு ளவிர்சடைமுன் கண்டளவில்
வீயுஞ் சுரநீர் மிகை. நன்னெறி.

இடைவனப்புந் தோள்வனப்பு மீடின் வனப்பும்
நடைவனப்பு நாணின் வனப்பும்—புடைசால்
கழுத்தின் வனப்பும் வனப்பல்ல வெண்ணோ
டெழுத்தின் வனப்பே வனப்பு. ஏலாதி.

இங்கே எழுத்தென்றது இலக்கண நூலினை. இவ்விலக்கணம் எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம், அணியிலக்கணம், யாப்பிலக்கணம் என ஐந்து பாகுபாடுடையது. ஐந்தனுள்ளே யாப்பிலக்கணம் பண்டைச்செய்யுள்களைப் பரிசோதித்து வழுவகற்றிச் சுவருபங் கண்டு பொருளாராய்தற்கும், பொருள் புலப்படுமாறு பாட்டுக்களைப் பண்ணுற வாசித்தற்கும், பழையவுரைகளைப் பரிசீலனஞ் செய்தற்கும், செய்யுள் செய்தற்கும் அவசியம் வேண்டற்பாலது. இலக்கணக்கொத்து, நன்னூல் முதலிய இலக்கணவுரைகளிலும், திருக்குறள், கலித்தொகை, சீவகசிந்தாமணி முதலிய இலக்கியவுரைகளிலும் இடையிடையே வரும் யாப்பிலக்கணவிஷயங்கள் யாப்பிலக்கணவுணர்ச்சியின்றி அறிந்துகொள்ளற்பாலனவல்ல. காவியம் எனப்படுங் கடலைக் கடப்பவர்க்கு யாப்பிலக்கணம் இன்றியமையாப்புணை என்று தண்டியாசிரியருங் கூறுவர்.

விருத்தம்.

ஆசின் மிக்குமென் மதுரமாய்ச் சித்திரத் தளவி
ஓசை பெற்றுவித் தாரமா யைந்திணை யுடன்று
காக நாண்மலர் பிறப்புடன் காட்டிமெய்க் கலசப்
பூசு ரன்றமி ழொத்தது வித்தகப் பொருளை.

திருச்செந்தூர்ப்புராணம்.

கட்டளைக்கலித்துறை.

கார்நிரை யத்தைத் துரத்தி யெடுத்ததன் கைவரையாற்
பார்நிரை காத்த ரகுநாத சேது பதிவரைவாய்
நேர்நேர் நிரைநேர் நிரைநிரை மூன்றையு நீக்கிப்பின்னு
நேர்நிரை யொன்றையுங் காட்டிய வாறென்ன நேரிழையே.

ஒருதுறைக்கோவை.

இங்கே வரும் காசு, நாள், மலர், பிறப்பு என்பவை களையும், நேர்நேர். நிரைநேர், நிரைநிரை என்பவைகளையும் யாப்பிலக்கணங்கொண்டே அறிதல்வேண்டும். பொருள் சொல்லுதற்குக் கவிகளை வாசிப்பவர்களும் அடிகளையுந் தொடைகளையும் அறிந்திருத்தல் வேண்டும். மோனையெதுகை முதலியன அறியாதவர் அடிமுதலிலே ஐயுற நிற்குஞ் சொற்களை நிச்சயித்து வாசித்தல் அரிது.

விருத்தம்.

ஒண்ணலகை யுயிர்க்குஞ் சங்க மொருசில கமலம் வைகத்
தண்ணுறு நறவைப் பஃறுரட் டாமரை பரித்துச் சூழ்த
லண்ணலம் பொய்கை தற்சே ரறுமுகப் பிள்ளை துய்ப்ப
வெண்ணெயுஞ் சங்குஞ் சூழ விட்டது போலு மன்றே.

கந்தபுராணம்.

இச்செய்யுளிலே நான்காமடியின் முதற்கணின்ற மொழி யாது? வெண்ணெய் என்பதா? எண்ணெய் என்பதா? மெய், உயிர் என இருமுதலுங் கொள்ள நிற்பினும் இட்டது என்புழி மோனை நோக்கி எண்ணெய் என்பதுவே துணியப்படும். இங்ஙனம் பொருடுணிதற்கேதுவாதலின், யாப்பிலக்கணம் கவிபாடும் புலவர்க்கு மாத்திரமன்று; நூலுரைகளைக் கற்பவர்க்கும் வேண்டும்.

தென்மொழி நூல்களெல்லாஞ் செய்யுள்வடிவாகவே செய்யப்பட்டிருக்கின்றன. செய்யுளாவது, சுவேதை மச்சைமுதலிய தாதுக்கள் ஏழினாலும் ஆக்கப்படும் யாக்கை போல, எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, தூக்கு என்னும் உறுப்புக்கள் ஏழினாலும் செய்யப்படும் பாட்டு. செய்யுள், பாட்டு, யாப்பு என்பன ஒருபொருட்சொற்கள். செய்யுள் முத்தகம், குளகம், தொகைநிலை, தொடர்நிலை என நால்வகை என்று தண்டியலங்காரகாரர் கூறுவர்.

வடமொழியிலே பத்தியம் என்றும், கத்தியம் என்றும், மிச்சிரம் என்றும் காவியங்கள் மூவகையாகச் செய்யப்பட்டிருக்கின்றன. பத்தியமாவது சந்தம்பெறச் செய்யப்படும் செய்யுள். அது முத்தகம், யுக்குமம், விசேடகம், கலாபகம், குளகம் என ஐவகைப்படும். ஐவகையும் தண்

டியலங்காரவுரையிலே விவரணத்தோடு கூறினும். ஆங்குக் காண்க. கத்தியமாவது கதைபோன்று வரும் வசன வடிவம். அது முத்தகம், விருத்தகந்தி, உத்கலிகாப்பிராயம், சூர்ணகம் என நான்கு வகைப்படும். முத்தகமாவது உருபு முதலியன தொகுதலின்றி விரிந்து நிற்கும் வசனம். விருத்தகந்தியாவது செய்யுட்பாகங்களும் இடையிடையே சேர்ந்துவரும் வசனம். இது திருக்குறட்பரிமேலழகருரையிலும் சிவஞானபோதமாபாடியத்திலும் இடையிடை வருகின்றது. உத்கலிகாப்பிராயமாவது உருபு முதலியவற்றின் தொகைகள் அதிகமாக வரும் வசனம். சூர்ணகமாவது தொகைமிக வருதலின்றிச் சொற்பமாக வரும் வசனம். இது சூர்ணிகை எனவும் படும். மிச்சிரமாவது பத்தியமும் கத்தியமுங் கலந்து வருவது. மிச்சிரகாவியங்களுள்ளே சில சம்பு எனவும் பெயர் பெறும். கத்திய காவியமும் மிச்சிரகாவியமும் அத்தியற்பம்.

சொற்குற்றம், பொருட்குற்றம் முதலிய குற்றங்கள் ஒன்றுமின்றித் தெளிவு, மதுரம், செறிவு முதலிய குணங்களமைந்து சுவைபயக்கும்படி அணிபெற அலங்கரித்துச் செய்யப்பட்ட செய்யுள்வடிவான காவியம்போல அறிஞர்க்கு இன்பம் பயப்பது யாது! "சஞ்சாரம் என்னும் நச்சுமரததிலே இனிமையான அமிர்தம் போன்ற கனிகள் இரண்டுள; அவற்றுள்ளே ஒன்று நல்லாருடன் இணங்கிச் சம்பாஷணைசெய்தல்; மற்றையது காவியங்களின் சுவையை அறிதல்" என்று ஆசிரியர் வரருசியார் நீதிரத்தினம் என்னும் நூலிற் கூறினர். இத்துணைச் சிறப்புடைய காவியங்களை இயற்றுதல் அருஞ்செயல்கள் எல்லாவற்றுள்ளும் அருஞ்செயல் என்று அக்கினிபுராணச் சுலோகம் ஒன்று சொல்லுகின்றது. அதனையும் மொழிபெயர்த்துப் பாட்டிலமைத்துக் காட்டுதும்.

கட்டளைக்கலித்துறை.

அரிதே மநுடப் பிறப்பின ராய்வர லங்கதினும்
அரிதே பலகலை கற்றவ ராத லதனினுமற்
றரிதே கவிக ளமைப்பவ ராத லதனினுமற்
றரிதே பலநூல் செயவல்ல ராத லவனியிலே.

தக்காராய்த் தக்க நூல்களையும், உரைகளையுஞ் செய்து வைத்த சான்றோர்களை எக்காலத்திலும் மறக்கலாகாது. அவர் நூலுரைகளைப் பொன்போலப் பரிந்தோம்பிப் போற்றிக்கொளல் வேண்டும். பகிரங்கஞ் செயற்பாலனவற்றைப் படிப்போர் பொருட்டு அச்சிற்பதிப்பித்தல்வேண்டும்.

பல்காப்பியம், காக்கைபாடினியம், அவிநயம் முதலிய யாப்பிலக்கணங்களெல்லாம் அழிந்தொழிந்தன. இப்போது தனியே யாப்பிலக்கணமாய் விளங்கும் நூல்கள் யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை என்னும் இரண்டுமேயாம். யாப்பருங்கலம் இப்போது பெரும்பாலுங் கற்கப்படுவதில்லை. ஐந்திலக்கணமும் ஒருங்கு கூறும் தொல்காப்பியம், வீரசோழியம் முதலிய இலக்கண நூல்களுளவேனும் எழுத்துச் சொற்களுக்கு நன்னூலும், பொருட்கு நம்பியகப்பொருளுடன் வெண்பாமாலையும், அணிக்குத் தண்டியலங்காரமும், யாப்பிற்கு இந்த யாப்பருங்கலக்காரிகையுமே இப்போது பெரும்பாலும் கற்கப்பட்டு வருகின்றன. படிக்காசுப்புலவர் காலத்திற் படிக்க நின்றதுவும், இலக்கணவிளக்கச் செய்யுளியற்குஞ் சிதம்பரப்பாட்டியற்கும் முதனூலாய் நின்றதுவும் இதுவேயாம்.

### கட்டளைக்கலித்துறை.

கூடுஞ் சவையிற் கவிவா ரணங்களைக் கோளரிபோற்
சாடுஞ் சதாசிவ சற்குரு வேமுன்னுன் றந்தைதன்னாற்
பாடும் புலவர்க ளானோமின் றிச்செம்மற் பட்டியெங்குங்
காடுஞ் செடியுமென் னோதமிழ்க் காரிகை கற்பதுவே.

படிக்காசுப்புலவர்.

யாப்பருங்கலக்காரிகை என்பது யாப்பருங்கலம் என்னும் நூலுக்கு அங்கமாகக் காரிகைப்பாட்டில் இயற்றப்பட்ட நூல் எனப் பொருள்படும். யாப்பு - யாப்பிலக்கணம். அருங்கலம் - விசிட்டமான இரத்தினம். காரிகை - சில்வகையெழுத்திற் பல்வகைப்பொருளை அடக்கி நினைத்திருத்தற்கு இயைபுடைத்தாக இயற்றப்படும் பாட்டு. காரிகை என்பதற்குக் கட்டளைக்கலித்துறை என்று பொருள் கூறுவாருமுளர். இவர் எடுத்துக்கொண்ட செய்யு

ளும் கட்டளைக்கலித்துறையேயாம். இச்செய்யுள்களெல்
லாம் சுருங்கச்சொல்லல், கவின்றோர்க்கினிமை முதலிய
அழகுகளிற் சிறந்து விளங்குகின்றன.

இந்நூல் செய்தவர் "ஆரியம் என்னும் பாரிரும்
பௌவத்தைக் காரிகையாக்கித் தமிழ்ப்படுத்திய அருந்தவ
த்துப் பெருந்தன்மை அமுதசாகரர் என்னும் ஆசிரியர்"
என்று உரைகாரராகிய குணசாகரர் கூறுவர். யாப்பிலக்க
ணப் பொருள்களையெல்லாம் சுருக்கமான வாக்கியங்க
ளிலே அடக்கிவிட்டு மற்றெஞ்சிய பாகங்களை மகடூஉமு
ன்னிலைகளான் நிரப்பி எடுத்துக்கொண்ட செய்யுளை
இனிது முடிக்கின்றார். "தன்சீர்தனதொன்றிற்றன்றளை"
"எழுவாயெழுத்தொன்றின்மோனை" "அல்லாதவெல்லாந்
தாஞ்சீர்மயங்கும்" என்பன முதலிய பாகங்களை நோக்
குக. இவையெல்லாம் ஆரியவியாகரணச் சூத்திரம்போ
ன்றே சுருங்கி விளங்குகின்றன. இவைகட்கு உரைக்கு
முரைகளோ மிகப்பரக்கின்றன. இப்பாக்களிலே அமை
யாதவைகளை உதாரணத்தோடு சேர்த்து முடித்துச் செல்
கின்றார். அவை இருகுறணேரிசை, ஆசிடைநேரிசை என்
றாற் போல்வன. சிலவற்றை ஒழிபியற்புறனடைகளில்
அடக்கி முடிக்கின்றார். சூசிகடாகநயம்பற்றிச் சிலவற்றி
னைத் தலைதடுமாற்றமாகவுஞ் சொல்லி முடிக்கின்றார். எவ்
வழியானுஞ் சுருக்கி முடிப்பதே இந்நூலாசிரியர் கருத்து.

இவர் பாக்களுக்கும், பாவினங்களுக்கும் இலக்கணம்
கூறிய விசித்திரம் யாவர்க்கும் அதிசயத்தைவிளைவிக்கும்.
அவையெல்லாம் உய்த்துணரத்தக்க அத்துணை நுட்பமு
டையன. குறள்வெண்பாவினிலக்கணங் கூறி அதன்மே
னின்றே சில விசேடத்தோடு நேரிசைவெண்பாவினிலக்க
ணங் கூறுகின்றார். "ஈரடிவெண்பாக்குறள்" என்பதனாற்
குறள்வெண்பாவினிலக்கணம் முடித்தார். அக்குறள்வெ
ண்பாத் தானே இரண்டாகி நடுவே தனிச்சொற் பெற்று
வருவது நேரிசைவெண்பா என்று "குறட்பாவிரண்டா
ய்ச் சீரியவான்றனிச்சொல்லடிமூய்" என்பதனால் அதனி
லக்கணம் முடித்தார். நேரிசைவெண்பாவினின்றே "தனி
ச்சொலின்றி" என்னும் விசேடமும் பிறவுங் கூறி இன்

னிசைவெண்பாவினிலக்கணம் முடித்தார். நேரிசை, இன்னிசை என்னும் அவ்விரண்டினும் நின்றே "அடிபலவாய்ச் சென்றுநிகழ்வ" என்னும் விசேடத்தாற் பஃறொடைவெண்பாவினிலக்கணம் முடித்தார். இவ்வாறே கூறிமுடிக்கப்பட்டவைகளும் பல. அதிதேசவிதியான் முடிக்கப்பட்டனவைகளும் பல. அதிதேசம் - அதுபோலக்கொள்க என்னும் மாட்டேற்று விதி.

உதாரணங்களுக்கு முதனினைப்புகளும் உரைத்திருக்கின்றார். உதாரணங்களுள்ளே சில ஐங்குறுநூறு, புறநானூறு, கலித்தொகை, குறுந்தொகை, திருக்குறள் முதலிய சங்கநூற் செய்யுள்கள். சில சூளாமணி, சிலப்பதிகாரம் முதலிய மற்றைநூற் செய்யுள்கள். பலவற்றிற்கு நூற்பெயர்கள் புலப்படவில்லை. இவர் விதிகூறி எடுத்துக்காட்டும் உதாரணங்களுள்ளே சில மற்றையாசிரியர் சிலர்க்கு மாறாகவும் இருக்கின்றன. "கன்றுகுணில்" என்பது முதலவாக ஆசிரியத்தாழிசைக்கு இவர் காட்டிய உதாரணம் பேராசிரியர்க்கு வேறு. கலிவெண்பாவினிலக்கணம் இவர்க்கும் வேறு; வீரசோழியகாரர்க்கும் வேறு. வீரசோழியகாரர் நேரிசைவெண்பா நீண்டு வருவதே கலிவெண்பா என்பர். இவ்வேறுபாடுகளை ஆங்காங்கு நோக்கி அறிக.

இந்நூற்குக் குணசாகரர் கூறியவுரை விருத்தியுரை. அதனைத் தழுவி எழுந்த சிற்றுரைகளும் சிலவுள. இவ்வுரைகளெல்லாம் நிரனிறைப் பொருள்கோளமையக் கூறிய மூலபாடம் போலவே இலக்கணவிதிகளும் எடுத்துக்காட்டும் அணிமை பெறாது செல்கின்றன. சிலபாகங்கள் மூலபாடத்தை விடுத்துரைத்தற்கியையாது விஷயததைமாத்திரம் முடித்துச் செல்கின்றன. விடுத்துரைத்தல் - சொற்றொறும் பொருளுரைத்தல். சிலபாகங்கள் ஆசிரியர் போக்கினையும் நோக்கினையும் நோக்காது வேறுவழியிற் செல்கின்றன. "எழுவாயெழுத்தொன்றின்மோனை" "அந்தமில்பாதம்" என்பன முதலியவைகளை ஆராய்ந்து நோக்குக.

இவைகளையெல்லாம் நோக்கி இதற்கொரு புத்துரை இயற்றவேண்டும் என்று தொடங்கி இவ்வுரையை ஒருவாறு

எழுதி முடித்தேம். இங்கே சில காரிகைகளும், சில உதாரணச்செய்யுள்களும் பாடாந்தரங்கொண்டு பரிசோதித்துத் திருத்தப்பட்டிருக்கின்றன. கிரனிலை பெறக்கூறியன வெல்லாம் வேறு வேறு பிரித்து இதற்கிதுவென விரைந்து புலப்படும்படி விளக்கப்பட்டிருக்கின்றன. சில புத்துதாரணங்களுஞ் சேர்க்கப்பட்டிருக்கின்றன. முன்னுரையில் விதந்து கூறுத கட்டளைக்கலிப்பா, கட்டளைக்கலித்துறை முதலியவைகளும் விளக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் சில சில இன்றியமையாதன எனக்கொண்டு ஆங்காங்குச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. உதாரணமுதற்குறிப்புக் காட்டும் காரிகைகளுக்கும், மகடூஉமுன்னிலைகளுக்கும், அடைமொழிகளுக்கும் உரைகூறப்படவில்லை. முன்னுரையிலே மூலபாடத்தோடு சேர்ந்து வாராது விலகிநின்ற "தூங்கே ந்தடுக்கு" என்னும் காரிகையும் இப்போது சேர்க்கப்பட்டிருக்கின்றது.

இவ்வுரையிலே வழுக்கள் வாரா என்பது எமக்கொரு போதுங் கருத்தன்று. எம்முரைகளிலே கவிகளிலே எத்தனையோ வழுக்கள் பின்னர்ப் பார்க்கும்போது புலப்பட்டன. அவை பிறர்க்கெல்லாம் விரைந்து புலப்படும். புலப்படும் வழுக்களைப் புலவராயுள்ளோர் எடுத்துக்காட்டி உலகறிய வெளிப்படுத்துதல் நன்று. அவை வெளிப்படுங் காற் பற்பல திருத்தங்கள் சித்திக்கும். எமக்கும் பெரும் பயன் உண்டாகும். கற்போருங் கசடறக் கற்பார். இப்பொழுதைப் புத்துரைக்கு முக்கியமாய் நின்றவற்றுள்ளுஞ் சிலவற்றை ஈண்டுக் காட்டுதும்.

௧. தன்சீர் தனதொன்றிற்றன் றளையாம்.

௨. எழுவா யெழுத்தொன்றின் மோனை யிறுதி யியைபிரண்டாம், வழுவா வெழுத்தொன்றின் மாதே யெதுகை மறுதலைத்த, மொழியான் வரினும் முரணடிதோறு முதன்மொழிக்கண், அழியா தளபெடுத் தொன்றுவ தாகு மளபெடையே.

௩. மோனைமுதலா முழுதுமொவ்வாது விட்டால்.

௪. பொழிப்பிடையிட்டு.

௫. குறட்பாவிரண்டாய்ச் - சிரியவான்றனிச் சொல்ல டிமூய்.

௬. அந்தமில்பாத மளவிரண்டொத்து.

௭. நடுவாதியந்தத்தடைதருபாதத்தகவல்.

௮. தருக்கிய ருழிசை மூன்றடி யொப்பன.

௯. இடையிடையே சுருக்கடி யாயும்.

௧௦. கலிவான்றளைதட் டிசைதனதாகியும்.

௧௧. கலித்துறையே நெடிலடி நான்காய் நிகழ்வது.

௧௨. குறளடி நான்கின மூன்றொரு தாழிசை.

௧௩. மாஞ்சீர் கலியுட்புகா.

௧௪. அல்லாத வெல்லாந் தாஞ்சீர் மயங்கும்.

௧௫. வஞ்சி மருங்கி னெஞ்சா வகவல்.

௧௬. சுருங்கிற்று மூன்றடி.

இவைகளையெல்லாம் உரைகளுடன் ஆராய்ந்து வழுக்களுளவேல் அறிஞராயுள்ளோர் வெளிப்படுத்துதல் நன்று. ஆராய்வின்றி வாரம்பற்றியாவது கோபம்பற்றியாவது பொதுப்பட நோக்கித் தாரதம்மியம் பேசுதல் நன்றன்று. வாரம் பெற்றுழித் தீயனவும் நல்லனவாகும்; கோபம் பெற்றுழி நல்லனவுந் தீயனவாகும்.

விருத்தம்.

வாரம் பட்டுழித் தீயவு நல்லவாந்
தீரக் காய்ந்துழி நல்லவுந் தீயவாம்
ஓரும் வையத் தியற்கையன் றேயெனா
வீர வேனெடுங் கண்ணி விளம்பினாள். சீவகசிந்தாமணி.

இவ்வுரை பிரகடனமாதற்கு உபகாரகர்களாகித் துணைபுரிந்த கல்விச்செல்வர்களும் பலர். அவர் நன்றியை என்றும் பாராட்டுவதன்றி அவர்க்குச் செயற்பாலதாகிய கைம்மாறு மற்றொன்றில்லை. பிறர்க்கு உதவிசெய்தல் கற்றோர் கடன். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களுடைய வித்தியாதருமங்களைப் பரிபாலனஞ்செய்து வளர்த்து வருகி

ன்ற ஸ்ரீமான் ஙு. க. சதாசிவப்பிள்ளையவர்கள் தண்டியலங்காரவுரைபோல இவ்வுரையும் தமது அச்சிலே அலங்காரமாய் வரும்படி செய்தார்கள்.

அங்கிலதிராவிட பண்டிதரும், வித்தியாவிநோதரும், அதிகாரபுருடருமாய் இப்போது சென்னைமாநகரில் வசிக்கும் ஸ்ரீமான் திரு. த. கனகசுந்தரம்பிள்ளையவர்களும் இவ்வுரையைப் பலமுறை பரிசீலனஞ்செய்து பலதிருத்தங்களோடு எடுத்துக்காட்டுக்கள் சிலவற்றிற்கு நூற்பெயர் காட்டியும், அச்சிடுகையிற் பரீக்ஷித்தும், வண்ணங்களைச் சேர்ப்பித்தும் பலவாறு சிறப்பித்தனர்.

யாழ்ப்பாணத்தமிழ்ச்சங்கப்புலவர்களாகிய ஸ்ரீமான் த. கைலாசபிள்ளை, ஸ்ரீமான் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, ஸ்ரீமான் சு. சரவணமுத்துப்பிள்ளை முதலியோரும் சிதம்பரச்சைவப்பிரகாசவித்தியாசாலைத் தலைமை உபாத்தியாயராகிய ஸ்ரீமான் ச. பொன்னம்பலபிள்ளையவர்களும் சில பல திருத்தங்களுக்கு உபகாரகராயினர்.

செந்தமிழ்ப்பாஷாபிமானியும், தேவிகோட்டைவாசருமாகிய ஸ்ரீமத். மு. ராம. சி. லெ. சோமசுந்தரச்செட்டியார் யாதேனும் அச்சிடப்படும் புத்தகம் ஒன்றிற்கு உபயோகஞ் செய்க என்று ரூபாய் இருபத்தைந்து அனுப்பினார். அதுவும் இதற்கே உபயோகமாயிற்று.

| | |
|---|---|
| யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் பிலவங்க௵ பங்குனிமீ. | இங்ஙனம், அ. குமாரசுவாமிப்பிள்ளை. |

கணபதி துணை.

# யாப்பருங்கலக்காரிகை.

## தற்சிறப்புப்பாயிரம்.

கந்த மடிவில் கடிமலர்ப் பிண்டிக்க ணார்நிழற்கீழ்
எந்த மடிக ளிணையடி யேத்தி யெழுத்தசைசீர்
பந்த மடிதொடை பாவினங் கூறுவன் பல்லவத்தின்
சந்த மடிய வடியான் மருட்டிய தாழ்குழலே.

இ - ள். அசோகமரநீழலின்கண் வீற்றிருக்கும் எம்பெருமானாகிய அருகக்கடவுளுடைய திருவடிகளிரண்டையுந் துதித்து, எழுத்து அசை சீர் தளை அடி தொடை என்னும் உறுப்புக்களின் இலக்கணத்தையும், பாக்களின் இலக்கணத்தையும், பாவினங்களின் இலக்கணத்தையும் முறையே சொல்லுவேன் யான் எ - று.

எம்பெருமானை வணங்கி யாப்பிலக்கணம் சொல்லுவேன் என்று தெய்வவணக்கமும் செயப்படுபொருளும் எய்தவுரைத்தலால் இது தற்சிறப்புப்பாயிரமாயிற்று. எழுத்து அசை முதலியன யாப்பிலக்கணம் என்னும் பொதுமொழியில் அடங்கும். கந்தமடிவில கடிமலர்ப் பிண்டிக்கணார் நிழற்கீழ் - எந்தமடிக ளிணையடி யேத்தி என்பது தெய்வவணக்கம். எழுத்தசை சீர் - பந்தமடி தொடைபாவினம் என்பது செயப்படுபொருள். பந்தம் என்பது ரண்டுச் சீர்களினிடைநின்று இசையைப் பிணிப்பது எனப் பொருள்படும். பாவினம் என்புழிப் பா என்றது வெண்பா முதலிய பாக்களை இனமென்றது அவற்றிற்கு முறையே இனமாய் வரும் வெண்டுறை முதலிய பாவினங்களை. பல்லவத்தின் - சந்தமடிய வடியான் மருட்டிய தாழ்குழலே என்பது மகடூஉமுன்னிலை. இது போன்று வரும் மகடூஉமுன்னிலைகளும், அடிகளை நிரப்புமாறு

வரும் அடைமொழிகளும் உரையின்றி வாளாநிற்க விடுமென்றும்; அவை விடயங்களுக்கு உபகாரமானவல்ல.

---

## அவையடக்கம்.

தேனார் கமழ்தொங்கன் மீனவன் கேட்பத் தெண்ணீரருவிக்
கானார் மலயத் தருந்தவன் சொன்னகன் னித்தமிழ்நூல்
யானு நடாத்துகின் றேனென் றெனக்கே நகைதருமால்
ஆனா வறிவி னவர்கட்கென் னாங்கொலென் னாதரமே.

*இ - ள். தமிழ்நாட்டரசனாகி முத்தமிழினையும் நன்கு வளர்த்த பாண்டியன் கேட்பத் தவத்தான் மனத்தூய்மை பெற்ற அகத்திய முனிவரால் சொல்லப்பட்ட யாப்பிலக்கணநூலைப் புல்லறிவாளனாகிய யானு சொல்லத் தொடங்கும் இயல்புடையேன் என்று எனது தொடக்கம் எனக்கே நகை விளைக்குமாயின். நல்லறிவாளர்க்கு யாதாய் முடியும்? எ - று.*

*சிற்றறிவுடையேனாகிய எனக்கு நகைவிளைக்குஞ் செயல் அறிவுடையோர்க்குப் பெருநகை விளைக்கும் என்பது கைமுதிக நியாய சித்தம் என்க.*

*தமிழ்நூல் என்பது இங்கே அகத்தியரால் சொல்லப்பட்ட இயற்றமிழுள்ளே யாப்பிலக்கணத்தினைமேல் நின்றது. நடாத்துதலாவது இப்படி நூலைக் கற்போர்க்கிணையுமாறு சுருக்கியும் விளக்கியும் வேறொரு நூலாகச் செய்து போதல். ஆனாமை - நீங்காமை. ஆதரம் - தொடக்கம். ஆதரவு என்று பாடமாயின், ஆசை எனப் பொருள் கூறுக.*

*இஃது என் சொல்லியவாறோவெனின், தாம் சொல்லப்புகுந்த நூற்கு, முதனூலின் பெருமையும் தமது சிறுமையும் தோன்றக் கூறுமுகத்தால், அவையடக்கம் கூறியவாறு. அவையத்தார் உணர்ந்து கூறுதன்முன்னரே தமது செயல் குற்றமுள்ளதென்றுணர்ந்து தாமே கூறலால் அவர் கூறக்கிடந்தது யாதும் இல்லை என்க ()*

### இதுவுமது.

சுருக்கமில் கேள்வித் துகடீர் புலவர்முன் யான்மொழிந்த
பருப்பொரு டானும் விழுப்பொரு ளாம்பனி மாலிமயப்
பொருப்பகஞ் சேர்ந்தபொல் லாக்கருங் காக்கையும் பொன்னி
இருக்குமென் றிவ்வா றுரைக்குமன் றேயிவ் விருநிலமே.[றமாய்

இ-ள். சுருங்கிய நூற்கேள்வியையுடைய புல்லறிவாளனாகிய சிறியேன் சொன்ன நுட்பமற்ற பொருளும் விரிந்த நூற்கேள்வியையுடைய நல்லறிவாளர்முன் சென்று நுண்ணிய விழுப்பொருளாய் நிலைபெறும். (திருட்டாந்தம்) பொன்மயமாகிய இமயமலையை அணுகிய பொல்லாத கருநிறமுடைய காகமும் அந்நிறம் நீங்கிப் பொன்னிறம் பெற்று விளங்குமென்று இந்நிலவுலகத்தாரும் கூறுவாரன்றோ? எ-று.

இமயமலையை அணுகிய காகமும் பொன்னிறம் பெறல்போல, நல்லறிவாளரை அணுகி என்னூலும் நவையில்லதாய் நன்குமதிக்கப்படும் என்பது கருத்து.

சேரர்காவலரும் "கனகமலையருகே - போயின காக்கையுமன்றே படைத்தது பொன்வண்ணமே" என்றார். கேள்வி என்பதற்குக் கல்வி என்றலும் ஒன்று. துகடீர்புலவர் - நல்லறிவாளர். துகள் - குற்றம். புலம் - அறிவு. பரு - பருமை. விழுப்பொருள் சிறந்தபொருள். பொல்லாங்கு - குற்றம். என்றிவ்வாறு என்பது பிரிவிலவாய் நின்ற ஒருபொருட் பன்மொழி. என்று என்பது இவ்வாறு என்னும் பொருட்டாய் நிற்கும் ஓரிடைச்சொல். அன்றோ என்பது பலரறிந்த தேற்றம்.

இஃது என்சொல்லியவாறோவெனின், குற்றமுளதாயினும் என்னூலைக் குணமுளதாக்கிக் கொள்ளுவர் அறிஞர் என்று திருட்டாந்தம் காட்டி அவர் குணவிசேடம் கூறுமுகத்தால் அவையடக்கம் கூறியவாறு.

இக்கவியிரண்டினாலும் அவையடக்கம் கூறப்பட்டது. இவ்வாறு ஒருபொருளையே கூறும் இருகவிகளை வடநூலார் யுக்குமம் என்பர்.

அவையடக்கமாவது யாதாயினும் ஒரு நூல் செய்வோன் அவையத்தார் தன்னூலிற் குற்றம் கூறற்கு எழவொட்டாது வழிமொழி கூறி அவரையடக்குதல். அவையடக்கம் என்பது அவையையடக்குதல் என விரியும். அவை - சபை, புலவர். வழிமொழி - தாழ்வுடைய சொல். (௨)

# உறுப்பியல்.

செய்யுளியற்றற்கண் இன்றியமையாது வேண்டப்படும் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்னும் உறுப்பினிலக்கணங் கூறுதலால் இவ்வியல் உறுப்பியல் என்னும் பெயர்த்தாயிற்று.

உறுப்பு - அவயவம். இயல் - இலக்கணம்.

## எழுத்து.

குறினெடி லாவி குறுகிய மூவுயி ராய்தமெய்யே
மறுவறு மூவின மைதீ ருயிர்மெய் மதிமருட்டுஞ்
சிறுநுதற் பேரமர்க் கட்செய்ய வாயைய நுண்ணிடையாய்
அறிஞ ருரைத்த வளபு மசைக்குறுப் பாவனவே.

இ - ள். குற்றெழுத்து, நெட்டெழுத்து, உயிரெழுத்து, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஆய்தவெழுத்து, மெய்யெழுத்து, வல்லெழுத்து, மெல்லெழுத்து, இடையெழுத்து, உயிர்மெய்யெழுத்து, அளபெடையெழுத்து என்னும் பதின்மூன்றும் அசைகளை ஆக்குதற்கண் உறுப்பாகி நிற்பனவாகும் எ - று.

அசைகளை ஆக்கும் எழுத்துக்களோடு சேர்த்துத் தொடையுடன் இசைகளை ஆக்கும் எழுத்துக்களும் எடுத்துக்கொண்ட நூலுக்கேற்ப ஈண்டுக் கூறப்பட்டன.

குற்றெழுத்து, நெட்டெழுத்து என்னும் இரண்டுமே அசைகளை ஆக்குதற்கண் யாண்டும் உறுப்பாவன. இவற்றொடு சேர்ந்து *ஒற்றெழுத்துக்களும் ஒருவாற்றானாவன. குற்றியலிகரமும், குற்றியலுகரமும், ஐகாரக்குறுக்கமும், ஆய்தவெழுத்தும், அளபெடையெழுத்தும் ஒரோவழி அசைகட்கு உறுப்பாவன. அவற்றுள்ளே* குற்றியலிகரமும், குற்றியலுகரமும், அளபெடையுயிரும் சீருந் தளையும் சிதைவுழி ஒற்றே போன்று முன்னர்ச் சேர்ந்து நின்றும், சிதையாவழித் தாமே ஒலித்து நின்றும் உறுப்பாகின்றன. ஐகாரக்குறுக்கம் சிதைவுழி ஒற்றுப்போன்றும் சிதையாவழி நெடில் போன்றும் உறுப்பாகின்றது. ஆய்தவெழுத்துச் சிதைவுழிக் குற்றுயிர் போன்றும், சிதையாவழி ஒற்றே போன்று முன்னர்ச் சேர்ந்தும் உறுப்பாகின்றது. ஒற்றளபெடை ஒருமாத

திரை ஒலித்து உறுப்பாகின்றது. இவற்றிற்கெல்லாம் எழுத்தின் கூணமாய் நிற்கும் மாத்திரையே காரணமென்க. மாத்திரையின்றி அசைகளை ஆக்குமாறில்லை.

உயிரெழுத்தும், உயிர்மெய்யெழுத்தும், வல்லெழுத்தும், மெல்லெழுத்தும், இடையெழுத்தும் தொடைக்கும், தொடையோடசையாய் நின்று இசைக்கும், உறுப்பாவன. இவைகளை எதுகைத்தொடை, சித்திரவண்ணத்தொடை, வல்லிசைவண்ணத்தொடை முதலிய நோக்கி உணர்க. இசை - வண்ணம்.

எழுத்திலக்கணமும் பிறவுங் கற்றவரே யாப்பிலக்கணமுங் கற்கப் புகுவார் என்னும் இயைபு நோக்கி இவ்வெழுத்துக்களின் விரிவு ஈண்டுக் கூறப்படவில்லை. வேண்டுவோர் நன்னூல் சின்னூல் முதலியவைகளிற் பார்த்துணரக்கடவர். சின்னூல் - நேமிநாதம்.()

---

## அசை.

எறும்பி னொழுக்குப் போன்று செல்லும் எழுத்துக்களின் இசைத்தொடர்ச்சியை அசைத்துச் செல்லற்கண் அசைக்கப்பட்டுப் பிரிந்து வரும் எழுத்தாலாகிச் சீர்க்குறுப்பாக நிற்பது அசையாகும். அது நேரசை என்றும் நிரையசை என்றும் இருவகைப்படும்.

### இருவகையசை.

குறிலே நெடிலே குறிலிணை யேனைக் குறினெடிலே
நெறியே வரினு நிரைந்தொற் றடுப்பினு நேர்நிரையேன்
றறிவேய் புரையுமென் றோளி யுதாரண மாழிவெள்வேல்
வெறியே சுறாநிறம் விண்டோய் விளாமென்று வேண்டுவரே.

### நேரசை.

குறிலே நெடிலே நெறியே வரினும் நிரைந்து ஒற்றடுப்பினும் நேர் என்று அறி:—

குற்றெழுத்துத் தனியே வரினும், நெட்டெழுத்துத் தனியே வரினும், இவையிரண்டும் முறையே ஒற்றடுத்து வரினும் நேரசையாகும் என்றறிக.

தனியெழுத்தாய் அசைக்கப்பட்டு வருதலால் இது நேரசை எனப்பட்டது. நேர்-தனிமை. இதற்குத் தனியசை என்றும் பெய

ருண்டு. ஒற்றெழுத்துத் தானாக அசைக்கப்படுவதில்லை. நெறியே வரல் - மற்றையெழுத்தோடு சேராது வருதல். நிரைதல் - முறைப்படல. குறில் முதலிய நான்கினாலும் வருதலால் இதன் வகையும் நான்காகும்.

உதாரணவாய்பாடு.

க. ஆ நெடிலாகிய நேரசை.
உ. ழி குறிலாகிய நேரசை.
ங. வெள் குறிலொற்றடுத்தாய நேரசை.
ச. வேல் நெடிலொற்றடுத்தாய நேரசை.

இந்நால்வகையசைகளையும் பலமுறை நோக்கிப் பயின்றுணரும் பொருட்டுப் பாட்டிலுங் காட்டுதும்.

உதாரணம்.

போ து சாந் தம பொற் ப வேந் தி
ஆ தி நா தற் சேர் வோர்
சோ தி வா னந் துன் னு வா ரே.

இவ்வாசிரியப்பாவில் வரும் அசைகளெல்லாம் நேரசைகளேயாம். போ - நெடிலாகிய நேரசை. து - குறிலாகிய நேரசை. சாந் - நெடிலொற்றடுத்தாய நேரசை. தம் - குறிலொற்றடுத்தாய நேரசை. ஒழிந்தவைகளையும் இவ்வாறு நோக்கி உணர்க.

---

நிரையசை.

குறிலிணை ஏனைக்குறினெடிலே நெறியே வரினும் நிரைந்து ஒற்றடுப்பினும் நிரை என்று அறி:—

குறிலிணை தனியே வரினும், குறினெடில் தனியே வரினும், இவையிரண்டும் முறையே ஒற்றடுத்து வரினும் நிரையசையாகுமென்றறிக.

இணையெழுத்தாய் அசைக்கப்பட்டு வருதலால் இது நிரையசை எனப்பட்டது. இணையசை என்றும் இதற்குப் பெயருண்டு. இணைதலெனினும் நிரைதலெனினும் ஒக்கும். குறிலிணை என்றது இணைந்து நின்ற இரு குற்றெழுத்தை. குறினெடில் என்றது இணைந்து நின்ற குற்றெழுத்தையும் நெட்டெழுத்தையும். குறிலிணை முதலிய நான்கினாலும் வருதலால் இதன்வகையும் நான்காகும்.

உதாரணவாய்பாடு.

க. வெறி குறிலிணையாலாய நிரையசை.
உ. சுறா குறினெடிலாலாய நிரையசை.
ங. நிறம் குறிலிணையொற்றடுத்தாய நிரையசை.
ச. விளாம் குறினெடிலொற்றடுத்தாய நிரையசை.

இந்நால்வகையசைகளையும் பல்முறை நோக்கிப் பயின்றுணரும் பொருட்டுப் பாட்டிலுங் காட்டுதும்.

உதாரணம்.

அணி நிழ லசோ கமர்ந் தரு ணெறி நடாத் திய
மணி திக ழவி ரொளி வர தனைப்
பணி பவர் பவ நனி பரி சறுப் பவ ரே.

இவ்வாசிரியப்பாவில் வரும் ஈற்றசையொழிந்த ஏனைய அசைகளெல்லாம் நிரையசைகளேயாம். ஈற்றசை நேர். அணி - குறிலிணையாலாய நிரையசை. நிழல - குறிலிணையொற்றடுத்தாய நிரையசை. அசோ - குறினெடிலாலாய நிரையசை. நடாத் - குறினெடிலொற்றடுத்தாய நிரையசை. ஏனையவைகளையும் இவ்வாறு நோக்கி உணர்க.

சீராகிச் சேர்ந்து நிற்பினும் தனி நின்று பொருள் பயக்கும் ஆற்றலுடைய அசையைச் சிறப்புடையசை என்றும், பொருள் பயக்கும் ஆற்றலில்லாத அசையைச் சிறப்பிலசை என்றும் சிலர் கூறுவர். அணிநிழல் என்னும் சீரிலே நின்ற அசைகளிரண்டும் சிறப்புடையசைகள்; அவை அணி என்றும் நிழல் என்றும் தனிநின்று பொருள்பயக்கின்றன. நடாத்திய என்னும் சீரிலே நின்ற அசைகளிரண்டும் சிறப்பிலசைகள்; அவை நடாத் என்றும், திய என்றும் அசையாகப் பிரிவுழிப் பொருள் பயவா. (உ)

---

## சீர்.

நேரசை நிரையசை என்ற இருவகையசைகளும் தனித்தாவது இரண்டு முதலியனவாகி இணைந்தாவது இலயம்பட இசைத்துச் சீர் போன்று நிற்பது சீரெனப்படும். இலயம் - முடிவு, ஒத்துமுடிதல். சீர் - தாளம், தாளவறுதி. இது, தான் கொண்டு நிற்கும் அசையின் தொகை பற்றி, ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் என

நால்வகைப்படுமாயினும், செய்யுட்குரிமைபூண்டு நிற்குந் திறமும் பிறவும் நோக்கி அகவற்சீர், வெண்சீர், வஞ்சிச்சீர், பொதுச்சீர், அசைச்சீர் என ஐவகையாயும் வழங்கப் படுகின்றது. ஈண்டுக் கூறப்படும் வகை ஐவகையேயாம்.

க. ஈரசை நாற்சீ ரகவற் குரியவெண் பாவினவாம்
நேரசை யாலிற்ற மூவசைச் சீர்நிரை யாலிறுப
வாரசை மென்முலை மாதே வகுத்தவஞ் சிக்குரிச்சீர்
ஓரசை யேநின்றுஞ் சீராம் பொதுவோரு நாலசையே

மூவசைச்சீர்வரைக்கும் வாய்பாடு.

உ. தேமா புளிமா கருவிளங் கூவிளஞ் சீரகவற்
காமாங் கடைகா யடையின்வெண் பாவிற்கந் தங்கனியா
வாமாண் கலையல்குன் மாதே வகுத்தவஞ் சிக்குரிச்சீர்
நாமாண் புரைத்த வசைச்சீர்க் குதாரண நாண்மலரே.

நாலசைச்சீர்க்கு வாய்பாடுந் தளையும்.

ந. தண்ணிழ றண்பூ நறும்பூ நறுநிழ றந்துறழ்ந்தால்
எண்ணிரு நாலசைச் சீர்வந் தருகு மினியவற்றுட்
கண்ணிய பூவினங் காய்ச்சீ ரனைய கனியோடொக்கும்
ஒண்ணிழற் சீரசைச் சீரியற் சீரோக்கு மொண்டவாக்கே.

உதாரணமுதற்குறிப்பு.

ச. குன்றக் குறவ னகவல்போன் ஞரம்வெண் பாட்டுவஞ்சிக்
கோன்று முதாரணம் பூந்தா மரையேன்ப வோரசைச்சீர்
நன்றறி வாரிற் கயவரும் பாலோடு நாலசைச்சீர்
கன்றதேன் ஞரள்ளற் பள்ளத்திரேடங்கண்வானத்துமே.

ஐவகைச்சீர்களுக்கும் இலக்கணமும் அதன்பின் வாய்பாடும் உதாரணமுதற்குறிப்புமாக ஈண்டுக் கூறப்பட்டிருக்கும் நிரனிறையை வேறு வேறு பிரித்துக் கூட்டி விளக்கும் பொருட்டு இக் கவிகள் நான்கும் ஒருங்கெழுதப்பட்டன. இவைபோல்வன இவ் வாறே இன்னும் எழுதப்படும்.

அகவற்சீர்.

ஈரசை நாற்சீர் அகவற் குரிய:—

நேரசை, நிரையசை என்ற இருவகையசைகளையும் தன்னொடு தானும் பிறிதுமாகச் சேர்க்கும்போது, நேர்நேர் என்றும், நிரைநிரை என்றும், நேர்நிரை என்றும், நிரைநேர் என்றும் வருகின்ற சீர்கள் நான்கும் அகவற்பாவுக்குரிய சீர்களாகும்.

இவைகளை அகவற்சீர் என்றும், ஈரசைச்சீர் என்றும், இயற் சீர் என்றும் வழங்குவர். இயற்சீர் - எல்லாப்பாக்களிலும் இயன்று நிற்குஞ்சீர். இயலல் - பொருந்துதல். இயற்கைச்சீரெனலுமாம்.

வாய்பாடு.

தேமா புளிமா கருவிளம் கூவிளம் சீர் அகவற்கு ஆம்:—

தேமா புளிமா முதலிய நான்கும் அகவற்சீர்களுக்குரிய வாய்பாடுகளாம்.

வரலாறு.

க. தேமா = நேர்நேர். ங. கருவிளம் = நிரைநிரை.
உ. புளிமா = நிரை நேர். ச. கூவிளம் = நேர் நிரை.

உதாரணம்.

குன்றக் குறவன் காதன் மடமகள்
வரையர மகளிர்ப் புரையுஞ் சாயலள்
ஐய ளரும்பிய முலையள்
செய்ய வாயினள் மார்பினள் சுணங்கே. ஐங்குறுநூறு.

இந்த அகவற்பாவிலே வந்த சீர்களெல்லாம் ஈரசைச்சீர்களாகிய அகவற்சீர்களேயாம். குன்ற - தேமா. குறவன் - புளிமா. மடமகள் - கருவிளம். சாயலள் - கூவிளம். ஏனையவைகளையும் இவ்வாறே அலகிட்டு நோக்கி அறிக.

---

ஈரசைச்சீர்கள் நான்கும் இறுதியிலே நேரசை, நிரையசை என்னும் இருவகையசைகளையும் தனித்தனி சேர்க்க மூவசைச்சீராய் எட்டாகும். எட்டும், நான்கு நேரசையீறும் நான்கு நிரையசையீறுமாய் நிற்றலால், வெண்சீர் என்றும் வஞ்சிச்சீர் என்றும் இரண்டாகி வழங்கப்படும்.

## வெண்சீர்.

நேரசையாலிற்ற மூவசைச்சீர் வெண்பாவின ஆம்:—

நேரசையை இறுதியிற் கொண்டு முடிந்த நேர்நேர் நேர் என்பது முதலிய மூவசைச்சீர்கள் நான்கும் வெண் பாவுக்குரிய சீர்களாகும்.

இவைகளை வெண்சீர் என்றும், காய்ச்சீர் என்றும் வழங்குவர். வெண்சீர் - வெண்பாவுக்குரிய சீர். காய்ச்சீர் - காயீற்று வாய்பா டுடைய சீர்.

வாய்பாடு.

கடை காயடையின் வெண்பாவிற்கு ஆம்:—

தேமா புளிமா முதலிய நான்கும் தத்தம் இறுதி காயாகப் பெற்று வருமாயின் அவை வெண்சீர்களுக்குரிய வாய்பாடுகளாகும்.

வரலாறு.

| | | |
|---|---|---|
| க. தேமாங்காய் | = | நேர் நேர் நேர். |
| உ. புளிமாங்காய் | = | நிரை நேர் நேர். |
| ௩. கருவிளங்காய் | = | நிரை நிரை நேர். |
| ௪. கூவிளங்காய் | = | நேர் நிரை நேர். |

உதாரணம்.

பொன்னார மார்பிற் புனைகழற்காற் கிள்ளிபேர்
உன்னேனென் றூழுலக்கை பற்றினேற்—கென்னோ
மனனொடு வாயெல்லா மல்குநீர்க் கோழிப்
புனனாடன் பேரே வரும்.

இந்த வெண்பாவிலே வந்த சீர்களெல்லாம் வெண்சீரென்று கொள்ளற்க. மார்பில், என்னோ, மனனொடு, கோழி, பேரே என்பன ஐந்தும் அகவற்சீர்கள். வரும் என்பது அசைச்சீர். மற்றைய வைகளே ஈண்டு உதாரணமாகக் கருதப்பட்ட வெண்சீர்கள். பொன்னார - தேமாங்காய். புனனாடன் - புளிமாங்காய். புனைகழற் கால் - கருவிளங்காய். றூழுலக்கை - கூவிளங்காய். ஏனையவைக ளையும் இவ்வாறே அலகிட்டு நோக்கி அறிக.

## வஞ்சிச்சீர்.

நிரையால் இறுப வஞ்சிக் குரிச்சீர்:—

நிரையசையான் முடிவனவாகிய நேர் நேர் நிரை என்'று முதலிய மூவசைச்சீர் நான்கும் வஞ்சிப்பாவுக்குரிய 'ர்களாகும்.

இவைகளை வஞ்சிச்சீர் என்றும், கனிச்சீர் என்றும் வழங்கு வஞ்சிச்சீர் - வஞ்சிப்பாவுக்குரிய சீர்.

வாய்பாடு.

அந்தம் கனியா (அடையின்) வஞ்சிக் குரிச்சீர்:—

தேமா, புளிமா முதலிய நான்கும் தத்தம் இறுதி கனி யாகப் பெற்றுவருமாயின் அவை வஞ்சிச் சீர்க்குரிய வாய் பாடுகளாகும்.

வரலாறு.

க. தேமாங்கனி = நேர் நேர் நிரை.
உ. புளிமாங்கனி = நிரை நேர் நிரை.
௩. கருவிளங்கனி = நிரை நிரை நிரை.
௪. கூவிளங்கனி = நேர் நிரை நிரை.

உதாரணம்.

பூந் தா மரைப் போ தல மரத்
தேம் புன லிடை மீன் றிரி தரும்
வள வய லிடைக் கள வயின் மகிழ்
வினைக் கம் பலை மனைச் சிலம் பவும்
மணைச் சிலம் பிய மண முர சொலி
வயற் கம் பலைக் கய லார்ப் பவும்

நா ளும்,

மகிழு மகிழ்தூங் கூரன்
புகழ்த லானாப் பெருவண் மையனே.

இந்த வஞ்சிப்பாவிலே வந்த சீர்களெல்லாம் வஞ்சிச்சீர்களே யாம். பூந்தாமரை - தேமாங்கனி. வினைக்கம்பலை - புளிமாங்கனி.

வளவயலிடை - கருவிளங்கனி. தேம்புனலிடை - கூவிளங்கனி. இவ்வாறே ஏனையவைகளையும் அலகிட்டு நோக்கி அறிக.

---

## பொதுச்சீர்.

நாலசை பொது:—

ஈரசைச்சீர்கள் நான்கும் தன்னொடுதானும் பிறிது மாகக் கூடி முடிந்த நாலசைச்சீர்கள் பதினாறும் பொதுச் சீர்கள் எனப்படும்.

முன்னைய சீர்கள் போல ஒன்றற்குரிமை பூணாது வெண் பாவொழிந்த பாக்களிலே வந்து பொதுப்படநிற்றலாற் பொதுச் சீரெனப்பட்டது. விசேடமாகக் கொள்ளப்படாமற் சிலவற்றிற் கொள்ளப்பட்டுச் சாமானியமாய் நிற்கும் சிறப்பின்மை பற்றிப் பொதுவெனப்பட்டதெனவுமாருமுளர். சாமானியம் - பொது.

வாய்பாடு.

தண்ணிழல் தண்பூ நறும்பூ நறுநிழல் தந்து உறழ்ந்தால்
எண்ணிரு நாலசைச்சீர் வந்து அருகும்:—

தேமா' புளிமா முதலிய வாய்பாடுகள் நான்கினையும் நிறுத்தித் தண்ணிழல், தண்பூ முதலிய நான்கினையும் தந்து உறழ்ந்தால் பதினாறு நாலசைச்சீர்களாக தோன்றிச் சிறு பான்மையாக வழங்கப்பட்டு நிற்கும்.

உறழ்தல் - ஒரெண்ணலை மற்றொரெண்ணினைப் பெருக்கு தல். இங்கே உறழ்தல் எனாது தேமா முதலிய நான்கோடும் தண் ணிழல் முதலிய நான்கினையும் தனித்தனி கூட்டி முடித்தலை. இவை மற்றைய சீர்கள் போல ஆங்காங்குப் பரந்து நில்லாது வஞ் சிப்பாவிலும், குற்றுகரம் வந்துழிச் சிலவாக ஆசிரியப்பா கலிப்பாக் களிலும் சிறுபான்மை வருதல்பற்றி அருகும் என்றார். அருகுதல் - சிறுபான்மையாதல், சுருங்குதல்.

பொதுச்சீரால்வருந்தளை.

இனி அவற்றுள் பூவினம் காய்ச்சீர் அனைய:—

தளை வகுத்துக் கொள்ளுங்கால் அந்நாலசைச் சீர்க ளுள்ளே தண்பூ என்றும், நறும்பூ என்றும் முடிந்த பூவிற் றுச் சீர்களெட்டும் காய்ச்சீர் போன்று நிற்பனவாகும்.

இனி என்னும் இடைச்சொல் இதன்மேல் என்னும் பொருட்டாய்த் தளை வகுக்கும் அவதாரத்தை உணர்த்திற்று. காய்ச்சீரணைய எனவே காய்ச்சீர் நின்று வருஞ்சீரோடு புணர்தற்கண் பெறுந்தளையையே பூச்சீரும் பெற்று நிற்கும் என்பது பெறப்படும்.

நிழற்சீர் கனியோ டொக்கும்:—

தண்ணிழல் என்றும், நறுநிழல் என்றும் முடிந்த நிழலீற்றுச் சீர்களெட்டும் கனிச்சீர் போன்று நிற்கும்.

கனியொடொக்கும் எனவே கனிச்சீர் நின்று வருஞ்சீரோடு புணர்தற்கண் பெறுந் தளையையே நிழற்சீரும் பெற்று நிற்கும் என்பது பெறப்படும். சுருங்கச் சொல்லல் பற்றி இதன் தளையும் ஈண்டுக் கூறப்பட்டது.

(வரலாறு.)

தண்ணிழல்.

௧. தேமாந்தண்ணிழல் = நேர் நேர் நேர் நிரை.
௨. புளிமாந்தண்ணிழல் = நிரை நேர் நேர் நிரை.
௩. கருவிளந்தண்ணிழல் = நிரை நிரை நேர் நிரை
௪. கூவிளந்தண்ணிழல் = நேர் நிரை நேர் நிரை.

தண்பூ.

௫. தேமாந்தண்பூ = நேர் நேர் நேர் நேர்
௬. புளிமாந்தண்பூ = நிரை நேர் நேர் நேர்.
௭. கருவிளந்தண்பூ = நிரை நிரை நேர் நேர்.
௮. கூவிளந்தண்பூ = நேர் நிரை நேர் நேர்.

நறுநிழல்.

௯. தேமாநறுநிழல் = நேர் நேர் நிரை நிரை.
௧௦. புளிமாநறுநிழல் = நிரை நேர் நிரை நிரை.
௧௧. கருவிளநறுநிழல் = நிரை நிரை நிரை நிரை
௧௨. கூவிளநறுநிழல் = நேர் நிரை நிரை நிரை.

நறும்பூ.

௧௩. தேமாநறும்பூ = நேர் நேர் நிரை நேர்.
௧௪. புளிமாநறும்பூ = நிரை நேர் நிரை நேர்.
௧௫. கருவிளநறும்பூ = நிரை நிரை நிரை நேர்.
௧௬. கூவிளநறும்பூ = நேர் நிரை நிரை நேர்.

உதாரணம்.

க. அள்ளற் பள்ளத் தகன்சோ ணாட்டு
வேங்கை வாயில் வியன்குன் றூரன்.

இந்த வஞ்சியடிகளிலே வந்த சீர்களெல்லாம் நாலசைச் சீராய் நின்ற பொதுச் சீர்களேயாம். அள்ளற்பள்ளத் - தேமாந்தண்பூ. தகன் சோணாட்டு - புளிமாந்தண்பூ. வேங்கை வாயில் - தேமாந்தண்பூ. வியன் குன்றூரன் - புளிமாந்தண்பூ. இவ்வஞ்சிப்பாவின் எஞ்சிய பாகம் காணப்படவில்லை. இது வேறு சீர் விரவாமல அடி முழுதும் நாலசைச்சீர் வருதற்குக் காட்டிய உதாரணம் போலும்.

உ. அங்கண் வானத் தமரரசரும்
வெங்களி யானை வேல்வேந்தரும்
வடிவார் கூந்தன் மங்கையரும்
கடிமல ரேந்திக் கதழ்ந்திறைஞ்சச்
சிங்கஞ் சுமந்த மணியணைமிசைக்
கொங்கிவர் சோகின் குளிர்நிழற்கீழ்ச்
செழுநீர்ப் பவளத் திரள்காம்பின்
முழுமதி புரையு முக்குடைநிழல்
வெங்கண் வினைப்பகை விளிவெய்தப்
பொன்புனை நெடுமதில் புடைவளைப்ப
அனந்த சதுட்டய மவையெய்த
நனந்தலை யுலகுடை நவைநீங்க
மந்த மாருத மருங்கசைப்ப
அந்தர துந்துபி நின்றியம்ப
இலங்கு சாமரை யெழுந்தலமர
நலங்கிளர் பூமழை நனிசொரிதர
இனிதிருந்,
தருநெறி நடாத்திய வாதிதன்
திருவடி பரவுதுஞ் சித்திபெறற் பொருட்டே.

இக்குறளடி வஞ்சிப்பாவிலே அடிதோறும் முதற்கண் நிற்கும் சீர்கள் நாலசைச்சீர்களேயாம். இறுதிச்சீர்கள் மூவசைச்சீர்கள். அங்கண்வானத் - தேமாந்தண்பூ. வெங்களியானை - கூவிளந்தண்பூ. வடிவார்கூந்தல் - புளிமாந்தண்பூ. கடிமலரேந்தி - கருவிளந்தண்பூ. இவ்வாறே பொதுச்சீர்கள் பதினாறும் ஈண்டு வருதல் காண்க.

இவற்றுள்ளே மந்தமாருதம் என்றும், இலங்குசாமரை என்றும் நின்ற சீர்களிரண்டையும் மூவசைச்சீரென்று வாதிப்பாருமுளர். இவைகளும் நாலசையாய்ச் சீர்ப்பட இருந்தாக்குற்று நிற்றலை இசைநோக்கி இனிதுணர்க. மந்தமாருதம் - தேமாந்தண்ணிழல். இலங்குசாமரை - புளிமாந்தண்ணிழல்.

இனி இவ்வஞ்சிப்பாவின் அடிகளிலுள்ள தளைகளையும் ஆராய்ந்துணர்க. அங்கண்வானத் தமரரசரும் என்புழியுள்ள தளை கலித்தளை. வெங்களியானை வேலவேந்தரும் எனபுழியுள்ள தளை வெண்சீர் வெண்டளை. இவ்வாறே மற்றையடிகளிலும நோக்கி உணர்க.

---

## அசைச்சீர்.

ஓர் அசையே நின்றும் சீராம்:—

இரண்டு முதலியனவாக இணைந்து நிற்றலின்றி அசையொன்று தனிநின்றும் இசைநிறைத்துச் சீர் என்று வழங்கப்படும்.

இதனை அசைச்சீர் என்று வழங்குவர். அசை இருவகைப்படுதலால் இதன் வகையும் இரண்டாகும். வெண்பாவினிற்றிலும், கலிப்பாவிலே அம்போதரங்கவீற்றிலும், வேறு சிலவற்றிலும் வருகின்ற பொதுமைபற்றி யாப்பருங்கலகாரர் இதனையும் பொதுச்சீர் என்பர்.

### வாய்பாடு.

அசைச்சீர்க்கு உதாரணம் நாள் மலர்:—

இருவகையாய் நின்ற அசைச்சீர்களுக்கு உதாரணவாய்பாடு நாள் என்றும் மலர் என்றும் வருகின்ற இரண்டுமாம். நாள்=நேரசை. மலர்=நிரையசை.

### உதாரணம்.

பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர். திருக்குறள்.

இக்குறள்வெண்பாவினிறுதியிலே நீர் என்னும் நேரசை தனிநின்றும் இசைநிறைத்து ஒரு சீராயிற்று. நீர் - நாள்.

நன்றாற்றி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர். திருக்குறள்.

**இக்குறள்வெண்பாவினிறுதியிலே இலர் என்னும் நிரையசை தனிநின்றும் இசைநிறைத்து ஒருசீராயிற்று. இலர் - மலர்.**

**அசைச்சீரால்வருந்தளை.**

அசைச்சீர் தளைக்கு இயற்சீர் ஒக்கும்:—

*அசைச்சீர் இரண்டும் தளைகொள்ளுங்கால் அகவற்சீர் போன்று நிற்கும்.*

இயற்சீரொக்கும் எனவே, இயற்சீர் நின்று வருஞ்சீரோடு புணர்தற்கண் பெறுந் தளையையே அசைச்சீரும் புணர்தற்கண் பெற்று நிற்கும் என்பது பெறப்படும். நேரசையாய் நிற்கும் அசைச்சீர் தேமா, புளிமா என்பன போலவும், நிரையசையாய் நிற்கும் அசைச்சீர் கருவிளம், கூவிளம் என்பன போலவும் கொள்ளப்படும். இதற்கு உதாரணம் இதன்பின்னர்த் தளைகளுக்கு உதாரணங் கூறும் வழிக் கூறப்படும்.

சீர்களுள்ளும் பொருள்பயந்து நிற்குஞ் சீரைச் சிறப்புடைச் சீர் என்றும், பொருள்பயவாது இறிஞ்சி மிறிஞ்சி போன்று நிற்கும் சீரைச் சிறப்பில்சீர் என்றும் சிலர் கூறுவர். "கல்லாதான சொற்கா முறுதல்" என்புழிக் கல்லாதான் என்பது சிறப்புடைச்சீர். சொற்கா என்பதும், முறுதல் என்பதும் சிறப்பில் சீர்கள். இவையிரண்டிலும் காமுறுதல் என்னுஞ் சொல் பிளந்து விட்டிசைத்து நிற்றலே பொருள் பயவாமைக்குக் காரணம்.

அகவற்சீர் நான்கு. வெண்சீர் நான்கு. வஞ்சிச்சீர் நான்கு. பொதுச்சீர் பதினாறு. அசைச்சீர் இரண்டு. ஆகச்சீர் முப்பது. (௧. ௨. ௫. ௬.)

---

## தளை.

சீரொடு சீர்புணரச் சேர்த்தியற்றும் அடியிலே சீர்களின் இடைநின்று இசைத்தொடர்ச்சியுற அவைகளைப் பிணிப்பது தளையாகும். தளையெனினும் பந்தமெனினும் ஒக்கும். தளை-பிணிப்பது, பிணித்தல். பந்தம் - கட்டுதல், கயிறு. பொதுச்சீரும் அசைச்சீரும் கூறியவழி அவற்றின் தளைகளும் ஆண்டுக் கூறப்பட்டன. இனிக் கூறப்படுவன அகவற்சீர், வெண்சீர், வஞ்சிச்சீர் என்பவற்றால் வரும் தளைகளேயாம்.

## எழுவகைத்தளை.

க. * தன்சீர் தனதோன்றிற் றன்றளை யாந்தணை வாதவஞ்சி
வண்சீர் விகற்பமும் வஞ்சிக் குரித்துவல் லோர்வகுத்த
வெண்சீர் விகற்பங் கலித்தளை யாய்விடும் வெண்டளையாம்
ஒண்சீ ரகவ லுரிச்சீர் விகற்பமு மோண்ணுதலே.

### உதாரணமுதற்குறிப்பு.

உ. திருமழை யுள்ளா ரகவல் சிலைவிலங் காகும்வெள்ளை
மருளாறு வஞ்சிமந் தாநிலம் வந்துமை தீர்கலியின் [ன்ப
தெரிவுறு பந்தநல் லாய்செல்வப் போர்க்கதக் கண்ணனே
துரிமையின் கண்ணின்மையோரசைச்சீருக்குதாரணமே.

### நான்குதளை.

தன்சீர் தனது ஒன்றின் தன்தளை ஆம்:—

*ஆசிரியப்பா, வெண்பா, வஞ்சிப்பா என்பவற்றுள் யாதேனும் ஒரு பாவினைச்சேர் நின்று தன்னிறுதியசை வருஞ்சீர் முதலுடன் ஒன்றப் பெறுமாயின அவ்விருசீர்க்கும் இடையிற் றோன்றுந் தளை அந்தப்பாவுக்கே உரிய தளையாகும்.*

*தன் என்பன இரண்டும், ஆசிரியப்பா முதலிய மூன்றையுந் தனித்தனி சுட்டுமாறு நின்றன. தனது என்றது நின்ற சீரின் இறுதியசையை. ஒன்றின என்பதனால வருஞ்சீர் பெற்றாம். தன சீரும் தன்பால வாற்குரிய பிறசீரும் வருஞ்சீராய் நிற்கும். ஒன்றுதல் என்றது நின்ற சீரினிறுதியசையும் வருஞ்சீரின் முதலசையும் வேறுவேறெனப்படாமல் இரண்டும் ஒன்றே எனுமாறு இயைந்து புணர்தலே. நேரீற்றுச்சீரோடு நேர்முதற்சீரும் நிரையீற்றுச் சீரோடு நிரைமுதற் சீரும் புணர்தல் என்றவாறும்.*

*தன்சீர்தனதொன்றறன்றளையாம் என்றும் பாடம்.*

*இவ்வாறே அகவற்சீர் முதலிய மூன்றும் புணருங்கால் நான்குதளை தோன்றும். நேரசையீறும் நிரையசையீறுமாகிய இருவகையீறாய் நிற்கும் அகவற்சீரால் இரண்டுதளை தோன்றும். அவைகள் முறையே நேரொன்றாசிரியத்தளை என்றும், நிரையொன்றாசிரியத்தளை என்றும் வழங்கப்படும். நேரசையீற்றகவற்சீர் இரண்டும் மாச்சீர் என்றும், நிரையீற்றகவற்சீர் இரண்டும் விளச்சீர்*

---

* தன்சீர் என்று பாடங்கொண்டு வேறுரை கூறுவாருமுளர். எதுகை நோக்கினர்போலும். தன்சீர் என்பதற்கு வண்சீர் முதலியன இனவெதுகை.

என்றும் வழங்கப்படும். நான்குசீரும் நேரசை என்னும் ஒருவகையீறாய் நிற்கும் வெண்சீரால் ஒரு தளை தோன்றும். அது வெண்சீர் வெண்டளை என்று வழங்கப்படும். நான்கு சீரும் நிரையசை என்னும் மற்றொருவகையீறாய் நிற்கும் வஞ்சிச்சீரால் ஒரு தளை தோன்றும். அஃது ஒன்றிய வஞ்சித்தளை என்று வழங்கப்படும். இந்நான்கு தளைகளும் "தன்சீர் தனதொன்றிற் றன்றளையாம்" என்பதனால் உய்த்துணருமாறு சுருங்கக் கூறப்பட்டன. இவைநான்கையும் வரிசைப்படுத்தி யாவர்க்கும் பயன்படுமாறு வேறுவேறாகவும் கூறுதும்.

## நேரொன்றாசிரியத்தளை.

நேரசையீற்றகவற்சீர் நின்று நேரசைமுதலாய் வருஞ்சீருடன் புணர்தற்கண் உளதாகுந்தளை நேரொன்றாசிரியத்தளை எனப்படும். மாச்சீர்க்கு முன்னே நேர்வருதலே நேரொன்றாசிரியத்தளை என்பதும் ஒக்கும்.

உதாரணம்.

உள்ளார் கொல்லோ தோழி முள்ளுடை
இலவ மேறிய கலவ மஞ்ஞை
எரிபுகு மகளி ரேய்க்கும்
அரிபடு கள்ளியங் காடிறந் தோரே. ஐங்குறுநூறு.

இவ்வகவற்பாவின் முதலடியிலே முழுதும் நேரொன்றாசிரியத்தளை கொள்ளுமாறு சீர்களெல்லாம் நேரொடு நேராக ஒன்றி நின்றன. மற்றையடிகளிலே நேரொன்றாசிரியத்தளையன்றி நிரையொன்றாசிரியத்தளையும், இறுதியடியிலே இயற்சீர்வெண்டளையும் கொள்ளுமாறு சீர்கள் நின்றவாறு தேர்ந்தறிக. சீர்களெல்லாந் தன்சீர்களேயாம்.

---

## நிரையொன்றாசிரியத்தளை.

நிரையசையீற்றாசிரியச்சீர் நின்று நிரையசைமுதலாய் வரூஉம் சீருடன் புணர்தற்கண் உளதாகுந் தளை நிரையொன்றாசிரியத்தளை எனப்படும். விளச்சீர்க்குமுன்னே நிரை வருதலே நிரையொன்றாசிரியத்தளை என்பதும் ஒக்கும்.

உதாரணம்.

திருமழை தலைஇய விருணிற விசும்பின்
விண்ணதி ரிமிழிசை கடுப்பப்
பண்ணமைத் தவர்தேர் சென்ற வாறே.

இவ்வகவற்பாவிலே முதலடியிலும், இடையடியிலும் முழுதும் நிரையொன்றாசிரியத்தளை கொள்ளுமாறு சீர்களெல்லாம் நிரையொடு நிரையாக ஒன்றிநின்றன. இறுதியடியிலே நிரையொன்றாசிரியத்தளையன்றி நேரொன்றாசிரியத்தளையும் கொள்ளுமாறு சீர்கள் நின்றவாறு தேர்ந்தறிக. சீர்களெல்லாம் தன்சீர்களேயாம்.

---

### வெண்சீர்வெண்டளை.

வெண்சீர் நின்று நேரசைமுதலாய் வரும் சீருடன் புணர்தற்கண் உளதாகுந்தளை வெண்சீர்வெண்டளை என்று வழங்கப்படும். காய்ச்சீர்க்கு முன்னே நேர் வருதலே வெண்சீர்வெண்டளை என்பதும் ஒக்கும். இதற்கும் இயற்சீர்வெண்டளைக்கும் உதாரணம் ஒன்றேயாய் நிற்றலால் அதனையும் இதனுடன் சேர்த்து முடித்துச் செல்லுதும்.

### இயற்சீர்வெண்டளை.

அகவலுரிச்சீர் விகற்பமும் வெண்டளையாம்:—

அகவலுக்குரிய சீராகிய இயற்சீர் நின்று வருஞ்சீருடன் ஒன்றாமையாகிய விகற்பப்புணர்ச்சிக்கண் உளதாகுந் தளையும் வெண்டளையாகும். இதனை இயற்சீர் வெண்டளை என்று வழங்குவர். மாச்சீர்க்கு முன்னே நிரையும் விளச்சீர்க்கு முன்னே நேரும் வருதலே இயற்சீர்வெண்டளை என்பதும் ஒக்கும்.

விகற்பம் - முன்னடைந்த விதிக்கு விரோதமாயடையும்விதி. வி - விரோதம். கற்பம் - விதி. இங்கே நேரொடு நிரையும் நிரையொடு நேருமாக அடையும் விதி, நேரொடு நேரும் நிரையொடு நிரையுமாக முன்னடைந்த விதிக்கு விரோதம் எனக.

உதாரணம்.

சிலைவிலங்கு நீள்புருவஞ் சென்றொசிய நோக்கி
முலைவிலங்கிற் றென்று முனிவாள்—மலைவிலங்கு
தார்மாலை மார்ப தனிமை பொறுக்குமோ
கார்மாலை கண்கூடும் போது.

இவ்வெண்பாவிலே முதலடியிலும் இறுதியடியிலும் முழுதும் வெண்சீர்வெண்டளை கொள்ளுமாறு வருஞ்சீர்களுடன் ஒன்றிக் காய்ச்சீர்கள் நின்றன. மற்றையடிகளிலே வெண்சீர் வெண்டளை

யன்றி இயற்சீர்வெண்டளையும் கொள்ளுமாறு வருஞ்சீர்களுடன் ஒன்றிக் காய்ச்சீர்களும், ஒன்றாமல் இயற்சீர்களும் நின்றன.

இருவகைவெண்டளைகளும் இவ்வாறு கலந்து வாராது வேறு வேறாக வருமாறு சீர்கள் நிற்றலே வெண்பாவுக்குச் சிறப்பென்பது சிலர் கொள்கை.

உதாரணம்.

யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு. திருக்குறள்.

இக்குறள் வெண்பாவிலே முழுதும் வெண்சீர் வெண்டளை கொள்ளுமாறு சீர்களெல்லாம் வெண்சீர்களாய் ஒன்றி நின்றன.

இளையா னடக்க மடக்கங் கிளைபொருள்
இல்லான் கொடையே கொடைப்பயன் — எல்லாம்
ஒறுக்கு மதுகை யுரனுடை யாளன்
பொறுக்கும் பொறையே பொறை. நாலடியார்.

இவ்வெண்பாவிலே முழுதும் இயற்சீர் வெண்டளை கொள்ளுமாறு சீர்களெல்லாம் இயற்சீர்களாய் ஒன்றாது நின்றன.

---

ஒன்றியவஞ்சித்தளை.

வஞ்சிச்சீர் நின்று நிரைமுதலாய் வருஞ் சீருடன் புணர்தற்கண் உளதாகும் தளை ஒன்றியவஞ்சித்தளையாகும். கனிச்சீர்க்கு முன்னே நிரைவருதலே ஒன்றிய வஞ்சித்தளை என்பதும் ஒக்கும்.

ஒன்றாதவஞ்சித்தளை.

வஞ்சி வண்சீர் விகற்பமும் வஞ்சிக்குரித்து:—

வஞ்சிச்சீர் நின்று வருஞ்சீருடன் ஒன்றாமையாகிய விகற்பப்புணர்ச்சிக்கண் உளதாகும் தளையும் வஞ்சிப்பாவுக்குரிய தளையாகும். இதனை ஒன்றாத வஞ்சித்தளை என்று வழங்குவர். கனிச்சீர்க்கு முன்னே நேர்வருதலே ஒன்றாத வஞ்சித்தளை என்பதும் ஒக்கும்.

உதாரணம்.

மந்தா நிலம் வந்தசைப்ப
வெண்சாமரை புடைபெயர்தரச்
செந்தாமரை நாண்மலர்மிசை

எனவரும்,
இனிதி னெழுந்திய விறைவனை
மணிமொழி மெய்களின் வணக்குது மகிழ்ந்தே.

இக்குறளடி வஞ்சிப்பாவிலே வெண்சாமரை புடைபெயர்தர என்னும் அடியிலே ஒன்றிய வஞ்சித்தளை கொள்ளுமாறு வஞ்சிச்சீர் நின்று வருஞ்சீருடன் ஒன்றிற்று. முதலடியிலும் மற்றையடியிலும் ஒன்றுதவஞ்சித்தளை கொள்ளுமாறு வஞ்சிச்சீர்கள் நின்று வருஞ் சீர்களுடன் ஒன்றுவாயின.

---

## கலித்தளை.

வெண்சீர் விகற்பம் கலித்தளையாய் விடும்:—

வெண்சீர் நின்று வருஞ்சீருடன் ஒன்றுமையாகிய விகற்பப்புணாச்சிக்கண் உளதாகும் தளை கலித்தளை எனப்படும். காய்ச்சீர்க்கு முன்னே நிரைவருதலே கலித்தளை என்பதும் ஒக்கும்.

உதாரணம்.

செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி
முல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை முருக்கிப்போய்
எல்லைநீர் வியன்கொண்மூ விடைநுழைபு மதியம்போன்
மல்லலோங் கெழில்யானை மருமம்பாய்ந் தொளித்ததே.

இக்கலிப்பாவிலே நான்கடிகளிலும் கலித்தளையே கொள்ளுமாறு சீர்களெல்லாம் வெண்சீர்களாய் நின்று ஒன்றுவாயின. வேறு தளை விரவாமல் முற்றும் கலித்தளையாய் முடிதலின் இதனைச் சிறப்புடைக் கலித்தளை அமைந்து வந்த கலிப்பா என்பர்.

முன்னர்ச் சீர் கூறியவழி அசைச்சீரியற்சீ ரோக்கு மோண்டோக்கே என ஓரசைச்சீர்க்குத் தளையும் கூறி அங்கே தளைக்கு உதாரணம் கூறுது வைதது இயைபு நோக்கி உரிமையின் கண்ணின்மை யோநசைக் கீருக் குதாரணமே என இங்கே காட்டிய அதனையும் இனிக் கூறுதும்.

உரிமை யின்க ணின்மையால்
அரிமதர் மழைக் கண்ணாள்
செருமதி செய் தீமையாற்
பெருமை கொன்ற வென்பவே.

இந்த வஞ்சிவிருத்தத்திலே இரண்டாமடியில் "மழைக் கண்ணாள்" என்புழி இயற்சீர்வெண்டளை கொள்ளுமாறு மழை என்னும் ஓரசைச்சீர் கண்ணாள் என்னும் வருஞ்சீருடன் ஒன்றுமதும், மூன்றாமடியிலே "செய் நிமையால்" என்புழி நேரொன்றாசிரியத்தளை கொள்ளுமாறு செய் என்னும் ஓரசைச்சீர் நிமையால் என்னும் வருஞ்சீருடன் ஒன்றியும் நின்றவாறு உணர்க. மழை - நிரையசைச்சீர். இது விளச்சீர்போலக் கொள்ளப்படும். செய் - நேரசைச்சீர். இது மாச்சீர்போலக் கொள்ளப்படும்.

நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை என ஆசிரியத்தளை இரண்டு. வெண்சீர்வெண்டளை, இயற்சீர்வெண்டளை என வெண்டளை இரண்டு. ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றாதவஞ்சித்தளை என வஞ்சித்தளை இரண்டு. கலித்தளை ஒன்று. ஆகத்தளை ஏழு. (எ. அ.)

---

## அடி.

இரண்டு முதலிய சீர்களைக்கொண்டு முடிவது அடியாகும். ஒன்று முதலிய தளைகளையடுத்து முடிவதே அடியாகும் என்பதும் அமையும். இது குறளடி என்றும், சிந்தடி என்றும், அளவடி என்றும், நெடிலடி என்றும், கழிநெடிலடி என்றும் ஐந்துவகையாகும்.

ஐவகையடி.

க. குறளிரு சீரடி சிந்துமுச் சீரடி நாலோருசீர்
அறிதரு காலே யளவொடு நேரடி யையொருசீர்
நிறைதரு பாத நெடிலடி யாநெடு மென்பணைத்தோட்
கறைகெழு வேற்கணல் லாய்மிக்க பாதங் கழிநெடிலே.

உதாரணமுதற்குறிப்பு.

உ. திரைத்த விருது குறள்சிந் தளவடி தேம்பழுத்து
விரிக்குநெடிலடி வேனெடுங்கண்ணிவென்றான் வினையின்
இரைக்குங்கணிகோண்டமுவடிவோடிடங்கோங்குமற்று
கரிக்கைக் கவான்மருப் போர்முலை மாதர் கழிநெடிலே. [ங

குறளடி.

இரு சீரடி குறள்:—

இரண்டு சீர் கொண்டு முடிவு பெற்று நிற்கும் அடி குறளடி எனப்படும்.

இது மற்றையடிகள் எல்லாவற்றினும் குறுமையுடையதாய் நிற்றலாற் குறள் எனப்பட்டது. ஒரு தளை கொள்ள நிற்கும் இரு சீரால் வரும் இவ்வடி ஒருதளையடுத்து வருவதாகும். வஞ்சியடிய யல்லாததாய் வரும் குறளடிக்கு ஆசிரியர் தொல்காப்பியர் நான்கு முதல் ஆறுவரைக்கும் எழுத்தளவு கூறுவர்.

உதாரணம்.

திரைத்த சாலிகை
நிரைத்த போனிரந்
திரைப்ப தேன்களே
விரைக்கொண் மாலையாய். சூளாமணி.

இச்செய்யுளிலுள்ள அடிகள் ஆறெழுத்துப் பெற்று நின்ற குறளடிகள். நான்கும் ஐந்தும் பெறுவது வந்துழிக்காண்க. எழுத்தெண்ணப்படுங்கால், ஒற்றும், ஒரோவழிக் குற்றியலிகரவுகரங்களும், ஆய்தமும் எண்ணப்படுவனவல்ல.

சிந்தடி.

முச்சீரடி சிந்து—

மூன்று சீர்கொண்டு முடிவுபெற்று நிற்கும் அடி சிந்தடி எனப்படும்.

சிந்து - குறளினுஞ் சிறிது நெடியது. இரண்டு தளை கொள்ள நிற்கும் முச்சீரால் வரும் இவ்வடி இருதளையடுத்து வருவதாகும். வஞ்சியடியல்லாததாய் வரும் சிந்தடிக்கு ஆசிரியர் தொல்காப்பியர் ஏழு முதல் ஒன்பது வரைக்கும் எழுத்தளவு கூறுவர்.

உதாரணம்.

இருது வேற்றுமை யின்மையாற்
சுருதி மேற்றுறக் கத்தினுற்
றரிது வேற்றுமை யாகவே
கருது வேற்றடங் கையினாய். சூளாமணி.

இச்செய்யுளிலுள்ள அடிகள் ஒன்பதெழுத்துப் பெற்று நின்ற சிந்தடிகள். ஏழும் எட்டும் பெறுவது வந்துழிக் காண்க.

---

அளவடி.

நாலொரு சீரடி அளவொடு நேர்:—

**நான்குசீர்கொண்டு முடிவுபெற்று நிற்கும் அடி அளவடி என்றும், நேரடி என்றும் இருபெயரால் வழங்கப்படும்.**

குறுகுதலும் நெடுகுதலுமின்றி அளவுபட்டு நிற்றலால் அளவடி என்றும், யாண்டும் பயின்று தலைமையெய்தி நிற்றலால் நேரடி என்றும் சொல்லப்படும். நேர் - தலைமை. மூன்றுதளை கொள்ள நிற்கும் நாற்சீரால் வரும் இவ்வடி மூன்றுதளையடுத்து வருவதாகும். தளையடுத்து அடிவருதலை இவ்வாறறிக. அளவடிக்கு ஆசிரியர் தொல்காப்பியர் பத்துமுதற் பதினான்குவரைக்கும் எழுத்தளவு கூறுவர்.

உதாரணம்.

தேம்பழுத் தினியநீர் மூன்றுந் தீம்பலா
மேம்பழுத் தளிந்தன சுளையும் வேரியும்
மாம்பழக் கனிகளும் மதுத்தண் டட்டமுந்
தாம்பழுத் துளசில தவள மாடமே. சூளாமணி.

இச் செய்யுளிலுள்ள அடிகளுள்ளே முதலடியொழிந்த மூன்றடிகளும் பதின்மூன்றெழுத்துப் பெற்று வந்த அளவடிகள். முதலடி பன்னிரண்டெழுத்துப் பெற்று வந்த அளவடி. இதுவும் அந்நிலையினாற் சமமாயிற்று. பத்தும் பிறவுமாக எழுத்துப் பெறுமடி வந்துழிக் காண்க.

---

நெடிலடி

ஐயொருசீர் நிறைதரு பாதம் நெடிலடியாம்:—

ஐந்துசீர் கொண்டு முடிவுபெற்று நிற்கும் அடி நெடிலடியாகும்.

நிறைதல் - நிரம்புதல். பாதம் - அடி. நெடில் - நெடியது. அளவின் மேற்படலால் நெடிலெனப்பட்டது. நெடிலடி முதலியவற்றின் எழுத்தளவுகளைத் தொல்காப்பியம் முதலியவற்றிற் காண்க. விரிவஞ்சி விடுகின்றாம்.

உதாரணம்.

வென்றான் வினையின் றொகையாகி விரிந்து தன்கண்
ஒன்றாய்ப் பரந்த வுணர்வின்னொழி யாது முற்றும்
சென்றான் றிகழுஞ் சுடர்சூழொளி மூர்த்தி யாகி
நின்றா னடிக்கீழ்ப் பணிந்தார்வினை நீங்கி நின்றார். சூளாமணி.

இச்செய்யுளிலுள்ள அடிகள் பதினொன்கெழுத்துப் பெற்று வந்த நெடிலடிகள்.

---

## கழிநெடிலடி.

மிக்கபாதம் கழிநெடிலே:—

*சீர்கள் ஐந்தின் மிக்கு நிற்கும் அடிகளெல்லாம் கழிநெடிலடி எனப்படும்.*

இது நெடிலடியினும் நெடுமையுடைமையாற் கழிநெடில் எனப்பட்டது. கழிநெடிலடி என்றது அறுசீரடி, எழுசீரடி எண்சீரடி முதலியனவாகி வரும் எல்லாவடிகளையும் சுருங்கச்சொல்லலாக ஒருங்குசேர்த்து ஒருபெயராற் கூறியதென உணர்க. அவற்றின் உதாரணங்களைக் குறிப்பிடதவாறே எடுத்துக்கூறி அப்பாற் செல்லுதும். சீரிலைகளையும் பிறவற்றையுங் தேர்ந்தறிந்துகொள்க.

---

உதாரணம்.

அறுசீரடி.

இரைக்கு மஞ்சிறைப் பறவைக ளெனப்பெய
 ரினவண்டு புடைசூழ
நுரைக்கப் பொன்னுமக் குழம்புக டிகழ்ந்தெழ
 நுடங்கிய விலயத்தார்
நிரைக்க ரங்களிற் செழுமலைச் சந்தனத்
 திரைகளைக் கரைமேலவைத்
தரைக்கு மறறிது குணகடற் றிரையொடு
 பொருதல தனியாதே. சூளாமணி.

---

எழுசீரடி.

மணிகொண்ட லர்ந்த நறவேங்கை யோடு
 கமழ்கின்ற காந்த ளிதழால்
அணிகொண்ட லர்ந்த வனமாலை சூடி
 யகிலாவி குஞ்சி கமழ
மணிகுண்ட லங்க ளிருபாலும் வந்து
 வரையாக மீது திவளத்
துணிகொண்டி லங்கு சுடர்வேலி னோடு
 வருவானி தென்கொ றுணிவே. சூளாமணி.

இக்கவியின் அடிதோறும் முதனின்ற சீர்களைப் புளிமா என்றது புளிமாங்காய் என்றே கொள்ளுதும். உடங்குகின்றவைகளும் உதாரண முதனிலைப்பும் அதுவேகொளகிற்றல அறிக.

---

## எண்சீரடி.

ஏழடியி னிலிரண்டு சூழ்சுடரு நாளா
முழுதுலகு மூடியெழின் முளைவயிர நாற்றித்
பாவடியி னிலகநகு வெண்குடையி னீழற்
சுடரோயுன் னடிபோற்றிச் சொல்லுவதொன் றுண்டே
சேவடிக டாமரையின் சேயிதழ்க ளுண்டேல்
சிவந்தனவோ சேவடியின் செங்கதிர்கள் பாயப்
பவளங் கொண்டனவோ பொங்கொளிகள் சூழ்ந்து
படங்கொணா கமணிகள் பணைவயனந் தோ
காராயா

---

## ஒன்பதுசீரடி.

இடங்கை வெஞ்சிலை வலங்கை வாளி
யெதிர்ந்த தானையை யிடந்து மாற்றினை விலங்கியோ
முடங்கு வாலுளை படங்க ணீமிசை
முரிந்து சென்றுடன் முரண்ட ராசனை முருக்கியோ
வடங்கொண் மென்பலை நுடங்கு நுண்ணிடை
மடந்தை சுந்தரி வணங்கொள் பூண்முலை மகிழ்ந்தோனை
தடங்கொ டாமரை யடங்கொள் சேவடி
கலங்கு வைப்பவர் தமக்கு வெந்துயர் தவிர்க்குமே.

---

## பத்துச்சீரடி.

கொங்கு தங்கு கோதை யோதி மாத ரோடு
கூடி நீடு மோடை நெற்றி
வெங்கண் யானை வேந்தர் போந்து வேத கீத
நாத வென்று நின்று தாழ
அங்க பூர்வ மாதி யாய வாதி நூலின்
நீதி யோது மாதி யாய
செங்கண் மாலை காலை மாலை சேர்நர் சேர்வ
சோதி சேர்ந்த சித்தி நாதனே.

இங்கே பத்துச்சீர் பெற்று வரும் அடிவரையும் உதாரணம் காட்டி "மற்றும்" என்பதனாற் பதினொருசீரடி முதலியவைகளும் தழுவப்பட்டன. எண்சீர்வரையும் பெற்றுவரும் அடிகளே சிறப்புடையடிகள் என்பது சிலநூலார்கொள்கை.

---

பதினொருசீரடி.

யிடு கொண்ட நல்லறம் பகர்ந்த பண்பு னைக்கெலாம் ன்
விளங்கு திங்க ணீர்மையால் விரிந்திலங்கும் வன்பினோ
மோடு கொண்ட வெண்ணுரைக்க ருங்கடற் செழுஞ்சுடர்
முளைத்தெழுந்த தென்னலாய் முகிழ்த்திலங்கு போதி
ஆகின்ற மூவகைப் பவங் கடந்து குறையான [யினை
ஐந்தொடங்கொர்மூன் றறுத்த காதனுண்மலர்த்துணை
பிடு கொண்ட வார்தளிர்ப் பிறங்கு போதி யானையெம் .
பிரானை நாளு மேத்துவார் பிறப்பிறப்பி லார்களே.

இச்செய்யுளைப் பதினொரு சீரடிக்கு வீரசோழியவுரைகாரர் காட்டி "இதன் மேற்பட்டனவெல்லாம் இரட்டைவிருத்தம் என்க." எனவெழுதினார். வேறு சிலர் பன்னிருசீரடிக்கும் காட்டினார். வேறு சிலர் பன்னிருசீரடிக்கு "அங்கியங்கொளுந்தபடி" எனத் தொடக்கத்து பாடல்களைக் காட்டுவர். அவையெல்லாம் இரட்டைவிருத்தங்களாய் நிற்றலால சண்டைக்கு உதாரணமாகாமை அறிக். (கூ-௪0)

---

அடிவரையறை.

க வெள்ளைக் கிரண்டடி வஞ்சிக்கு மூன்றடி மூன்றகவற்
கெள்ளப் படாக்கலிக் கீரண் டாகு மிழிபுரைப்போர்
உள்ளக் கருத்தி னளவே பெருமையோண் போதலைத்த
கள்ளக் கருங்கெடுங் கட்சுரி மென்குழற் காரிகையே.

உதாரணமுதற்குறிப்பு.

உ. அறத்தா றிதுவென வெள்ளைக் கிழிபக வற்கிழிபு
குறித்தாங் குரைப்பின்முதுக்குறைந்தாங்குறையாக்கலியின்
திறத்தா றிதுசெல்வப்போர்சேங்கண் மேதிவஞ் சிச்சிறுமை
புறத்தாழ் கருமென் குழற்றிரு வேயன்ன பூங்கொடியே.

வெள்ளைச் சுருக்கம்.

இரண்டடி வெள்ளைக்கு இழிபு—

இரண்டடியான் முடிவது வெண்பாவுக்குச் சுருக்க மாகிய சிற்றெல்லையாகும்.

இரண்டடியிற் சுருங்கி வெண்பா வருவதில்லை யென்பதாம். வெள்ளை - வெண்பா. இழிபு - சுருக்கம், சிறுமை.

உதாரணம்.

அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை. திருக்குறள்.

---

அகவற்சுருக்கம்.

மூன்று அடி அகவற்கு இழிபு—

மூன்றடியான் முடிவது அகவற்பாவுக்குச் சுருக்க மாகிய சிற்றெல்லையாகும்.

உதாரணம்.

முதுக்குறைந் தனளே முதுக்குறைந் தனளே
மலைய னொள்வேற் கண்ணி
முலையும் வாரா முதுக்குறைந் தனளே

---

கலிச்சுருக்கம்.

ஈரிரண்டு அடி கலிக்கு இழிபாகும்:-

நான்கடியான் முடிவது கலிப்பாவுக்குச் சுருக்கமா கிய சிற்றெல்லையாகும்.

உதாரணம்.

செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி
முல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை முருக்கிப்போய்
எல்லைநீர் வியன்கொண்மூ விடைநுழையு மதியம்போன்
மல்லலோங் கெழில்யானை மருமம்பாய்ந் தொளித்ததே.

---

வஞ்சிச்சுருக்கம்.

மூன்றடி வஞ்சிக்கு இழிபு:—

மூன்றடியான் முடிவது வஞ்சிப்பாவுக்குச் சுருக்கமா கிய சிற்றெல்லையாகும்.

உதாரணம்.

செங்கண்மேதி கரும்புழக்கி
அங்கணீலத் தலரருந்திப்
பொழிற்காஞ்சி நிழற்றுயிலும்
செழுநீர்,
நல்வய லூரன் கேண்மை
புகழ்ந்த லானாப் பெருவண் மையனே.

இவை முன்னின்ற மூன்றடிகளுமே வஞ்சிக்குரிய அடிகளெனக் கொள்க. மற்றையன முறையே தனிச்சொல்லும் அகவலடிகளுமாம்.

---

## பெருக்கம்.

உரைப்போர் உள்ளக்கருத்தின் அளவே பெருமை—

பாடும்புலவருடைய உள்ளத்திலே கருதப்பட்ட பொருளின் முடிபு எத்துணை விரிவுடையதோ அத்துணை விரியும் அடிகளான் முடிவது வெண்பா முதலிய நால்வகைக்கும் பெருக்கமாகிய பேரெல்லையாகும்.

வெண்பா முதலிய பாக்கள் நான்கும் தத்தம் சிற்றெல்லையின் மேல இத்துணை என்னும் வரையறையின்றி எத்துணையும் அடிகள் பெற்று வரும் என்றவாறாம். உரைப்போர் என்றது பாடும்புலவரை. கருத்து - கருதப்பட்டது. பெருமை - பெருக்கம். ஆசிரியர் தொல்காப்பியர் ஆசிரியப்பாட்டின் அளவிற்கெல்லை ஆயிரமாகும் என்பர். மதுரைக்காஞ்சி என்னும் அகவற்பாட்டும் அடியால் உயர்ந்ததை அனுமிற்று. (௧௧-௧௨)

---

## தொடை.

அடிகளிலுஞ் சீர்களிலும் அமையுமாறு எழுத்து முதலியவற்றால் தொடுக்கப்பட்டுப் பூத்தொடை போன்று செய்யுட்குப் பொலிவுசெய்து நிற்பது தொடையாகும்.

இது மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை எனத் தொகையான் ஐந்தாகும். ஐந்தும் தனித்தனி அடி, இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று என வரும் எட்டோடும் பொருந்தி வரும் வகையான் எட்டாகி விரி

ன் நாற்பதாகும். அந்தாதி, இரட்டை, செந்தொடை என்பவை கூடுஞ் சேர நாற்பத்துமூன்றாகும்.

மோனை முதலிய ஐந்தனிலக்கணமும், அடி, இணை, பொ... ப முதலிய எட்டனுள்ளே முதற்கணின்ற அடி என்னுமொரு ..லையைத்தும் பொருந்தி வரும் வகையும் வருங்கவியாற் கூற் நின்றன.

ஐந்துதொடை.

௧ எழுவா யெழுத்தொன்றின் மோனை யியைபிறுதி யிரண்டாம்
வழுவா வெழுத்தொன்றின் மாதே யெதுகை மறுதலைத்த
மொழியான் வரினு முரணடி தோறு முதன்மொழிக்கண்
அழியா தளபெடுத் தொன்றுவ தாகு மளபெடையே.

அந்தாதி. இரட்டை. செந்தொடை.

அந்த முதலாத் தொடுப்பதந் தாதி யடிமுழுதும்
வந்த மொழியே வருவ திரட்டை வரன்முறையான்
முந்திய மோனை முதலா முழுதுமொவ் வாதுவிட்டாற்
செந்தொடை நாமம் பெறுநறு மென்குழற் றேமொழியே.

உதாரணமுதநினைப்பு.

௨ மாவும்புண் மோனை யியைபின் வளைகவடி பேரெதுகைக்
கேவின் முரணு மிருள்பரந் தீண்டா பாஅவளிய
ஓவிலந் தாதி யுலகுட னாமொக்க மேயிரட்டை
பாவருஞ் செந்தொடை பூத்தவேன் றாகும் பணிமொழியே.

மோனை.

எழுவாய் எழுத்து ஒன்றின் மோனை.—

அடிதோறும் ஆதியாவது அடியொன்றிலுள்ள சீரின் ஆதியாவது எழுத்தினால் ஒன்றத்தொடுக்கப்படுமாயின் அத்தொடை மோனை எனப்படும்.

இது முதனிற்றல்பற்றி மோனை எனப்பட்டது. மோனை - முதல். ஒன்றுதல் - ஒன்றாதல், இணங்குதல். முன்னின்ற எழுத்துப் பின்னும் வந்து தானும் தானுமாய் ஒன்றுதலும் இனவெழுத்தும் தானுமாய் ஒன்றுதலும் என ஒன்றுதல் இருவகை. இனம் - உடன்பிறப்பு முதலிய தொடர்புபற்றி நிகழும் உறவு. எழுவாயென்றது அடியின் முதலையும் சீரின் முதலையும்.

## கிளையெழுத்து.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ௧. | அ | ஆ | ஐ | ஔ. | |
| ௨. | இ | ஈ | எ | ஏ | ய. |
| ௩. | உ | ஊ | ஒ | ஓ. | |
| ௪. | ஞ | ந. | | | |
| ௫. | ம | வ. | | | |
| ௬. | த | ச. | | | |

இவ்வறுவகையும் தம்முள் ஒப்பனவாய் ஒன்றி மோனையாய் நிற்றற்குரிய கிளையெழுத்துக்களாம். ஞாபகஞ் செய்தற்பொருட்டுப் பாட்டிலும் இவைகளைக் காட்டுதும்.

வெண்பா.

அகரமோ டாகார மைகார மௌகான
இகரமோ டீகாரம் எஏ—உகரமோ
டூகாரம ஒஓ ஞநமவ தச்சகரம்
ஆகாத வல்ல வரு.

அகரமோடாகாரமைகாரமௌகான் எனவும், இகரமோடீகாரம் எஏ எனவும், உகரமோடூகாரம் ஒஓ எனவும், ஞந எனவும், மவ எனவும், தச்சகரம் எனவும் பிரித்துணர்க. இயைபும் வழக்கும் பற்றி டகரத்தையும் சேர்த்தாம். அது - ஒத்தது.

---

### இயைபு.

இறுதி ஒன்றின் இயைபு; இரண்டாம்—

அடிதோறும் இறுதியாவது அடியொன்றிலுள்ள சீரினிறுதியாவது ஒன்றத்தொடுக்கப்படுமாயின் அத்தொடை இயைபு எனப்படும். அது சொல்லினால் ஒன்றுவதும் எழுத்தினால் ஒன்றுவதும் என இரண்டாகும்.

ஒன்றின் என்பது ஈண்டும் கூட்டப்பட்டது. இது வேறாகக் கலந்து தழுவி நிற்றல்பற்றி இயைபு எனப்பட்டது. இயைபு - புணர்ச்சி. இறுதியென்றது அடியினிறுதியையும் சீரினிறுதியையும்.

உரைகாரர் யாவரும் இரண்டாம் என்பதை எச்சமென்றெண்ணி இரண்டாம்வழுவாமெழுத்து என்று புணர்த்துவர். "இரண்டாமெழுத்து" என்று புணர்த்தலன்றி "இரண்டாம்வழுவா" என்று புணர்த்துதல் இயையாமையும் பிறவும் அறிக.

---

## எதுகை.

**வழுவா எழுத்து ஒன்றின் எதுகை:—**

*அடிதோறும் ஆதியாவது அடியொன்றிலுள்ள சீரினாதியாவது இரண்டாம் எழுத்தினால் ஒன்றத்தொடுக்கப்படுமாயின் அத்தொடை எதுகை எனப்படும்.*

*இது பொருத்தம் நோக்கித் தொடுக்கப்படுதல் பற்றி எதுகை எனப்பட்டது. எதுகை - பொருத்தம். மோனை, எதுகை என்று வரும் முறை போல முதலாம் எழுத்து மோனையாக இரண்டாம் எழுத்து எதுகையாகும் வழுவாமுறையுடைமையின் அதனை வழுவாவெழுத்து என்றார். இங்கே சுருங்கச்சொல்லலைப்பற்றி மோனை, இயைபு என முறைதவறிற்று. ஒன்றின் எனவே முன்னிற்கும் எழுத்துக்களும் மாத்திரையால் ஒத்தல்வேண்டும் என்பது பெற்றாம். பந்தம் என்பதற்கு முதலெழுத்தும் மாத்திரையால் ஒத்த கந்தம் என்பதன்றிக் காந்தம் என்பது எதுகையாவதில்லை.*

---

## முரண்.

**மறுதலைத்த மொழியான் வரினும் முரண்:—**

*அடிதோறும் ஆதியாவது அடியொன்றிலுள்ள சீரினாதியாவது ஒன்றாது மாறுபட்ட சொல்லாற்றொடுக்கப்பட்டு வருமாயினும், பொருளாற்றொடுக்கப்பட்டு வருமாயினும் அத்தொடை முரண் எனப்படும்.*

*இது முரண்கொண்டு நிற்றலால் முரண் எனப்பட்டது. முரண் - பகை, போர், மாறுபாடு. மறுதலைத்தல் - மாறுபடுதல், பகைத்தல். இதற்கு மறுதலை என்னும் பெயர் பகுதி. உம்மையாற் பொருளும் உடன்கொள்ளப்பட்டது.*

---

## அளபெடை.

**மொழிக்கண் அழியாது அளபெடுத்து ஒன்றுவது அளபெடையாகும்:—**

*அடிதோறும் ஆதியாவது அடியொன்றிலுள்ள சீரினாதியாவது சொல்லின்கண் இசைகெடாமல் எழுத்தினால் அளபெடுத்தொன்றுந் தொடை அளபெடையாகும்.*

*இஃது அளபெடைகொண்டு நிற்றலால் அளபெடை எனப்பட்டது.*

---

அ ௪.

## அடிதோறும் முதல்:—

"மோனை முதலிய ஐந்தும் அடிதோறும் வருவது பொதுவே அடி எனப்படும்.

இஃது அடிகளின்மாத்திரம் நிற்றல்பற்றி அடி எனப்பட்டது. அடி, இணை, பொழிப்பு முதலிய எட்டுவகையுள்ளே முதலாவதாய் நிற்றல் பற்றி அடியை முதல என்பதனாற் சுட்டியுணரவைத்தார். மோனை முதலிய ஐந்தும் என்பது அதிகாரத்தால் வருவிக்கப்பட்டது. வருவது என்பது சொலலெச்சம். அடிதோறும் வருதலால் "இறுதியியைபு" எனலால இயைபு இறுதியிலும் மற்றைய மோனை முதலிய நான்கும் ஆதியிலும வருமென உணர்க.

மோனை முதலிய ஐந்தும் அடி முதலிற் பொருந்தி வந்தகால முறையே அடிமோனைத்தொடை, அடியியைபுத்தொடை, அடியெதுகைத்தொடை, அடிமுரண்டொடை, அடியளபெடைத் தொடை என்று வழங்கப்படும.

இவ்வாறே இக்கவி எழு கூறுபாடுடையதாய் நின்று மோனை முதலிய ஐந்தினிலக்கணமும, அவற்றுள் ஒன்றாகிய இயைபினை வகையும், அடி முதலிற் பொருந்தி வரும் ஐந்தின்வகையும இலகுவிற் பெறுமாறு இனிது விளக்கிற்று.

உரைகாரர் யாவரும் அடிதோறும என்பதையும், இரண்டாம் என்பதையும் வலிந்திழுத்து முன்னும பின்னும சேர்த்து ஐந்து கூறுபாடாக்கி மோனை முதலிய ஐந்தினிலக்கணம், இயைபினை வகை என்னும் இரண்டும் இழப்பித்து ஐந்தின்வகை யொன்று மாத்திரம பெறுவர். ஆரியவியாகரணசூத்திரம்போல அதிநுட்பமும் நோக்கும் அமைய ஆசிரியர் சுருக்கிச்சொலலும் போக்கினை நோக்கிலர்.

---

### அடிமோனைத்தொடை.

உதாரணம்.

மாவும் புள்ளும் வதிவயிற் படர
மாநீர் விரிந்த பூவுங் கூம்ப
மாலை தொடுத்த கோதையுங் கமழ
மாலை வந்த வாடை
மாயோ ளின்னுயிர்ப் புறத்திறுத் தன்றே.

இது மகர மென்னும் எழுத்தொன்றே அடிதோறும் முதற்கண் வந்து ஒன்றுதலால் அடிமோனைத்தொடையாயிற்று.

---

அடி யியைபுத்தொடை.

உதாரணம்.

இன்னகைத் துவர்வாய்க் கிளவியு மணங்கே
நன்மா மேனிச் சுணங்குமா ரணங்கே
ஆடமைத் தோளி யூடலு மணங்கே
அரிமதர் மழைக்கண்ணு மணங்கே
திருநுதற் பொறித்த திலகமு மணங்கே.

இஃது அணங்கே என்னுஞ் சொல்லொன்றே அடிதோறும் இறுதிக்கணின்று ஒன்றுதலால் அடியியைபுத்தொடையாயிற்று. எழுத்தியைபிற்கு உதாரணம் பின்னர்க் கூறப்படும்.

---

அடியெதுகைத்தொடை

உதாரணம்.

வடியேர் கணீர்மல்க வான்பொருட்குச் செல்வ
கடியார் கணங்குழாய் காணார்கொல் காட்டுள்
இடியின் முழக்கஞ்சி யிரங்கயுள வேழம்
பிடியின் புறத்தசைத்த கை.

இது முன்னிற்கும் எழுத்தெல்லாம் ஒத்தமாத்திரையவாயின வாய ககரம் என்னும் எழுத்தொன்றே அடிதோறும் இரண்டா மெழுத்தாய் நின்றமையால் அடியெதுகைத்தொடையாயிற்று.

அடிமுரண்டொடை.

உதாரணம்.

இருள்பரந் தன்ன மாநீர் மருங்கில்
நிலவுக் குவித்தன்ன வெண்மண லொருசிறை
இரும்பி னன்ன கருங்கோட்டுப் புன்னை
பொன்னி னன்ன நுண்டா துறைக்கும்
சிறுகுடிப் பரதவர் மடமகள்
பெருமதர் மழைக்கண்ணு முடையவா லணங்கே.

இது பொருளான் முரணுதலுஞ் சொல்லான் முரணுதலுமாய் அடிமுதலெல்லாம் முரணிநிற்றலால் அடிமுரண்டொடையாயிற்று. இருள்பரந்தன்ன என்பதற்கு நிலவுக்குவித்தன்ன என்பதும், இரும்பினன்ன என்பதற்குப் பொன்னினன்ன என்பதும் பொருளான்முரண். சிறுகுடி என்பதற்குப் பெருமகர் என்பது சொல்லான்முரண்.

## அளபெடைத்தொடை.

உதாரணம்.

ஆஅ வளிய வலவன்றன் பார்ப்பினோ
டூஉ நிரைக்கொண டிருளிடைப் பள்ளிபுட்
டேஉந் திரையலைப்பத் தூஞ்சா திறைவன்றேர்
மேஎ வலைப்பட்ட நம்போ னறுந்தால்
ஓஒ வுழக்குந் துயர்.

இஃது அடிதோறும் ஆதி அளபெடைதோன்றி நிற்றலால் அளபெடைத் தொடையாயிற்று.

---

## அந்தாதித்தொடை.

அந்தம் முதலாத் தொடுப்பது அந்தாதி —

அந்தமாய் நிற்கும் எழுத்து, அசை, சீர் முதலியன ஆதியுமாய் நின்று தம்முளொன்றத் தொடுக்கப்படுந் தொடை அந்தாதித் தொடை எனப்படும்.

இது முடிவே முதலுமாய் நின்று புணர்தலால் அந்தாதி எனப்பட்டது. அந்தம் - முடிவு. ஆதி - முதல்.

உதாரணம்.

உலகுடன் விளக்கு மொளிநிகழ் மதிமதி
மதிநல னழிக்கும் வளங்கெழு முக்குடை
முக்குடை நீழற் பொற்புடை யாசனம்
ஆசனத் திருந்த திருந்தொளி யறிவன்
ஆசனத் திருந்த திருந்தொளி யறிவனை
அறிவுசே ருள்ளமோ டருந்தவம் புரிந்து
துன்னிய மாந்தர தென்ப
பன்னருஞ் சிறப்பின் விண்மிசை யுலகே.

இஃது அடியில் அந்தமாய் நின்ற அசைமுதலியன ஆதியாய் நின்றொன்றலால் அந்தாதித் தொடையாயிற்று. மதி+மதி என்பது அசையந்தாதி. முக்குடை+முக்குடை என்பதும், ஆசனம்+ஆசனம் என்பதும் சீரந்தாதி. ஆசனத்திருந்த+ஆசனத்திருந்த என்பது அடியந்தாதி. புரிந்து+துன்னிய என்பதும், என்ப+பன்னரும் என்பதும் எழுத்தந்தாதி. உலகே+உலகுடன் என்பது மண்டலவடியந்தாதி. மண்டலவடி - சக்ராகாரமாய் வளைந்து சென்று மற்றொன்றோடு பொருந்தும் அடி. இறுதியடியினிறுதியிலே நின்ற உலகே என்பது வளைந்து போய் முதலடியின் முதனின்ற உலகுடன் ஒன்றிற்று.

---

## இரட்டைத்தொடை.

வந்த மொழியே அடிமுழுதும் வருவது இரட்டை —

அடியின் முதலில் வந்த சொல்லுத்தானே அந்தவடி முழுதும் தொடுக்கப்பட்டு வருவது இரட்டைத்தொடை எனப்படும்.

இது முன்வந்த மொழியே இரட்டித்து இருமொழியாகி ஒரு அளவாக்குற்றுப் பின்னும் இரட்டித்து நிற்றலால் இரட்டை எனப்பட்டது. இரட்டை - இரட்டித்து நிற்பது.

உதாரணம்.

ஒக்குமே யொக்குமே யொக்குமே யொக்கும்
விளக்கினிற் சீறெரி யொக்குமே யொக்கும்
குளக்கொட்டிப் பூவி னிறம்.

இது முதலடியிலே முன்வந்த சொல்லே முழுதுந் தொடுக்கப்பட்டு நிற்றலால் இரட்டைத்தொடையாயிற்று. இறுதியும் ஒக்குமே என முடியாமையால் இதனைக் குறையிரட்டை என்று கூறி நிறையிரட்டைக்குப் "பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ" என்பதைக் காட்டுவாருமுளர். பிறர்போலச் சீர் என்னாது "வந்த மொழியே" என மொழி கூறலால் இறுதியிலும் ஒக்கும் என மொழியிற் குறையாமை அறிக.

---

## செந்தொடை.

வரன்முறையான் முந்திய மோனை முதலா முழுதும் ஒவ்வாது விட்டாற் செந்தொடை நாமம் பெறும்:—

அசை, சீர் முதலியன செம்மையனவாக ஆராய்ந்து கொண்டு அடிபொருந்தத் தொடுக்கப்படும் பாவிலே, யாண்டும் தவறாது வந்து நிற்கும் முறையிலே முந்தி நிற்கின்ற மோனை, எதுகை முதலாக ஒன்றும் வந்து பொருந்தாமல் ஒழியுமாயின் அத்தொடை செந்தொடை என்னும் பெயர் பெறும்.

இஃது அசை, சீர், இசை முதலியவற்றால் அழகும் இணக்கமும் கோணுமையும் பெற்று, இயலபிலே மாலையாய்த் தூங்கும் கடப்பம்பூவும் கொன்றைப்பூவும் போன்று, மற்றைச் செயற்கைத் தொடை வேண்டாது செய்யுளைச் சிறப்பித்து நிற்றலாற் செந்தொடை எனப்பட்டது. செம்மை-அழகு, இணக்கம், கோணுமை. ஒவ்வாமை - பொருந்தாமை.

உதாரணம்.

பூத்த வேங்கை வியன்சினை யேறி
மயிலின மகவு நாடன்
நன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே.

இது செம்மையனவாய அசை, சீர், இசை பொருள் முதலியன இயைபத்தொன்றி நிற்றலாற் செந்தொடையாயிற்று. மோனையுமில்லை! எதுகையுமில்லை! மற்றைத் தொடையுமில்லை! ஆயினும் இசை முதலியவற்றால் எத்துணையும் நன்கு சிறந்து விளங்குதல் காண்க.

நாற்பத்துமூன்றெனப்படும் தொடைகளுள்ளே அடிமோனை, அடியியைபு முதலிய ஐந்தும் அந்தாதி முதலிய மூன்றும் இங்கே கூறப்பட்டன. இணைமோனை, இணையியைபு முதலிய முப்பத்தைந்தும் இனிக் கூறப்படுவன. அந்தாதி முதலிய மூன்றையும் இடைமடுத்துக் கூறியது அடிமோனை முதலிய ஐந்தும் அடிதோறும் வருதலும், இணைமோனை முதலிய முப்பத்தைந்தும் அடியொன்றிலே வருதலுமாகிய வேறுபாடு குறித்தறிதற்கென்க. (௧௩-௧௪-௧௫)

---

இருசீர் மிசையிணை யாகும் பொழிப்பிடை யிட்டொரூஉவாம்
இருசீ ரிடைவிட்ட தீற்றில் கூழை முதலிறுவாய்
வருசீ ரயலில் மேல்கீழ் வகுத்தமை தீர்க்கதுவாய்
வருசீர் முழுவது மொன்றின்முற் றுமென்ப மரறவையே.

## இணை.

இருசீர்மிசை இணையாகும்:—

ஏனைச்சீர்களின்றி முதலிரு சீர்க்கண்ணும் வருதலுடைய மோனை முதலிய தொடை ஐந்தும் பொதுவே இணை எனப்படும்.

இஃது இணையாகி வரலால் இணை எனப்பட்டது. இணை - துணை, இரண்டு. "இறுதி யியைபு" எனலால் இயைபுத்தொடைகளெல்லாம் இறுதிச்சீரையே முதற்சீராகக்கொண்டு தொடை நோக்குக.

இணையாகப் பொருந்தி வரும் மோனை முதலிய ஐந்தும் இணைமோனைத்தொடை, இணையியைபுத்தொடை, இணையெதுகைத்தொடை, இணைமுரண்டொடை, இணையளபெடைத்தொடை என்று வழங்கப்படும்

---

## பொழிப்பு.

இடையிட்டு பொழிப்பு ஆகும் —

இடைவிட்டு வரும் இயல்புடைய மோனை முதலிய தொடையைந்தும் பொதுவே பொழிப்பு எனப்படும்.

இது மற்றை மோனைகளெல்லாவற்றுள்ளும் மிக்க சிறப்புடைத்தாய்ப் பொலிவு செய்து நிற்றலால் பொழிப்பு எனப்பட்டது. பொழிப்பு - சிறப்புடையது. இடையிடுதல் - இடைவிடுதல். இடைவிட்டுவருதலாவது இடையிடை ஒவ்வொன்று விட்டு வருதல் என்க. எனவே முதலாஞ்சீரிலும் மூன்றாம்சீரிலும் வருந்தொடை பொழிப்பு என்றவாறும். தொடையெல்லாம் அளவடிக்கே கூறப்படுதலின் அப்பால் வரவின்றி நான்காஞ் சீரில் விடுதலோடொழிவதாயிற்று.

இடையிட்டு என்பதை "இடையிட்டது" எனத் திரித்துப் பாடங்கொள்வாருமுளர். அத்தப்பாடமும் ஒரூஉவிற்கே சென்று பொழிப்பினை ஒருவுதல் உணர்க.

பொழிப்பாகப் பொருந்தி வரும் மோனை முதலிய ஐந்தும் பொழிப்புமோனைத்தொடை பொழிப்பியைபுத்தொடை, பொழிப்பெதுகைத்தொடை, பொழிப்புமுரண்டொடை, பொழிப்பளபெடைத்தொடை என்று வழங்கப்படும்.

---

## ஒரூஉ.

இடை இருசீர் விட்டது ஒரூஉ:—

இடைக்கணுள்ள இருசீர்க்கண்ணும் வருதலைத் தவிர்ந்த மோனை முதலிய தொடை ஐந்தும் பொதுவே ஒரூஉ எனப்படும்.

இஃது அணிமைப்படாது ஒருவிவந்து செய்மைப்பட நின்று பொருந்துதலால ஒரூஉ எனப்பட்டது. ஒருவுதல் - விட்டு நீங்குதல். தழுவியாடும் கூத்தினைத் தழூஉ என்றாற்போல ஒருவி வரும் தொடையை ஒரூஉ என்றார். தழூஉ - குரவைக்கூத்து.

ஒரூஉவாகப் பொருந்தி வரும் மோனை முதலிய ஐந்தும் ஒரூஉமோனைத்தொடை, ஒரூஉவியைபுத்தொடை, ஒரூஉவெதுகைத்தொடை, ஒரூஉமுரண்டொடை, ஒரூஉவளபெடைத்தொடை என்று வழங்கப்படும்.

---

## கூழை.

ஈறிலி கூழை:—

இறுதிச்சீரின்மாத்திரம் வருதலில்லாத மோனை முதலிய தொடை ஐந்தும் பொதுவே கூழை எனப்படும்.

இது கடைப்பாகம் குறைந்த கூழையாய் நிற்றலாற் கூழை எனப்பட்டது. கூழை - தனக்குரிய அளவினின்றும் இறுதி குறைந்து நிற்பது. ஈறிலி எனவே முதன் மூன்று சீரிலும் வருதலுள தென்பதாம்.

கூழையாக வரும் மோனை முதலிய ஐந்தும் கூழை மோனைத்தொடை, கூழையியைபுத்தொடை, கூழையெதுகைத்தொடை, கூழைமுரண்டொடை, கூழையளபெடைத்தொடை என்று வழக்கப்படும்.

---

## மேற்கதுவாய்.

முதல் வருசீர் அயலில மேற்கதுவாய்:—

இரண்டாஞ்சீரின்மாத்திரம் வருதலில்லாத மோனை முதலிய தொடை ஐந்தும் பொதுவே மேற்கதுவாய் எனப்படும்.

இது கீழே இடைவெளி தோன்றவிட்டுப்போய் மேலே வெளி தோன்ற விடாது கதுவிநிற்றலால் மேற்கதுவாய் எனப்பட்டது. கழுவுதலுடையதைக் கழுவாய் என்றது போலக் கதுவுதலுடைய தொடையைக் கதுவாய் என்றார் எனக்கொள்க. கதுவுதல் - நீங்காது பற்றுதல். வாய் - ஒரு பெயர்விகுதி, இவ்விகுதி சில முற்றுகரவீற்று வினைப்பகுதியோடு வரும். முதலவருசீரயல் - இரண்டாஞ்சீர். இல என்பது இரு கதுவாய்க்கும் பொதுவாய் நின்றபன்மைப்பெயர். கழுவாய் - பிராயச்சித்தம்.

மேற்கதுவாயாகச் சேர்ந்து வரும் மோனை முதலிய ஐந்தும் மேற்கதுவாய் மோனைத்தொடை, மேற்கதுவாயியைபுத்தொடை, மேற்கதுவாயெதுகைத்தொடை, மேற்கதுவாய் முரண்டொடை, மேற்கதுவாயளபெடைத்தொடை என்று வழங்கப்படும்.

---

### கீழ்க்கதுவாய்.

இறுவாய் வருசீர் அயலில கீழ்க்கதுவாய் —

மூன்றாஞ்சீரின் மாத்திரம் வருதலில்லாத மோனை முதலிய தொடை ஐந்தும் பொதுவே கீழ்க்கதுவாய் எனப்படும்.

இது கீழே இடைவெளி தோன்றவிடாது கதுவிநின்று மேலே போய் வெளிதோன்றவிட்டு நிற்றலாற் கீழ்க்கதுவாய் எனப்பட்டது.

இறுவாய்வருசீர் - இறுதிச்சீர். அயல் - அதற்கயலாகிய மூன்றாஞ்சீர். கதுவாய்க்கு மேலுரைத்தாங்குரைக்க. அடியினின்றெழுந்து முடிபரியந்தம் மேனோக்கிச் செல்லுதலால் அடியைச் சேர்ந்த பாகம் கீழாயிற்று; முடியைச்சேர்ந்த பாகம் மேலாயிற்று.

கீழ்க்கதுவாயாக வரும் மோனை முதலிய ஐந்தும் கீழ்க்கதுவாய் மோனைத்தொடை, கீழ்க்கதுவாயியைபுத்தொடை, கீழ்க்கதுவாயெதுகைத்தொடை, கீழ்க்கதுவாய்முரண்டொடை, கீழ்க்கதுவாயளபெடைத்தொடை என்று வழங்கப்படும்.

---

### முற்று.

வருசீர் முழுவதும் ஒன்றின் முற்றும் என்ப:—

வருகின்ற சீர்களெல்லாவற்றிலும் மோனை முதலிய ஐந்தும் பொருந்தி வருமாயின், அத்தொடை பொதுவே முற்று எனப்படும் என்பர்.

இது சீர் முழுதிலும் வருதலால் முற்று எனப்பட்டது. முற்று-முழுவதுமுடையது.

முற்றாக வரும் மோனை முதலிய ஐந்தும் முற்றுமோனைத் தொடை, முற்றியைபுத்தொடை, முற்றெதுகைத்தொடை, முற்று முரண்டொடை, முற்றளபெடைத்தொடை என்று வழங்கப்படும்.

மற்றவையே:—

இந்த முப்பத்தைந்துமே அடிமோனை முதலிய ஐந்தோடும் ஆண்டுச் சேரக் கூறாமல் வைத்து அடியொன்றி லுள்ள சீரில் வரும் வேறுபாடு புலப்பட வேறாக்கி ஈண்டுக் கூறுவான் நின்ற மற்றைய தொடைகளாம். (கசு)

---

உதாரணமுதற்குறிப்பு.

மோனை விகற்ப மணிமலர் மொய்த்துட னுமியையிற்
கேனை யெதுகைக் கினம்பொன்னி னன்ன வினிமுரணிற்
கான விகற்பமுஞ் சீரடிப் பேர தளபெடையின்
தான விகற்பமுந் தாஅட்டாஅ மரையேன்ப தாழ்குழலே.

மேலே ஐந்தைந்து ஓரினமாய் ஒருங்குவரக் கூட்டி எட்டாகப் பிரித்து விளக்கிய நாற்பது தொடைகளையும் இக்கவியிலே எட்டெட்டு ஓரினமாய்வரக்கூட்டிவைத்து ஐந்தாகப் பிரித்து மோனை விகற்பம், எதுகைவிகற்பம் முதலிய குறியீடுகளால உய்த்துணரக் காட்டி ஒவ்வொன்றில எட்டும் வருதலமைந்த உதாரணங்களையும் குறிப்பித்து மிகச்சுருக்கி முடிக்கின்றார். மோனைவிகற்பம் - மோனையின் வேறுபாடு. விகற்பம் - வேறுபாடு, வகை.

மோனை விகற்பம்.

க. அடிமோனைத்தொடை.
உ. இணைமோனைத்தொடை.
௩. பொழிப்புமோனைத்தொடை.
௪. ஒரூஉமோனைத்தொடை.
ரு. கூழைமோனைத்தொடை.
சு. மேற்கதுவாய்மோனைத்தொடை.
எ. கீழ்க்கதுவாய்மோனைத்தொடை.
அ. முற்றுமோனைத்தொடை.

உதாரணம்.

அணிமல ரசோகின் றளிர்நலங் கவற்றி (இணைமோனை.)
அரிக்குரற் கிண்கிணி யரற்றுஞ் சீறடி (பொழிப்புமோனை.)
அம்பொற் கொடிஞ்சி நெடுந்தே ரகற்றி (ஒரூஉமோனை.)
அகன்ற வல்கு லந்நுண் மருங்குல் (கூழைமோனை.)
அரும்பிய கொங்கை யவ்வளை யமைத்தோள் (மேற்கதுவாய்மோனை.)
அவிர்மதி யனைய திருநுத லரிவை (கீழ்க்கதுவாய்மோனை.)
அயில்வே லனுக்கி யம்பலைத் தமர்த்த (முற்றுமோனை.)
கருங்கய னெடுங்க ணோக்கமென்
றிருந்திய சிந்தையைத் திறைகொண் டனவே.

இவ்வகவற்பாவிலே முதலிரு சீர்க்கண்ணும் அகரம் வந்தொன்றலால் முதலாமடி இணைமோனைத்தொடை. முதற்சீர்க்கண்ணும் மூன்றாஞ்சீர்க்கண்ணும் அகரம் வந்தொன்றலால் இரண்டாமடி பொழிப்பு மோனைத்தொடை. இவ்வாறே மற்றையடிகளிலும் வருவன காண்க. இவையன்றி அடிதோறும் முதற்கண் அகரம் நின்றொன்றலால் அடிமோனைத்தொடையும் அமைந்திருத்தல் அறிக.

---

இயைபு விகற்பம்.

க. அடியியைபுத்தொடை.
உ. இணையியைபுத்தொடை.
௩. பொழிப்பியைபுத்தொடை.
௪. ஒரூஉவியைபுத்தொடை.
௫. கூழையியைபுத்தொடை.
௬. மேற்கதுவாயியைபுத்தொடை.
௭. கீழ்க்கதுவாயியைபுத்தொடை.
௮. முற்றியைபுத்தொடை.

உதாரணம்.

மொய்த்துடன் றவழு முகிலே பொழிலே (இணையியைபு.)
மற்றத னயலே முத்துறழ் மணலே (பொழிப்பியைபு.)
நிழலே யினியத னயலது கடலே (ஒரூஉவியைபு.)
மாதர் நகிலே வல்லே யியலே (கூழையியைபு.)

பல்லே தளவம் பாலே சொல்லே (மேற்கதுவாயியைபு.)
வில்லே நுதலே வேற்கண் கயலே (கீழ்க்கதுவாயியைபு.)
புயலே குழலே மயிலே யியலே (முற்றியைபு.)

அஃதனால்;—

இவ்வயி னிவ்வுரு வியங்களின்
எவ்வயி னோரு மிழப்பர்தந் திறையே.

இவ்வகவற்பாவிலே முதல் (இறுதி) இருசீரிறுதிகளில் ஓரெழுத்தே வந்தொன்றலால் முதலாமடி இணையியைபுத்தொடை. முதலாஞ் (இறுதி) சீரிறுதியிலும் மூன்றாஞ்சீரிறுதியிலும் ஓரெழுத்தே வந்தொன்றலால் இரண்டாமடி பொழிப்பியைபுத்தொடை. இவ்வாறே இறுதியை முதலாகக் கொண்டு மற்றையடிகளிலும் வருவன காண்க. இவையன்றி அடிதோறும் முதற்கண் ஓரெழுத்தே வந்தொன்றலால் அடியியைபுத்தொடையும் அமைந்திருத்தல் அறிக.

---

### எதுகை விகற்பம்.

௧. அடியெதுகைத்தொடை.
௨. இணையெதுகைத்தொடை.
௩. பொழிப்பெதுகைத்தொடை.
௪. ஒரூஉவெதுகைத்தொடை.
௫. கூழையெதுகைத்தொடை.
௬. மேற்கதுவாயெதுகைத்தொடை.
௭. கீழ்க்கதுவாயெதுகைத்தொடை.
௮. முற்றெதுகைத்தொடை.

உதாரணம்.

பொன்னி னன்ன பொறிசுணங் கேந்திப் (இணையெதுகை.)
பன்னருங் கோங்கி னன்னலங் கவற்றி (பொழிப்பெதுகை.)
மின்னென வொளிவடந் தாங்கி மன்னிய (ஒரூஉவெதுகை.)
நன்னிற மென்முலை மின்னிடை வருத்தி (கூழையெதுகை.)
என்னையு மிடுக்கண் டுன்னுவித் தின்னடை (மேற்கதுவா யெதுகை.)
அன்ன மென்பெடை போலப் பன்மலர்க் (கீழ்க்கதுவாயெ துகை.)
கன்னியம் புன்னை யின்னிழற் றுன்னிய (முற்றெதுகை.)
மயிலேய் சாயலவ் வாணுதல்

அயில்வே லுண்கணெம் மறிவு தொலைத்தவே.

இவ்வகவற்பாவிலே இணையெதுகைத்தொடை முதலியனவன்றி அடியெதுகைத்தொடையும் அமைந்திருத்தல் அறிக.

---

முரண் விகற்பம்.

க. அடிமுரண்டொடை.
உ. இணைமுரண்டொடை.
ங. பொழிப்புமுரண்டொடை.
ச. ஒரூஉமுரண்டொடை.
ரு கூழைமுரண்டொடை.
சு. மேற்கதுவாய்முரண்டொடை.
எ. கீழ்க்கதுவாய்முரண்டொடை.
அ. முற்றுமுரண்டொடை.

உதாரணம்.

சீறடிப் பேரகல்குலொல்குபு (இணைமுரண்.)
சுருங்கிய நுசுப்பிற் பெருகு வடங்தாங்கிக் (பொழிப்புமுரண்.)
குவிந்து சுணங்கரும் பியகொங்கை விரிந்து (ஒரூஉமுரண் )
சிறிய பெரிய நிகர்மலர்க் கோதைதன் (கூழைமுரண்.)
வெள்வளைத் தோளுஞ் சேயரிக் கருங்கணும் (மேற்கதுவாய் முரண்.)
இருக்கையு நிலையு மேங்தெழி லியக்கமும் (கீழ்க்கதுவாய் முரண்.)
துவர்வாய்த் தீஞ்சொலுமுவந்தெனைமுனியா (முற்றுமுரண்.)
தென்று மின்னணை மாகுமதி
பொன்றிகழ் நெடுவேற் போர்வல் லோயே.

இவ்வகவற்பாவிலே முதலிருசீர்க்கண்ணும் சிறுமை,பெருமை என்பன தம்முண் முரணிநிற்றலால் முதலாமடி இணைமுரண்டொடை. முதலாம் சீரிலும் மூன்றாம் சீரிலும் பெருகுதல், சுருங்குதல் என்பன தம்முண் முரணிநிற்றலால் இரண்டாமடி பொழிப்பு முரண்டொடை. முதலாஞ் சீரிலும் நான்காஞ் சீரிலும் குவிதல், விரிதல் என்பன தம்முண் முரணிநிற்றலால் மூன்றாமடி ஒரூஉ முரண்டொடை. இவ்வாறே மற்றையடிகளிலும் வருவன காண்க. ஐவகை முரணுள் ஒன்றாய அடிமுரண்டொடையும் அமைந்துளது

போதும். சிகர் - சமம். இருக்கை - இருத்தல். நிலை - நிற்றல். இயக்கம் - நடை. துவா - துவர்ப்பு. தீம - தித்திப்பு.

---

## அளபெடை விகற்பம்

க. அடியளபெடைத்தொடை.
உ. இணையளபெடைத்தொடை.
௩. பொழிப்பளபெடைத்தொடை.
௪ ஒரூஉவளபெடைத்தொடை.
௫ கூழையளபெடைத்தொடை
௬. மேற்கதுவாயளபெடைத்தொடை
௭. கீழ்க்கதுவாயளபெடைத்தொடை
௮ முற்றளபெடைத்தொடை.

உதாரணம்.

தாஅட் டாஅ மரைமலர் குழீஇப் (இணையளபெடை.)
பூஉக் குவளைப் போஒது அருந்திக் (பொழிப்பளபெடை)
காஅய்ச் செந்நெற் கறித்துப் போஒய் (ஒரூஉவளபெடை)
மாஅத் தாஅண் மோஒட் டெருமை (கூழையளபெடை)
தேஎம் புனலிடைச் சேஒப் பாஅல் (மேற்கதுவாயளபெடை)
மீஇ ஞெஅர்ந் துகளுஞ் சீஇர் (கீழ்க்கதுவாயளபெடை)
ஆஅ ஞஅ நீஇ ணீஇ (முற்றளபெடை)
ஊரன் செய்த கேண்மை
ஆய்வளைத் தோளிக் கலரா னவே

இவ்வகவற்பாவிலே இணையளபெடைத்தொடை முதலியன வன்றி அடியளபெடைத்தொடையும் அமைந்திருத்தல் அறிக.

அடிமோனை முதலிய ஐந்துக்கும் பின்னும் உதாரணம் கூறிய தென்னையோவெனின் அவையும் இவற்றுடன் ஒருங்கு சேர்த்தெண்ணப்படும் இயல்புடையன வென்பதறிவித்தற்கோம்.

மோனைத்தொடை எட்டு. இயைபுத்தொடை எட்டு. எதுகைத்தொடை எட்டு. முரண்டொடை எட்டு. அளபெடைத்தொடை எட்டு. அந்தாதித்தொடை ஒன்று. இரட்டைத்தொடை ஒன்று. செந்தொடை ஒன்று. ஆகத்தொடை நாற்பத்துமூன்று. (௧௭)

---

### உறுப்பியற்காரிகை முதற்குறிப்பு.

கந்தமுங் தேனுஞ் சுருக்கமுங் காதற் குறில்குறிலே
சந்தமுந் தீரசை தேமாத்தண் குன்றந்தன் சீர்திருவும்
கொந்தவிழ் கோதாய் குறடிரை வெள்ளைக் கறத்தெழுவாய்
அந்தமு மாவு மிருசீரு மோனையு மாமுறுப்பே.

இக்காரிகையிலே "கந்தமடிவில்" என்பது முதல் "மோனை விகற்பமணிமலர்" என்பது பரியந்தம் உறுப்பியலிலே வருஞ் செய்யுட்களுக்கெல்லாம் பாடம்பண்ணுவோர் பொருட்டு முதல் கூறப்பட்டிருத்தல் அறிக. (௧௨)

# செய்யுளியல்.

செய்யுட்குரிய இலக்கணமெல்லாம் உணர்த்துயாற்றால் இவ்வியல் செய்யுளியல் என்னும் பெயர்த்தாயிற்று. செய்யுளாவது உறுப்பியலிற் கூறப்பட்ட உறுப்பெல்லாம் அமைந்துநிற்கச் சொற்களாலே பொருட்கிடனுகச் செய்யப்படுவது; செய்யுள் என்பது விசேடமுறச் செய்யப்படுதல் பற்றி வந்த காரணப்பெயர். வேயுள் என்பது போற்கொள்க. வேயுள் - வேயப்படும் வீடு. செய்யுள் என்பதற்குத் தூக்கு, கவி, பாட்டு, யாப்பு, தொடர்பு என்பன பரியாயம். இது பா என்றும், பாவினம் என்றும் இருவகைப்படும்.

---

## பா.

| | | | |
|---|---|---|---|
| க | வெண்பா. | ௩. | கலிப்பா |
| ௨ | ஆசிரியப்பா. | ௪. | வஞ்சிப்பா |

இவை நான்கும் பாவெனப்படும். இது பாவுடைமைபற்றி வந்த காரணப்பெயர். பா என்பது பரந்துபட்டுச் செல்வதோர் ஓசை. சிலர் அறம் முதலிய பொருணான்கும் பாவிநடத்தலபற்றி வந்த பெயரென்பர். வேறு சிலர் தொடை பாவிநடத்தலபற்றி வந்த பெயரென்பர். பாவுதல் - பரத்தல். வடநூலாரும சுலோகத்தினைச் சந்தம் என்பர். மருட்பா என வருவதையும் சேர்த்து ஐந்தடா என்பர.

---

## பாவினம்.

பாவினம் எனப்படுவது தாழிசை, துறை, விருத்தம் மூன்று. இம்மூன்றும் வெண்பா முதலிய நான்கிற்கும யொத்துத் தனித்தனி இனமாய் வரலாற் பாவினம் ஏவன் கேட்ப அறலாம் வரை ாருகர் கண்ணும்,

### வெண்பாவினம்.

க. வெண்டாழிசை, வெண்டுறை, வெளில் உறழ்த்துறைப்

*அகவற்பாவினம்.*

௨. ஆசிரியத்தாழிசை, ஆசிரியத்துறை, ஆசிரியவிருத்தம்.

*கலிப்பாவினம்.*

௩. கலித்தாழிசை, கலித்துறை, கலிவிருத்தம்.

*வஞ்சிப்பாவினம்.*

௪. வஞ்சித்தாழிசை, வஞ்சித்துறை, வஞ்சிவிருத்தம்.

*மருட்பா என்பது வெண்பாவின் கூறும், அகவற்பாவின் கூறுமாகி வருவதொன்றன்றித் தானாக வேறுபடுத்தி இதுவெனக் காட்டி வருவதொரு பாவன்று. அதற்கு இனமும் இல்லை.*

---

*பாக்களினடியும், இசையும்.*

க. வெண்பா வகவல் கலிப்பா வளவடி வஞ்சியென்னும்
ஒண்பா வடிகுறள் சிந்தென் றுரைப்ப வொலிமுறையே
திண்பா மலிசெப்பல் சீர்சா லகவல்சென் றோங்குதுள்ளல்
நண்பா வமைந்த கலமிகு தூங்க னறுநுதலே.

*உதாரணமுதற்குறிப்பு.*

௨. வளம்பட வெண்பது வெள்ளைக் ககவற் குதாரணஞ்செங்
களம்படக் கொன்று கலிக்கரி தாயகண் ணோர்கொடிபோற்
றுளங்கிடை மாதே சுறமறி தொன்னலத் தின்புலம்பென்
றுளங்கொடு காவல ரோதினர் வஞ்சிக் குதாரணமே.

*வெண்பாவினடியும், இசையும்.*

வெண்பா அடி அளவு; ஒலிசெப்பல் என்றுரைப்ப—

*வெண்பாவுக்குரிய அடியை அளவடி என்றும் அத னிசையைச் செப்பலிசை என்றும் சொல்லுவர்.*

*செப்பலிசையாவது அழைத்துக் கூறுமல் ஒருவனுக்கு மற்*
*ர் இயல்புவகையான் ஒருபொருள் கட்டுரைத்தற்கண்*
*லிசை யென்பர் நச்சினார்க்கினியர். செப்பல்—செப்பிக்*
*லச, ஒலி, ஓசை என்பன ஒரு பொருட்கிளவி.*
*மாத்திரை முதலியவை காரணமாகச் செய்யு*
*ளும் ஒலியே இசையெனப்படும்.*

உதாரணம்.

வளம்பட வேண்டாதார் யார்யாரு மில்லை
அளந்தன போக மவரவ ராற்றான்
விளங்காய் திரட்டினா ரில்லை—களங்கனியைக்
காரெனச்செய் தாரு மிலர். நாலடியார்.

இந்நூலாசிரியர் பா நான்கிற்கும் இசையும் நான்கெனக் கூறிப் பொதுப்பட முடித்தனர். வேறு சில நூலாசிரியரும் உரையாசிரியரும் இசைகளைத் தனித்தனி மும்மூன்றாக்கிக் கூறுவர். அவர் செப்பலிசையை ஏந்திசைச் செப்பல், தூங்கிசைச் செப்பல், ஒழுகிசைச் செப்பல் எனப் பிரிப்பர்.

ஏந்திசைச்செப்பலாவது முற்றும் வெண்சீர்வெண்டளைபெற்று வரும் வெண்பாவில் நிகழும் இசை. ஏந்திசை - உச்சமாகி உயர்ந்து செல்லும் இசை. இதனை முன்வந்த "யாதானு நாடாமால்" என்னும் குறள்வெண்பா நோக்கி அறிக. ஏந்தல் - உயர்ச்சி, பெருமை. ஏந்திசையை வடநூலார் உதாத்தம் என்பர்.

தூங்கிசைச் செப்பலாவது முற்றும் இயற்சீர்வெண்டளை பெற்று வரும் வெண்பாவில் நிகழும் இசை. தூங்கல் - தாழ்வு, சோர்வு. இதனை முன் வந்த "இளையா னடக்கம்" என்னும் வெண்பா நோக்கி அறிக. தூங்கிசையை வடநூலார் அநுதாத்தம் என்பர்.

ஒழுகிசைச் செப்பலாவது இருவகை வெண்டளையும் விரவிய வெண்பாவில் நிகழும் இசை. ஒழுகிசை உயர்வுந் தாழ்வுமின்றிச் சமமாகிச் செல்லும் இசை. ஒழுகல் - சமமாக நடத்தல். இதனை "வளம்பட" என்னும் இவ்வுதாரணம் நோக்கி அறிக. ஒழுகிசையை வடநூலார் சுவரிதம் என்பர்.

---

## அகவற்பாவினடியும் இசையும்.

அகவலடி அளவு; ஒலி அகவல் என்றுரைப்ப:—

ஆசிரியப்பாவுக்குரிய அடியை அளவடி என்றும் அதனிசையை அகவலிசை என்றும் கூறுவர்.

அகவலிசையாவது கூற்றும் மாற்றமுமாகி ஒருவன் கேட்ப அவற்கொன்று செப்பிக் கூறாது தாம் கருதியவாறெல்லாம் வரையாது கூறுவது என்றும், அது களம்பாடு பொருநர் கண்ணும், கட்டுங் கழங்குமிட்டுரைப்பார்கண்ணும், தம்மில் உறழ்ந்துரைப்

பார்கண்ணும், பூசலிசைப்பார்கண்ணும் கேட்கப்படும் என்றும் நச்சினார்க்கினியர் கூறுவர். அகவலிசை - அகவிக் கூறுமிடத்துத் தொடர்ந்து கிடக்குமிசை. அகவல் - அழைத்தல்.

உதாரணம்.

செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
செங்கோ லம்பின் செங்கோட் டியானைக்
கழறொடிச் சேஎய் குன்றம்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே. குறுந்தொகை.

அகவலிசையை ஏந்திசையகவல், தூங்கிசையகவல், ஒழுகிசையகவல் எனப் பிரிப்பர் ஒருசாரார். அகவல் என்பது அகவற்பாவுக்கும், அகவற்பாவின் இசைக்கும் பெயர்.

ஏந்திசையகவலாவது முற்றும் நேரொன்றாசிரியத்தளை பெற்று வரும் அகவற்பாவில் நிகழும் இசை. இதனைப் "போது சாந்தம்" என்னும் அகவற்பா நோக்கி அறிக.

தூங்கிசையகவலாவது முற்றும் நிரையொன்றாசிரியத்தளை பெற்று வரும் அகவற்பாவில் நிகழும் இசை. இதனை "அணிநிழலசோகமர்ந்து" என்னும் அகவற்பா நோக்கி அறிக.

ஒழுகிசையகவலாவது இருவகையாசிரியத்தளையும் விரவிய அகவற்பாவில் நிகழும் இசை. இதனைச் "செங்களம்பட" என்னும் இவ்வுதாரணம் நோக்கி அறிக.

---

### கலிப்பாவினடியும் இசையும்.

கலிப்பா அடி அளவு; ஒலி துள்ளல் என்றுரைப்ப.—

கலிப்பாவுக்குரிய அடியை அளவடி என்றும் அதனிசையைத் துள்ளல் என்றும் சொல்லுவர்.

துள்ளலிசை - துள்ளச் சொல்லுமிசை. துள்ளலாவது ஒழுகிச் செல்லலின்றி இடையிடை உயர்ந்து செல்லுதல்.

உதாரணம்.

தரவு.

அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்
பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்
புரிவமர் காதலிற் புணர்ச்சியுந் தருமெனப்

பிரிவெண்ணிப் பொருள்வயிற் சென்றநங் காதலர்
வருவர்கொல் வயங்கிழாய் வலிப்பல்யான் கேளினி;

### தாழிசை.

௧. அடிதாங்கு மளவின்றி யழலன்ன வெம்மையாற்
கடியவே கனங்குழாய் காடென்றா ரக்காட்டுட்
டுடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவு முரைத்தனரே;

௨. இன்பத்தி னிகந்தொரீஇ யிலைதீர்ந்த வுலவையாற்
றுன்புறூஉந் தகையவே காடென்றா ரக்காட்டுள்
அன்புகொண் மடப்பெடை யசைஇய வருத்தத்தை
மென்சிறக ராலாற்றும் புறவெனவு முரைத்தனரே;

௩. கன்மிசை வேய்வாடக் கனைகதிர் தெறுதலாற்
றுன்னருந் தகையவே காடென்றா ரக்காட்டுள்
இன்னிழ லின்மையான் வருந்திய மடப்பிணைக்குத்
தன்னிழலைக் கொடுத்தளிக்குங் கலையெனவு முரைத்
தனரே;

எனவாங்கு,

### சுரிதகம்.

இனநல முடைய கானஞ் சென்றோர்
புனைநலம் வாட்டுந ரல்லர் மனைவயிற்
பல்லியும் பாங்கொத் திசைத்தன
நல்லெழி லுண்கணு மாடுமா லிடனே. கலித்தொகை.

துள்ளலிசையை ஏந்திசைத்துள்ளல், அகவற்றுள்ளல், பிரிந்திசைத்துள்ளல் எனப்பிரிப்பர் ஒருசாரார்.

ஏந்திசைத்துள்ளலாவது முற்றும் கலித்தளை பெற்று வரும் கலிப்பாவில் நிகழும் இசை. இதனைச் "செல்வப்போர்க் கதக்கண்ணன்" என்னும் கலிப்பா நோக்கி அறிக.

அகவற்றுள்ளலாவது கலித்தளையும் வெண்டளையும் விரவிய கலிப்பாவில நிகழும் இசை. இதனைப் பின் வரும் "வாணெடுங் கண்" என்னும் கலிப்பா நோக்கி அறிக.

பிரிந்திசைத்துள்ளலாவது கலித்தளையொடு பிறதளை விரவிய கலிப்பாவில் நிகழும் இசை. இதனைக் "குடநிலைத் தண்புறவில" என்னும் கலிப்பா நோக்கி அறிக.

## வஞ்சிப்பாவினடியும் இசையும்.

"வஞ்சியென்னும் ஒண்பாவடி குறள், சிந்து; ஒலி தூங்கல் என்றுரைப்ப"—

வஞ்சிப்பாவுக்குரிய அடியைக் குறளடி சிந்தடி என இருவகை என்றும் அதனிசையைத் தூங்கலிசை என்றும் சொல்லுவர்.

தூங்கலிசை - எழுச்சியும் விரைவுமின்றித் தூங்கிச் செல்லும் இசை. தூங்கல் - சோர்வு, தாழ்வு, தணிவு. அடிதோறும் தூங்கும் என்று சிலரும், சீர்தோறும் தூங்கும் என்று சிலரும் கூறுவர்.

உதாரணம்.

க. சுறமறிவன துறையெல்லாம்
இறவீன்பன இல்லெல்லாம்
மீன்திரிவன கிடங்கெல்லாம்
தேன்றாழ்வன பொழிலெல்லாம்

என வாங்கு,

தண்பணை தழீஇய இருக்கை
மண்கெழு செங்கோன் மன்ன னூரே.

இது குறளடியான் வந்த வஞ்சிப்பா.

உ. தொன்னலத்தின் புலம்பலைப்பத் தொடித்தோண்மேற்
பன்னலத்த பலத்தொலையப் பரிவெய்தி
என்னலத்தகை இதுவென்னென வெழில்காட்டிச்
சொன்னலத்தகைப் பொருள்கருத்தினிற் பிறந்தாங்

கெனப்பெரிதும்;

கலங்கஞ ரெய்தி விடுப்பவுஞ்
சிலம்பிடைச் செலவுஞ் சேணிவர் தற்றே.

இது சிந்தடியான் வந்த வஞ்சிப்பா.

தூங்கலிசையை ஏந்திசைத்தூங்கல், அகவற்றூங்கல், பிரிந்திசைத் தூங்கல் எனப் பிரிப்பர் ஒருசாரார்.

ஏந்திசைத்தூங்கலோசை முற்றும் ஒன்றிய வஞ்சித்தளை பெற்று வரும் வஞ்சிப்பாவில் கேட்கும் இசை.

உதாரணம்.

வினைத்திண்பகை விழச்செற்றவன்
வனப்புங்கய மலர்த்தாளிணை
நினைத்தன்பொடு தொழுதேத்தினர்

னாரும்,

மயலார் நாற்கதி மருவார்
பெயரா மேற்கதி பெறுகுவர் விரைந்தே.

அகவற்றூங்கலாவது முற்றும் ஒன்றாதவஞ்சித்தளை பெற்று வரும் வஞ்சிப்பாவில் நிகழும் இசை.

உதாரணம்.

வானோர்தொழ வண்டாமரைத்
தேனார்மலர் மேல்வந்தருள்
ஆனாவருள் கூறறிவனைக்

காணார்,

மலர்கொண் டேத்தி வணங்குநர்
பலர்புகழ் முத்தி பெறுகுவர் விரைந்தே.

பிரிந்திசைத் தூங்கலாவது இருவகை வஞ்சித்தளையும் பிறதளையும் விரவிய வஞ்சிப்பாவில நிகழும் இசை. இதனைப் பின்வரும் "கொடிவாலன" என்னும் வஞ்சிப்பா நோக்கி அறிக. இவ்விசைகளை யெல்லாம் நாவினாலோதிச் செவிகருவியாக இனிதுணர்க. (கஉ)

---

## வெண்பா.

வெண்டளையும் அளவடியும் பெற்றுச் செப்பலிசை யுடையதாய் வரும் செய்யுள் வெண்பா எனப்படும். வெண்பா என்பது வெண்ணிறம் போன்ற இயல்புடைமை பற்றி வந்த ஒப்பினாகிய பெயர். இயல்பாவது வெண்ணிறம் வேறொன்று விரவியவழிக் கெடுதல் போலப் பிறதளை விரவிய வழி இசை கெடுதல். வெள்ளை, முதற்பா, அந்தணர்பா, வண்பா என்பன இதன் பரியாயம். இதன் வகை ஐந்து.

## ஐவகைவெண்பா.

க. குறள்வெண்பா.
உ. நேரிசைவெண்பா.
௩. இன்னிசைவெண்பா.
௪. பஃறொடைவெண்பா.
ரு. சிந்தியல்வெண்பா.

---

### குறள்வெண்பா, நேரிசைவெண்பா.

க. ஈரடி வெண்பா குறள்குறட் பாவிரண் டாயிடைக்கட்
சீரிய வான்றனிச் சொல்லடி மூய்ச்செப்ப லோசைகுன்று
தோரிரண் டாயு மொருவிகற் பாயும் வருவதுண்டேல்
நேரிசை யாகு நெறிசுரி பூங்குழ னேரிழையே.

உதாரணமுதற்குறிப்பு.

உ. உருவுகண் டெள்ளா வுடையார் குறண்மட வாய்தடமண்
டரிய வரைகீண் டிருகுற ணேரிசை தாமரையின்
கருமமு மாத்தவும் வஞ்சியுங் காமர் தனிச்சொன்முன்று
நேரிநுண் கருங்குழ னேரிழை யாசிட்ட நேரிசையே.

குறள்வெண்பா.

ஈரடி வெண்பா குறள் ஆகும்:—

வெண்பாவுக்குரிய பொதுவிலக்கணமெல்லாம் பெற்று இரண்டடியுடையதாய் வரும் வெண்பா குறள்வெண்பா எனப்படும்.

இது பாக்களெல்லாவற்றினும் குறுமையுடைமை பற்றிக் குறள் எனப்பட்டது. குறள் - குறுமையுடையது. வெண்குறள், வெள்ளைக்குறள் என்பன இதன் பரியாயம்.

உதாரணம்.

க. உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்ன ருடைத்து. திருக்குறள்.

உ. உடையார்முன் னில்லார்போ லேக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர். திருக்குறள்.

*இவற்றுள்ளே முன்னையது இருவிகற்பம் பெற்று வந்த குறள்வெண்பா. பின்னையது ஒருவிகற்பம் பெற்று வந்த குறள் வெண்பா. விகற்பம் - தொடைவேறுபாடு.*

---

## நேரிசைவெண்பா.

குறட்பா இரண்டாய் இடைக்கண் சீரியவான் தனிச் சொல் அடிமூய் செப்பலோசை குன்றாது ஓரிரண்டாயும் ஒரு விகற்பாயும் வருவதுண்டேல் நேரிசையாகும்:—

*குறள்வெண்பாத்தானே முன்னொன்றும் பின்னொன்றுமாகி இரட்டையாய் வந்து, நடுவே தனிச்சொற்பெற்று, அடியும் நிரம்பி, எல்லாஞ் சேர நான்கடியாய்ச் செப்பலிசை சிதைவுறாமல் இருவிகற்பமாயேனும் ஒருவிகற்பமாயேனும் வருதலுளதாயின் அதுவே நேரிசைவெண்பாவாகும்.*

*இது வெண்பாக்களுள்ளே தக்கவோசையும், தக்க சொற்களும் பெற்று வருதல் பற்றி நேரிசைவெண்பா எனப்பட்டது. நேர் - தலைமை, மிகுதி, நுண்மை. இசை - ஓசை, சொல்லு, புகழ்.*

*குறட்பா என்பது எழுவாய். குறட்பா வருவதுண்டேல் நேரிசையாகும் என முடிக்க. இதனிலக்கணம் குறள்வெண்பாவிலவைத்தே அதனை இரட்டித்து மிகையா வேண்டுவ சிலமாத்திரம் கூறி மிகுநுட்பமாக முடிக்கப்பட்டது.*

*இடை - இருகுறளின் நடு. சீரியவான் என்னும் விசேடணத்தால் எதுகையமைந்து சிறந்த தனிச்சொல் என்பது பெற்றாம். தனிச்சொல்லென்றது தனியே சொல்லப்படுவதாய் விட்டிசைத்து நிற்கும் சீரினை.*

*அடிமூய் என்றது தனிச்சொற் பெற்றும் முற்குறளினிறுதியடி அளவடியாய் நிரம்பாது விட்டிசைக்குமாயின், அதற்கும் தனிச்சொற்கும் இடையில் ஒன்றேனும் இரண்டேனும் வேண்டடையாதற்கு வேண்டுமசை ஆசாக வைக்கப்பட்டுப் பொருந்தி நிரம்பும் என்பது அறிவித்தற்கென்க. மூய்தல் - மூடுதல்.*

*இருகுறளுக்கும் நடுவிலே தனிச்சொற்பெற்ற அளவிலே அடி நிரம்பும்வெண்பா இருகுறணேரிசைவெண்பா எனப்படும். அடி நிரம்பாமல் ஆசு வைத்திணைக்கப்படும் வெண்பா ஆசிடைநேரிசை வெண்பா எனப்படும். ஆசிடை - ஆசிடப்படுவது. ஆசு போன்று நிற்றலின் ஆசெனப்பட்டது. ஆசாவது பொன் வெள்ளி முதலிய*

உலோகத்துள்ளபடியே இசைக்கற்கும். [illegible] இடப்படுப் பற்று. இதனைக் கம்பியர் [illegible], [illegible] குறளெனிசை வெண்பாவுக்கு முதல் நிரைபசைபாலே தொடுக்கப்படும்.

இருவிகற்பமாவது முன்னிரண்டடியும் ஒருவகையெதுகையும் பின்னிரண்டடியும் மற்றொருவகையெதுகையுமாகி வருவது. ஒரு விகற்பமாவது அடிகளெல்லாம் ஒருவகையெதுகையாய் வருவது. இவிரண்டாயும் எனப் பிரித்து முன்னர்க் கூறுதலால் இருவிகற்பமாய் வரலே சிறப்பாகும்.

## இருகுறணேரிசைவெண்பா.

உதாரணம்.

க தடமண்டு தாமரையின் றாதா டலவன்
இடைமண்டிச் செல்வதனைக் கண்டு—பெடைஞெண்டு
பூழிக் கதவடைக்கும் புத்தூரே பொய்கடிந்
தூழி நடாயினு னூர்.

இஃது இருகுறணேரிசைவெண்பா. "பெடைஞெண்டு" என்னும் தனிச்சொலைத் தவிர்த்து இருகுறளும் வெவ்வேறே நிற்றல் காண்க. விகற்பம் இருவிகற்பம்.

உ. அரிய வரைகீண்டு காட்டுவார் யாரே
பெரிய வரைவயிரங் கொண்டு—தெரியிற்
கரிய வரையிலியார் காய்ந்தாலென் செய்வார்
பெரிய வரைவயிரங் கொண்டு. நீதிவெண்பா.

இதுவும் இருகுறணேரிசை வெண்பா. இது "தெரியின்" என்னும் தனிச்சொலை நீக்கி நோக்கும் போது இரண்டு குறள்வெண்பாவாய் வெவ்வேறே நிற்கும். விகற்பம் ஒருவிகற்பம்.

---

## ஆசிடைநேரிசைவெண்பா.

உதாரணம்.

௩. தாமரையின் றாதாடித் தண்டுவலைச் சேறளைந்து
தாமரையி னுற்றமே தானுறும்—தாமரைபோற்
கண்ணன் முகத்தான் கரதலத்தான் சேவடிபெண்
கண்ணார்வஞ் செய்த கருத்து

இஃது ஆசிடைநேரிசைவெண்பா. தானுறும் என்புழி "தானுறும்" என்னும் அசையிரண்டும் ஆசு. ஆசையும் தனிச்சொ

[illegible] சேர்க்கும்போது இரண்டாகுமன்றே வெண்பாவாய் வேறு
[illegible]. விகற்பம் இருவிகற்பம்.

கருமமு முட்படாப் போகமுந் துவ்வாத்
தருமமுந் தக்கார்க்கே செய்யா—ஒருநிலையே
முட்டின்றி மூன்று முடியுமே லஃதென்ப
பட்டினம் பெற்ற கலம். நாலடியார்.

இதுவும் ஆசிடைநேரிசைவெண்பா. செய்யா என்புழி நின்ற பகரவாகாரம் ஆசு. ஆசினையும் தனிச்சொல்லையுந் தவிர்த்து நோக்கின் குறளிரண்டாதல் அறிக. விகற்பம் இருவிகற்பம்.

௭. ஆர்த்த அறிவினா ராண்டிளைய ராயினுங்
காத்தோம்பித் தம்மை யடக்குப—மூத்தொறூஉந்
தீத்தொழிலே கன்றித் திரிதந் தெருவைபோற்
போத்தறார் புல்லறிவி னார். நாலடியார்.

இதுவும் ஆசிடைநேரிசைவெண்பா. அடக்குப என்புழிநின்ற பகரம் ஆசு. விகற்பம் ஒருவிகற்பம்.

௮. வஞ்சியே னென்றவன்ற னூருரைத்தான் யானுமவன்
வஞ்சியா னென்பதனால் வாய்நேர்ந்தேன்—வஞ்சியான்
வஞ்சியேன் வஞ்சியே னென்றுரைத்தும் வஞ்சித்தான்
வஞ்சியாய் வஞ்சியார் கோ.

இதுவும் ஆசிடைநேரிசைவெண்பா. வாய்நேர்ந்தேன் என்புழிப் பின்னின்ற அசையிரண்டும் ஆசு. விகற்பம் ஒருவிகற்பம்.

---

நேரிசைவெண்பாவைப்பற்றி வேறும் சில கூறுதும். முற்றுமோனைத்தொடை, முற்றெதுகைத்தொடை, மேற்கதுவாய்மோனைத்தொடை, மேற்கதுவாயெதுகைத்தொடை, கீழ்க்கதுவாய்மோனைத்தொடை, கீழ்க்கதுவாயெதுகைத்தொடை, முற்றுமுரண்டொடை முதலியனவற்றுள் ஒன்றை இரண்டாமடி பெற்று வருவது நேரிசைவெண்பாவுக்குச் சிறப்பாகும் என்பது சிலர் கொள்கை.

உதாரணம்.

முற்றுமோனைத்தொடை.

௧. விருப்பிலா ரில்லத்து வேறிருந் துண்ணும்
வெருக்குக்கண் வெங்கருனை வேம்பாம்—விருப்புடைத்

தன்போல்வா ரில்லுட் டயங்குநீர்த் தண்புற்கை
என்போ டியைந்த வமிழ்து. நாலடியார்.

---

முற்றெதுகைத்தொடை.

௨. பொன்னிணர் ஞாழற் புகல்வதியு நாரைகாள்
கன்னியரும் புன்னைமே லன்னங்காள் — என்னைநீர்
இன்னொலிநீர்ச் சேர்ப்ப னிரவில் வருவதன்முன்
கொன்னே குறிசெய்த வாறு. யாப்பருங்கலவுரை.

---

மேற்கதுவாய்மோனைத்தொடை.

௩. இவ்வளவிற் செல்லுங்கொ லிவ்வளவிற் காணுங்கொல்
இவ்வளவிற் காத லியம்புங்கொ — லிவ்வளவில்
மீளுங்கொ லென்றுரையா விம்மினான் மும்மதநின்
றூறுங்கொல் யானை யரசு. நளவெண்பா.

---

மேற்கதுவாயெதுகைத்தொடை.

௪. சட்டியிலே பாதியந்தச் சட்டுவத்தி லேபாதி
இட்டகலத் திற்பாதி யிட்டிருக்கத் — திட்டமுடன்
ஆடிவந்த சோணேச ரன்றழைத்த போதுபிள்ளை
ஓடிவந்த தெவ்வா றுரை. காளமேகப்புலவர்பாட்டு.

---

கீழ்க்கதுவாய்மோனைத்தொடை.

௫. மாநில மாண்ட துகிலுமிழ்வ தொத்தருவி
மாநில மால்வரை நாடகேள் — மாநிலங்
காயும்வேற் கண்ணாள் கனையிருளி னீவர
வாயுமோ மன்றநீ யாய். திணைமாலை.

---

கீழ்க்கதுவாயெதுகைத்தொடை.

௬. மன்னன் விடுத்த வடிவிற் றிகழ்கின்ற
அன்னம்போய்க் கன்னி யருகணைய — நன்னுதலும்
தன்னாடல் விட்டுத் தனியிடஞ்சேர்ந் தாங்கதனை
என்னாடல் சொல்லென்றா ளீங்கு. நளவெண்பா.

U.V. SWAMINATHA IYER LIBRARY
SANT NAGAR, MADRAS-600 090.



இந்நேரிசைவெண்பாக்களிலே இரண்டாமடிகளெல்லாம் குறிக்கப்பட்ட தொடைகள் அமைந்து சிறப்புறுதல் அறிக. பிற வந்தவழிக் காண்க.

நேரிசை வெண்பாவுக்குப் பொழிப்புமோனை வருதலே சிறப்பென்பது வேறு சிலர் கொள்கை.

உதாரணம்.

பரிந்துவரு கோகிலமே பாதாள ராயன்
விரிந்த பழுமணியை வென்றோன் — றெரிந்தவயற்
றேமாம் பொழிற்புகார்ச் சீர்க்கமல வைகுந்தக்
கோமான் வரவின்று கூறு. பந்தனந்தாதி.

இது பொழிப்புமோனை பெற்றுவந்த நேரிசைவெண்பா. நேரிசைவெண்பாவிலே அளவடிக்கு எழுமுதற் பதினாறு பரியந்தம் என்றும், சிந்தடிக்கு ஐந்துமுதற் பத்துவரை என்றும் ஒருசாரார் எழுத்தளவை கூறுவர். மற்றொருசாரார் அளவடி பதினான்கெழுத்தின் மேற்படுமாயிற் செப்பலிசை சிதையுமென்பர்.

திருவள்ளுவநாயனாருடைய குறள்வெண்பாக்களும், புகழேந்திப் புலவருடைய வெண்பாக்களும் பதினான்கெழுத்தின்மேற்படாத அமைந்த அளவடியனவாயே பெரும்பாலும் வருகின்றன.

க. ஆங்கவர் சொன்ன வுரைகேட் டழிவெய்தி
நீங்கா வுயிரோடு நின்றிட்டான் — பூங்காவில்
வள்ளம்போற் கோங்கு மலருந் திருநாடன்
உள்ளம்போற் கண்ணீ ருகுத்து. நளவெண்பா

உ. மயிர்வனப்புங் கண்கவரு மார்பின் வனப்பும்
உகிர்வனப்புங் காதின் வனப்பும் — செயிர்தீர்ந்த
பல்லின் வனப்பும் வனப்பல்ல நூற்கியைந்த
சொல்லின் வனப்பே வனப்பு. சிறுபஞ்சமூலம்

இவை யிரண்டின் முன்னையதிலுள்ள அளவடிகளெல்லாம் பன்னிரண்டெழுத்தின. பின்னையதினளவடிகளெல்லாம் பதினான்கெழுத்தின. (௯ - ௪)

---

## இன்னிசைவெண்பா, பஃறொடைவெண்பா.

ஒன்றும் பலவும் விகற்போடு நான்கடி யாய்த்தனிச்சொல்
இன்றி நடப்பினஃ தின்னிசை துன்னு மடிபலவாய்ச்
சென்று நிகழ்வ பஃறொடை யாஞ்சிறை வண்டினங்
துன்றுங் கருமென் குழற்றுடி நேரிடைத் தூமொழியே

உதாரணமுதற்குறிப்பு.

உ. வைகலும் வைக லுகடீர் கடற்குட்டி மின்றமங்கள்
எய்து மலிதேர் வளமழை யின்றுமை யின்னிசைபோழ்
வையக மெல்லாம் பலவிகற் பெற்றது செற்றேருகால்
பையர வல்குல்பன் மாடம் பஃறொடை பல்விகற்பே.

இன்னிசைவெண்பா.

ஒன்றும் பலவும் விகற்போடு நான்கடியாய் தனிச்சொ
லின்றி நடப்பின் அஃது இன்னிசை—

நேரிசைவெண்பாவானது ஒன்றும் பலவுமாகிய விக
ற்பத்தோடு நான்கடியாய்த் தனிச்சொல்லில்லாமல் நட
க்குமாயின் அஃது இன்னிசைவெண்பாவாய் முடியும்.

இஃது இனியவோசையும், இனியசொற்களும் பெற்று வரு
தல் பற்றி இன்னிசைவெண்பா எனப்பட்டது. இனிமை - இசை
இன்னிசை. இன்னிசைக்கும நேரிசைக்கும பேதம் யாதோவெ
னின்; இன்னிசை நெகிழவும மென்மையுமுடையதாய் வரும.
நேரிசை செறிவும் வன்மையுமுடையதாய் வரும. இரண்டின் சுவை
யும் இருவேறுவகை.

ஒரு விகற்பமாய வருவதும, இருவிகற்பமாய வருவதும, பல
விகற்பமாய் வருவதும, தனிசசொற் பெற்றுப் பல விகற்பமாய்
வருவதும், ஒருஉத்தொடைபெறறு வருவதும் என இன்னிசை
வெண்பா ஐவகை என்பர்.

உதாரணம

ஒருவிகற்பம்

க. வைகலும வைகல் வரக்கண்டு மஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார். நாலடியார்.

உ. துகடீர் பெருஞ்செல்வர் தோன்றியக்காற் றொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
அகடுற யார்மாட்டு நில்லாது செல்வஞ்
சகடக் கால்போல வரும். நாலடியார்.

## ஒருவிகற்பம்.

க. இன்றுகொ லன்றுகொ லென்றுகொ லென்னாது
பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி
யொருவுமின் றீயவை யொல்லும் வகையான்
மருவுமின் மாண்டா ரறம். நாலடியார்.

---

## பலவிகற்பம்.

க. வளம்பட வேண்டாதார் யார்யாரு மில்லை
அளந்தன போக மவரவ ராற்றான்
விளக்காய்த் திரட்டினா ரில்லை—களங்கனியைக்
காரெனச்செய் தாரு மிலர். நாலடியார்

இங்கே வளம்பட என்பதற்கு அளந்தன என்பது அடியெதுகை. விளங்காய் என்பதற்குக் களங்கனி என்பது ஒரூஉவெதுகை. காரெனச்செய் என்பதற்குத் தாரும் என்பது இணையெதுகை. பலவிகற்பம் என்றது இவ்வகையே எனக்கொள்க.

## தனிச்சொல்லோடுபலவிகற்பம்.

க அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்குந்
திங்களுஞ் சான்றோரு மொப்பர்மற்—றிங்கண்மறு
ஆற்றுஞ்சான் றோரஃ—தாற்றார்
தெருமந்து தேய்வ ரொருமா சுறின். நாலடியார்.

இங்கே முன்னிரண்டடியும அடியெதுகையாகிய ஒரு விகற்பம. மூன்றாமடி பொழிப்பெதுகை. நான்காமடியும் பொழிப்பெதுகை. இவ்வயே பலவிகற்பம். மூன்றாமடி முச்சீரும் நான்காமடி நாற்சீருமாக இவ்வெண்பாவைக் கொள்ளாக்காற் பலவிகற்பத்திற்கு உதாரணமாவதில்லை. வெண்பாவிலே இடையடிமுச்சீரும் இறுதியடி நாற்சீருமாய் வருவதுமுண்டே. பிறரிதனைச் சவலைவெண்பா என்பர். இந்நூலார் இன்னிசையிலடக்கினார்போலும.

உ. மலிதேரான் கச்சியு மாகடலுந் தம்முள
ஒலியும் பெருமையு மொக்கு—மலிதேரான்
கச்சி படுவ கடல்படா—கச்சி
கடல்படுவ வெல்லாம்—படும்.

இங்கே முன்னிரண்டடியும் அடியெதுகை. மூன்றாமடி ஒரூஉவெதுகை. நான்காமடி பொழிப்பெதுகை. இவ்வகையே பல விகற்பம்.

### ஒரூஉவெதுகை.

௧. கடற்குட்டம் போழ்வர் கலவர்—படைக்குட்டம்
பாய்மா வுடையா னுடைக்கிற்குந்—தோமில்
தவக்குட்டந் தன்னுடையா னீந்து—மவைக்குட்டம்
கற்றான் கடந்து விடும். நான்மணிக்கடிகை.

௨. மழையின்றி மாநிலத்தார்க் கில்லை—மழையுந்
தவமிலா ரில்வழி யில்லை—தவமும்
அரசிய லில்வழி யில்லை—யரசனும்
இல்வாழ்வா ரில்வழி—யில். நான்மணிக்கடிகை.

௩. இன்றுமை வேண்டி னிரவெழுக—விந்நிலத்து
மன்னுதல் வேண்டி னிசைநடுக—தன்னொடுஞ்
செல்வது வேண்டி னறஞ்செய்க—வெல்வது
வேண்டின் வெகுளி விடல். நான்மணிக்கடிகை

இவை மூன்றும் அளவடியெல்லாம் ஒரூஉவெதுகை பெற்று வந்த இன்னிசைவெண்பாக்கள். உதாரணவரிசை வகைநோக்கி மாற்றப்பட்டது.

இன்னும் இங்கே காட்டப்பட்ட இன்னிசைவெண்பாக்களிலே வரும் இணையெதுகை, இணைமோனை, பொழிப்புமோனை, கூழைமோனை முதலியவைகளை அடிகளிலே நோக்கி அறிக. "வைகலும்" என்பதிலே இணையெதுகை, இணைமோனை, கூழையெதுகை, கீழ்க்கதுவாயெதுகை, கூழைமோனை, முற்றுமோனை முதலிய பல விகற்பமும் வருகின்றன.

---

### பஃறொடைவெண்பா.

அடி பலவாய் சென்று நிகழ்வ பஃறொடையாம்:—

அடிகள் ஐந்து முதலிய பலவாகி நீண்டு நடப்பனவாகிய நேரிசைவெண்பாவும் இன்னிசைவெண்பாவும் பஃறொடைவெண்பா எனப்படும்.

இது பல தொடை பெற்று வருதலிற் பஃறொடை எனப்பட்டது. பல்+தொடை=பஃறொடை. பலதொடை என்றது ஐந்து முதலிய அடிகளை. அடி இரண்டு ஒருதொடை. இரண்டல்லாதன பல என்பது வடநூல் வழக்கு. நேரிசை, இன்னிசை என்னும் இரண்டுமே என்பது போதர நிகழ்வ எனப் பன்மையாற் சுட்டினார்.

உதாரணம்.

க. வையக மெல்லாங் கழனியா—வையகத்துச்
செய்யகமே நாற்றிசையின் றேயங்கள்—செய்யகத்து
வான்கரும்பே தொண்டை வளநாடு—வான்கரும்பின்
சாறேயந் நாட்டுத் தலையூர்கள்—சாறட்ட
கட்டியே கச்சிப் புறமெல்லாங்—கட்டியுட்
டாரேற்ற மான சருக்கரை மாமணியே
ஆரேற்றான் கச்சி யகம்.

இஃது இன்னிசை வெண்பாவே போன்று பல விகற்பமாய் வந்த பஃறொடைவெண்பா.

ஒருவிகற்பம்.

உ. சேற்றுக்கா னீலஞ் செருவென்ற வேந்தன்வேல்
கூற்றுறழ் மொய்ம்பிற் பகழி பொருகயல்
ளேற்றந் தொழில்வடிவு தம்முட் டடுமாற்றம்
வேற்றுமை யின்றியே யொத்தன மாவடர்
ஆற்றுக்கா லாட்டியர் கண்.

பலவிகற்பம்.

௩. பன்மாடக் கூடன் மதுரை நெடுந்தெருவில்
என்னோடு நின்றா ரிருவ ரவருள்ளும்
பொன்னோடைநன்றென்றா ளல்லளே—பொன்னோடை
யியானைநன் றென்றாளு மந்நிலையள்—யானை
யெருத்தத் திருந்த விலங்கிலைவேற் றென்னன்
திருத்தார்நன் றென்றேன் றியேன்.

இவையிரண்டும் நேரிசை வெண்பாவேபோன்று வந்த பஃறொடைவெண்பா. பன்மாடம் என்பதிலுள்ள விகற்பங்களை நோக்கி அறிக. பஃறொடைவெண்பாவிற்கும் கலிவெண்பாவிற்கும் பேதம் கலிவெண்பாக் கூறும்வழிக் கூறப்படும். (௫-௬)

சிந்தியல்வெண்பா.

சிந்தியல் வெண்பா நேரிசை என்றும், இன்னிசை என்றும் இருவகைப்படும். இது குறளினும் சிறிது நெடிதாய் வருமியல்புடைமையிற் சிந்தியல் எனப்பட்டது. குறளும் வேறே; சிந்தும் வேறே. குறள் ஈரங் குறுகியது;

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்

சிந்து குறளினுஞ் சிறிது நெடியது. "குறள்சிந்தேனு" என்றார் சேதசிந்தாமணிகாரர்.

சிந்தியல்வெண்பா, வெண்பாவினிறுதி.

க. நேரிசை யின்னிசை போல நடந்தடி மூன்றின் வந்தால்
நேரிசை யின்னிசைச் சிந்திய லாகு நிகரில் வெள்ளைக்
கோரசைச் சீரு மோளிசேர் பிறப்புமோண் காசுமிற்ற
சீருடைச் சிந்தடி யேழுடி வாமென்று தேறுகவே.

உதாரணமுதற்குறிப்பு.

உ. நற்கோற்ற வாயி லறிந்தா னையுநறும் பூங்குழலாய்
சொற்பெற்ற நேரிசைச் சிந்திய லாஞ்சுரை யாழுவம்பி
நிற்றற் குரிய நறுநீல நெய்தலு முல்லையுமென்
றெற்றப் படாதன வின்னிசைச் சிந்திற் கிலக்கியமே.

நேரிசைச்சிந்தியல்.

நேரிசை போல நடந்து அடிமூன்றின் வந்தால் நேரிசைச் சிந்தியலாகும்:—

குறள்வெண்பாத்தானே தன்னிறுதியடி தனிச்சொல் லும் ஆசு வேண்டுமாயின் அதுவும் பெற்று நேரிசை வெண் பாவே போன்று அளவடியாய் நிரம்பிப் பின்னும் ஓரடி பெற்று மூன்றடியான் வருமாயின், அது நேரிசைச்சிந்தியல் வெண்பாவாகும்.

உதாரணம்.

இருவிகற்பம்.

க. நற்கொற்ற வாயி னறுங்குவளைத் தார்கொண்டு
சுற்றும்வண் டார்ப்பப் புனைந்தானே—பொற்றேரான்
பாலைநல் வாயின் மகன்.

ஒருவிகற்பம்.

உ. அறிந்தானை யேத்தி யறிவாங் கறிந்து
சிறந்தார்க்குச் செவ்வ னுரைப்ப—சிறந்தார்
சிறந்தமை யாராய்ந்து கொண்டு.

இவையிரண்டும் ஆசிடைநேரிசைச்சிந்தியல் வெண்பா. முன் னையதில் இடப்பட்ட ஆசு இரண்டு; பின்னையதில் நன்று.

## இன்னிசைச்சிந்தியல்வெண்பா.

இன்னிசை போல நடந்து அடிமூன்றின் வந்தால் இன்னிசைச்சிந்தியலாகும்:—

குறள்வெண்பாத் தானே தன்னிறுதியடி இன்னிசை வெண்பாவே போன்று அளவடியாய் நிரம்பிப் பின்னும் ஓரடி பெற்று மூன்றடியான் வருமாயின், அஃது இன்னிசைச்சிந்தியல் வெண்பாவாகும்.

உதாரணம்.

ஒருவிகற்பம்.

க. சுரையாழ வம்மி மிதப்ப—வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை.

ஒருவிகற்பம்.

உ. நறுநீல நெய்தலுங் கொட்டியுந் தீண்டிப
பிறநாட்டுப் பெண்டிர் முடிநாறும் பாரி
பறநாட்டுப் பெண்டி ரடி.

ஒரூஉவெதுகை.

௩. முல்லை முறுவலித்துக் காட்டின—மெல்லவே
சேயிதழ்க் காந்த டுடுப்பீன்ற—போயினார்
திண்டேர் வரவுரைக்குங் கார்.

இவை மூன்றும் இன்னிசைச்சிந்தியல வெண்பா. இவற்றுள்ளே சுரையாழ என்பதற்கு வரையனைய என்பது ஒரூஉவெதுகை. யானைக்கு என்பதற்குக் கானக என்பது அடியெதுகை. மற்றையவைகளையும் இங்ஙனம் நோக்கி அறிக.

---

## வெண்பாவினிறுதி.

ஓரசைச்சீரும் ஒலிசேர்பிறப்பும் ஒண்காசும் இற்ற சீருடைச் சிந்தடியே முடிவாமென்று தேறுக:—

நாள், மலர் என்னும் ஓரசைச்சீர்வாய்பாடுகளும், காசு பிறப்பு என்னும் குற்றுகர வாய்பாடுகளுமாகிய நான்கனுள் ஒன்றான் முடிந்த இறுதிச் சீரினையுடைய சிந்தடி

தானே வெண்பாவுக்கெல்லாம் இறுதியடியாய் வருமெனத் தெளிக.

ஓரசைச்சீர் என்றது நாள், மலர் என்னும் வாய்பாட்டுச் சீர்களை என்பது "நாமாண்புரைத்த வசைச்சீர்க்குதாரணம் நாண் மலரே" என்பதனாற் பெறப்படும். இருநால்வகையாய் நிற்கும் நேரசை நிரையசைகளுள்ளே நாள் என்னும் வாய்பாட்டு நேரசையும் மலர் என்னும் வாய்பாட்டு நிரையசையும் இறுதியிற் சீராய் நின்று செப்பலிசையை இனிது முடிக்குஞ் சிறப்புடைமைபற்றி விதந்து கூறப்பட்டன. மற்றைய நேரசைகளும், நிரையசைகளும் இத்துணைச் சிறப்பில என்க. தனிக்குறிலாலாய நேரசையும், குறிலிணையொற்றலாய நிரையசையும் அவற்றுள்ளும் சிறப்பில என்க.

காசு, பிறப்பு என்னும் குற்றுகரவாய்பாட்டுச் சீர்களும் இசையிற் சுருங்கி இறுதியிலே நின்று இனிது முடிக்கும் இயல்புடையன. முற்றுகரவீற்றுச்சீர்கள் இத்துணைச் சிறப்பில. தேமா முதலிய வாய்பாட்டுச் சீர்கள் இறுதியில் வருதலில்லை. வருமாயிற் செப்பலிசையை வழுப்படுத்தும். காசு, பிறப்பு என்பன நாள், மலர் என்பவைகளினும் சிறப்புடைமைபற்றி ஒண்காசு எனவும், ஒளிசேர் பிறப்பு எனவும் விசேடிக்கப்பட்டன.

காசு, பிறப்பு என்பன தேமா, புளிமா என அடங்காவோவெனின், அடங்கா; என்னை? தேமா புளிமா என்பன இருமாத்திரையுடையவாய் விரிந்திசைக்கும் நெடிலீறுடையன. காசு, பிறப்பு என்பன அரைமாத்திரையுடையவாய் ஒடுங்கியிசைக்கும் குறிலீறுடையன. இவைபோன்று வரும் முற்றுகரவீற்றுச்சீர்களையும் இசையொப்புமைபற்றி இவற்றொடு கூட்டி ஆசிரியர் தொல்காப்பியர் அசையென்று கொள்வர். அவர் கூறும் அசை நேர், நிரை, நேர்பு, நிரைபு என நான்கு. காசு - நேர்பு. பிறப்பு - நிரைபு. நேர்பாவது ஒரு நேரசைக்குப் பின் ஒருகரஞ் சேர்ந்து வருவது. நிரைபாவது ஒரு நிரையசைக்குப் பின் ஒருகரஞ் சேர்ந்து வருவது. இவையிரண்டும் ஒருசொல் விழுக்காடாய்ப் பிளவுபடாதனவாய்க் குற்றுகரவீறாயாவது முற்றுகரவீறாயாவது நிற்கும்.

காசு, நாள், மலர், பிறப்பு என்னும் வாய்பாட்டுச்சீர்கொண்டு முடிதலை முன்வந்த வெண்பாக்களில் நோக்கி அறிக. முற்றுகரவீற்றான் முடிதல் காட்டுதும்.

உதாரணம்.

திறந்திடுமின் தீயவை பிற்காண்டு மாதர்
இறந்து படிற்பெரிதா மேத—முறந்தையர்கோன்

தண்ணார மார்பிற் றமிழர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு. முத்தொள்ளாயிரம்.

இது கதவு என முற்றுகரவீற்றுச் சீரான் முடிந்த வெண்பா. புல்லு, அருளு என்பன போல வன்முற்றாய் நிற்கும் முற்றுகர வீற்றான் முடிந்த வெண்பாக்களும் சிலவுள. அவையெல்லாம் சிறப்பில என்க. (எ-அ)

---

## வெண்பாவினம்.

### வெள்ளைச்செந்துறை, குறட்டாழிசை.

க. அந்தமில் பாத மளவிரண் டொத்து முடியின்வெள்ளைச்
செந்துறை யாகுந் திருவே யதன்பெயர் சீர்பலவாய்
அந்தங் குறைநவுஞ் செந்துறைப் பாட்டி னிழிபுமங்கேழ்ச்
சந்தஞ் சிதைந்த குறளுங் குறளினத் தாழிசையே.

### வெளிவிருத்தம், வெண்டாழிசை, வெண்டுறை.

உ. மூன்றடி யானு முடிந்தடி தோறு முடிவிடத்துத் [சையே
தான்றனிச் சொற்பெறுந் தண்டா விருத்தம்வெண் டாழி
மூன்றடி யாய்வெள்ளை போன்றிறு மூன்றிழி பேழுயர்வாய்
ஆன்றடி தாஞ்சில வந்தங் குறைந்திறும் வெண்டுறையே.

### உதாரணமுதற்குறிப்பு.

ங. கொண்டன் முழங்கின வாவா விருத்தங் குழலிசைய
வண்டினம் வெண்டுறை தாளா முழங்கொடு தாழிசையே
நண்பிதென் றூர்கலிகொன்றைவெண்செந்துறைநீலநண்ணும்
பிண்டி யறுவர்வண் டாரேன்ப தாழிசை பெய்வளையே.

### வெள்ளைச்செந்துறை.

அந்தமில்பாதம் அளவு இரண்டு ஒத்துமுடியின் அதன் பெயர் வெள்ளைச்செந்துறையாகும்:—

குறள்வெண்பாத் தானே தனக்குரிய சிந்தடி அளவடி என்னும் இரண்டும் சிறினால் ஒத்துமுடியுமாயின் அதன்பெயர் வெள்ளைச்செந்துறை என்பதாம்.

இது வெண்பாவுக்கினமாய் நேரிய இசையும் சீரிய பொருளும் பெற்று வருதலால் வெள்ளைச்செந்துறை எனப்பட்டது. வெண் செந்துறை, செந்துறைப்பாட்டு, செந்துறைவெள்ளை என்பன

இதன் பரியாயம். செம்மை - சேர், அழகு. துறை - துறைபோல்வது. தத்தம் பாவுக்குத் துறைபோன்று சிறப்பதென்பர். துறைபோன்று சிறத்தலாவது தத்தம் பாவினியல்பெல்லாம் வந்தெய்திச் சிறக்கப் பெறுதல்.

அந்தமில்பாதம் - இறுதிப்பாகமில்லாத அடி; சிந்தடி என்றவாறு. அடியெனச் சிறப்பித்துச் சொல்லப்படுவது நாற்சீர்கொண்டதேயாம். "நாற்சீர்கொண்டதடியெனப்படுமே" என்பது தொல்காப்பியம். நாற்சீரில் ஒருசீர் குறைந்து நிற்றல் பற்றிச் சிந்தடியையே "அந்தமில்பாதம்" என்றார். அந்தமில் என்பதை ஒருவாக்கியமாக்கி முடிவுசெய்து "முடிவில்லை" என உரைப்பாருமுளர். அது தக்க முடிவாகாமை அறிக. நேரிசையும் சிந்தியலும் போல இதனையும் குறட்டாழிசைகளையும் குறள்வெண்பாவில வைத்து இலக்கணங்கூறிச் சுருக்கிமுடித்தல அறிக.

உதாரணம்.

இருவிகற்பம்.

௧. ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை. முதுமொழிக் காஞ்சி

ஒருவிகற்பம்.

௨. கொன்றை வேந்தன் செல்வ னடியிணை
என்று மேத்தித் தொழுவோ மியாமே. கொன்றைவேந்தன்.

இவையிரண்டும் நேரியவோசையும் சீரிய பொருளும் பெற்றுச் சிந்தடியாகிய அந்தமில்பாதம் அளவடிபோல நாற்சீர்கொண்டு முடிதலால வெண்செந்துறையாயிற்று. பாவினங்கட்குச் சீர்நியமமில்லாமை "மாஞ்சீரகலியுட்புகா" எனபுழிக் கூறப்படும்.

---

குறட்டாழிசை.

சீர்பலவாய் அந்தங்குறைநவும் குறளினத்தாழிசை:—

இரண்டடிகளினுஞ் சீர்கள் பலவாய் வரப்பெற்று முதலடியினும் இறுதியடி சுருங்கி முடியும் குறள்வெண்பாக்களும் குறட்டாழிசை எனப்படும்.

இது குறள்வெண்பாவுக்கு இனமாய்த் தாழம்பட்டவோசையோடு வருதல்பற்றிக் குறட்டாழிசை எனப்பட்டது. தாழம் - தாமசம், மந்தம். பலவாய் என்றது இரண்டடிகளிலும் நான்கின் மேல் வருதலை. குறைந - குறைவுடையன.

உதாரணம்.

௧. நீல மாகட லீடு வார்திரை
நின்று நின்றுபோற் போக்கிப் பொன்றுமாற்
காலம் பலகாலஞ் சென்றும் செல்வர்
யாக்கை கழிதலுமே.

௨. ஒன்று வார்வினை யைய காடொடும்
கற்று வர்க்கா சான ஞானக்
கண்ணி முடி பேபடை
வார்கள் கற்றவரே.

இவையிரண்டும் சிச்சல் பலவாய்க் குறள்வெண்பாவுக்குரிய எல்லையினின்றும் நீண்டு இறுதியடி முதலடியினின்று சுருங்கிவந்த குறட்டாழிசை. முதலடிகளிரண்டும் எட்டுச்சீர். முன்னையதின் இறுதியடி ஆறுசீர். பின்னையதினிறுதியடி ஐந்துசீர்.

---

சேந்துறைப்பாட்டினிழிபும் குறளினத்தாழிசை:—

இசையினாலும் பொருளினாலும் வெண்செந்துறையி னின்றும் குறைவுபாடுடையதாய் வரும் குறள்வெண்பா வும் குறட்டாழிசை எனப்படும்.

செந்துறைப்பாட்டு - வெண்செந்துறை. இழிபு - குறைவுபா டுடையது. வெண்செந்துறையாய் வந்து அதனினின்றும் குறைந்து வரும் குறள்வெண்பாவெனக்கொள்க.

உதாரணம்.

௧. பிண்டியி னீழற் பெருமான் பிடர்த்தலை
மண்டலத் தோன்றுமால் வாழி யன்னாய்.

௨. அறுவர்க் கறுவரைப் பெற்றுங் கவுந்தி
மறுவறு பத்தினி போல்வையி னீரே.

இவையிரண்டும் இசையினாலும் பொருளினாலும் வெண்செந்து றையினின்றும் குறைவுபாடுடையவாய் வந்த குறட்டாழிசைவரும
சில சீரிறு

---

அங்கேழ்ச்சந்தம் சிதைந்த குறளும் குறளி

செப்பலிசை சிதைவுபட்டுவந்த குபான்று நிற்றலாவ
குறட்டாழிசை எனப்படும். ச்பது, குறுகியது. உய

அங்கேழ்ச்சந்தம் - செப்பலிசை. அங்கேழ் - அழகியநிறமுடையது; வெண்பாவென்றவாறு. கேழுமை - நிறம். கருமையுடையது காரெனப்பட்டாற்போலக் கேழுமையுடையது கேழெனப்பட்டது. சந்தம் - இசை.

உதாரணம்.

க. வண்டார்பூங் கோதை வரிவளைக்கைத் திருநுதலாள்
பண்டைய ளல்லள் படி.

இக்குறள்வெண்பா கலித்தளை விரவிச் செப்பலிசை சிதைதலாற் குறட்டாழிசையாயிற்று. வரிவளைக்கைத்திருநுதலாள் என்புழி வந்த தளை கலித்தளை. இங்ஙனமே குறட்டாழிசைவகை மூன்று.

---

## வெளிவிருத்தம்.

தண்டாவிருத்தம் மூன்றடியானும் முடிந்து அடிதோறும் முடிவிடத்துத்தான் தனிச்சொற்பெறும்:—

வெளிவிருத்தம் மூன்றடியானும் நான்கடியானும் முடிந்து அடிதோறும் முடிவிடத்திலே தனிச்சொற் பெற்றுவரும்.

இது வெண்பாவுக்கினமாய் நிற்றல்பற்றி வெளிவிருத்தம் என்று வழங்கப்படும். வெளிவிருத்தம், வெள்ளைவிருத்தம், வெண்பாவிருத்தம் என்பன ஒருபொருட்கிளவிகள். வெளி என்பது வெண்பா எனப்பொருள்படும் பண்புகொள்பெயர். வெண்மை பகுதி. இ விகுதி. வெள்ளை என்பதுமது. விகுதி ஐ. தண்டா விருத்தம் - வெண்பாவை நீங்காதவிருத்தம். தண்டாமை - நீங்காமை. விருத்தம் - நிகழ்ச்சிகூறுவது, பிரகாசமுடையது.

உதாரணம்.

க. கொண்டல் முழங்கினவாற் கோபம் பரந்தனவா—
லென்செய்கோ யான்
வண்டு வரிபாட வார்தளவம் பூத்தனவா—
லென்செய்கோ யான்
எண்டிசையுந் தோகை யிருந்தகவி யேங்கினவா—
லென்செய்கோ யான்.

இது மூன்றடியான் முடிந்து முடிவிடத்திலே தனிச்சொற் பெற்று வந்த வெளிவிருத்தம். அடிதோறும் முடிவிடத்தில் நின்ற

என்செய்கோயான் என்பது தனிச்சொல். மூன்றடியான் முடிதல் பற்றி இதனைச் சிந்தியல்வெண்பாவினமென்பர்.

௨. ஆவா வென்றே யஞ்சின ராழ்ந்தா—ரொருசாரார்
கூகூ வென்றே கூவிளி கொண்டா—ரொருசாரார்
மாமா வென்றே மாய்ந்தனர் நீந்தா—ரொருசாரார்
ஏகீர் நாய்கீ ரென்செய்து மென்றா—ரொருசாரார்

இது நான்கடியான் முடிந்து முடிவிடத்திலே தனிச்சொற் பெற்று வந்த வெளிவிருத்தம். அடிதோறும் முடிவிடத்தில் நின்ற ஒருசாரார் என்பது தனிச்சொல். நான்கடியான் முடிதல்பற்றி இதனை நேரிசைவெண்பாவினமென்பர்.

---

## வெண்டாழிசை.

வெண்டாழிசையே மூன்றடியாய் வெள்ளைபோன்றிறும் -

வெண்டாழிசைதான் மூன்றடியாகி இறுதியடி வெண்பாவை போன்று முச்சீர்கொண்டு சிந்தடியாய் முடியும்.

இது வெண்பாவினமாய்த் தாழம்பட்ட இசையோடு வருதலைபற்றி வெண்டாழிசை எனப்பட்டது.

உதாரணம்.

நண்பி தென்று தீய சொல்லார்
முன்பு நின்று முனிவு செய்யார்
அன்பு வேண்டு பவர்.

இது மூன்றடியாய் இறுதியடி வெண்பாவை போன்று முடிந்த வெண்டாழிசை.

---

## வெண்டுறை.

வெண்டுறை மூன்றிழிபு ஏழுயர்வாய் அடியான்று அந்தம்சில குறைந்திறும்:—

வெண்டுறை மூன்றடியான் முடிவது சுருங்கியதுப ஏழடியான் முடிவது நீண்டதுமாய் நான்கின்மேல்வரும் சீரினால் முன்னுள்ள அடி அகன்று இறுதியடி சில சீரினாற் குறைந்து முடியும்.

இது வெண்பாவினமாய்த் துறைபோன்று நிற்றலால் வெண்டுறை எனப்பட்டது. இழிபு - சுருங்கியது, குறுகியது. உய

ர்வு - நீண்டது. மூன்றிழிபேழுயர்வு எனவே மூன்றடி முதல் ஏழடிபரியந்தம் பெற்று வருமென்பது பெற்றாம். இறுதியடியும் அதற்கு முன்னிற்கும் ஒன்றுமுதலிய அடியும் என்பது போதர "சில அந்தம்" என்றார்.

உதாரணம்.

௧ தாளாள ரல்லாதார் தாம்பல ராயக்கா
　　லென்னா மென்னாம்
ஆளியைக் கண்டஞ்சி யானைதன் கோடிரண்டும்
பீலிபோற் சாய்த்து விடும்பிளிற்றி யாங்கே.

இது மூன்றடி பெற்று முதலடி அறுசீராய் நீண்டு மற்றை யடிகளாகிய இறுதியடியிரண்டும் நாற்சீராய்க் குறுகி முடிந்த வெண்டுறை.

௨. குழலிசைய வண்டினங்கள் கோழிலைய செங்காந்தட்
　　குலைமேற் பாய
அழலெரியின் மூழ்கினவா லந்தோ வளியவென்
　　றயல்வாழ் மந்தி
கலுழ்வனபோ னெஞ்சயர்ந்து கல்லருவி தூஉம்
நிழல்வரை நன்னாட னீப்பனோ வல்லன்.

இது நான்கடிபெற்று முன்னிரண்டடியும் அறுசீராய் நீண்டு பின்னிரண்டடியும் நாற்சீராய்க் குறுகிமுடிந்த வெண்டுறை. வேறுபடாத ஒருவகையொலியேயுடைமையால இவையிரண்டையும் ஓரொலிவெண்டுறையென்பர்.

௩. முழங்குதிரைக் கொற்கைவேந்தன் முழுதுலகு
　　மேவல்செய முறைசெய் கோமான்
வழங்குதிறல் வாண்மாறன் மாச்செழியன் தாக்கரிய
　　வைவேல் பாடிக்
கலங்கினின் றோரெலாங் கருதலா காவணம்
இலங்குவா ளிரண்டினு மிருகைவீ சிப்பெயர்க்
தலங்கன்மாலை யவிழ்த் தாடவா டும்மிவள்
பொலங்கொள்பூந் தடங்கட்கே புரிந்துநின் றோரெலாம்
விலங்கியுள் ளந்தப விளிந்துவே றுபலே.

இஃது ஏழடிபெற்று முன்னிரண்டடியும் அறுசீராய் நீண்டு மற்றையடியைந்தும் நாற்சீராய்க் குறுகிமுடிந்த வெண்டுறை. முன்னிரண்டடியும் ஒருவகையொலியும், மற்றையடியைந்தும் மற்றொருவகை யொலியும் பயந்து நிற்றலால் இதனை வேற்றொலி

வெண்டுறை யென்பர். ஐந்தடி வெண்டுறை யாறடி வெண்டுறைகளையும் ஈண்டுக் காட்டுதும்.

ஐந்தடிவெண்டுறை.

௪ கல்லாதார் நல்லவையுட் கல்லேபோற் சென்றிருந்தாற்
கருமம் யாதாம்
இல்லாதார் செல்வரைக்கண் டிணங்கியே முற்றக்கா
லிவையவ தென்னும் [லும்
பொல்லாதார் நற்கலன்கள் பெய்ப்புதிதாய்ப் பூண்டா
பொலிவ தென்னும் [ன்னே
புல்லாதார் பொய்க்கேண்மை புனைந்துரைத் தாவதென்
அல்லாதார் பொய்யாத லறிபவே லையயாதோ.
யாப்பருங்கலவுரை.

இது முன்னைய அடி மூன்றும் அறுசீராய் நீண்டு பின்னைய அடியிரண்டும் நாற்சீராய்க் குறைந்து முடிந்த ஓரொலிவெண்டுறை.

ஆறடிவெண்டுறை.

௫ முழங்கு கடல்யானை மூரிக் கடற்படை
முறித்தார் மன்னர்
வழங்கு மிடமெல்லாந் தன்புகழே போக்கிய
வைவேல வின்னான்
செழுந்தண்பூம் பழனைசையுட் சிறந்தார ளுருசெய
எழுந்தசோ திகத்துளே யிருந்தவன்னை லாரடி
விழுந்தண்பூ மலர்களால் வியந்துநா ளுந்தொழுத
தொடர்ந்துநின்ற வெவ்வினை துறந்துபோ மாலரோ
யாப்பருங்கலவுரை

இது முன்னைய அடியிரண்டும் அறுசீராய் நீண்டு பின்னைய அடி நான்கும் நாற்சீராய்க் குறைந்து முடிந்த வேற்றொலி வெண்டுறை. (௯-௪0-௧௧)

---

ஆசிரியப்பா.

அகவலிசையும் இயற்சீரும் அளவடியும் பெற்று ஏ, ஓ. என், ஈ, ஆ, ஐ என்றவற்றுள்ளே ஒன்றனை இறுதியிற் கொண்டு முடியுஞ் செய்யுள் ஆசிரியப்பா எனப்படும். இது சீரும் பொருளும் இசையும் தன்மையவாகப்பெற்று

ஆசிரியர் அறிவித்தல்போலப் பொருள்களை அறிவித்து நிற்றலால் ஆசிரியப்பா எனப்பட்டது. அகவற்பா, மென்பா, அாசர்பா, தொகை என்பன இதன்பரியாயம். வகைநான்கு.

நால்வகையாசிரியப்பா.

க. நேரிசையாசிரியப்பா.
உ. இணைக்குறளாசிரியப்பா.
௩. நிலைமண்டலவாசிரியப்பா.
௪. அடிமறிமண்டலவாசிரியப்பா.

நால்வகையாசிரியப்பா.

க. கடையயற் பாதமுச் சீர்வரி னேரிசை காமருசீர்
இடைபல குன்றி னிணைக்குற ளெல்லா வடியுமொத்து
நடைபெறு மாயி னிலைமண் டலநடு வாதியந்தத்
தடைதரு பாதத் தகவ லடிமறி மண்டலமே

உதாரணமுதற்குறிப்பு.

உ. நேரிசை யாகு நிலத்தினு மேன்ப திணைக்குறட்பா
நீரின் சிறிய நிலைமைய தாநிலை மண்டலப்பா
வேரலென் றுகும் விரைமலர்க் கோதைவில் லேர்நுதலாட்
கூரல்பம் பேன்ப தடிமறி யாகத் துணிந்தனரே.

நேரிசையாசிரியப்பா.

கடையயற்பாதம் முச்சீர் வரிற் காமருநேரிசை —

தனக்குரிய இலக்கணமெல்லாம் பெற்று நடக்கும் ஆசிரியப்பா ஈற்றயலடி முச்சீராய் வருமாயின், அது நேரிசையாசிரியப்பா எனப்படும்.

இது நேரிய இசையும் நேரிய சொல்லும் பெற்று வருதலபற்றி நேரிசை எனப்பட்டது. நேர் - தலைமை, நுண்மை, நேர்மை. இசை - ஓசை, சொல்லு. அகவற்பாக்களெல்லாவற்றுள்ளும் சிறப்புடைமைபற்றி காமரு நேரிசை என்றார்.

உதாரணம்.

நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று
நீரினு மாரள வின்றே சாரற்

கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே. குறுந்தொகை.

இது கடையயலடி "கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு" என முச்சீர்கொண்டு முடிதலால் நேரிசையாசிரியப்பாவாயிற்று.

---

## இணைக்குறளாசிரியப்பா.

### இடைபல சீர்குன்றின் இணைக்குறள்:—

இடையிற் பலவடிகள் சீர்குறைந்து குறளடியும் சிந்தடியுமாக ஆசிரியப்பா வருமாயின், அஃது இணைக்குறளாசிரியப்பா எனப்படும்.

இது குறள், சிந்து என்னும் இருவகைக்குறளடிகளையும் இடையின் மருவிவரலால் இணைக்குறள் எனப்பட்டது. இணை - இரண்டு. குறள் - குறளடி. தம்முட்பேதமுடையனவாயினும் குறளடி சிந்தடி யிரண்டும் அளவடியை நோக்கக் குறளாதல்பற்றி இரண்டடியையும் குறளென்றார். ஆசிரியர் தொல்காப்பியர் குறள்வெண்பாவையும் சிந்தியல் வெண்பாவையும் ஒருங்கு சேர்த்துக் குறுவெண்பாட்டு எனக் கூறுமாறும் அறிக. இடைபல என்பதனால் அளவடியே முதற்கண்ணும் இறுதிக்கண்ணும் வருதலும் அளவடி இடையில் வருதல் விலக்கின்மையும் பெற்றாம்.

உதாரணம்.

௧. நீரின் றண்மையுந் தீயின் வெம்மையும்
சாரச் சார்ந்து
தீரத் தீரும
சார னாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாதே.

இது முதலடியும் கடையடியும் அளவடியாக இடையடிகள் குறளடியுஞ் சிந்தடியுமாய் வரப்பெற்ற இணைக்குறளாசிரியப்பா. சாரச்சார்ந்து தீரத்தீரும் என இரண்டாமடியையும் மூன்றாமடியையும் ஓரடியாகக் கொள்வாருமுளர்.

௨. சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே
பெரியகட் பெறினே
யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே
சிறுசோற் றானும்
நனிபல கலத்தன் மன்னே

பெருஞ்சோற் றானும்
நனிபல கலத்தன் மன்னே
என்பொடு தடிபடு வழியெல்லாம்
எமக்கீயு மன்னே
அம்பொடு வேனுழை வழியெல்லாம்
தானிற்கு மன்னே
நரந்த நாறுந் தன்கையாற்
புலவு நாறு மென்றலை
தைவரு மன்னே
அருந்தலை யிரும்பாண ரகன்மண்டைத் துளையுரீஇ
இரப்போர் கையுளும் போகிப்
புரப்போர் புன்கண் பாவை சோர
அஞ்சொ னுண்டேர்ச்சிப புலவர் நாவிற்
சென்றுவீழ்ந் தன்றவன்
அருநிறத் தியங்கிய வேலே
ஆசா கெந்தை யாண்டுளன் கொல்லோ
இனிப்,
பாடு நருமில்லைப் பாடு நர்க்கொன்
றீகு நருமில்லைப
பனித்துறைப் பகன்றை நறைக்கொண் மாமலர்
சூடாது வைகி யாங்குப் பிறர்க்கொன
றீயாது வீயு முயிர்தவப் பலவே. புறநானூறு

இது குறளடி சிந்தடியன்றி அளவடியும் இடையிட வரப்பெற்ற இணைக்குறளாசிரியப்பா. சிலவடிகளை நெடிலடியாக்கி இதனைச் சிலர் பதினேழடியான் முடிப்பர். வேறு சிலர் பதினொன்பதடியான் முடிப்பர். அவர் முடிபெல்லாம் இதனை இணைக்குறளா என்பார்க்கு இணங்கா என்க.

---

## நிலைமண்டிலவாசிரியப்பா.

எல்லாவடியுமொத்து நடைபெறுமாயின் நிலைமண்டிலம்.

அடிகளெல்லாம் அளவடிகளாய் ஆசிரியப்பா நடக்குமாயின்; அது நிலைமண்டிலவாசிரியப்பா எனப்படும்.

இது நிலையுடைய நாற்சீரடியான் வரல்பற்றி நிலைமண்டிலம் எனப்பட்டது. நிலை - நின்றவாறே நிற்றல். மண்டிலம் - நாற்சீ யாத்துவருவது.

உதாரணம்.

*வேரல் வேலி வேர்க்கோட் பலவின்*
*சார னாட செவ்வியை யாகுமதி*
*யாரஃ தறிந்திசி னோரே சாரற்*
*சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்*
*உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே.* குறுந்தொகை.

இஃது அடிகளெல்லாம் அளவடிகளாய் மறித்துச் செல்லலின்றி நின்றவாறே நிற்றலால் நிலைமண்டலவாசிரியப்பாவாயிற்று.

---

### அடிமறிமண்டலவாசிரியப்பா.

நடுவாதியந்தத்து அடைதரு பாதத்தகவல் அடிமறிமண்டலம்:—

நடுவிலாதல் ஆதியிலாதல் அந்தத்திலாதல் நின்றநிலை பெயர்ந்து மடங்கிச்சென்று நிற்றற்கேற்ற அடிகளையுடைய ஆசிரியப்பா அடிமறிமண்டலவாசிரியப்பா எனப்படும்.

இது மடங்கிச் சென்று ஒன்று மற்றொன்றனிலைக்களத்து நிற்றற்கேற்ற நாற்சீரடியாத்து வருதலால் அடிமறிமண்டலம் எனப்பட்டது. மறிதல் - மடங்குதல், திரும்புதல்.

உதாரணம்.

*சூரல் பம்பிய சிறுகான் யாறே*
*சூரர மகளி ராரணங் கினரே*
*வாரலை யெனினே யானஞ் சுவலே*
*சார னாட நீவர லாறே.*

இது பொருட்டொடர்பின்றி முடிந்து அகவற்குரிய ஏகாரவிறுதியும் பெற்று ஒவ்வொன்றும் தனிநின்று மற்றொன்று நின்றுழி மறிந்துசென்று பொருந்திநிற்றற்கியைந்த அளவடியாய் வரப்பெறலால் அடிமறிமண்டலமாயிற்று.

இவையெல்லாம் ஏகாரத்தை இறுதியிற்கொண்டு முடிந்த அகவற்பாக்கள். மற்றைய இறுதிகளுள்ளும் சில காட்டுதும்.

உதாரணம்.

*பிண்ட நெல்லி னள்ளூ ரன்னவள்*
*ஒண்டொடி நெகிழினு நெகிழ*
*சென்றீ பெருமநிற் றகைக்குநர் யாரோ.* அகநானூறு.

அலந்த மஞ்ஞை யாமங் கூறப்
புலர்ந்தது மாதோ புரவலற் கிரவென்.

கோங்குவேலிபாக்கதை.

இவையிரண்டும் முறையே ஓ, என் என்பவற்றுன் முடிந்த அகவற்பாவினடிகள். என் என்று னகரமெய்யீற்ருன முடிதல் நிலைமண்டலத்திற்கு விசேடமென்று சிலர் வேண்டுவர். இதனை னகரவுயிர்மெய்யீருகவுஞ் சிலர் கொள்வர். “னகாரையீற்றுப்புள் ளியிறுதி” என ஆசிரியர் தொல்காப்பியர் கூறுதலால் அவர்கொள்கை அதனேடு மாறுகொமென்க. இன்னும் சிலப்பதிகாரம், மணிமேகலை முதலியவற்றிலே வரும் தொடர்நிலைகளெல்லாம் என என்று னகாரமெய்யீற்ருன் முடிதலே ஆசிரியர்க்குக் காண்க. இவையல்லாவற்றுள்ளும் ஏகாரத்தான் முடிதலையே யாவரும் சிறப்பென்று வேண்டுவர்.

இவ்வகவற்பாக்களோடு சூத்திரமென்று வழங்கப்படும் நூற்பாவினையும் பாற்படச்சேர்த்துக் கூறி முடிக்குதும்.

நூற்பா.

நூற்பாவாவது சொற்ப எழுத்தமைந்த சொற்ருெடராய்ப் பற்பல பொருட்பரப்புக்களை உட்செறித்துத் திட்ப நுட்பங்களாற் சிறந்து அடிதொடையொன்றுமின்றி அகவற்பாவே போன்று வருவது.

நூற்பா, நூலயாப்பு, நூற்செய்யுள், சூத்திரப்பா, சூத்திரயாப்பு, சூத்திரச்செய்யுள் என்பனவும், நூல், சூத்திரம் என்பனவும் ஒருபொருட்கிளவிகள். சூத்திரம் என்பது வடமொழி; பொருளையிறுகப்பிணித்துநிற்பது எனப் பொருள்படும். சூத்ர - பிணித்தல்.

(கஉ-கங.)

---

ஆசிரியப்பாவினம்.

ஆசிரியத்தாழிசை, ஆசிரியத்துறை, ஆசிரியவிருத்தம்.

க தருக்கிய ருழிசை மூன்றடி யொப்பன நான்கடியாய்
எருத்தடி நைந்து மிடைமடக் காயு மிடையிடையே
சுருக்கடி யாயுந் துறையாங் குறைவிஞ்ரேல் சீரகவல்
விருத்தங் கழிநெடி லுன்கோத் திறுவது மெல்லியலே.

உதாரணமுதற்குறிப்பு.

உ கன்று குணில்வா ளுறத்தா ழிசையாங் கரைபொருகான்
என்றது வண்ளோர் பூந்தா ரிரங்கு குயின்முழவாக்

கோன்றார்ந் தமைந்த வகவற் றுறைதுறை யாவிருத்தம்
பின்றாழ் குழலி விடங்கணி மூவடி வாதியவே

## ஆசிரியத்தாழிசை.

அடியொப்பன மூன்று தருக்கியறாழிசை:—

அடிகளாலொத்து ஒருபொருண்மேற் கோவையா யடுத்து வருவனவாகிய மூன்று செய்யுள்கள் களிப்பினைக் கொடுக்குஞ் சிறப்புடையாசிரியத்தாழிசை எனப்படும்.

எனவே கோவைப்படாது தனித்து வருவது சிறப்பிலாசிரியத்தாழிசை என்பது பெறப்படும். அடுக்க நான்கடி என்றதே இதற்கு மூன்றடி என்பதை விளக்கும். மூன்று செய்யுள் என்பது ஒரு பொருண்மேற் பன்மைவாய்ப்பாட்டால் ஒப்பன என்றார்.

---

உதாரணம்.

க. கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்றுநம் மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ.

உ. பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் மானுள் வருமே லவன்வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ.

௩. கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவன்
எல்லிநம் மானுள் வருமே லவன்வாயில்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ. சிலப்பதிகாரம்.

இவை மூன்றும் விழுமியவிசையும் பொருளுமுடையனவாய் ஒருபொருண்மேற் கோவைப்பட்டு வந்த ஆசிரியத்தாழிசை.

வானுற நிமிர்ந்தனை வையக மளந்தனை
பான்மதி விடுத்தனை பல்லுயி ரோம்பினை
நீனிற வண்ணநின் னிரைகழ றொழுதனம்.

இது தனித்து வந்த சிறப்பிலாசிரியத்தாழிசை.

## ஆசிரியத்துறை.

நான்கடியாய் எருத்தடிநைந்தும் இடைமடக்காயும் இடையிடையே அடிசுருக்காயும் துறையாம்:—

*நான்கடியாய் எருத்தடி சீர்குறைந்தும், எருத்தடி குறைதலுடன் இடைமடக்காயும், நான்கடியாய் இடையிடையே அடிசுருக்காயும், இடையிடையே அடிசுருக்காதலுடனிடைமடக்காயும் வருவது ஆசிரியத்துறையாகும்.

கடையயலடி பாவுக்குக் கழுத்துப்போன்று நிற்றலால் எருத்தடியெனப்பட்டது. எருத்தென்பது கழுத்தெனப் பொருள்படுதலைக் "கலவமாமயிலெருத்திற் கடிமலரவிழ்ந்தனகாயா" என்னும் சீவகசிந்தாமணியிற் காண்க. மடக்குச் சுருக்கென்பன மடங்கு சுருங்கு என்னும் வினைப்பகுதியினின்றும் விகுதியின்றி வினைத் தன்மாத்திரத்தால் வந்த பெயர்கள். மடக்கு - மீண்டுவருவது. சுருக்கு - சுருங்கியது. இடையிடையே அடிசுருக்காதல் - அடி ஒன்றுவிட்டொன்று சுருங்கியதாதல். முதலாமடி சுருங்கி இரண்டாமடி சுருங்காது மூன்றாமடி சுருங்கிவருவதென்றவாறு. இது நான்குநாள் என்னும் வரையறையுள்ளே முதலாம் நாள் வந்து இரண்டாம் நாள் வாராமல் மூன்றாம் நாள் வந்தானை "இடையிடையே வந்தான்" என்னும் வழக்குப்போல்வதொரு பிரயோகம்.

உதாரணம்.

௧. கரைபொரு கான்யாற்றங் கல்லத ரெம்முள்ளி
வருவி ராயின்
அரையிருள் யாமத் தடுபுலியே றும்மஞ்சி
யகன்று போக
நரையுரு மேறு நுங்கைவே லஞ்சும் நும்மை
வரையர மங்கையர் வவ்வுத லஞ்சுதும் வார லையோ.

இது மற்றையடிமூன்றும் ஆறுசீராக ஈற்றயலாகிய எருத்தடி நைந்து ஐந்துசீராய் வந்த ஆசிரியத்துறை. ஈற்றயலடி குறைந்து நேரிசைக்கினமாய் நிற்றல்பற்றி இதனை நேர்த்துறை என்பர்.

௨. வண்டுளர் பூந்தார் வளங்கெழு செம்பூட்சேய்
வடிவே போலத்
தண்டளிர்ப் பூம்பிண்டித் தழையேந்தி மாவினவித்
தணந்தோன் யாரே
தண்டளிர்ப் பூம்பிண்டித் தழையேந்தி வந்துநம்
பண்டைப் பதிவினவிப் பாங்கு படமொழிந்து
படர்ந்தோ னன்றே.

இஃது எருத்தடி குறைதலுடன் இடையிடைமடக்காய் வந்த ஆசிரியத்துறை. எருத்தடியில் வந்த சீர் நான்கு. மற்றையடிகளில் வந்த சீர் தனித்தனி ஆறு. தண்டளிர்ப் பூம்பிண்டி என்னுமடி பின்னும் வந்து இடைமடக்காயிற்று.

௩. கொன்றூர்ந் தமைந்த குருமுகத் தெழினிறக்
குருதிக் கோட்டின விருந்தாட் பெருங்கைக்
குன்றுமென வன்றுமெனக்
குமுறு கின்றன கொடுந்தொழில் வேழம்
வென்றூர்ந் தமைந்த விளங்கொளி யிளம்பிறைத்
துலங்குவா ளிலங்கெயிற் றழலுளைப் பருஉத்தாள்
அதிரும் வானென வெதிருங் கூற்றெனச்
சுழலா கின்றன சுழிக்கண் யாளி
சென்றூர்ந் தமைந்த சிறுநுதி வள்ளுகிர்ப்
பொறியெருத் தெறும்வலிப் புலவுநா றழல்வாய்ப
புனலாமெனக் கனலாமெனப்
புகையா கின்றன புலிமா னேற்றை
என்றாங் கிவையிவை யியங்கலி னெந்திறத்
தினிவரல் வேண்டலந் தனிவர லெனத்தலை
விலக்கலி னிறுவரை மிசையெறி குறும்பிடை
யிதுவென்னென வதுநோனார் கரவிர விடைக்
வுளமது கற்று ரதுகற் பன்றே. [கள

இஃது இரண்டாமடியும் நான்காமடியும் பதினாறு சீராக முதலாமடியும் மூன்றாமடியும் பதினான்குசீராய் இடையிடை கருக்காய் முடிந்த ஆசிரியத்துறை.

௪. இரங்கு குயின்முழவா வின்னிசையாழ் தேனு
அரங்கு மணிபொழிலா வாடும் போலு மிளவேனில்
அரங்கு மணிபொழிலா வாடு மாயின் [வேனில்
மரங்கொன் மணந்தகன்றார் நெஞ்சமென் செய்த திள

இஃது இடையிடையே அடிசுருக்காதலுடன் இடைமடக்காய் வந்த ஆசிரியத்துறை.

## ஆசிரியவிருத்தம்.

கழிநெடில் நான்கு ஒத்திறுவது குறைவில் தோல்சீர் அகவல்விருத்தம்:—

கழிநெடிலடிகள் நான்கு சீரினளவினால் ஒத்துமுடிவது குறைவுபடுதலில்லாத சீர்களையுடைய அகவல் விருத்தம் எனப்படும்.

அகவல்விருத்தம், ஆசிரியவிருத்தம், மன்விருத்தம் என்பன ஒருபொருட்கிளவிகள். குறைவின்றுலசீரகவல் என்றது அடிகளெலலாம் சீரளவினால ஒத்துமுடிவனவாகிய நிலைமண்டலம், அடிமறிமண்டலம் என்னும் அகவல்களை நோக்கிப் போலும்.

உதாரணம்.

அறுசீர்விருத்தம்.

க. விடஞ்சூ ழரவி னிடைநுடங்க
விறல்வாள் வீசி விரையார்வேங்
கடஞ்சூழ் நாடன் காளிங்கன்
கதிர்வேல் பாடு மாதங்கி
வடஞ்சேர் கொங்கை மலைதாங்க
வடிக்க ணீல மலர்தாங்க
தடந்தோ ளிரண்டும் வேய்தாங்கா
மென்னுந் தன்மைத் தன்றுடையே.

இது மூன்றும் ஆறும் காய்ச்சீராக மற்றைநான்கும் மாவீற்றுச்சீராகி வந்த அறுசீராசிரியவிருத்தம்.

---

எழுசீர்விருத்தம்.

உ. கணிகொண்ட லர்ந்த நறவேங்கை யோடு
கமழ்கின்ற காந்த ளிதழால்
அணிகொண்ட லர்ந்த வனமாலை சூடி
யகிலாவி குஞ்சி கமழ
மணிகுண்ட லங்க ளிருபாலும் வந்து
வரையாக மீது திவளத்
துணிகொண்டி லங்கு சுடர்வேலி னோடு
வருவானி தென்கொ றுணிவே. சூளாமணி.

இது முதலும், மூன்றும், ஐந்தும் புளிமாங்காய்ச்சீராக மற்றைநான்கும் மாவீற்றுச்சீராகிவந்த எழுசீராசிரியவிருத்தம். எழுசீர்விருத்தங்களுள் இதனைச் சிறப்புடையதென்பர்.

### எண்சீர்விருத்தம்.

௯. மூவடியி னிரண்டு சூழ்சுடரு மாண
முழுதுலக மூடியெழின் முளைவயிர நாறந்த
தூவடியி னிலங்கு வெண்குடையி னீழற் [றுண்டாற்
சுடரோவுன் னடிபோற்றிச் சொல்லுவதொன்
சேவடிக டாமரையின் சேயிதழ்க ளுண்டச்
சிவந்தனவோ சேவடியின் செங்கதிர்கள் பாயப்
பூவடிவு கொண்டனவோ பொங்கொளிகள் சூழ்ந்து
புலங்கொளலாகாவெமக்கெம புண்ணியநாதங்கோவே.

இது, நான்கும் எட்டும் தேமா வென்னும் வாய்பாட்டுச்சீராக ஏனையவாறும் காய்ச்சீராகி வந்த எண்சீராசிரியவிருத்தம். "மூடிமுளைவயிரநாற்றி" எனப்பாடங்கொள்வார் அசைகொண்டு குறைத்தலறிக.

### விருத்தபேதம்.

விருத்தங்களெல்லாம் சீர் வேறுவேறாக மாறிமாறித் தொடுக்கப்படும் வகையினால் வேறு வேறு சந்தம் பெற்றுப் பலவிதபேதங்களாய் வழங்கும். அறுசீர்விருத்தம், எழுசீர்விருத்தம் முதலிய ஆசிரியவிருத்த பேதங்களும் பலவிதம். அவற்றுள்ளும் சில சில காட்டுதும்.

### அறுசீர்விருத்தம்.

௧. அரக்கரோ ரழிவு செய்து
கழிவரே லதற்கு வேறோர்
குரக்கினத் தரசைக் கொல்ல
மனுநெறி கூறிற் றுண்டோ
இரக்கமெங் குகுத்தா யென்பா
லெப்பிழை கண்டா யப்பா
பரக்கழி யிதுநீ பூண்டாற்
புகழையார் பரிக்கற் பாலார். (இராமாவதாரம்)

இது முதலும் நான்கும் விளமும் இரண்டும் ஐந்தும் மாவும் மூன்றும் ஆறும் தேமாவேயாய மற்றொரு சந்தம் பெற்று வந்த அறுசீர்விருத்தம்.

---

௨. ஐயா யானோ ரரச
னயோத்தி நகரத் துள்ளேன

மையார் களபத் துருவி
மறந்தே வதிந்தே னிருள்வாய்ப
பொய்யா வாய்மைப் புதல்வன்
புனன்மொன் டிடுமோ தையின்மேற்
கையார் கணைசென் றதலாற்
கண்ணிற் றெரியக் காணேன். இராமாவதாரம்.

இது முற்றும் மாவீறாகி மற்றொரு சந்தம் பெற்று வந்த அறுசீர்விருத்தம். முதலாஞ்சீர் தேமா. ஆறாஞ்சீர் நெடிலீற்றுமா.

௩. பரத நாத வேத பாத்து வாச னென்பான்
விரத வேள்வி தன்னின மேன கையா லான
சுரத தாது வீழ்ந்த துரோண கும்பந் தன்னில [பான.
வரத னொருவன் வந்தான் வசிட்ட முனியை யொபா
பாரதம்

இதுவும் முற்றும் மாவீறாகி முன்னதின சந்தமே பெற்று வந்த அறுசீர்விருத்தம். மூன்றாஞ் சீரும் ஆறாஞ் சீருந் தேமா. ஏனைய பெரும்பாலன குறிலீற்றுமா.

௪. பிறியார் பிறிவே தென்னும்
பெரியோய் தகவோ வெனனும்
நெறியோ வடியே னின்னீ
சினையா னினைவே தென்னும்
வறியோர் தனமே யென்னும்
தமியேன் வலியே யென்னும்
அறிவோ வினையே யென்னு
மரசே யரசே யென்னும். இராமாவதாரம்.

இதுவும் முற்றும் மாவீறாகி முன்னதின் சந்தமே பெற்றுவந்த அறுசீர்விருத்தம். பெரும்பாலன நெடிலீற்றுப் புளிமா.

௫. தூளியி னிமிர்படலம்போ
யிமையவர் விழிதுற வெயபோர்
மீளியி னினமென வன்றாள்
விரைபுலி நிரையென விண்டோய்
ஆளியி னணியென வன்றே
லலைகடல் விடமென வஞ்சா

வாளியின் விசைகொடு திண்கார்
வரைவரு வனவென வந்தார். இராமாவதாரம்.

இது மூன்றும் ஆறும் தேமாவாக மற்றை நான்கும் விளமாகி மற்றொரு சந்தம் பெற்று வந்த அறுசீர்விருத்தம். முதலாஞ்சீர் மாத்திரம் கூவிளம்.

---

௯. ஆழி வேந்தன் பெருந்தேவி
யன்ன பன்னி யழுதரற்றத்
தோழி யன்ன சுமித்திரையுந்
துளங்கி யேங்கி யுயிர்சோர
ஊழி திரிவ தெனக்கோயி
லுலையும் வேலை மற்றொழிந்த
மாழை யுண்கட் டேவியரு
மயிலின் குழாத்தின் வந்திரைத்தார்.

இராமாவதாரம்.

இது மூன்றும் ஆறும் காய்ச்சீராக மற்றை நான்கும் மாச்சீரால் மற்றொருசந்தம் பெற்றுவந்த அறுசீர்விருத்தம். "விடஞ்சூழ்" என்பதும் இதுவும் தம்முள்ளே சிறிது வேறுபாடுடையன

---

௰ மாதவ னேமுனி யேயெலமை
யாளுடை வானவ னேமுனியேல்
யாதவ னேமுனி யேலிந்த
யகதிலி ருபபவ னேமுனியேல்
ஆதவ னேமுனி யேன்மதி
வெங்கன லானவ னேமுனியேல்
நீதவ னேமுனி யேன்முனி
யேலென நின்றுப ணிந்தனரே. பாரதம்.

இது கடைச்சீர் மாத்திரம் கூவிளங்காயாக மற்றைய ஐந்தும் கூவிளமாய் மற்றொருசந்தம் பெற்று வந்த அறுசீர்விருத்தம்.

---

அ. முகுரானனன் மைந்தனும் விமனுமே
முடியாதபெ ரும்பகை யாளர்கள்காண்
மகிபாலர்தி ருந்தலை யூடுரையா
வழுவாதன வஞ்சினை யோதினனே

இகல்வார்சிலை யின்குரு வானவர்தா
மிடுசாபமு முண்டிதி ரௌபதியார்
பகர்சாபமு முண்டதி னுலெதிரே
படுமேயிவன் வெங்கையி னுலவனே. பாரதம்.

இது முன்வந்த புளிமாங்கனி, கூவிளம், கூவிளங்காய் என்னும் வாய்பாட்டுச் சீர்மூன்றும் இரட்டிப் பின்னும் வந்தோரடியாய் மற்றொருசந்தம் பெற்று நின்ற அறுசீர்விருத்தம்.

---

௯. பொற்றலத் தமரர்கடல் கடைந்தமுத மெழுப்பவெழு
புவன முற்றும்
முற்றல மெழுந்ததுகண் டிரிந்தாலு மதுநுகர்ந்த
மூர்த்தி வேதஞ் [கூர்
சொற்றல நிழனிருந்தோன் சொரியருவி யுடன்றுயில்
தும்பி வீழுங்
குற்றலங் குறும்பலவென் றிரண்டுமொருங் குளவழுதி
கொற்ற நாட்டில். சேதுபுராணம்.

இது முன்னைய நான்கும் காயீற்றுச் சீராக ஐந்து மாவும் ஆறு தேமாவுமாய் மற்றொருசந்தம் பெற்று வந்த அறுசீர் விருத்தம். இசசந்தத்திலே ஆறுஞ்சீர் தேமாவாயே வரல்வேண்டும். பனிமாவரிற் சந்தம் சிதையும்.

---

௧௦. இனமகலு மருகர்மட மிசையிலிடு கனன்மதுரை
யிறைவனுடல் புகமொழிவரே
கனகமுக படகவள கரடதட விகடமத
கரியின்மத மறநினைவரே
வனமருவு மருமுதலை யொருமதலை தரவினிய
மதுரகவி மொழிமுதல்வரே
அசுகரபி னயாதுல ரமலரெம தருணகிரி
யடிகடம தடியவர்களே. அருணைக்கலம்பகம்.

இது முற்றுங் கருவிளங்காய்ச்சீராகி வந்த அறுசீர்விருத்தம். இதனை எழுசீர்விருத்தமாக்குவாருமுளர். இன்னும் இவ்வறுசீர் விருத்தங்களிற் பேதங்கள் பலவுள. வந்துழி வந்துழிக் காண்க.

---

## எழுசீர்விருத்தம்.

க. இணங்குறு வாய்மை மெய்ம்மையே யெனினு
மியம்பொரு ளிணங்குவ தெனினும்
அணங்குறோச் செய்யும் பொய்சொலா தொழிக
அறிஞரோ டிணங்குக நாளுங்
குணங்களே மொழிக வுளத்திலெஞ் ஞான்று
நன்மையே குறிக்கொளல் வேண்டும்
பிணங்குவெஞ் சூதிற் குறளேயிற் றாதிற்
பெறுபொருள் கோடறீங் குறுமால். காசிகண்டம்.

இது முதலும் மூன்றும் ஐந்தும் ஆறும் விளமாக மற்றைமூன்றும் மாவாகி மற்றொரு சந்தம் பெற்று வந்த எழுசீர்விருத்தம்.

---

உ. தண்ட ரளமலை வெண்க யிலைமலை
சங்க மலையென நங்கைமார்
மொண்டு சொரிதரு கின்ற வடிசிலு
மூந்து கறிகளும் வெந்தபான்
மண்டு நறுநெயொ டந்த விடலையு
மைந்த ரனைவரு முண்டுதம்
பண்டி நிறைவுறு பின்பு பிறிதொரு
பண்டி கெழுமிய பண்டமே. பாரதம்.

இது முதலும் மூன்றும் ஐந்தும் தேமாவாக மற்றை நான்கும் விளமாகி மற்றொருசந்தம் பெற்று வந்த எழுசீர்விருத்தம். இரண்டு நான்கும் ஆறும் கருவிளம். ஏழு கூவிளம்.

---

௩. மாதுல னாகிய மேதில னாகியும்
வஞ்சன் கஞ்சன் வரவிட்ட
பூதனை தன்னுயிர் முலைபொழி பாலொடு
போதா வுண்ட புயல்வண்ணா
மாதவ யாதவ வாசவ கேசவ
மாயா வாயா மதுசூதா
ஆதியு மந்தமு மாகிய நின்புக
ழல்லா துரையே னடியேனே. பாரதம்.

இஃது எழுசீர் புளிமாங்காயும் ஐந்தும் ஆறும் மாவுமாக முன்னைய நான்கும் கூவிளமாய் மற்றொரு சந்தம் பெற்று வந்த எழுசீர்விருத்தம்.

---

௪. கோமுனி வருக்குமரி தாய்முது மறைப்பனுவல்
கூறிய பரப்பி ரமமாம்
ஓமெனு மெழுத்தின்வடி வாய்நட னவிற்றுபுலி
யூரன் மகுடச் சடிலமேன்
மாமதி யிணைத்தனது கோடென வெடுப்பமத
மாமுகன் முகக்கை தொடவத்
தூமதி பணிப்பகையெ னுவா நதிப்புகவொர்
தோணி யெனவிட் டகலுமே.

சிதம்பரச்செய்யுட்கோவை.

இஃது இரண்டும் நான்கும் கருவிளங்காயாக முதலும் மூன்றும் கூவிளமும் மற்றைய விளமும மாவுமாய் மற்றொரு சந்தம் பெற்றுவந்த எழுசீர்விருத்தம்.

௫. கொண்டலணி கண்டர்நிறை கங்கையணி செஞ்சடை
கொம்பரொரு பங்கி லுறைவார் யர்
அண்டபகி ரண்டமள வங்கியென நின்றவதி
ருங்கமலர் தங்க ருணையர்
கண்டுளது கொண்டன்மிசை திங்களெழு கின்றதிது
கண்டதிலை யுங்கண் முகமா
மண்டலமெ னும்புதிய திங்கண்மிசை கொந்தளக
மஞ்சுகுடி கொண்ட வடைவே. அருணைக்கலம்பகம்.

இது கடையிருசீரும் முறையே தேமாவும் புளிமாவுமாக மற்றையைந்தும் கூவிளங்காயாகிவந்த எழுசீர்விருத்தம். எழுசீரின் வரும் பேதம் இன்னும்பல.

---

## எண்சீர்விருத்தம்.

க. தேருங் கொடியு மிடையு மறுகிற்
றிருவா ரூரீ ரீரே யல்லால்
ஆரென் றுயர மறிவா ரடிகே
ளடியே னயரும் படியோ விதுதான்

நீரும் பிறையும் பொறிவா ளரவி
னிரையு நிரைவெண் டலையின் புடையே
யூரும் சடையீர் விடைமேல் வருவீ
ருமதன் பிலர்போல் யானோ வுறுவேன்.
பெரியபுராணம்.

இது மூன்றும் மாவீற்றுச் சீராகி மற்றொரு சந்தம் பெற்று வந்த எண்சீர்விருத்தம்.

---

௨. கரிய ணிக்குழாக் கரிகள் புண்படா
கடவு தேரிலத் தேர்க லக்குறா
பரிநி ரைக்குழாப் பரிது ணிப்புறா
பாகர் தம்மிலெப் பாகர் வீழ்கலார்
நரனும் வெற்றிகூர் வசுவு முற்றபோர்
நவிலு கிற்கிலு நாக மெங்குமால
இருக ளத்திலு மிருவ ரம்பிலு
மேவு றூதபே ரெந்த மன்னரே. பாரதம்.

இது முதலும் மூன்றும் ஐந்தும் ஏழும் மாவீறாக மற்றை நான்கும் விளவீறாகி மற்றொருசந்தம் பெற்று வந்த எண்சீர்விருத்தம்.

---

௩. ஓரூரு மொருகுலமு மில்லா வென்னை
யுங்கள்குலத் துள்ளோரி லொருவ னாக்கித்
தேரூரு மவர்மனைக்கே வளர்ந்த வென்னைச்
செம்பொன்மணி முடிசூட்டி யம்பு ராசி
நீரூரும் புவிபாலர் பலரும் போற்ற
நின்னினுஞ்சீர் பெறவைத்தாய் நினக்கே யன்றி
ஏரூருங் கதிர்முடியா யுற்ற போரில்
யார்க்கினியெ னுயிரளிப்ப தியம்பு வாயே. பாரதம்.

இது முதலும் இரண்டும் ஐந்தும் ஆறும் காயாக, மூன்றும் நான்கும் ஏழும் எட்டும் மாவாகி மற்றொரு சந்தம் பெற்று வந்த எண்சீர்விருத்தம். நான்கும் எட்டும் தேமாவாயே நிற்கும்.

---

௪. மிடன்மிஞ்சு மேவலர் வானிடை போதர
வினைவென்ற காவலர் பாசறை சேருதல்
கடனன்றெ னுமுனி மாமகன் வாள்வலி
கருதுந்த னீர்மையை வேறறி யாவகை

அடல்கொண்ட சேனையெ லாமவண் வாழ்வுற
வவரைந்து விருது மேவர வேயொரு
புடைதங்கு கானிடை போயின ஞானி
பொழிகொண்டல் போதிரு மேனிமுராரியே. பாரதம்.

இது புளிமாங்காய் கூவிளம் கூவிளம் கூவிளம் என்னும் சீர்கள் நான்கும் இரட்டிப் பின்னும் வந்தோரடியாய் மற்றொரு சந்தம் பெற்று வந்த எண்சீர்விருத்தம்.

---

௫. ஆன கமலமலர் வாவியிடை யேமுழுகி
யாவி யுதவுமறை யோகபர னுகிமொழி
மான கவசவர ராசதுரி யோதனனை
வாயு குமரன்முதிர் போரிலெதிர் வீழும்வகை
தான கரடகரி மாவையரி மாபொருத
தாய மெனவுழறி னுனெனுமுன் வேதமுனி
ஞான சரிதகுரு வாகியது ரோணன்மக
னுடு களமனுகி னுனொருவி நாழிகையில். பாரதம்.

இது தேமா புளிமாங்காய் கூவிளங்காய் கூவிளங்காய் என்னும் சீர்நான்கும் இரட்டிப் பின்னும் வந்தோரடியாய் மற்றொரு சந்தம் பெற்று வந்த எண்சீர்விருத்தம்.

---

௬. அங்கியமா சடையாரும் பின்னியமா சடையாரும்
அடிமாற நடித்தாரு முடிமாற னடித்தாரும்
உன்னுமற மொழிந்தாரும் பின்னுமற மொழிந்தாரும்
உகைத்திடுமா னேற்றாரு மிகைத்திடுமா னேற்றாரும்
என்னகத்தா முரியாருங் கைந்நகத்தா முரியாரும்
எருக்கிதழி மணத்தாரு முருக்கிதழி மணத்தாரும்
வன்னிவடி வனத்தாருஞ் சென்னிவடி வனத்தாரும்
வருகருணைப் பதியாரும் பெருகருணைப் பதியாரே.
அருணைக்கலம்பகம்.

இது முற்றும் காயாகி மற்றொரு சந்தம் பெற்று வந்த எண்சீர்விருத்தம்.

இங்கே காட்டப்பட்ட விருத்தங்களுள்ளே சில வடமொழிச் சந்தமுடையனவாய் இரட்டித்து வந்த விருத்தங்கள். ஒன்பதுசீர்

பத்தாச்சீர் பதினொருசீர் விருத்தங்களை உறுப்பியலிற் காண்க. அவை பெருவரவுடையனவல்ல.

---

இனிப் பன்னிருசீர்விருத்தம் முதலிய விருத்தங்களைப் பெரும்பாலும் இரட்டைவிருத்தம் என்றே வழங்குவர்.

இரட்டைவிருத்தமாவது முன்னர் வந்து ஒரு தூக்குற்று நின்ற அடிச்சந்தமே இரட்டிப் பின்னும் வந்து ஓரடியாய் நிற்பது.

அவற்றுள்ளும் சில காட்டுதும்.

உதாரணம்.

க. தெட்டிலே வலியமட மாதர்வாய் வெட்டிலே
சிற்றிடையிலே நடையிலே
சேலொத்த விழியிலே பாலொத்த மொழியிலே
சிறுபிறை நுதற்கீற்றிலே
பொட்டிலே யவர்கட்டு பட்டிலே புனைகந்த
பொடியிலே யடியிலேமேற்
பூரித்த முலையிலே நிற்கின்ற நிலையிலே
புந்திதனை நுழையவிட்டு
நெட்டிலே யலையாம லறிவிலே பொறையிலே
நின்னடியர் கூட்டத்திலே
நிலைபெற்ற வன்பிலே மலைவற்ற மெய்ஞ்ஞான
ஞேயத்தி லேயுனிருதாள்
மட்டிலே மனதுசெல நினதருளு மருள்வையோ
வளமருவு தேவையரசே
வரைராச னுக்கிருகண் மணியா யுதித்தமலை
வளர்காத லிப்பெணுமைமயே. தாயுமானவர்பாட்டு.

இது முன்னொரு தூக்குற்று நின்ற சந்தமே இரட்டிப் பன்னிருசீராகி வந்த ஆசிரியவிருத்தம். நடையிலே என்றவரையும் ஒரு தூக்கு. தூக்காவது அடிகளை இசையாற்றுணித்து நிறுத்துவது.

---

உ. தங்குக் திருமறு மார்பனை யோத்தித்
தலைவன் பலவிமன்
தடவட மதுரைத் திருநக ராளன்
தரைமகள் சாநிதன்

கொங்கைத் துணைவன் நசரத ராச
  குமாரன் வசுதேவன்
குலம்வரு முதல்வ னந்தன் மைந்தன்
  கோதை யசோதையிளஞ்
சிங்கங் கோசலை செல்வன் தேவகி
  சிறுவன் சனகையர்கோன்
தெய்வப் புதுமண வாளன் பஞ்சவர்
  செல்வச் சிறுதூதன்
பொங்குங் கடலிடை யறிதுயில் கூரும
  புருடன் சங்குசரம்
பொருதண் டாழியில் வாளுட னேந்தும
  புனிதனை நினைவீரே. (புகழேந்திப்புலவர்பாட்டு.)

இது முன்னையதின் வேறாய் ஒரு தூக்குற்று நிறை அடிச்சீர் தமை இரட்டிப் பின்னும் வந்த பன்னிருசீர் விருத்தம். இன்னும் பலவகையுள. அவைகளை வந்தவழி வந்தவழிக் காண்க.

நேரிசையாசிரியப்பாவுக்கு இனம்போன்றுவரும் விருத்தமுளதென்று சிலர் கூறுவர்.

உதாரணம்.

௧. முன்னைத்தஞ் சிற்றின் முழங்கு கடலோத
  மூழ்கிப் போக
அன்னைக் குரைப்ப னறிவாய் கடலேயென்
  றலறிப் பேருந்
தன்மை மடவார் தளர்ந்துகுத்த வெண்முத்தம
புன்னை யரும்பேய்ப்பப் போவாரைப் பேதுறுக்கும்
  புகாரே யெம்மூர்.

இது மூன்றாமடி குறைந்து நாற்சீராய் வந்ததுபற்றி இதனை நேரிசையாசிரியப்பாவுக்கு இனமான விருத்தம் என்பர். சிலர் "தயங்கு கானல்" என இருசீர்சேர்த்து மூன்றாமடியையும் மற்றையடிகள்போல நிரப்புவர். மூன்றாமடி நாற்சீரென்பதே பேராசிரியர் கருத்து. இவர்க்கு அகவற்றுறை. பிறவந்தவழிக் காண்க.

இங்கே கூறப்பட்ட எண்சீர்விருத்தபேதங்களுள்ளே ஒன்று பிற்காலச் சான்றோராலே கட்டளைக்கலிப்பா என்னும் பெயரிட்டு வேறொன்றாக வழங்கப்படுகின்றது. அதனியல்பினையும் இங்கே கூறுதும்.

## கட்டளைக்கலிப்பா.

ஒருமா, கூவிளம், கூவிளம், கூவிளம் என்னும் வாய்பாட்டு நாற்சீர் பாதியடியும், அதுவே இரட்டிப் பின்னும் வருவது பாதியடியுமாய் நிற்கும் எண்சீரடியான் நடந்து ஏகாரத்தான் முடிவது கட்டளைக்கலிப்பாவாகும். இஃது எழுத்தளவை பெறுதலாற் கட்டளைக்கலிப்பா எனப்பட்டது.

கட்டளை - அளவு. கலிப்பா - துள்ளலிசைச்செய்யுள். தேமா வாய்பாட்டுச் சீர் முதலாய்த் தொடங்கும் பாதியடிக்கு எழுத்துப் பதினொன்று. புளிமாவாய்பாட்டுச் சீர் முதலாய்த் தொடங்கும் பாதியடிக்கு எழுத்துப் பன்னிரண்டு. தேமாவாவது புளிமாவாவது முதற்சீராய் நிற்றலன்றி இடையிலே நிற்றலும் அதன்பின் கருவிளம் வந்து வெண்டளை நிகழ ஒரோவழி நிற்றலுமுண்டு.

உதாரணம்.

௧. தில்லை மன்றுண டம்புரி பாதனூர்
தேவ நாயகர் சேரரு ணைக்குளே
முல்லை மல்லிகை சண்பகம் பிச்சியார்
மொய்த்த வார்குழன் மோகனப் பிச்சியார்
நல்ல மேனியும் பொற்றிரு வேடமே
நாடி யிட்டதும் பொற்றிரு வேடமே
இல்லை யாயினு மிவ்விடை யையமே
யேற்க வந்தது மிவ்விடை யையமே.

அருணைக்கலம்பகம்.

௨. மைந்தி னுற்பெரி யோனெனும் வாயுவின்
மைந்த னுற்றுரி யோதனன் மாமுடி
சிந்த வார்த்தனர் நீடிசை காவலர்
சிந்தி வாழ்த்தினர் பூமழை தேவர்கண்
முந்த வோடிய தேரொடு காய்கதிர்
மொய்ம்பன் மேல்கடன் மூழ்கினன் மாலைகொள்
அந்தி வாய்த்தம பாசறை மேவினர்
ஐந்து பார்த்திப ரானவர் தாமுமே.

பாரதம்.

இவை பாதியடி ஒவ்வொன்றும் தேமா கூவிளம் கூவிளம் கூவிளம் என்னும் வாய்பாட்டு நாற்சீராய்ப் பதினெழுத்துப்பெற்று சின்ற கட்டளைக்கலிப்பாக்கள்.

---

௩. படுத்த பாயுட னேபிணி மூழ்கினும்
பல்வி ழுந்துந ரைத்தற மூப்பினும்
அடுத்த திங்கிவர்க் கேபெரு வாழ்வெனும்
அப்பெ ரும்பதி யெப்பதி யென்பிரேல்
விடுத்து விட்டிங் கிரதிரு வும்புவி
வெண்கு டைக்கு ளிடுமா சாட்சியுங்
கடுத்த தும்புக ளத்தரைத் தேடுவார்
காத லித்துவ ருந்திருக் காசியே. காசிக்கலம்பகம்.

இது முற்பாதி புளிமாவாய்பாட்டுச் சீராய்த் தொடங்கிப் பன்னிரண்டெழுத்தும், பிற்பாதி தேமா வாய்பாட்டுச் சீராய்த் தொடங்கிப் பதினொரெழுத்தும் பெற்று எண்சீரடியான் வந்த கட்டளைக் கலிப்பா. மூன்றாமடியின் முற்பாதியிலும் பிற்பாதியிலும் தேமா கருவிளம் என்பன இடையில் வந்தன. அவற்றால் எழுத்து வரையறை தவறவில்லை.

பாதியடிகளிலே சில தேமாங்காய் புளிமாங்காய் இடையிறுதிகளிலே வரினும் வெண்டளையும் இவ்வெழுத்தளவையும், சந்தமும் தவறாது நிற்குமாயின், அவைகளையுங் கட்டளைக்கலிப்பா என்றே கொள்வர். எழுத்தளவையே முக்கியம்போலும்.

உதாரணம்.

௪. குரும்பை வெம்முலை சேர்மத ரேசர்பொற்
கோபு ரத்திற் கொடிகட்டு சித்தர்யாம்
கரும்பை முன்புகல் லானைக் கிடுஞ்சித்தர்
கையிற் செங்கல் பசும்பொன்ன தாக்கினேம்
இருந்த வீடும் வறும்பா ழதாமவர்க் [தேம்
கெருத்துக் கொட்டினும் பொன்மேய்க் கிடச்செய்
அருந்த னங்மக் கோதன மேயப்பா
வாட கத்துமற் றுசையவ் வையர்க்கே.
மதுரைக்கலம்பகம்.

இக்கட்டளைக்கலிப்பாவிலே கோடிகட்டு, பசும்பொன்ன என்பன புளிமாங்காய். ஏயப்பா என்பது தேமாங்காய். ஐயர்க்கே, சித்தர்யாம் என்பன முதலியவற்றை ஒற்றுத்தள்ளி விளவிருக்குவர்.

ரு. முடியிலா துறை சுன்னாகத் தான்வழி
முந்தித் தாவடிக் கொக்குவின் மீதுவக்
தடைய வோர்பெண் கொடிகாமத தாளசைத்
தாவினைக் கோட்டை வெளிகட் டுடைவிட்டாள்
உடுவி லான்வரப் பன்னாலை யான்மிக
வருத்த னன்கடம் புற்றமல லாகத்தில்
தடைவி டாதனை யென்றுப லாலிகண்
சார வந்தன ளோரிள வாலையே.

முத்துக்குமாரகவிராசர்பாட்டு.

இக்கட்டளைக்கலிப்பாவிலே சுன்னாகம் பன்னாலை என்பன தேமாங்காய. கொடிகாமம புளிமாங்காய. கருவிளங்காய கூவிளங்காய் என்பன வருதலில்லை. (கச-கரு.)

---

## கலிப்பா.

துள்ளலிசையுடையதாய்த் தரவு, தாழிசை முதலிய உறுப்புக்களைப் பெற்று நடப்பது கலிப்பா எனப்படும். இது பொருளினாலும், இசையினாலும் எழுச்சியும், பொலிவும், வேகமும் பெற்று வரலாற கலிப்பா எனப்பட்டது.

கலி - எழுச்சி, பொலிவு, வேகம். பா - செய்யுள். கலி, வசி யாபா, முறற்கை என்பன ஒருபொருட்கிளவிகள்.

கலிப்பா ஒத்தாழிசைக்கலி, வெண்கலி, கொச்சகக்கலி என மூன்றுவகைப்படும்.

இவற்றுள் ஒத்தாழிசைக்கலிப்பா நேரிசையொத்தாழிசை, அம்போதரங்கவொத்தாழிசை, வண்ணகவொத்தாழிசை என மூன்றுவகையாகும். ஒத்ததாழிசைகளையுடைமையால் ஒத்தாழிசை எனப்பட்டது.

வெண்கலி ஒன்றேயாம்.

கொச்சகக்கலிப்பா தரவுகொச்சகம், தரவிணைக்கொச்சகம், சிஃறாழிசைக்கொச்சகம், பஃறாழிசைக்கொச்சகம், மயங்கிசைக் கொச்சகம் என ஐவகையாகும்.

### ஒத்தாழிசைக்கலி

க தரவொன்று தாழிசை மூன்று தனிச்சொற் சுரிதகமாய
நிரலொன்றி னேரிசையொத்தாழிசைக்கலிநீர்த்திரைபோன்
மரபொன்று நேரடி முச்சீர் குறணடு வேமடுப்பின்
அரவொன்று மல்குல தம்போ தரங்கவொத் தாழிசையே

உதாரணமுதற்குறிப்பு.

உ. வாணெடுங் கண்பனி நேரிசை யாகு மதர்த்திருண்டு
சேணுற வோடிக் குழையிட றிச்செருச் செய்யும்விழி
நாணுந் திருவு மறிவுஞ் செறிவு முடையநல்லாய்
ஏணுங் கெடலரு மாமுனி யம்போ தரங்கமென்னே.

நேரிசையொத்தாழிசைக்கலிப்பா.

தரவொன்று தாழிசை மூன்று தனிச்சொல் சுரிதகமாய்
நிரலொன்றின் நேரிசையொத்தாழிசைக்கலி:—

ஒருதரவு, மூன்றுதாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்பன வந்து முறையே பொருந்தி நிற்குமாயின்: அது நேரிசையொத்தாழிசைக்கலிப்பா எனப்படும்.

தரவாவது மற்றையுறுப்பின் பொருள்களைத் தொகுத்துத் தந்து கலிப்பாவின் முதலுறுப்பாய் முன்னிற்பது. தரவு - தருதலுடையது. தாம் போன்று நிற்றலைப்பற்றித் தரவெனப்பட்டதென்பாருமுளர். தரம் - தலை. எருத்தம் என்றும் இதற்குப் பெயருண்டு.

தாழிசையாவது தாழ்ம்பட்ட இசையுடையதாய் அடிகளாலே தரவினின்றுங் தொகைகுறைந்து கலிப்பாவின் இரண்டாம் உறுப்பாய் நிற்பது. இதற்கு இடைநிலைப்பாட்டு என்றும் பெயர். இடைநிலைப்பாட்டு - இடையிலே நிற்கும் பாட்டு.

தரவுதாழிசைகளிலே பெரும்பாலும் பனிமொழியாயச் சொற் கருவிளங்காயச் சீரும் வருவனவாகும். இரண்டிற்கும் அடி அளவடியேயாம்.

தனிச்சொலலாவது தனியே சொலலப்படும் ஒருசீராய்ப் பொருணிரம்பி விட்டிசைத்துப் பெரும்பாலும் சுரிதகத்தின் முன்னே நிற்பது. விட்டிசை, கூன், தனிநிலை என்பன இதன் பரியாயம்.

சுரிதகமாவது தனிச்சொற்குப் பின்னே அகவற்பா,வெண்பா என்னும் இரண்டனுள் ஒன்றாய் வந்து கலிப்பாவின் இறுதியுறுப்பாய் நின்று முடிப்பது. சுரிதகம் - நலிந்துச்சரிக்கப்படுவது. சுவரிதகம் என்னும் ஆரியபதம் சுரிதகம் எனத்தற்பவமாயிற்று. சுரிந்திறுதலிற் சுரிதகம் என்பாருமுளர். அடக்கியல், போக்கியல், வாரம், வைப்பு என்பன இதன்பரியாயம்.

உதாரணம்.

[தரவு.]

வாநெடுங்கண் பனிகூர வண்ணம்வே றாய்த்திரிந்து
தோணெடுந்த கைதுறந்து துன்பங்கூர் பசப்பினவாய்ப்
பூணடங்கு முலைகண்டும் பொருட்பிரிதல் வலிப்பவோ;

[தாழிசை.]

சூருடைய கடுங்கானஞ் சொலற்கரிய வென்பால்வ
பிருடைய நலந்தொலையப் பிரிவாரோ பெரியவரே;

சேணுடைய கடுங்கடங்கள்செலற்கரியவென்பவால்
நாணுடைய நலந்தொலைய நடப்பாரோ நலமிலரே;

சிலம்படைந்த வெங்கானஞ் சிறிலவே யென்பவால்
புலம்படைந்து நலந்தொலையப் போவாரோ பொருளிலரே;
எனவாங்கு,

[சுரிதகம்.]

அருளொனு மிலராய்ப் பொருள்வயிற் பிரிவோர்
பனநெடுங் காலமும் வாழியர்
பொன்னெடுந் தேரொடு தானையிற் பொலிந்தே.

இது தரவு ஒன்று, தாழிசை மூன்று, தனிச்சொல், சுரிதகம் என்பன முறையே பொருந்தி வருதலின் நேரிசையொத்தாழிசைக கலிப்பாவாயிற்று. தரவினடி மூன்று. தாழிசையினடி இரண்டு. சுரிதகம் அகவற்சுரிதகம. கலிப்பாக்களுள் இதனைச் சிறப்புடைய தென்பா.

---

அம்போதரங்கவொத்தாழிசைக்கலிப்பா.

நீர்த்திரைபோன்ம் மரபொன்று நேரடி முச்சீர் குறள் நடுவே மடுப்பின் அது அம்போதரங்கவொத்தாழிசை:—

நீரின் திரைபோலும் முறைபொருந்தி வருகின்ற அளவடியாகிய நாற்சீரடி முச்சீரடி இருசீரடி என்னும் அம்போதரங்கம் நடுவிலே மடுக்கப்படுமாயின் நேரிசையொத்தாழிசைக் கலிப்பாத்தானே அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பாவாகும்.

அம்போதரங்கமாவது உயர்ந்தோங்கிப் பெருவடிவமாயெழுந்து வரவரச் சுருங்கிக் கரையடைந்தொழியும் இயல்புடைய நீர்த்திரை போன்று முன்னர் நாற்சீரடியாய் உயர்ந்தோங்கிப் பின்னர் முச்சீரடியாய் அதனிற்சுருங்கி அதன்பின்னர் இருசீரடியாய் அதனினுஞ் சுருங்கி முடிவது. அம்போ - நீரினது. தரங்கம் - திரை. அசையடி, சொற்சீரடி, எண், பிரிந்திசைக்குறள் என்பன இதன் பரியாயம்.

போலும் என்பது போன்ம் என்று நின்றது. நேரடி-அளவடி. நடு என்றது தாழிசைக்குத் தனிச்சொற்கும் நடுவினை. மடுத்தல் - பொருத்தல். அது என்றது நேரிசை யொத்தாழிசைக்கலிப்பாவினை.

நாற்சீர்கொண்ட அடியிரண்டாய் இரண்டும், நாற்சீர்கொண்ட அடி ஒன்றாய் நான்கும், முச்சீர்கொண்ட அடியொன்றாய் எட்டும், இருசீர்கொண்ட அடியொன்றாய்ப் பதினாறும் வருவதே சிறப்புடையம்போதரங்கம் என்பர். சிறுபான்மை முச்சீரடியாய் நான்குவருதலும், இருசீரடியாய் எட்டு வருதலுமுண்டு.

உதாரணம்.

[தரவு.]

கேடலரு மாமுனிவர் கிளர்ந்துடன் றொழுதேத்தக்
கடல்கெழு கனைசுடரிற் கலந்தொளிரும் வாலுளைய
அழலவிர் சுழல்செங்க ணரிமாவாய் மலைந்தானைத்
தாரொடு முடிபிதிரத் தபனியப் பொடிபொங்க
ஆர்புன லிழிகுருதி யகலிட முடனனைப்பக்
கூருகிரான் மார்பிடந்த கொலைமலி தடக்கையோய்,

[தாழிசை.]

முரசதிர் வியன்மதுரை முழுவதூஉந் தலைபனிப்பப்
புரைதொடித் திரடிண்டோட் போர்மலைந்த மறமல்லர்
அடியொடு முடியிறுப்புண் டயர்ந்தவர் நிலஞ்சேரப்
பொடியெழ வெங்களத்துப் புடைத்ததுநின் புகழாமோ

கலியொலி வியனுலகங் கலந்துட னலிநடுங்க
வலியிய லவிராழி மாறெதிர்ந்த மருட்சோர்வு
மாணாதா ருடம்போடு மறம்பிதிர வெதிர்கலக்கிச்
சேணுய ரிருவிசும்பிற் சேர்த்ததுநின் சினமாமோ;

படுமணி யினநிரைகள் பரந்துட னிரிந்தோடக்
கடுமுர ணெதிர்மலைந்த காரொலி யெழிலேறு
வெரிகொடு மருப்பொசிய வீழ்ந்துதிறல் வேறாக
எருமலி பெருந்தொழுவி னிறுத்ததுநின் னிகலாமோ;

[அம்போதரங்கம்.]

(நாற்சீரீரடி.)

இலங்கொளி மரகத மெழின்மிகு வியன்கடல்
வலம்புரித் தடக்கை மாஅ னின்னிறம்;

விரியிணர்க் கோங்கமும் வெந்தெரி பசும்பொனும்
பொருகளி றட்டோய் புரையு நின்னுடை;

(நாற்சீரோரடி.)

கண்கவர் கதிர்முடி கனலுஞ் சென்னியை;
தண்சுட ருறுபகை தவிர்த்த வாழியை;
ஒலியிய லுவண மோங்கிய கொடியினை,
வலிமிகு சகட மாற்றிய வடியினை;

(முச்சீரோரடி.)

போரவுணர்க் கடந்தோய் நீ;
புணர்மருதம் பிளந்தோய் நீ;
நீரகல மளந்தோய் நீ,
நிழறிகழும் படையோய் நீ,

(இருசீரோரடி.)

ஊழி நீ,
உலகு நீ;
உருவும் நீ;
அருவும் நீ;
ஆழி நீ;
அருளும் நீ;
அறமும் நீ;
மறமும் நீ;

எனவாங்கு,

[சுரிதகம்.]

அடுதிற லொருவநிற் பரவுது மெங்கோன்
தொடுகழற் கொடும்பூட் பகட்டெழின் மார்பிற்
கயலொடு கலந்த சிலையுடைக் கொடுவரிப்
புயலுறழ் தடக்கைப் போர்வே லச்சுதன்
தொன்று முதிர்கட லுலகம்
என்று திகிரி யுருட்டுவோ னெனவே.

விளக்கத்தனார்பாட்டு.

இஃது ஆறடித்தரவும், நான்கடித்தாழிசை மூன்றும், நாற்சீரடியிரண்டு, நாற்சீரோரடிநான்கு, முச்சீரோரடிநான்கு, இருசீரோரடி எட்டு என்னும் அம்போதரங்கமும், தனிச்சொலுமாய் வந்து அகவற்சுரிதகத்தான் முடிந்த அம்போதரங்கவொத்தாழிசைக்கலிப்பா.

இங்கே முச்சீரோரடிகளிலும் இருசீரோரடிகளிலும் இறுதியினின்ற நீ என்பது, ஒரு சொல்லும் அசையுமாய் நின்று சீருமாயிற்று. அசையடி, சொற்சீரடி என்பன இது பற்றி வந்த பெயர். நாற்சீரோரடி யிரண்டினைப் பேரெண் எனவும், நாற்சீரோரடி நான்கினை அளவெண் எனவும், முச்சீரோரடிகளை இடையெண் எனவும், இருசீரோரடிகளைச் சிற்றெண் என்றுங் கூறுவர். எண் என்பது இதுபற்றி வந்த பெயர். (௧௬-௧௭.)

---

வண்ணகவொத்தாழிசை, கலிவெண்பா.

௧. அசையடி முன்ன ரராகம்வந் தெல்லா வுறுப்புமுண்டேல்
வசையறு வண்ணக வொத்தா ழிசைகலி வான்றளைதட்
டிசைதனதாகியும்வெண்பாவியைந்துமின்பான்மொழியாய்
விசையறு சிந்தடி யாலிறு மாய்விடின் வெண்கலியே.

உதாரணமுதற்குறிப்பு.

௨. நின்று விளங்கு மணிப்பசும் பொன்னன்றை யாறுறுப்பும்
ஒன்றிய வண்ணக வொத்தா ழிசைக்கலி யோசைகுன்றுத்
துன்றிய வாளார் மழையுஞ் சுடர்த்தொடீஇ யோர்மலரும்
என்றிவை வெண்கலிப் பாவிற் கிலக்கிய மேந்திழையே.

வண்ணகவொத்தாழிசைக்கலிப்பா.

அசையடி முன்னர் அராகம் வந்து எல்லாவுறுப்புமுண்டேல் வசையறு வண்ணகவொத்தாழிசை:—

அம்போதரங்கவுறுப்பின் முன்னே அராகம் என்னும் உறுப்பு வரப்பெற்று மற்றைய தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்னும் உறுப்புக்களும் உளதாகப் பெறுமாயின் அது வண்ணகவொத்தாழிசைக் கலிப்பா எனப்படும்.

அராகமாவது குறிலிணையாலாய நிரையசைச்சீர்களையே பெரும்பாலும் பெற்று மாத்திரை நீளுதலுமிடையிலே துணிதலுமின்றிக் கடுகிச்செல்லும் அடிகளான் வருவது. அராகம் - கடுகிச்செல்வது. வண்ணகம், முடுகியல், அடுக்கியல் என்பன இதன்பரியாயம்.

வண்ணகம் வர்ணித்துப் புகழ்வது. முடுகியல் - முடுகிச்செல்லுமியல்புடையது. அடுக்கியல் சீர்கள் செறிந்து நிற்குமாறு அடுக்கப்படுமியல்புடையது. இதற்கு அடி அளவடி முதலியன. அடிகளுக்குச் சுருக்கம் நான்கென்றும், பெருக்கம் எட்டென்றும் கூறுவர்.

உதாரணம்.

[தரவு.]

விளங்குமணிப் பசும்பொன்னின் விரித்தமைத்துக் கதிர் [கான்று
துளங்குமணிக் கனைகழற்காற் றுறுமலர் நறுப்பைந்தார்ப்
பருஉத்தடக்கை மதயானைப் பகட்டெழி லெரிகுஞ்சிக்
குருஉக்கொண்ட மணிப்பூணோய் குறையிரந்து முன்னாட்
மாயாத வனப்பினையாய் மகிழ்வார்க்கு மல்லார்க்குங் [கண்
தாயாகித் தலையளிக்குந் தண்டுறை யூரகேள்;

[தாழிசை.]

காட்சியாற் கலப்பெய்தி யெத்திறத்துங் கதிர்ப்பாகி
மாட்சியாற் றிரியாத மரபொத்தாய் கரவினாற்
பிணிநலம் பெரிதெய்திப் பெருந்தடந்தோள வனப்பழிய
அணிநலந் தனியேவர் தருளுவது மருளாமோ;

அன்பினா லமிழ்தனைஇ யறிவினாற் பிறிதின்றிப்
பொன்புனை பூணகம் பசப்பெய்தப் பொழிலிடத்துப
பெருவரைத்தோ ளருளுதற் கிருளிடைத்தமியையாய்க்
கருவரைத்தோள் கதிர்ப்பிக்குங் காதலுங் காதலோ;

பாங்கனையே வாயிலாப் பலகாலும் வந்தொழுகுந்
தேங்காத கரவினையுந் தெரியாத விருளிடைக்கட்

குடவரைவேய்த்தோளிணைகள் குளிர்ப்பிப்பான் றமியை
தடவரைத்தா ரருளுகின் றகுதியுந் தகுதியோ; [யாய்த்

[அராகம்.]

தாதுறு முறிசெறி தடமல ரிடையிடை
 தழலென விரிவனபொழில்
போதுறு நறவிரை புதுமலர் தெரிதரு
 கருநெய்தல் விரிவனகழி
தீதுறு திறமறு கெனநனி முனிவன
 துணையொடு பிணைவனதுறை
மூதுறு மொலிகலி நுரைதரு திரையொடு
 கழிதொடர் புடையதுகடல்;

[அம்போதரங்கம்.]

(நாற்சீரடி.)

கொடுந்திற லுடையன சுறவேறு கொட்பதனால்
இடுங்கழி யிராவருதல் வேண்டாவென் றிசைத்திலமோ.

கருந்றத் தடுதொழிற் கராம்பெரி துடைமையால்
இருணிறத் தொருகான விராவார லென்றிலமோ;

(நாற்சீரோரடி.)

நாணொடு கழிந்தன்றாற் பெண்ணரசி நலத்தகையே;
துஞ்சலுமொழிந்தன்றாற்றொடித்தோளி தடங்கண்ணே.
அறற்றொடு கழிந்தன்று லாரிருளு மாயிழைக்கே;
நயப்பொடு கழிந்தன்று னனவதுவு நன்னுதற்கே;

(முச்சீரோரடி.)

அத்திறத்தா லசைந்தன தோள்;
அலர்தற்கு மெலிந்தன கண்;
பொய்த்துரையாற் புலர்ந்தது முகம்;
பொன்னிறத்தாற் பொலிந்தன முலை;
அழலினு லசைந்தது நகை;
அணியினு லொசிந்தன விடை;
குழலினு லவிர்ந்தது முடி;
குறையினுற் கோடிற்று நிறை;

(இருசீரோரடி.)

உட்கொண்ட தகைத்தொருபால்;
உலகறிந்த வலத்தொருபால்;
கட்கொண்ட றுளித்தொருபால்;
கழிவெய்தும் படித்தொருபால்;
பரிவுறூஉம் வகைத்தொருபால்;
படர்வுறூஉம் பசப்பொருபால்;
இரவுறூஉந் துயரொருபால்;
இளிவந்த வெழிற்றொருபால்;
மெலிவுறூந் தகைத்தொருபால்;
விளர்ப்புவந் தடைக்தொருபால்;
பொலிவுசென் றகன்றொருபால்;
பொறைவந்து கூர்க்தொருபால்;
காதலிற் கதிர்ப்பொருபால்;
கட்படாத் துயரொருபால்;
எதில்சென் றணைக்தொருபால்;
இயனணிற் செறிவொருபால்;

எனவாங்கு,

[சுரிதகம்.]

இன்ன திவ்வழக்க மித்திற மிவணலம்
என்னவு மூன்றாட் டொன்று யாகிக்
கலந்த வண்மையை யாயினு நலந்தகக்
கிளையொடு கெழீஇத் தலையவிழ் கோதையைக்
கற்பொடு காணிய யாமே
பொற்பொடு பொலிகநும் புணர்ச்சி தானே.

இஃது ஆறடித்தரவு, மூன்றுதாழிசை, அராகம், அம்போதரங்கம் என்பன முறையே வந்து தனிச்சொற் பெற்று அகவற்சுரிதகத்தான் முடிந்த வண்ணகவொத்தாழிசைக்கலிப்பா.

---

வெண்கலிப்பா.

கலி தளைதட்டு இசைதனதாகியும் வெண்பாவியைந்தும் விசையறுசிந்தடியால் இறுமாய்விடின் வெண்கலியே.—

**கலிப்பா வேறுதளைவிரவி இசைமாத்திரம் தனக்குரிய துள்ளலிசையாயும், முற்றும் வெண்டளையியைந்தும் சிந்தடியான் முடியுமாயின் அது வெண்கலிப்பாவாகும்.**

இது வெண்பாவே போன்று முடிதலின் வெண்கலி எனப்பட்டது. கலி என்பது எழுவாய். கலி என்றது தரவுமாத்திரமாய் வரும் கலிப்பாவினை. தட்டுதல்-ஒன்றுதல். வேறுதளை விரவிவரும் வெண்கலிப்பாவிலே கலித்தளையே பெரும்பாலும் வரும். வெண்டளை விரவுங்கால் காய்முன் நேர்முதல் வெண்சீரே இடையிடைவரும். ஆசிரியத்தளை விரவுங்கால் விளமுன் நிரைமுதற்காய்ச்சீர் சிறுபான்மை வரும். இங்ஙனமன்றி வேறுபடவருமாயின் இசைதனதாகாது.

முற்றும் வெண்டளை இயைந்து வரும் வெண்கலிப்பாவிலே நிரைமுதல் வெண்சீர் பெரும்பாலும் வரும். நேரீற்றியற்சீர்முன் பணிமாவும் வரும். வேறுபடவருமாயின் துள்ளலிசை பிறவாது. முற்றும் வெண்டளையியைந்துவரும் வெண்கலியைக் கலிவெண்பா என்றும் வழங்குவர். முற்றும் வெண்டளையான் வருவதையும் கலியுளடக்கியது துள்ளலிசைநிகழ வரும் பேதம்பற்றி என்க. ஆதலின் இது வெண்பாவினத்துள் அடங்காமை அறிக.

சிந்தடியினிறுதிச்சீர் நாள் முதலிய நான்கனுள் ஒன்றாய் நிற்கும் என்பது "விளைசயறு" என்னும் விசேடணத்தாற் பெறப்படும்.

உதாரணம்.

வாளார்ந்தமழைத்தடங்கண்வனமுலைமேல்வம்பனுங்கக்
கோளார்ந்த பூணுகங் குழைபுரளக் கோட்டெருத்தின்
மாலைதாழ் கூந்தலார் வரன்முறையான் வந்தேத்தச்
சோலைதாழ்பிண்டிக்கீழ்ச்சூழ்ந்தவர்தஞ்சொன்முறையான்
மனையறமுந் துறவறமு மண்ணவர்க்கும் விண்ணவர்க்கும்
வினையறுக்கும் வகைதெரிந்து வீடொடுகட் டிவையுரைத்த
தொன்மைசான்மிகுகுணத்துத்துறவரசைத்தொழுதேத்த
னன்மைசால் வீடெய்து மாறு.

இது கலித்தளையோடு சிறுபான்மை வெண்சீர்வெண்டளையுந் தழுவிவந்த வெண்கலிப்பா. வெண்சீர்ப்பின் வெண்டளையாதற்கு வந்த சீரும் வெண்சீராய் நிற்றல்காண்க.

ஏர்மலர் நறுங்கோதை யெருத்தலைப்ப விறைஞ்சித்தன்
வார்மலர்த் தடங்கண்ணார் வலைப்பட்டு வருந்தியவென்

தார்வரை யகன்மார்பன் றனிமையை யறியுங்கொல்
சீர்நிறை கொடியிடை சிறந்து.

இது கலித்தளையோடு சிறுபான்மை ஆசிரியத்தளை தழுவி வந்த வெண்கலிப்பா. நான்கடியிலும் முதலிருசீர்களும் நிரையொன்றாசிரியத்தளை நிகழ்கிற்றல் காண்க.

சுடர்த்தொடீஇ கேளாய் தெருவினு மாடு
மணற்சிற்றில் காலிற் சிதையா வடைச்சிய
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யுஞ் சிறுபட்டி மேலோர்நாள்
அன்னையும் யானு மிருந்தேமா வில்லிரே
உண்ணுநீர் வேட்டே னெனவந்தாற் கன்னை
அடர்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழாய்
உண்ணுநீ ரூட்டிவா வென்றா ளெனயானுந்
தன்னை யறியாது சென்றேன்மற் றென்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்
டன்னா யிவனொருவன் செய்ததுகா ணென்றேனா
அன்னை யலறிப் படர்தரத் தன்னையான்
உண்ணுநீர் விக்கினா னென்றேனா வன்னையுந்
தன்னைப் புறம்பழித்து நீவமற் றென்னைக் [ட்டனு
கடைக்கண்ணாற் கொல்வான்போ னோக்கி நகைக்கூ
செய்தானக் கள்வன் மகன். கலித்தொகை.

இது முற்றும் வெண்டளையே தழுவிவந்த வெண்கலிப்பா. இதனைக் கலிவெண்பா என்பது பெருவழக்கு. கலிவெண்பா வெண்கலிப்பா என்பன ஒருபொருட்கிளவிகள் என்பது இந்நூலார் கருத்துப் போலும். முற்றும் வெண்டளையாக வரினும் துள்ளலிசை நிகழுமாறு இங்கே பெரும்பாலும் நிரைமுதல் வெண்சீர் வந்து நிற்றலையும், சிறுபான்மை நேரீற்றியற்சீர் முன் புளிமா வந்து நிற்றலையும் நோக்குக. வஞ்சித்தளை விரவிய வெண்கலிப்பா வந்துழிக் காண்க.

கலிவெண்பாவுக்கும், பஃறொடைவெண்பாவுக்கும் பேதம் யாதோ என ஆசங்கிப்பார்பலர். கூறுதும். வெண்டளையான் வருவதேனும் துள்ளலிசை நிகழ்கிற்கும் சீர்களைப் பெரிதுந் தழுவி எதுகை மோனை முதலிய தொடைநியமமின்றி முடிவது கலிவெண்பா என்றும் செப்பலிசை வழுவாது நேரிசைவெண்பாப்போன்

றுவது இன்னிசைவெண்பாப் போன்றுவது பலவடிகளான் வருவது பஃறொடைவெண்பா என்றும் இந்நூலாற் பெறுதும். ஆராய்க.

பேராசிரியர் மடல் உலா முதலிய பொருண்மேற் பலவடிகளான் வருபவைகளையும் இக்காலத்தார் கலிவெண்பா என்னும் பெயர் கொடுத்து வழங்குவரென்பர். நேரிசைவெண்பாப்போன்று பலவடிகளான் வருவதைக் கலிவெண்பா என்பது பண்டையார் வழக்கன்றுபோலும். ஆராய்ந்தறிக. (கஅ-கக.)

---

கோச்சகக்கலிப்பா.

க. தரவே தரவிணை தாழிசை தாமுஞ் சிலபலவாய்
மரபே யியன்றும் மயங்கியும் வந்தன வாங்கமைத்தோர்
அரவே ரகலல்கு லம்பேர் நெடுங்கண்வம் பேறுகோங்கைக்
குரவே கமழ்குழ லாய்கொண்ட வான்பெயர் கோச்சகமே.

உதாரணமுதற்குறிப்பு.

உ. குடநிலைத் தண்சேல்வப்போர்க்கதக்கண்ணன்றரவகுன்று
வடிவுடை யாகுந் தரவிணை மன்னும் பருஉத்தடக்கை
இடமிக வாஞ்சிஃ றுழிசை தண்மதி யோர்பலவாய்
மடலவிழ் கோதை மணிகிள ராகு மயங்கிசையே.

தரவே தரவிணை தாழிசைதாமும் சிலபலவாய் மரபே யியன்றும் மயங்கியும் வந்தன கோண்டபெயர் கோச்சகமே:-

தரவுமாத்திரமாகியும், தரவிரண்டாகியும், தாழிசைகளும் சிலவும் பலவுமாய்த் தரவுமுதலியவற்றோடு முறையே பொருந்தியும், மயங்கியும் வந்த கலிப்பாவெல்லாம் பெற்ற பெயர் கொச்சகம் என்க.

எனவே தரவுகொச்சகம், தரவிணைக்கொச்சகம், சிஃறாழிசைக்கொச்சகம், பஃறாழிசைக்கொச்சகம், மயங்கிசைக்கொச்சகம் என ஐவகை கூறினாராயிற்று. இது மகளிருடைபோலச் சிறிதும் பெரிதும் சமமுமாகிய உறுப்புக்கள் அடுக்கப்பட்டு நிற்றலாற் கொச்சகம் எனப்பட்டது. கொச்சகம் - வஸ்திரத்திற் கட்டும் தலைப்பு. இதனை இக்காலத்தார் கொய்சகம் என்பர்.

தரவு முதலியன மிகுதலும் அராகமும் அம்போதரங்கமும் குறைதலும் பிறவுமாய் இயன்மயங்கலும், வந்தமுறை வழுவுதலும், வேறுபா விரவி இசைவேறுதலும் பிறவு மடங்க மயங்கியும் என்றார்.

## தரவுகொச்சகம்.

உதாரணம்.

செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி
முல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை முருக்கிப்போய்
எல்லைநீர் வியன்கொண்மூ விடைநுழையு மதியம்போன்
மல்லலோங் கெழில்யானை மருமம்புக் கொளித்ததே.

இது தரவுமாத்திரமாய் முடிந்த கொச்சகக்கலிப்பா.

[தரவு.]

குடநிலைத் தண்புறவிற் கோவல ரெடுத்தார்ப்பத்
தடநிலைப் பெருந்தொழுவிற் றகையேறு மரம்பாய்ந்து
வீங்குமணிக் கயிறொரீஇத் தாங்குவனத் தோன்றப்போய்க்
கலையினொடு முயலிரியக் கடிமுல்லை முறுவலிப்ப;
எனவாங்கு,

[சுரிதகம்.]

ஆனொடு புல்லிப் பெரும்புதர் முனையுங்
கானுடைத் தவர்தேர் சென்ற வாறே.

இது தரவு தனிச்சொற்பெற்றுச் சுரிதகத்தான் முடிந்த கொச்சகக்கலிப்பா. இவையிரண்டும் தரவுகொச்சகக்கலிப்பா எனப்படும்.

---

## தரவிணைக்கொச்சகக்கலிப்பா.

உதாரணம்.

[தரவு.]

வடிவுடை நெடுமுடி வானவர்க்கும் வெலற்கரிய
கடிபடு நறும்பைந்தார்க் காவலர்க்குங் காவலனாங்
கொடிபடு மணிமாடக் கூடலார் கோமானே;

எனவாங்கு,
துணைவளைத்தோ ளிவண்மெலியத் தொன்னலந் துறப்புண்டாங்
கிணைமலர்த்தா ரருளுமேலிது விதற்கோர் மாறென்று
துணைமலர்த் தடங்கண்ணார் துணையாகக் கருதாரோ;

அதனால்,

[சுரிதகம்.]

செய்வாய்ப் பேதை யிவடிறத்
தெவ்வா றுங்கொலிஃ தெண்ணிய வாறே.

இது தரவிரண்டாய்த் தனிச்சொற்பெற்றுச் சுரிதகத்தான் முடிந்த தரவிணைக்கொச்சகக்கலிப்பா.

---

சிஃறாழிசைக்கொச்சகக்கலிப்பா.

சில தாழிசைகண்மாத்திரம் நேரிசையொத்தாழிசைக் கலிப்பாவினின்றும் வேறுபாடுற வெவ்வேறாய் வந்து, தனித்தனி தனிச்சொற்பெற்று முடிவது சிஃறாழிசைக் கொச்சகக்கலிப்பாவாகும். சில்+தாழிசை=சிஃறாழிசை.

உதாரணம்.

[தரவு.]

பரூஉத்தடக்கை மதயானைப் பணையெருத்தின் மிசைத் தோன்றிக்
குரூஉக்கொண்ட வெண்குடைக்கீழ்க் குடைமன்னர் புடைசூழப்
படைப்பரிமான் றேரினொடும் பரந்துலவு மறுகினிடைக்
கொடித்தானை யிடைப்பொலிந்தான் கூடலார்கோமானே,

[தாழிசை.]

ஆங்கொருசார்,

உச்சியார்க் கிறைவனா யுலகமெலாங் காத்தளிக்கும்
பச்சையார் மணிப்பைம்பூட் புரந்தரனைப் பாவித்தார்
வச்சிரங் காணாத காரணத்தான் மயங்கினரே;
ஆங்கொருசார்,
அக்கால மணிநிரைகாத் தருவரையாற் பனிதவிர்த்து
வக்கிரனை வடிவழித்த மாயவனைப் பாவித்தார்
சக்கரங் காணாத காரணத்தாற் சமழ்த்தனரே;
ஆங்கொருசார்,
மால்கொண்ட பகைதணிப்பான் மாத்தடிந்து மயங்காச் செங்
கோல்கொண்ட சேவலங் கொடியவனைப் பாவித்தார்
வேல்கண்ட தின்மையான் விம்மிதராய் நின்றனரே;

அஃதான்று,

[சுரிதகம்.]

கொடித்தே ரண்ணல் கொற்கைக் கோமான்
நிறைபுக ழொருவன் செம்பூட் சேஎய்
என்றுநனி யறிந்தனர் பலரே தானும்
ஐவரு ளொருவனென் றறிய லாகா
மைவரை யானை மடங்கா வென்றி
மன்னவன் வாழியென் றேத்தத்
தென்னவன் வாழி திருவொடும் பொலிந்தே.

இது சிலதாழிசைகள் வெவ்வேறு வந்து தனித்தனி தனிச் சொற்பெற்று முடிந்த சிஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா.

---

பஃறாழிசைக்கொச்சகக்கலிப்பா.

நேரிசையொத்தாழிசைக் கலிப்பாவினின்றும் தாழிசைகள் பலவாகி வருவது பஃறாழிசைக் கொச்சகக்கலிப்பாவாகும். பல்+தாழிசை=பஃறாழிசை.

உதாரணம்.

[தரவு.]

தண்மதியேர் முகத்தாளைத் தனியிடத்து நனிகண்டாங்
குண்மதியு முடனிறையு முடன்றளர முன்னாட்கண்
கண்மதியோர்ப் பிவைகவர்ந்து காரிகையை நிறைகவர்ந்து
பெண்மதியின் மகிழ்ந்தநின் பேரருளும் பிறிதாமோ;

[தாழிசை.]

இளநல மிவள்வாட விரும்பொருட்குப் பிரிவாயேல்
தளநல முகைவெண்பற் றாழ்குழ றளர்வாளோ;

தகைநல மிவள்வாடத் தரும்பொருட்குப் பிரிவாயேல்
வகைநல மிவள்வாடி வருந்தியில் லிருப்பாளோ;

அணிநல மிவள்வாட வரும்பொருட்குப் பிரிவாயேல்
மணிநல மகிழ்மேனி மாசோடு மெலிவாளோ;

காம்பிரியோ மினியென்று நறுநுதலைப் பிரிவாயேல்
ஓம்பிரியோ மெனவுரைத்த வுயர்மொழியும் பழுதாமோ.

குன்றளித்த திரடோளாய் கொப்புனத்துக் கூடியநாள்
அன்றளித்த வருண்மொழியா லருளியதும் பழுதாமோ;
சில்பகலு மூடியக்காற் சிலம்பொலிச்சீ றடிபரவிப்
பல்பகலுந் தலையளித்த பணிமொழியும் பழுதாமோ;
அஃதான்று,
அரும்பெற லமிழ்தினுந் தரும்பொரு ளதனினும்
பெரும்பெற லரிதிவள் வெறுக்கையு மற்றே
விழுமிய தறிமதி வாழி
கெழுமிய காதலிற் றரும்பொருள் சிறிதே.

இது நான்கடித்தரவும், இரண்டடியாய் வந்த ஆறுதாழிசையும் தனிச்சொல்லும் நான்கடியாய் வந்த அகவற்சுரிதகமுமாய் முடிந்த பஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா.

---

## மயங்கிசைக்கொச்சகக்கலிப்பா.

தரவு தாழிசை முதலிய உறுப்புக்களுள்ளே சில மிகுந்தும், சில குறைந்தும், சில பிறழ்ந்தும் இயன்மயங்குதலும் வேறுபாவிரவி இசைமயங்குதலுமுடையதாய் வருவது மயங்கிசைக் கொச்சகக்கலிப்பாவாகும்.

உதாரணம்.

[தரவு.]

மணிகிளர் நெடுமுடி மாயவனுந் தம்முனும்போன்
றணிகிளர் நெடுங்கடலுங் கானலுந் தோன்றுமால்
நுரைநிவந் தவையன்ன கொய்ப்பறைய சிறையன்னம்
இரையுநர் திறைகூரு மேமஞ்சா றுறைவகேள்;
மலையென மழையென மஞ்செனத் திரைபொங்கிக்
கனலெனக் காற்றெனக் கடிதுவந் திசைப்பினும்
விழுமியோர் வெகுளிபோல் வேலாழி யிறக்கில்லா
தெழுமுந்நீர் பரந்தோங்கு மேமஞ்சா றுறைவகேள்;

[தாழிசை.]

[தோள்
கொடிபுரையு நுழைநுசுப்பிற் குழைக்கமர்ந்த திருமுகத்
தொடிநெகிழ்ந்த தோள்கண்டுந் துறவலனே யென்றியால்;

கண்கவரு மணிப்பைம்பூட் கயில்கலைஇய சிறுபுறத்தோள்
தெண்பனிநீ ருகக்கண்டுந் தெரியலனே யென்றியால்;

நீர்பூத்த நிரையிதழ்க்க ணின்றொசிந்த புருவத்தோள்
பீர்பூத்த நுதல்கண்டும் பிரியலனே யென்றியால்;

கனைவரல்யாற் றிடுகரைபோற் கைந்நில்லா துண்ணெகிழ்ந்து
நினையுமென் னிலைகண்டு நீங்கலனே யென்றியால்;

வீழ்சுடரி னெய்யேபோல் விழுமநோய் பொறுக்கல்லா
தாழுமென் னிலைகண்டு மகல்கிலனே யென்றியால்;

கலங்கவிழ்த்த நாய்கன்போற் களைதுணை பிறிதின்றிப்
புலம்புமென் னிலைகண்டும் போகலனே யென்றியால்;

அதனால்,

[அராகம்.]

அடும்பம விறும்பி னெடும்பனை யிசைதொறுங்
கொடும்புற மடலிடை யொடுங்கின குருகு;

செறிதரு செருவிடை யெறிதொழி லிளையவர்
நெறிதரு புரவியின் மறிதருந் திமில்;

அரசுடை நிரைபடை விரைசெறி முரைசென
நுரைதரு திரையொடு கரைபொருங் கடல்;

அலங்கொளி விரிசுட ரிலங்கெழின் மலர்தொறுங்
கலந்தெறி காலொடு புலம்பின பொழில்:

[தாழிசை.]

விடாஅது கழலுமென் வெள்வளையுந் தவிர்ப்பாய்மன
கெடாஅது பெருகுமென் கேண்மையு நிறுப்பாயோ;

ஒல்லாது கழலுமென் னொளிவளையுந் தவிர்ப்பாய்மன்
நில்லாது பெருகுமென் னெஞ்சமு நிறுப்பாயோ;

தாங்காது கழலுமென் றகைவளையுந் தவிர்ப்பாய்மன்
நீங்காது பெருகுமென் னெஞ்சமு நிறுப்பாயோ;

மறவாத வன்பினேன் மனனிற்கு மாறுரையாய்
துறவாத தமருடையேன் றுயர்தீரு மாறுரையாய்;

காதலர் மார்பன்றிக் காமக்கு மருந்துரையாய்
ஏதிலார் தலைசாய யானுய்யு மாறுரையாய்;

இணைபிரிந்தார் மார்பன்றி யின்பக்கு மருந்துரையாய்
துணைபிரிந்த தமருடையேன் றுயர்தீரு மாறுரையாய்;

எனவாங்கு,

[அம்போதரங்கம்.]

பகைபோன்றது துறை;
பரிவாயின குறி;
நகையிழந்தது முகம்;
நனிகாஅணிற் றுளம்;
தகையிழந்தது தோள்;
தலைசிறந்தது துயர்;
புகைபரந்தது மெய்;
பொறையாகின்றெ றுயிர்;

[சுரிதகம்.]

அதனால்,

இனையது கிலையா லினையது பொழுதால்
கினையல் வாழி தோழி துனைவரற்
பனியொடு கழிக வுண்கண்
என்னொடு கழிகவித் துன்னிய நோயே.

இது தரவு மிக்கும், தாழிசை தனிச்சொல் என்பன மிக்கும், பிறழ்ந்தும், அராகம் அம்போதரங்கம் என்பன குறைந்தும் மயங்கி வந்த கொச்சகக்கலிப்பா.

இரண்டாய் வருதல் தரவிற்கும், ஆறாய் வருதல் தாழிசைக்கும், ஒன்றுக்குமேலே வருதல் தனிச்சொற்கும் மிகுதி என்க. முன்வந்த தன்றி அராகவுறுப்பு வந்த பின்னும் வருதல் தாழிசைக்கும், சுரிதகத்தின் முன்வந்த முறையளவினில்லாது அராகத்தின் முன்னும் அம்போதரங்கத்தின்முன்னும் வருதல் தனிச்சொற்கும் பிறழ்வென்க. அளவடியிரண்டான் வருதல் அராகத்திற்கும், எட்டாய்வருதல் அம்போதரங்கத்திற்கும் குறைவென்க. இதனை இயன்மயங்கி வந்த கொச்சகம் என்பர். வேறுபா விரவி இசைமயங்கி வரும் கொச்சகம் வந்துழிக்காண்க. கலித்தொகையிலே வரும்

"காமர்கடும்புனல்" என்னும் கலிப்பாவும் வேறுபா விரவி இசை மயங்கி வந்த கொச்சகம். (உ௦-உக.)

---

## கலிப்பாவினம்.

### கலித்தாழிசை, கலித்துறை, கலிவிருத்தம்.

க. அடிவரை யின்றி யளவோத்து மந்தடி நீண்டிசைப்பிற்
கடிதலில் லாக்கலித் தாழிசை யாகுங் கலித்துறையே
நெடிலடி நான்காய் நிகழ்வது நேரடி யீரிண்டாய்
விடினது வாகும் விருத்தந் திருத்தகு மெல்லியலே.

*உதாரணமுதற்குறிப்பு.*

உ. கோய்தினை யாய்தினை மென்றினை வாள்வரி பூண்டபறை
எய்திய தாழிசை யானும்வென் றுனுங் கலித்துறையே
மைதிக ழோதி வரிநெடுங் கண்ண வனமுலையாய்
மெய்தரு வெய்தலை தேம்பழுத் தென்ப விருத்தங்களே.

*கலித்தாழிசை.*

அடிவரையின்றி அளவோத்தும் அந்தடி நீண்டிசைப் பின் கடிதலில்லாக் கலித்தாழிசையாகும்:—

*இத்துணை என்னும் அடிவரையறையின்றி அளவி னால் ஒத்தும் ஒவ்வாதும் வந்து ஈற்றடிமாத்திரம் நீண்டி சைக்குமாயின், அது கலித்தாழிசையாகும்.*

உம்மையான் ஒவ்வாமையும் கொள்ளப்பட்டது. வரையின்றி எனவே இரண்டுமுதலிய அடிகளால் வரும் என்பது பெறுதும். அளவொத்தும் என்றது மூன்று முதலிய அடிகளால் வருவதற்கு. ஒருபொருண்மேற் கோவையாய் மூன்றடுக்கி வருவதைச் சிறப்பு டையதென்று கொள்ளுவர்.

*உதாரணம்.*

*கொய்தினை காத்துங் குளவி யடுக்கத்தெம்*
*பொய்தற் சிறுகுடி வாரனீ யைய நலம்வேண்டின்.*

*ஆய்தினை காத்து மருவி யடுக்கத்தெம்*
*மாசில் சிறுகுடி வாரனீ யைய நலம்வேண்டின்.*

*மென்றினை காத்து மிகுபூங் கமழ்சோலைக்*
*குன்றச் சிறுகுடி வாரனீ யைய நலம்வேண்டின்.*

இவை ஒருபொருண்மேற் கோவையாய் மூன்றடுக்கி வந்த கலித்தாழிசை. முதலடியெல்லாம் நாற்சீரடி. இறுதியடியெல்லாம் ஐஞ்சீரடி.

வான்வரி வேங்கை வழங்குஞ் சிறுநெறியெங்
கேள்வரும் போழ்தி லெழால்வாழி வெண்டிங்காள்
கேள்வரும் போழ்தி லெழாதாய்க் குறுலியரோ
நீள்வரி நாகத் தெயிறே வாழி வெண்டிங்காள்.

இது கடையடிநீண்டு மற்றைமூன்றடியும் அளவினாலொத்தது தனியே வந்த கலித்தாழிசை. கடையடி ஐஞ்சீரடி; மற்றைய நாற்சீரடி.

பூண்ட பறையறையப் பூத மருள
நீண்ட சடையா னாடுமே
நீண்ட சடையா னாடு மென்ப
மாண்ட சாயன் மலைமகள் காணவே காணவே.

இது கடையடி நீண்டு மற்றை மூன்றடியும் தம்முளொவ்வாது தனியே வந்த கலித்தாழிசை. கடையடி ஐஞ்சீரடி. இரண்டாமடி முச்சீரடி. மற்றையிரண்டும் நாற்சீரடி.

---

## கலித்துறை.

நெடிலடி நான்காய் நிகழ்வது கலித்துறையே:—

நெடிலடிநான்காய் நிகழுஞ் செய்யுள் கலித்துறை எனப்படும்.

நெடிலடி-ஐஞ்சீரடி. கலித்துறையில் வரும் பேதங்கள் மிகப் பல; அவையெலலாம் அமையுமாறு சுருக்கிப் பொதுவே நெடிலடி நான்காய் நிகழ்வதென்றார்.

### உதாரணம்.

யானுந் தோழியு மாயமு மாடுந் துறைநண்ணித்
தானுந் தேரும் பாகனும் வந்தென் னலனுண்டான்
தேனும் பாலும் போல்வன சொல்லிப் பிரிவானேற்
கானும் புள்ளுங் கைதையு மெல்லாங் கரியன்றே.

இது மூன்றாஞ்சீர் கூவிளமும் ஐந்தாஞ்சீர் புளிமாங்காயுமாக மற்றைய மூன்றுசீரும் தேமாவாய் நின்ற நெடிலடி நான்காய் வந்த கலித்துறை.

வென்றான் வினையின் றொகையாக விரிந்து தன்கண்
ஒன்றாய்ப் பரந்த வுணர்வின்னொளி யாது முற்றுஞ்
சென்றான் றிகழுஞ் சுடர்சூழொளி மூர்த்தி யாகி
நின்றா னடிக்கீழ்ப் பணிந்தார்வினை நீங்கி நின்றார். சூளாமணி.

இது மூன்றாஞ்சீர் மூவசைச்சீராக மற்றை நான்கும் ஈரசைச் சீராய் மற்றொருசந்தம் பெற்று நின்ற நெடிலடி நான்காய் நிகழ்ந்த கலித்துறை.

கருவி மாமழை கலைமக ளுருவென விளங்கி
இருவி சும்பிடைப் படர்ந்துசென் றினமணி கொழிக்கும்
பரவை வெண்டிரை மேய்ந்துயர் பனிவரை யுயிர்த்த
உருவ வோடரித் தடங்கணு ளுருக்கொடு மீண்ட.
நைடதம்.

இது முதலாஞ்சீரும் ஐந்தாஞ்சீரும் மாச்சீராக மற்றைமூன்றும் விளச்சீராகி மற்றொரு சந்தம் பெற்று நின்ற நெடிலடிநான்காய் நிகழ்ந்த கலித்துறை.

இவ்வாறு வரும் கலித்துறைகளையெல்லாம் கலிநிலைத்துறை என்றும் கூறுவர். இவைபோலாகாது ஒவ்வோரடியும் தனித்தனி பொருண்முடிபுடையதாய் எவ்வடியை எங்கே வைத்துரைப்பினும் பொருளும் இசையும் வழுவாது முடியும் கலித்துறையைக் கலி மண்டலத்துறை என்று வழங்குவர்.

உதாரணம்.

மிக்க மாதவம் வீட்டுல கடைதலை விளக்குந்
தக்க தானங்க டணிப்பரும் போகத்தைப் பிணிக்கும்
தொக்க சிலங்க ணடுக்கமி றுறக்கத்தைப் பயக்கும்
சிக்கென் பூசனை திகழொளிப் பிழம்பினைத் திருத்தும்.

இது யாதாயினும் ஓரடியை மற்றோரடி நின்ற இடத்திலே வைத்து வாசிப்பினும் இசையும் பொருளும் வழுவாமல் இணங்கி நிற்றலால் கலிமண்டலத்துறையாயிற்று.

இக்கலித்துறைகள் சீர்நிலைவகையாலும் தளைநிலைவகையாலும் இன்னும் பலபேதமாய் விரியும்; வரையறைசெய்தல் அரிது. பல பேதமாய் விரியுங் கலித்துறைகளுள் ஒன்று கட்டளைக்கலித்துறை என்று வழங்கப்படுகின்றது. அதனியல்பும் கூறுதும்.

## கட்டளைக்கலித்துறை.

ஐந்தாஞ்சீர் மாத்திரம் கூவிளங்காயாயாவது கருவிளங்காயாயாவது நிற்றலிலும், வெண்டளையியைந்துநிற்றலிலும் தவறாது, நெடிலடி நான்காய் வந்து ஏகாரத்தான் முடியுங் கலித்துறை கட்டளைக்கலித்துறை எனப்படும்.

இது நேரசை முதலாகத் தொடங்கும் அடிக்கு எழுத்துப் பதினாறென்றும், நிரையசைமுதலாகத் தொடங்குமடிக்கு எழுத்துப் பதினேழென்றும் கட்டளைபெறுதலாற் கட்டளைக்கலித்துறை எனப்பட்டது. கட்டளை - அளவு. கோவைக்கலித்துறை, இலகக்கலித்துறை, காரிகை என்பன இதன் பரியாயம். விளங்காய்ச்சீர் இடையில் வருதலில்லை. வெண்டளை வழுவாதேனும் இறுதியசை நெட்டெழுத்தாய் நிற்கும் மாங்காய்ச்சீர்களும், இறுதியசை குறி னெடிலாய் நிற்கும் விளச்சீர்களும் இடையில் வருதல் நன்றன்று. வருமாயின் இசைவழுவி இழுக்கடையும்.

உதாரணம்.

அற்றாரைத் தாங்கிய வைவே லசதி யணிவரைமேன்
முற்றா முகிழ்முலை யெவ்வாறு சென்றனண் முத்தமிழ்நூல்
கற்றார் பிரிவுங்கல் லாதா ரிணக்கமுங் கைப்பொருளோன்
றற்றா ரிளமையும் போலக் கொதிக்கு மருஞ்சுரமே.

அசதிக்கோவை.

இது நேரசை முதலாய்த் தொடங்கலாற் பதினாறெழுத்துக் கொண்ட அடியான் வந்த கட்டளைக்கலித்துறை. ஒற்றுக்கள் எண்ணப்படுவனவல்ல.

கரிக்கும்ப கம்பக் கடாசலத் தார்கடம் பாடவிமான்
பரிக்குஞ் சிலம்பு சிலம்புபொற் பாதம் பதுமமலர்
விரிக்குந் தவிசின் மெலநடந் தாலும் மெலிவதராத்
தரிக்குந் திருவுட லுங்கன்ற வேநடை தந்ததுவே.

மதுரைக்கோவை.

இது நிரையசைமுதலாய்த் தொடங்கலாற் பதினேழெழுத்துக்கொண்ட அடியான் வந்த கட்டளைக்கலித்துறை.

கட்டளைக்கலித்துறையிலே கூவிளங்காய்க்கீடாகத் தேமாங்கனி, தேமாந்தண்பூ என்னும் வாய்பாட்டுச்சீர்களும், கருவிளங்காய்க்கீடாகப் புளிமாங்கனி, புளிமாந்தண்பூ என்னும் வாய்பாட்டுச்சீர்களும் ஐந்தாஞ்சீராய் ஓரோவழி வருதலுமுண்டு. வரினும்

அவற்றின் நடுவே மா என்றும், மாந்தண் என்றும் கொள்ளப்ப டும் நேரசைகள் குற்றொற்றாய் நிற்றலையே யாவரும் வேண்டுவர். அவை நெட்டெழுத்தாய் நிற்பனவற்றையும் சிலர் கட்டளைக்கலித் துறை என்று கொள்ளுவர்.

முற்று முணர்ந்த முதுக்குறைவாளர்க்கு முன்னியொன்று
பற்றும் வகையெவ ரேதெரிப் பாரவர் பண்பின்வழி
மற்று மறிந்து நடப்பதல் லால்வடி வேற்கரவா
எற்று மணித்திரை மூங்நீர் முதிர்ந்த விருநிலத்தே.

தணிகைப்புராணம்.

இக்கட்டளைக்கலித்துறையிலே இரண்டாமடியின் ஐந்தாஞ் சீராகிய பண்பின்வழி என்பது தேமாங்கனி என்னும் வாய்பாட் டு[illegible]ய் நிற்கின்றது. னகரமெய்யை நீக்கி இதனைக் கூவிளங் காயாக்குதல் வேண்டும் என்றும் மெய் நில்லாதென்றும் கூறுவர்.

பூவும் பழுத்த செழுந்தீங் கனியும் பொழியமிழ்த
மேவுங் குடங்க ளிரண்டுட னேயிரு மீனுங்கொண்டு
சேவுந் தழுகர் திருவெங்கை வாணர் சிலம்பின்மலர்
தூவும் பொழிலி லெதிர்ப்பட்ட தாலொரு தூமணியே.

வெங்கைக்கோவை.

இக்கட்டளைக்கலித்துறையிலே இரண்டாமடியின் ஐந்தாஞ் சீராகிய மீனுங்கொண்டு என்பது தேமாந்தண்பூ என்னும் வாய்பா ட்டுச்சீராய் நிற்கின்றது. மூன்றாமடியின் ஐந்தாஞ்சீராகிய சிலம் பின்மலர் என்பது புளிமாங்கனி என்னும் வாய்பாட்டுச் சீராய் நிற்கின்றது. ஒற்று நீக்கி இவைகளையும் முறையே கூவிளங்காய் என்றும் கருவிளங்காய் என்றும் கொள்ளுவர்.

தொழுதும் வணங்கியு மாலயன் றேடிய சோதிசென்றாங்
கெழுதுந் தமிழ்ப்பழ வாவணங் காட்டி யெனக்குன்குடி
முழுது மடிமைவந் தாட்செய் யெனப்பெற்ற வன்முரறே
னுழுது மலருகற் றொரெம் பிரானம்பி யாரூரனே.

திருவந்தாதி.

இக்கலித்துறையிலே இறுதியடியின் ஐந்தாஞ்சீராகிய ஆரூ ரனே என்பது தேமாந்தண்பூ என்னும் வாய்பாட்டுச் சீராய் நிற் கின்றது. இது முன்னையனபோல ஒற்று நீக்கிக் கூவிளமாக்கப் படமாட்டாது. நடுவினுள்ள நேரசை நெட்டெழுத்தாய் நிற்கின் றது. இதனையுஞ் சிலர் கட்டளைக்கலித்துறை என்றே கொள்ளு வர். இது போல ஐந்தாஞ்சீர் நாலசைச்சீராய் நிற்கும் அடிகள்

திருத்தொண்டர் திருவந்தாதியில் இன்னுஞ் சிலவுள. திருவாய்மொழியிலுஞ் சிலவுள. தேவாரத்திலுஞ் சிலவுள. கட்டளைக்கலித்துறை யிலக்கணமுடையவாயினும் அவற்றை விருத்தமென்று வழங்குவார் பலர். கலித்துறையன்றிக் கட்டளைக்கலித்துறை என்று சிலவற்றைப் பிரித்து வழங்கும் வழக்கம் பிற்கால வழக்கென்பாருமுளர்.

பண்டும் பலபல வீங்கிருள் காண்டுமிப் பாயிருள்போற்
கண்டு மறிவதுங் கேட்பதும் யாமிலங் காளவண்ணன்
வண்டுண் டுழாய்ப்பெரு மான்மது சூதனன் றாமோதரன்
உண்டு முமிழ்ந்துங் கடாயமண் ணேரன்ன வொண்ணு
தலே.

திருவாய்மொழி.

இக்கலித்துறையிலே மூன்றாமடியின் ஐந்தாஞ்சீராகிய தாமோதரன் என்பது ஒற்றுத்தள்ளிக் கூவிளமாக்கற் கியையாது தேமாங்கனியாயே நிற்கின்றது. இதனையுங் கட்டளைக்கலித்துறை என்றே சிலர் கொள்ளுவர்.

கட்டளைக்கலித்துறைக்கு மூன்றாஞ் சீரிலும் ஐந்தாஞ் சீரிலும் மோனைத்தொடையமைதலும், இறுதியடியிலே வகையுளி வருதலும் சிறப்பாகும் என்பாரும் இறுதியடியில் வகையுளியமைந்து வருங் கட்டளைக்கலித்துறையைத் திலகக்கலித்துறை யென்று வேறுபடுத்துவாருமுளர். இவ்வாறு மோனையும் வகையுளியும் அமைந்து வருங் கட்டளைக்கலித்துறைகள் வாணன்கோவையிற் பலவுள.

வானக் கதிரவன் மண்ணக மாதை மணந்ததன்றே
கானக் குழலியை நானின்று பெற்றது நாவலர்க்குத்
தானக் களிறு தரும்புயல் வாணன் றமிழ்த்தஞ்சைசூழ்
கானக் கடிவரை வாய்விரை நாண்மலர்க் காவகத்தே.

வாணன்கோவை.

இக்கட்டளைக்கலித்துறையிலே இறுதியடியிலே வரைவாய் என்பது பிரிந்து முன்னும் பின்னுஞ் சேர்தலால் வகையுளியமைதலையும், மற்றையடிகளிலே மூன்றாஞ் சீரிலும் ஐந்தாஞ் சீரிலும் மோனைத்தொடையமைந்திருத்தலையும் பார்த்தறிக.

---

## கலிவிருத்தம்.

நேரடி ஈரிரண்டாய்விடின் அது விருத்தமாகும்—

நாற்சீரடி நான்காய் முடியுமாயின் அது கலிவிருத்தமாகும்.

உதாரணம்.

வேய்த்தலை நீடிய வெள்ளிவி லங்கலின்
ஆய்தலி னெண்சுட ராழியி னுன்றமர்
வாய்தலி னின்றனர் வருமெதன பன்னன்முன்
நீதலை சென்றுரை நீள்கடை காப்போய். சூளாமணி.

இது நான்காமடியின் இறுதிச்சீர் தேமாவாக மற்றையசீரெல்லாம் கூவிளமாய் இயற்சீர் வெண்டளை தழுவிவந்த கலிவிருத்தம். மன்னன்முன் என்பதை ஒற்றுநீக்கிக் கூவிளமாக்குக.

தேம்பழுத் தினியநீர் மூன்றுந் தீம்பலா
மேம்பழுத் தளிந்தன சுளையும் வேரியும்
மாம்பழக் கனிகளு மதுத்தண் டீட்டமுந்
தாம்பழுத் துளசில தவள மாடமே. சூளாமணி

இது மூன்றுஞ்சீரெல்லாம் மாவாக மற்றைய மூன்றுசீர்களும் விளமாய் இருவகையாசிரியத்தளையும் தழுவி மற்றொருசந்தம் பெற்றுவந்த கலிவிருத்தம்.

ஆயமா நாகர்தா ழாழியா னேயலாற்
காயமா னுயிரு னேவனே காவலா
நீயமா வோர்தியா னேருமா ரீசனே
மாயமா னுயினுன் மாயமா னேயினுன். இராமாவதாரம்.

இது நான்கு சீர்களும் நெடிலாலாய நேரும் குறினெடிலாலாய நிரையுமாய் நின்ற கூவிளமாய் இயற்சீர்வெண்டளைதழுவி மற்றொருசந்தம் பெற்றுவந்த கலிவிருத்தம்.

கொடியொடு குடையிடை மிடைவன விருள்செய
முடியொடு சுடர்குழை முழைவெயி லொளிசெய
அடியொடு புனைகழ லரசிறை படையெழ
இடையிடை யிரவொடு பகலிசை வனவே. சூளாமணி.

இது நான்காமடியின் இறுதிச்சீர் புளிமாவாக மற்றைய சீர்களெல்லாம குறிலிணை நிரையசைகளாய் நின்ற கருவிளமாய நிரையொன்றாசிரியத்தளை தழுவி மற்றொருசந்தம் பெற்றுவந்த கலிவிருத்தம. (௨௨-௨ ௯.)

## வஞ்சிப்பா, வஞ்சிப்பாவினம்.

குறளடி நான்கின மூன்றொரு தாழிசை கோதில்வஞ்சித்
துறையொரு வாது தனிவரு மாய்விடிற் சிந்தடிநான்
கறைதரு காலை யமுதே விருத்தந் தனிச்சொல்வந்து
மறைதலில் வாரத்தி னாலிறும் வஞ்சிவஞ் சிக்கோடியே.

### உதாரணமுதற்குறிப்பு.

மடப்பிடி பேடை யிரும்பிடி வஞ்சியின் றாழிசையாம்
வடிப்புரை கண்ணினல் லாய்மை சிறந்தன வான்றுறையாம்
தடப்பெருஞ் சோலை விருத்தம தாகுந் தயங்குவஞ்சிக்
கோடித்தொடி பூந்தா மரைகோடி வால னுதாரணமே.

### வஞ்சிப்பா.

வஞ்சி தனிச்சொல் வந்து மறைதலில் வாரத்தினாலிறும்:-

*வஞ்சிப்பா தனக்குரிய சீர்தளையடிகளால் நடந்து தனிச்சொல் வரப்பெற்று அகவற்சுரிதகத்தான் முடிவு பெறும்.*

*இது குறள் சிந்தல்லாத அடிகளையும், புறநிலைவாழ்த்து முதலிய பொருள்களையும் அமைந்துவரற்கொட்டாது வஞ்சம்புரிந்து நிற்றலால வஞ்சி எனப்பட்டது. வஞ்சி - வஞ்சமுடையது. யாண்டும் பிரசித்தமாய் வெளிப்பட்டு வரல்பற்றி அகவற்சுரிதகத்தினை 'மறைதலில் வாரம்' என்றார். இதற்கு வெள்ளைச்சுரிதகம் வருதலில்லை. வஞ்சிக்குரிய சீருந் தளையும் அடியும் பிறவும் முன்னாக கூறப்பட்டன.*

### உதாரணம்.

பூந்தாமரைப் போதலமரத்
தேம்புனலிடை மீன்றிரிதரும்
வளவயலிடைக் களவயின்மகிழ்
வினைக்கம்பலை மனைச்சிலம்பவு
மனைச்சிலம்பிய மணமுரசொலி
வயற்கம்பலைக் கயலார்ப்பவும்

நாளும்,

மகிழு மகிழ் தூங்கூரன்
புகழ்த லானாப் பெருவண் மையனே.

இது குறளடியான் வந்து நாளும் என்னும் தனிச்சொற்பெற்று அகவற்சுரிதகத்தான் முடிந்த வஞ்சிப்பா.

கொடிவாலன குருநிறத்தன குறுந்தாளன
வடிவாலெயிற் றழலுளையன வள்ளுகிரன
பணையெருத்தி னிணையரிமா னணையேறித்
துணையில்லாத் துறவுநெறிக் கிறைவனாகி
எயினடுவ ணினிதிருந் தெவ்வுயிர்க்கும்
பயில்படுவினை பத்தியலாற் செப்பியோன்
புணையெனத்,
திருவுறு திருந்தடி திசைதொழ
வெருவுறு நாற்கதி வீடுநனி யெளிதே:

இது சிந்தடியான் வந்து புணையென என்னுந் தனிச்சொற்பெற்று அகவற்சுரிதகத்தான் முடிந்த வஞ்சிப்பா.

---

## வஞ்சித்தாழிசை.

குறளடி நான்கின மூன்று ஒருதாழிசை:—

குறளடி நான்குடையனவாய்க் கோவைப்பட்டு வருகின்ற செய்யுள் மூன்றே ஒரு வஞ்சித்தாழிசையாகும.

உதாரணம்.

மடப்பிடியை மதவேழந்
தடக்கையான் வெயின்மறைக்கும்
இடைச்சுர மிறந்தார்க்கே
நடக்குமென் மனனேகாண்.

பேடையை யிரும்போத்துத
தோகையான் வெயின்மறைக்குங்
காடக மிறந்தார்க்கே
ஓடுமென் மனனேகாண்.

இரும்பிடியை மதவேழம்
பெருங்கையான் வெயின்மறைக்கும்
அருஞ்சுர மிறந்தார்க்கே
விரும்புமென் மனனேகாண்.

இவை மூன்றும் ஒரு பொருண்மேற் கோவையாய் வந்து ஒரு வஞ்சித்தாழிசையாயிற்று.

---

வஞ்சித்துறை.

ஒருவாது தனிவருமாய்விடின் வஞ்சித்துறை:—

குறளடி நான்கினையும் நீக்காது கொண்டு தனியே வந்து முடியுமாயின் அது வஞ்சித்துறையாகும்.

உதாரணம்.

மைசிறந்தன மணிவரை
கைசிறந்தன காந்தளும்
பொய்சிறந்தனர் காதலர்
மெய்சிறந்திலர் விளங்கிழாய்.

இது முதலாஞ்சீர் கூவிளங்கனியும் மற்றைச்சீர் விளமுமாய நின்ற குறளடியான் வந்த வஞ்சித்துறை.

பொன்னங் குன்றவன்
மின்னும் வாளவன்
மன்னன் றேழனு
முன்னி வந்தனன்.   சூளாமணி.

இது முதலாஞ்சீர் தேமாவும் மற்றைச்சீர் கூவிளமுமாய் மற்றொருசந்தம் பெற்று நின்ற குறளடியான வந்த வஞ்சித்துறை.

---

வஞ்சிவிருத்தம்.

சிந்தடி நான்கு விருத்தம்:—

முச்சீரடி நான்காய் வருவது வஞ்சிவிருத்தமாகும்.

உதாரணம்.

சோலை யார்ந்த சுரத்திடைக்
காலை யார்கழ லார்ப்பவும்
மாலை மார்பன் வருமாயின்
நீலை வுண்கணி வன்வாழுமே.

இது மூன்றுமடியின் இறுதிச்சீரும், நான்காமடியின் இறுதிச்சீரும் மூவசைச்சீராக மற்றையசீர்கள் ஈரசையாய் வந்த வஞ்சி விருத்தம்.   (உ௯-உரு.)

---

## மருட்பா.

க. பண்பார் புறநிலை பாங்குடைக் கைக்கிளை வாயுறைவாழ்த்
தொண்பாச் செவியறிவென்றிப் பொருண்மிசையூனமில்லா
வெண்பா முதல்வந் தகவல்பின் னாகி விளையுமென்றால்
வண்பான் மொழிமட வாய்மருட் பாவெனும் வையகமே.

### உதாரணமுதற்குறிப்பு.

உ. தென்ற லிடையுந் திருநுதல் வேர்வும் பலமுறையென்
றோன்றிய பாவும்பல் யானையு மென்பவொண்போதமைந்த
பொன்றிக ழோதி புறநிலை கைக்கிளை வாயுறைவாழ்த்
தென்றிவற் றிற்குஞ் செவியறி விற்கு மிலக்கியமே.

புறநிலைவாழ்த்து, கைக்கிளை, வாயுறைவாழ்த்து, செவியறிவுறூஉ எனப்பட்ட இப்பொருள்களின்மீது வெண்பாவாய் முன்வந்து பின் அகவலாய் ஒரு செய்யுள் முடியுமாயின் அதனை அறிஞர் மருட்பா என்று சொல்லுவர்.

இது வெண்பாவும் அகவற்பாவும், பார்ப்பனக்குமாரனும் அரசகன்னியும் மயங்கிக் கூடிவாழுதல்போல மருள்பூண்டு கூடி நிற்றலால் மருட்பா எனப்பட்டது. மருள் - மயக்கம்.

இருபாவினடிகளும் சமமாகப் பெற்று வருவது சமநிலை மருட்பா எனவும் ஏற்றிழிவாகப் பெற்று வருவது வியநிலைமருட்பா எனவும் வழங்கப்படும். வியம் - ஏற்றிழிவு. விஷமம் என்னும் வடமொழி வியம் என்றாயிற்று.

### புறநிலைவாழ்த்துமருட்பா.

புறநிலைவாழ்த்துப் பொருண்மீது வரும் மருட்பா புறநிலைவாழ்த்து மருட்பா எனப்படும்.

புறநிலைவாழ்த்தாவது ஒருவனை முன்னிலையாக்கி வழிபடு கடவுள் நிற்புறங்காத்து நிற்கப் பழியஞ்சித்தேடிய பொருளுடன் வழிவழி சிறந்து வாழ்க என்று அவனையும் அவன் புதல்வன் முதலியோரையும் வாழ்த்துவது.

### உதாரணம்.

தென்ற லிடைபோழ்ந்து தேனார் நறுமுல்லை
முன்றின் முகைவிரிய முத்தநீர்த் தண்கோனூர்க்
குன்றமர்ந்த கொல்லேற்றா னிற்காப்ப—என்றும்

தீரா நண்பிற் றேவர்
சீர்சால் செல்வமொடு பொலிமதி சிறந்தே.

இது குன்றமர்ந்த கொல்லேற்றான் நிற்காப்பச் செல்வமொடு பொலிமதி என வாழ்த்துதலாற் புறநிலைவாழ்த்து மருட்பாவாயிற்று. வெண்பாவடி மிக்கும் அகவலடி குறைந்தும் வரலால் வியனிலை.

---

### கைக்கிளைமருட்பா.

கைக்கிளைப்பொருண்மீது வரும் மருட்பா கைக்கிளை மருட்பா எனப்படும்.

கைக்கிளையாவது ஒரு தலைவனுந் தலைவியும் விதிவழியால் எதிர்ப்பட்டுழிக் காமநுகர்ச்சி காரணமாக அவருள்ளே ஒருவரிடத்துண்டாகும் ஒரு சிற்றுறவு.

கை - சிறுமை. கிளை - உறவு. கைக்கிளை என்பதற்கு ஒரு மருங்குபற்றிய கேண்மை என்பாருமுளர். ஒருமருங்குபற்றிய கேண்மை எனினும் ஒருதலைக்காமம் எனினும் ஒக்கும்.

இங்கே வருவது ஆண்பாற்கூற்றுக் கைக்கிளை. அது காட்சி, ஐயம், துணிவு முதலாகி ஒன்பது வகைப்படும்.

உதாரணம்.

திருநுதல் வேர்வரும்புந் தேங்கோதை வாடும்
இருநிலஞ் சேவடியுந் தோயும்—அரிபரந்த
போகித ழுண்கணு மிமைக்கும்
ஆகு மற்றிவ ளகலிடத் தணங்கே.

புறப்பொருள்வெண்பாமாலை.

இது தான்கண்ட தலைவியை இன்னளென்றுணராது சந்தேக முற்று நின்ற தலைமகன் மாநுடமடந்தையென்று துணிதலால் துணிவு என்னும் கைக்கிளைப்பொருள் பற்றிய சமநிலைமருட்பா. வெண்பாவடியும் அகவற்பாவடியும் சமமாய் நிற்றலாற் சமநிலை யாயிற்று.

---

### வாயுறைவாழ்த்துமருட்பா.

வாயுறைவாழ்த்துப் பொருள்பற்றி வரும் மருட்பா வாயுறை வாழ்த்து மருட்பா எனப்படும்.

வாயுறைவாழ்த்தாவது இப்பொழுது வெறுப்பினைப் பயப்பினும் பிற்பொழுதிற் பெருநன்மை பயக்குமென்று மெய்ப்பொருளை உறுத்துவதாகிய வாழ்த்து.

வாய் - உண்மை. உறை - உறுத்துவது.

உதாரணம்.

பலமுறையு மோம்பப் படுவன கேண்மின் [ரூர்ந்து
சொலன்முறைக்கட் டோன்றிச் சுடர்மணித்தே
ரிலமுறையி னுண்ட நிகரிலார் மாட்டுஞ்
சிலமுறை யல்லது செல்வங்க ணில்லா
இலங்கு மெறிபடையு மாற்றலு மன்புங்
கலந்தநங் கல்வியுந் தோற்றமு மேனைப
பொலன்செய் புனைகலனே டிவ்வாற னுலும்
விலங்கிவரு கூற்ற நீக்கலு மாகா
தனைத்தாத னீயிருங் காண்டிர்—நினைத்தக்க
கூறிய வெம்மொழி பிழையாது
தேறினீ ரொழுகிற் சென்று பயன்றருமே.

இது செல்வநிலையாமை முதலிய கூறி மெய்ப்பொருளை உறுத்தி வாழ்த்துதலான் வாயுறைவாழ்த்துப் பொருள்பற்றி வந்த வியநிலைமருட்பா. வெண்பாவடி மிக்கும் அகவற்பாவடி குறைந்தும் நிற்றலால வியநிலையாயிற்று.

---

## செவியறிவுறூஉமருட்பா.

செவியறிவுறூஉ என்னும் பொருள்பற்றி வரும் மருட்பா செவியறிவுறூஉமருட்பா எனப்படும்.

செவியறிவுறூஉவாவது மீதூர்ந்தெழுதலின்றி அந்தணர், சான்றோர், அருந்தவத்தோர் முதலிய அறிஞர்வழி நின்று வாழ்தல் கடனென்று நல்லதோருபாயத்தைச் செவியிடத்தறிவுறுத்துவது.

செவியறிவுறூஉ என்பது செவியறிவு என நின்றது செய்யுள் விகாரம். செவி - காது. அறிவுறூஉ - அறிவுறுத்துவது.

உதாரணம்.

பல்யானை மன்னர் முருங்க வமருழந்து
கொல்யானைத் தேரோடுங் கோட்டந்து—நல்ல
தலையாலங் கானம் பொலியத்—தொலையாப்
படுகளம் பாடுபுக் காற்றிப் பகைஞர்
அடுகளம் வேட்டோன் மருக—அடுதிறல்

ஆளி நிமிர்தோட் பெருவழுதி யெஞ்ஞான்றும்
ஈர முடையையா யென்வாய்ச்சொற் கேட்டி
அரிய வுழவரை நெஞ்சகத்துக் கொண்டு
வருகா லுழவர்க்கு வேளாண்மை செய்யல்
மழவ ரிழைக்கும் வரைக்கா ணிதியீட்டம்
காட்டு மமைச்சரை யாற்றத் தெளியல்
அடைத்த வரும்பொரு ளாறன்றி வெளவல்
இனத்தைப் பெரும்பொரு ளாசையாற் சென்று
மன்ற மறுக வகழாதி—என்றும்
மறப்புற மாக மதுரையா ரோம்பும்
அறப்புற மாசைப் படேற்க—அறத்தால்
அவையார் கொடுநாத் திருத்தி—நவையாக
நட்டார் குழிசி சிதையாதி—ஒட்டார்
செவிபுதைக்குந் தீய கடுஞ்சொற்—கவிபடைத்தார்ய்
கற்றார்க் கினனாகிக் கல்லார்க் கடிந்தொழுகிச்
செற்றார்ச் செறுத்துநிற் சேர்ந்தாரை யாக்குதி
அற்ற மறிந்த வறிவினாய்—மற்றும்
இவையிவை வீயா தொழுகி னில்லையாப்
பொருகட லாடை நிலமகள்
ஒருகுடை நீழற் றுஞ்சுவண் மன்னே.

இது பாண்டியனை, என்வாய்ச்சொற் கேட்டி என்று பூமி முழுவதையும் ஒருகுடைநிழலிலே வைத்து ஆளுதற்கு வேண்டும் உபாயங்கள் பல அவன் செவிக்கண் அறிவுறுத்துதலாற் செவியறிவுறூஉப் பொருள்பற்றி வந்த வியனிலை மருட்பா. (உசு-உஎ.)

---

செய்யுளியற்காரிகைமுதற்குறிப்பு.

வெண்பா வளம்பட வீரடி யொன்றூட னேரிசையும்
கண்பானல் போன்மயி லந்தமின் மூன்றுங் கடைதருக்கி
நண்பார் தரவொன் றசைதர வேயடி யோடுதுறள்
பண்பார் புறநிலை செய்யு ளியலென்ப பாவலரே. (உஅ)

---

# ஒழிபியல்.

உறுப்பியற்கண்ணும் செய்யுளியற்கண்ணும் ஓதப் படாதொழிந்து நின்ற இலக்கணங்களையெல்லாம் ஒருங்கு சேர்த்து வாக்கிய சேடமாக உணர்த்தலால் இவ்வியல் ஒழிபியல் என்னும் பெயர்த்தாயிற்று.

ஒழிபு - ஒழிந்தது, எஞ்சியது. இயல் - இலக்கணம். வாக்கிய சேடம் - முன்னர்ச்சொன்னதற்கு அநுகூலமான குறைவாக்கியம். வாக்கியசேடம் புறநடை என்பன ஒருபொருட்கிளவிகள்.

எழுத்துப்புறநடை.

சீருந் தளையுஞ் சிதையிற் சிறியஇ உஅளபோ
டாரு மறிவ ரலகு பெறுமையை காரனைவேல்
ஓருங் குறிலியல் போற்றள பாய்விடி னேரலகாம்
வாரும் வடமுந் திகழு முகிழ்முலை வாணுதலே.

குற்றியலிகரவுகரமுமுயிரளபெடையும்.

சீரும் தளையும் சிதையின் சிறிய இ உ அளபு அலகு பெறுமை ஆரும் அறிவர்:—

இச்சீரும் இத்தளையும் பெற்று நிற்கும் என்னும் விதி அமைந்துவரும் வெண்பா முதலியவற்றிலே அச்சீராவது தளையாவது சிதையுமாயின் குற்றியலிகரமும், குற்றியலுகரமும், அளபெடையுயிரும் அலகுபெறுது வாளாநிற்றலை யாவருமறிவர்.

சிதைதல் - வழுவுதல். சிதையின் வினையெச்சம். இ உ என்னும் இரண்டிற்கும் விசேடணமாய் நின்ற சிறிய என்பது குறுகிய என்னும் பொருட்டு. அலகு - எழுத்தின்மாத்திரையை அளவை செய்து அசைகளை வரையறுத்தல்.

சிதையினெனவே சிதையாவழியெல்லாம் ஒலித்தற்கெழுதிணு டையனவாய் அலகுபெறும் என்பதும், சிதைவழியெல்லாம் குற்றியலிகரவுகரங்கள் ஒலித்தற்கெழுதிலின்றி ஒற்றேபோன்று நிற்கும் என்பதும், அளபெடையுயிர் நெடிலின்றன்மையே தன்றன்மையாய் நிற்கும் என்பதும் பெற்றும். ஆருமறிவரெனவே இவை

மூன்றும் சான்றோர் செய்யுள்களிலே இவ்விருநிலைமையும் எய்தி நிற்றல் பெருவழக்கென்பது பெற்றாம்.

---

### குற்றியலிகரம்.

உதாரணம்.

ஆதி முதலுணர்ந்தியா மன்புசெயப் பெற்றவா
றோஒ பெரிது மரிதே யெளிதேயோ [யான்
வேதந் துறைசெய்தான் மெய்த்துணியான் கைத்துணி
பேதுற்றும் வெஃகேம் பிற. சிதம்பர...கோவை.

இவ்வெண்பாவிலே முதலுணர்ந்தியாம் என்பது குற்றிகரம் நீக்கியலகிட்டுக் கருவிளங்காய் என்னும் வாய்பாட்டு வெண்சீராகக் கொள்ளப்படும். அவ்விகரமும் அலகிடப்படுமாயின் கருவிளங்கனி என்னும் வஞ்சிச்சீராகும். வஞ்சிச்சீர் வெண்பாவில் வருதலில்லை. இது குற்றியலிகரம் சீர்சிதைவழி அலகுபெறுமைக்குதாரணம்.

குழலினி தியாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர். திருக்குறள்.

இங்கே குழலினி, தியாழினி என்பன குற்றியலிகரம் நீக்கிக் கருவிளம் கூவிளம் என்னும் சீர்களாக அலகிடப்படும். அவ்விகரமும் அலகிடப்படுமாயின் அவை கருவிளம் கருவிளம் என்னும் சீர்களாகும். ஆகவே நிரையொன்றாசிரியத்தளை வந்து விரவும். வெண்பாவுள்ளே பிறதளை விரவா.

அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றினல். திருக்குறள்.

இங்கே அருளல்ல தியாதெனில் என்பன குற்றியலிகரம் நீக்கிப் புளிமாங்காய் கூவிளம் என்னும் சீர்களாக அலகிடப்படும். அவ்விகரமும் அலகிடப்படுமாயின் அவை புளிமாங்காய் கருவிளம் என்னும் சீர்களாகும். ஆகவே கலித்தளை வந்து விரவும்.

இவையிரண்டும் குற்றியலிகரம் தளைசிதைவழி அலகுபெறுமைக்குதாரணம். இனிச் சிதையாவழி அலகுபெற்று நிற்றலையுங் காட்டுதும்.

உதாரணம்.

நாக வரவுயர்த்தோ னங்கட் கரசுரிமைப்
பாக மளியாத பான்மையனை—வேகத்தால்

சேதிபர்கோன் வீழத் திறலாழி மூன்னுயர்த்தாய்
யாதியாஞ் செய்வ தியம்பு. பாரதவெண்பா.

இங்கே யாதியாம் என்புழிக் குற்றியலிகரம் அலகுபெறுவ தாயிற்று.

---

குற்றியலுகரம்.

உதாரணம்.

கொன்றுகோடுநீடு குருதிபாயவும்
சென்றுகோடுநீடு செழுமலைபொருவன
வென்றுகோடுநீடு விறல்வேழம்
என்றுமூடுநீடு பிடியுளபோலும்

அதனால்,

இண்டிடை யிரவிவ ணசைஇவரின்
வண்டுண் கோதை யுயிர்வா ழாளே.

இக்குறளடி வஞ்சிப்பாவிலே அடிகளின் முதலினின்ற கொன்றுகோடுநீடு முதலிய நான்கு சீர்களும் குற்றியலுகரங்கள் நீக்கி அலகிட்டுத் தேமாங்காய் வாய்பாட்டு வெண்சீர்களாகக் கொள்ளப்படும். உகரங்களும் அலகிடப்படுமாயின் ஆறசைச்சீர்களாய் விதிகடந்து வேறுபடும். இறுதிக்குற்றியலுகரங்களைமாத்திரம் நீக்கித் தேமாந்தண்ணிழலாய்க் கொள்ளலும் அமையும். இது குற்றியலுகரம் சேர்சிதைவுழி அலகுபெறுமைக்குதாரணம். சிதையாது நிற்புழி அலகுபெறுதலையுங் காட்டுதும்.

உதாரணம்.

வரக்கண்டு நாணாதே வல்லையா னெஞ்சே [டாய்
மரக்கண்ணோ மண்ணாள்வார் கண்ணென்—றிரக்கண்
வாளுழுவை வெல்கொடியான் வண்புனனீர்நாடற்கென்
தோளுழுவத் தோன்றத் தொழுது. முத்தொள்ளாயிரம்.

இங்கே வரக்கண்டு என்பது சீரும் தளையும் திருந்த நிற்றலால் அலகுபெறுவதாயிற்று. வரக்கண்டு-புளிமாங்காய்.

---

அளபெடையுயிர்.

விளி, பண்டமாற்று, நாவல்கூற்று, விலாபம் முதலியவற்றில் வரும் இயற்கையளபெடையுயிர் சீரரவது தளை

யாவது சிதைவுழி அலகுபெறாது நிற்கும். செயற்கையளபெடை அலகுபெற்றே நிற்கும்.

இயற்கையளபெடையாவது சொல்லொடுந் தோன்றி வழக்கில் வந்து செய்யுண்மாட்டும் வருவது. செயற்கையளபெடையாவது செய்யுளிலே சீர்தளை இயையாது முட்டுற்றுழி அசைவேண்டிச் செய்துகொள்ளப்படுவது.

உதாரணம்.

களிச்சாத்தாஅ வென்றியான் கட்காண நின்று
விளித்தாலும் வாரான் விரைந்து.

இங்கே விளிக்கண்வந்த களிச்சாத்தாஅ என்பது அளபெடையகரம் நீக்கி அலகிடப்பட்டுப் புளிமாங்காய்வாய்பாட்டு வெண்சீராகக் கொள்ளப்படும். அகரமுமலகிடப்படுமாயின் புளிமாதண்பூ வாய்பாட்டு நாலசைச்சீராகும். வெண்பாவிலே நாலசைச்சீர் விரவுதலில்லை. இது சீர் சிதைவுழி அலகுபெறாமைக்குதாரணம். விளி - அழைப்பு.

இடைநுடங்க வீர்ங்கோதை பின்றாழ வாட்கண்
புடைபெயரப் போழ்வாய் திறந்து—கடைகடையின்
உப்போஒ வெனவுரைத்து மீள்வா ளொளிமுறுவற்
கொப்போநீர் வேலி யுலகு.

இங்கே பண்டமாற்றில் வந்த உப்போஒ என்பது அளபெடையொகரம் நீக்கியலகிட்டுத் தேமாவாய்பாட்டசைச்சீராகக்கொள்ளப்படும். ஒகரமுமலகிடப்படுமாயின் தேமாங்காய் வாய்பாட்டு வெண்சீராய்க் கவித்தளைகொள்ளக்கிடக்கும்.

இது தளை சிதைவுழி அலகுபெறாமைக்குதாரணம். சிதையாவழி அலகுபெறுதலையுங் காட்டுதும்.

உதாரணம்.

காவ லுழவர் களத்தகத்துப் போரேறி
நாவலோஒ வென்றிசைக்கு நாவோசை—காவலன்றன்
கொல்யானை மேலிருந்து கூற்றிசைப்ப போலாதே
நல்யானைக் கோக்கிள்ளி நாடு. முத்தொள்ளாயிரம்.

இங்கே நாவல் கூற்றாய் வந்த நாவலோஒ என்புழி அளபெடையொகரம் சீர்தளை திருந்த நிற்றலால் அலகுபெறுவதாயிற்று. நாவல்-நெல்லரிதொழுவரை விளித்தற்கண்கூறும் ஒருபரிபாடை.

ஆழி யிழைப்பப் பகல்போ மிரவிற்
றோழி துணையாத் துயர்தீரும்—வாழி
நறுமாலைத் தாரார் நிரையவோஒ வென்னுஞ்
செறுமாலை சென்றடைந்த போது. பொய்கையார்வாக்கு.

இங்கே விலாபத்திலே வந்த நிரையவோஒ என்புழி ஓகாரம் சிதைவின்மையால் அலகுபெறுவதாயிற்று. விலாபம் - புலம்பல்.

---

ஐகாரக்குறுக்கம்.

ஐகாரம் நைவேல் ஓரும் குறிலியல்பு:—

சீர்சிதைவுழி நின்ற ஐகாரம் குறுகிய ஐகாரமாயின் அது குற்றெழுத்தே போன்று ஒருமாத்திரையாக அலகிடப்படுந் தன்மையுடையதாகும்.

ஐகாரக்குறுக்கத்திற்கு மாத்திரை ஒன்றரையாயினும் சீர்சிதைவுழி மெலிதாக உச்சரித்துக் குறில்போலவும், சிதையாவழி வலிதாக உச்சரித்து நெடில்போலவும் கொள்ளப்படும். நைவு - குறுகியது.

உதாரணம்.

[ன்றான்
விரதவர்கோன் பின்னையென்றான் வத்தவர்கோ னாளையெ
யாதவர்கோன் யாதொன்று மில்லையென்றான்—ஆதலால்
வாதவர்கோன் பின்னையினும் வததவர்கோ னாளையினும்
யாதவர்கோன் சொல்லே யினிது. ஒளவைபாடல்.

இங்கே பின்னையென்றான், நாளையென்றான், இல்லையென்றான், பின்னையினும், நாளையினும் என்பனவற்றில் ஐகாரங்கள் குறிலியல்பாகக் கொள்ளப்படும். நெடிலாகக் கொள்ளப்படின் பூச்சீர் கனிச்சீர்களுக்கிடனாய் வெண்பாவிதியைச் சிதைக்கும்.

இனி ஐகாரக்குறுக்கம் நெடில்போல அலகிடப்படுதலையும் காட்டுதும்.

உதாரணம்.

தில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே யென்னாத வியற்பகைக்கு மடியேன்
* இளையான்றன் குடிமாற னடியார்க்கு மடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன் [ன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க் கடியே

அல்லிமென் முல்லையந்தா ரமர்நீதிக் கடியேன்
ஆரூர னாரூரி லம்மானுக் காளே.திருத்தொண்டத்தொகை.

இது அடிதோறும் நான்கும் எட்டெழுத்தல்லாத சீராறும் மூவசை ச்சீராய் வந்த விருத்தம். இவகே தில்லைவாழ், இல்லையே, துன் றையார் என்பனவும் ஐகாரம் நெடிலாகவே கொண்டு மூவசைச் சீராகக் கொள்ளப்படும். குறிலியல்பாக ஐகாரங்கள் கொள்ளப் படுமாயின், ஈரசைச்சீராகி வழுவுறும்.

---

அளபெடையொற்று.

ஒற்றளபெடின் ஓரலகாகும்:—

சிதைவு வந்துழிச் சீரையாவது தளையையாவது அமைக்கும்படி வந்து ஒற்றளபெடையொற்றுத் தோன்று மாயின், அது குறில்போன்று ஒருமாத்திரை ஒலித்து நேர சையாகும்.

அளபெடையொற்று ஓரலகாகுங்கால் அயற்குறிலோடிணை ந்து நிரையாகாதோவெனின், ஊன்றி முறுக்கி உச்சரிக்கப்படுத லால் ஒருமாத்திரை ஒலித்தலன்றி அயற்குறிலோடிசையால் அிணை தலின்மையின் ஆகாதென்போம். விட்டிசைபெறுதாகவும முன னின்ற குறிலும் இதனிசைவேறுபாட்டாற் றனிநின்று நேர சையாகும்.

உதாரணம்.

பூஉந் தண்ண் புனமயி லகவ
மாஅங் குயில்கள் சாஅய்ந் தொளிப்பக்
கோஒ டரங்கண் முசுவொடும் வெரீஇக்
காஅ றபூஇக் கவிழ்ந்ந் தொடுங்கச்
சூஉன் முதிர்ந்து காஅல் விஇழ்
வாஅன் றூஅழ் மழைப்பெய றலைஇத்
தேஎன் றூஅழ் பூஉங் காஅ
வளங்ங் கனிந்த மணிமன்றுள்
விளங்ங் கொளியை யுளங்கொள றவமே.

சிதம்பரச்செய்யுட்கோவை.

இவ்வகவற்பாவிலே தண்ண், கவிழ்ந்ந், வளங்ங், விளங்ங் என்புழி அளபெடையொற்றுக்கள் குறில்போலக் கொண்டு நேர சையாக அலகிடப்படும். வாய்பாடு தண்ண் தேமா; கவிழ்ந்ந் முத

விய மூன்றும் புளிமா. எனை அளபெடையுயிர் அலகுபெற்று நிற்றலையும் காண்க. இது சீர்நிலையாதற்குத் தோன்றிய அளபெடைக்குதாரணம்.

இலங்ங்கு வெண்பிறைசூ டீசனடி யார்க்குக்
கலங்ங்கு நெஞ்சமிலை காண்.

இங்கே இலங்ங்கு கலங்ங்கு என்பன அளபெடையொற்றுக்களை நேரசையாக்கிப் புளிமாங்காய் வாய்பாட்டு வெண்சீராகக் கொள்ளப்படும். இது தளை நிலையாதற்குத் தோன்றிய ஒற்றளபெடைக்குதாரணம்.

அளபெடையாய்தமும் அளபெடையொற்றுப்போல நேரசையாக அலகிடப்படும்.

உதாரணம்.

எஃஃகி லங்கிய கையரா யின்னுயிர்
வெஃஃகு வார்க்கில்லை வீடு.

இங்கே அளபெடையாய் நின்ற ஆய்தங்கள் ஒருகுறில்போலக் கொண்டு நேரசையாக அலகிடப்படும்.

இனி ஆய்தவெழுத்து அரைமாத்திரையின் மிக்கொலித்துக் குறில்போனின்று மற்றொரு குறிலோடிணைந்து நிரையசைகொள்ளற்குக் காரணமாதலும் ஒரோவழி உண்டு.

உதாரணம்.

வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை
யாண்டு மஃதொப்ப தில். திருக்குறள்.

இங்கே அஃதொப்ப என்பது ஆய்தத்தைக் குறில்போற்கொண்டு புளிமாங்காய்வாய்பாட்டு வெண்சீராகக் கொள்ளப்படும். ஒற்றெனக் கொள்ளின் வெண்டளை வழுவும்.

ஒற்றெழுத்து.

ஒற்றெழுத்தும் ஆய்தவெழுத்தும் தாமாக அலகுபெறுவது அளபெடையின் மாத்திரமே. தனிக்குறிற்பின நேரசையினிற்பினும் தமக்கென வேறு மாத்திரை பெறுவதில்லை. அளபெடைபோல ஊன்றி முறுக்கி உச்சரிக்கப்படாமையால் ஈரொற்றாய் நிற்பவையும் ஓரொற்றுப்போலவே கொள்ளப்படும். வெண்பா, கட்டளைக்கலித்துறை, விருத்தம், கட்டளைக்கலிப்பா முதலியவற்றிலே சீர்சிதைவுழி இருகுறிற்கு நடுநின்ற ஒற்றெழுத்து அவ்விருகுறிலும்

இணைந்து நிரையசையாதல்வேண்டி நீக்கப்படுதலுமுண்டு. நீக்கப்படுதலன்றி இசைகெடும்வழி ஒற்று வருவித்துச் சேர்க்கப்படுதலுமுண்டு.

உதாரணம்.

எண்டிசையு மன்னு மெழில்வா னிளங்கதிரோன்
கொண்டல் பொழிலேழ் குலவரையோ—டண்டர்பதி
முட்டப் பரந்ததே வின்னு ணொளிமுற்றும்
வட்டத் திகிரிசூழ் மண். பாரதவெண்பா.

ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றுங்
காத லிருவர் கருத்தொக்க—ஆதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு. ஔவைபாடல்.

இவ்வெண்பாக்களில் முறையே அண்டர்பதி, ஈட்டல்பொருள் என்பன ஒற்றுக்கள் நீக்கியலகிட்டுக் கூவிளங்காய்வாய்பாட்டு வெண்சீராகக் கொள்ளப்படும். ஒற்று நீக்கப்படாதொழியின் தேமாங்கனி என்னும் வஞ்சிச்சீராய் வெண்பாவை வழுப்படுத்தும்.

ஆடுங் கடைமணி யைவே லசதி யணிவரைமேல்
நீடுங் கயற்கண்ணி யார்மாய மோநெடுந் தூரத்திலே
கோடுங் குளமுங் குளக்கரை மேவிய குன்றுகளுங்
காடுஞ் செடியு மவளாகத் தோன்றுமென் கண்களுக்கே.
அசதிக்கோவை.

இக்கட்டளைக்கலித்துறையிலே தூரத்திலே என்பது தகரவொற்று நீக்கிக் கூவிளங்காயாகக் கொள்ளப்படும். "கடையொரு சீரே விளங்காயாகி" என்பது கட்டளைக்கலித்துறை விதி.

நல்லுறுப் பமையுநம் பியரின்முன் பவனயந்
தெல்லுறுப் பரியபே ரெழுசுடர்க் கடவுடன்
பல்லிறுத் தவன்வலிக் கமைதிர்யம் பகமெனும்
வில்லிறுத் தருளினன் மிதிலைபுக் கனையநாள்.
இராமாவதாரம்.

இக்கலிவிருத்தத்திலே பியரின்முன், கமைதிர்யம் என்பன ஒற்றுநீக்கியலகிட்டுக் கருவிளமாகக் கொள்ளப்படும். இதன்பால் வருஞ்சீர்களெல்லாம் விளவீற்றுச்சீர்கள்.

இனி இசைநிறைக்கும் பொருட்டு ஒற்றுத் தோன்றி நிற்றலையும் காட்டுதும்.

உதாரணம்.

அம்பொ னரந்து டைய்ய காம
 னைய்ய னென்ன வந்தணன்
நம்பு நீர ரல்லர் நன்கு
 ரங்கு நீர ராயினும்
தங்கு ரவ்வர் தாங்கொ டுப்பி
 னெஞ்சு னொந்து தாழ்வர் தாம்
பொங்க ரவ்வ வல்கு லாரெ
 னபபு கன்று சொல்லினான். சீவகசிந்தாமணி.

இவ்விருத்தத்திலே உடைய்ய, ஐய்யன், தூவ்வர், அரவ்வ என்பவைகளிலே ஒற்றுக்கள் இசைநிறைத்தற்பொருட்டு வருவிக்கப்பட்டன. உடைய ஐயன் குரவா அரவ என்று நிற்றலே இயற்கை. (௪.)

---

அசைகட்குப்புறநடை.

விட்டிசைத் தல்லான் முதற்கட் டனிக்குறி னேரசையென்
றொட்டப் படாததற் குண்ணு ணுதாரண மோசைகுன்ற
நெட்டள பாய்விடி னேர்நேர் நிரையொடு நேரசையாம்
இட்டத்தி னற்குறில் சேரி னிலக்கிய மேஎர்சிதைவே.

தனிக்குறிலசை.

விட்டிசைத்தல்லால் முதற்கண் தனிக்குறில் நேரசை என்று ஒட்டப்படாது:—

விட்டிசைத்தாலன்றிச் சீரின்முதற்கணின்ற குற்றெழுத்து நேரசையென்று கொள்ளப்படுவதில்லை.

எனவே தனிக்குற்றெழுத்து விட்டிசைக்குமாயின் சீர்முதற்கண்ணும் நேரசையாம் என்பதும், தொடரிசைப்பட்டுச் சொற்குறுப்பாய் நிற்குந் தனிக்குற்றெழுத்துச் சீரிடைகடைகளில் தன்முனின்ற அசையினிசைவலியால இழுப்புண்டு இசை கண்ணழித்து நேரசையாம் என்பதும் பெறப்படும். கண்ணழிதல் - பொருத்துவிடல். கண், கணு, பொருத்து என்பன ஒருபொருட்கிளவிகள்.

விட்டிசைத்தல் மற்றையெழுத்தோடு தொடராது பிளந்திசைத்தல். விட்டிசைத்தல், பகுத்திசைத்தல, பிரித்திசைத்தல் என

பன ஒருபொருட்கிளவிகள். விடுதல் - பிளவாதல். தனிக்குறில் என்றது ஒற்றொடு சேராது நிற்குங் குற்றெழுத்தினை. ஒட்டப்படுதல் - கொள்ளப்படுதல், அங்கீகரிக்கப்படுதல்.

சிறப்பெழுத்தாய் நிற்கும் குற்றெழுத்தும் தற்பொருட்டாய் நிற்கும் குற்றெழுத்துமே பின்னுயிர் வரும்வழி விட்டிசைபெறும். உறுப்பெழுத்தாய் நிற்கும் குற்றெழுத்து இயற்கைப்பொருத்துடைமையால் விட்டிசையாவதில்லை. சிறப்பெழுத்தாவது தனி நின்று பொருள்பயப்பது. உறுப்பெழுத்தாவது இரண்டு முதலியனவாய்த் தொடர்ந்து நின்று பொருள்பயப்பது.

குறிப்பு, தற்சுட்டு, ஏவல், சுட்டு, வினா என்னும் பொருள்கள் ஐந்திலும் விட்டிசை வரும்.

உதாரணம்.

உண்ணா னொளிநிறா னோங்கு புகழ்செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான்—கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அ ஆ
இழந்தானென் றெண்ணப் படும். நாலடியார்.

இங்கே இரங்குதலாகிய குறிப்பில் வந்த அ ஆ என்புழி அ என்னும் குற்றெழுத்து விட்டிசைத்துநிற்றலாற் சீர்முதற்கண் நேரசையாயிற்று. அ ஆ - தேமா.

வெறிகமழ் தண்புறவில் வீங்கி யுகளும்
மறிமுலை யுண்ணாமை வேண்டிப் பறிமுன்கை
அ உ அறியா வறிவி லிடைமகனே
நொ அலைய னின்னாட்டை நீ. இடைக்காடர்பாடல்.

இங்கே அ உ என்புழித் தற்சுட்டுப் பொருளில் வந்த அ என்னும் குற்றெழுத்தும், நொ அலையல் என்புழி ஏவற்பொருளில் வந்த நொ என்னும் குற்றெழுத்தும் விட்டிசைத்து நிற்றலாற் சீர்முதற்கண் நேரசையாயின. அ உ - தேமா. நொஅலையல் - கூவிளங்காய். உ என்பதும் விட்டிசைத்துச் சீரிறுதியில் நேரசையாயிற்று. குற்றெழுத்து விட்டிசையில்வழியும் சீரிடைகடைகளிலே நேரசையாய் நிற்றலான் முதன்மாத்திரங் கூறினர். நொ என்பது வருத்து எனவும், வருந்து எனவும் இருவினையிலும் ஏவற்பொருட்டாய் வரும்.

அ அவனும் இ இவனும் உ உவனுங் கூடியக்கால்
எ எவனை வெல்லா ரிகல்.

இங்கே சுட்டுப்பொருளில் வந்த அ இ உ என்னும் குற்றெழுத்துக்களும், வினாப்பொருளில் வந்த எ என்னும் குற்றெழுத்தும் விட்டிசைத்து நிற்றலாற் சீரின்முதற்கண் நேரசையாயின.

முதற்கணின்ற குற்றெழுத்துச் சிறப்பெழுத்தாய்ப் பொருள் பயப்பதொன்றாயினும், விட்டிசையாவழி உறுப்பெழுத்தேபோன்று பின்னின்ற குறிலுடனாவது நெடிலுடனாவது சேர்ந்து நிரையசையாகும்.

உதாரணம்.

அமருந்து தானை யதிகர்தங் கோவே
துமருந்து தூயனவே கொண்டு.

இங்கே து மருந்து என்புழித் து என்பது சீர்முதனின்று உண் என ஏவற்பொருள் பயந்தும் விட்டிசையாமையால் நேரசையாகாது பிற்குறிலுடன் சேர்ந்து நிரையசையாயிற்று. துமருந்து - புளிமாங்காய்.

ஏவலில் வரும் குற்றெழுத்து இரண்டு. சுட்டில் வரும் குற்றெழுத்து மூன்று. வினாவில் வரும் குற்றெழுத்து ஒன்று. குறிப்புத் தற்சுட்டு நிகழ்ச்சியும் ஏகதேசம். ஆதலால விட்டிசைத்துச் சீர் முதற்கண் வரும் தனிக்குறில் நேரசை அற்பமேயாம்.

---

அளபெடையசை.

ஓசைகுன்று நெட்டளபு ஆய்விடின் நேர்நேர்:—

சீராவது தளையாவது சிதைவுழித் தனிநெடிலளபெடை தோன்றுமாயின் அது நேரசையோடு பின்னும் ஒரு நேரசையாகும்.

நெட்டளபு - நெடிலளபெடை. நெடுமை+அளபு=நெட்டளபு. ஓசை குன்று என்னும் விசேடணத்தாலே தனிநெடிலளபெடை என்பது பெற்றும். தனிநெடிலளபெடையைத் தனிநிலையளபெடை என்றும் கூறுவர். ஆய்விடல் - தோன்றுதல். நேர் நேர் - தேமா.

குறில் இட்டத்திறுற்சேரின் நிரையோடு நேரசையாம்:—

குற்றெழுத்து நெடிலளபெடையோடியைந்து அதற்கு முன்னிற்குமாயின் அவ்வளபெடை நிரைநேர் என இரண்டசைகளாகும்.

இட்டத்தினுளெனவே சேர்தற்கிசையுமிடம் முன் என்பது பெற்றும். இட்டத்தினுஞ் சேர்தல் பிரிவின்றியிசைதல். இட்டம் - விருப்பு. நிரைநேர் - புளிமா.

உதாரணம்.

ஏஎர் சிதைய வழாஅ லெலாஅநின்
சேயரி சிந்தின கண்.

இங்கே ஏஎர் என்பது, தனிநெடிலளபெடை நேர்நேர் எனக் கொள்ளப்படுதற்கு உதாரணம். அழாஅல் என்பது, குறினெடிலளபெடை நிரைநேர் எனக் கொள்ளப்படுதற்கு உதாரணம். இவையிரண்டும் சீர்நிலையின்பொருட்டுத் தோன்றியன. எலாஅநின் என்பது தளைநிலைபெறுதற்பொருட்டுத் தோன்றியது. எலாஅநின் - புளிமாங்காய்.

தளை சிதைவுழி மாத்திரைகூடி மூன்றசையாதலுமுண்டு.

உதாரணம்.

உறாஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்
செறாஅஅய் வாழிய நெஞ்சு. திருக்குறள்.

இங்கே செறாஅஅய் என்பது மூவசை. செறாஅஅய் - புளிமாங்காய். (உ.)

---

சீர்க்குந் தளைக்கும் புறநடை.

மாஞ்சீர் கலியுட் புகாகலிப் பாவில் விளங்கனிவந்
தாஞ்சீ ரடையா வகவ லகத்துமல் லாதவெல்லாந்
தாஞ்சீர் மயங்குந் தளையுமஃ தேவெள்ளைத் தன்மைகுன்றிப்
போஞ்சீர் கனிபுகிற் புல்லா தயற்றளை பூங்கொடியே.

கலியடி.

மாஞ்சீர் கலியுள் புகா:—

தேமா புளிமா என்னும் வாய்பாட்ட கவற்சீர்கள் இரண்டும் கலித்தளையமைந்து துள்ளலிசைபெற இயற்றப்படும் கலியடிகளுள்ளே புகுவனவாகா.

எனவே கருவிளம் கூவிளம் என்னும் வாய்பாட்டுச்சீர்கள் சிறுபான்மை புகும் என்பது போதரும். விளவீற்றுச்சீரும் நிரை முதல் வெண்சீரொடு புணர்ந்து நிற்கும். அவற்றிடை நிகழுந் தளையும் கலித்தளையென்றே கொள்ளப்படும். கலி என்றது கலித்த

லையே அமைந்து துள்ளலிசை நிகழ நிற்குந் தரவடிகளை. அதற்குச் செய்யுள் "செல்வப்போர்க் கதக்கண்ணன்" என்பது. கலி என்பது தரவை என்பது "கலிக்கிரண்டாகும்" என்பதனாலும் பெறப்படும். கலி என்பதற்கு ஒத்தாழிசைக்கலிப்பாவின் தரவுதாழிசையடிகள் என்பாருமுளர். மாஞ்சீர் புகுமாயின் அங்கே நிகழுந் துள்ளலிசையைச் சிதைக்கும். "கலித்தளையடிவயினேரீற்றியற்சீர் நிலைக்குரித்தன்று" என்று ஆசிரியர் தொல்காப்பியருங் கூறுவர்.

---

## கலிப்பா.

விளம் கனி வந்தாஞ் சீர் கலிப்பாவிலடையா:—

இடையில் விளமும் இறுதியிற் கனியும் வந்தாகின்ற சீர்களாகிய கருவிளங்கனி, கூவிளங்கனி என்னும் வாய்பாட்டு வஞ்சிச்சீர்களிரண்டும் கலிப்பாவிலே சென்று விரவி நிற்பனவாகா.

எனவே மற்றைத் தேமாங்கனி, புளிமாங்கனி என்னும் வஞ்சிச்சீர்களும், தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்னும் அகவற்சீர்களும் சிறுபான்மை கலிப்பாவிலே வந்து விரவும் என்பது பெறப்படும். கலிப்பாவிலே பெரும்பாலும் வந்து நிற்கும் சீர் வெண்சீர். கலிப்பா என்றது வேறுதளையும் விரவிவரும் தரவுதாழிசையடிகளை. கலி என்றது கலித்தளையடியை. இதுவே இரண்டுக்கும் வேறுபாடு. கலிப்பாவிலே மாச்சீர் வருதலைக் கலித்தொகையிற் "பாஅ லஞ்செவிப் பணைத்தாள் மானிரை" என்னுந் தரவடியிற் காண்க.

---

## அகவற்பா.

அகவலகத்தும் அடையா:—

கருவிளங்கனி, கூவிளங்கனி என்னும் சீர்களிரண்டும் அகவற்பாவினும் சென்று விரவிநிற்பனவாகா.

எனவே மற்றைத் தேமாங்கனி, புளிமாங்கனி என்னும் வஞ்சிச்சீர்களும் வெண்சீர்களும் அகவற்பாவிலே சிறுபான்மை வந்து விரவும் என்பது பெறப்படும். வெண்சீரும், வஞ்சிச்சீரும் இன்னிசை நிகழ வருமாயின் அகவற்பாவிலே அவையுங் கொள்ளப்படும் என்று ஆசிரியர் தொல்காப்பியர் கூறுவர்.

---

## வெண்பா.

கனி புகின் வெள்ளைத்தன்மை குன்றிப்போம்:—

வெண்பாவிலே கனிச்சீர் எனப்படும் வஞ்சிச்சீர் புகுந்து விரவுமாயின், செப்பலிசையாகிய அதனிலக்கணம் சிதைந்து வேறுப்படும்.

எனவே வெண்சீரோடு விரவியும், தனித்தும் அகவற்சீர் வெண்பாவிலே வரும் என்பது பெறப்படும்.

அயற்றளை புல்லாது:—

வெண்பாவிலே அயற்றளையாகிய இருவகையாசிரியத் தளையும், கலித்தளையும், விரவித் தழுவிநிற்பனவாகா.

---

அல்லாதவெல்லாம் தாம் சீர்மயங்கும்.—

இவற்றொடு சேரச்சொல்லப்படாத பாவாகிய வஞ்சிப்பாவும், பாவினங்களாகிய துறைதாழிசை விருத்தங்களுமாகிய எல்லாம் தத்தஞ்சீர்களோடு பிறசீர்களும் வந்து மயங்கி நிற்கப்பெறும்.

தளையும் அஃதே:—

இங்கே தளை கிளந்து கூறப்பட்ட வெண்பாவொழிந்த பாக்களும், எல்லாப்பாவினங்களும் தத்தம் தளைகளோடு பிறதளைகளும் வந்து மயங்கிநிற்கப்பெறும்.

எனவே ஆசிரியப்பாவிலும், கலிப்பாவிலும், வஞ்சிப்பாவிலும் பாவினங்களிலும் பிறதளைகள் விரவும் என்பது பெறப்படும். அல்லாதவெல்லாம் என்பது ஈண்டும் கூட்டப்பட்டது. அஃது அத்தன்மைத்து என்னும்பொருட்டு.

இக்காரிகையிலே சுருக்கச்சொல்லல் பற்றி விரவி வாராத சீர் கூறுமுகத்தால் அவ்வப்பாக்களிலே விரவி வரும் சீகளும் வெண்பாவிலே அயற்றளை புல்லாது என்னுமுகத்தால் மற்றைப்பாக்களிலே அயற்றளை மயங்கும் என்பதும் பிறவும் உய்த்துணர வைக்கப்பட்டன. பிறருரைகளெல்லாம் இங்கே இயையாமை ஆண்டும் ஈண்டும் சேரப்பார்த்துணர்க.

உதாரணம்.

குடநிலைத் தண்புறவிற் கோவல ரெடுத்தார்ப்பத்
தடநிலைப் பெருந்தொழுவிற் றகையேறு மரம்பாய்ந்து

வீங்குமணிக் கயிறொரீஇத் தாங்குவனத் தேறப்போய்க்
கலையினொடு முயலிரியக் கடிமுல்லை முறுவலிப்ப

எனவாங்கு,

ஆனொடு புல்லிப் பெரும்புதர் முனையுங்
கானுடைத் தவர்தேர் சென்ற வாறே.

இக்கலிப்பாவிலே வரும் கூடநிலை, கோவலர், கூடநிலை என்பன அகவற்சீர். வீங்குமணி, தாங்குவனம் என்பன வஞ்சிச்சீர். மற்றைய வெண்சீர். கலித்தளையோடு வெண்டளையும், ஆசிரியத்தளையும், வஞ்சித்தளையும் விரவிநிற்றலை வருஞ்சீர்நோக்கி அறிக.

நெடுவரைச் சாரற் குறுங்கோட்டுப் பலவின்
விண்டுவார் தீஞ்சுளை வீங்குகவுட் கடுவன்
உண்டு சிலம்பேறி யோங்கிய விருங்கழைப்
படிதம் பயிற்று மென்ப
மலையாக் கொலைவி லென்னையர் மலையே.

இவ்வகவற்பாவிலே வரும் குறுங்கோட்டு, சிலம்பேறி என்பன வெண்சீர். வீங்குகவுள் என்பது வஞ்சிச்சீர். மற்றைய அகவற்சீர். கலித்தளையும், வஞ்சித்தளையும், வெண்டளையும் விரவிநிற்றலை வருஞ்சீர்நோக்கி உணர்க.

மலைத்தலைய கடற்காவிரி
புனல்பரந்து பொன்கொழிக்கும்
விளைவறா வியன்கழனி

பட்டினப்பாலை என்னும் வஞ்சிநெடும்பாட்டிலுள்ள இவ்வடிகளிலே வரும் கடற்காவிரி என்பது வஞ்சிச்சீர். விளைவறா என்பது அகவற்சீர். மற்றைய வெண்சீர். கலித்தளையும், வெண்டளையும், ஆசிரியத்தளையும் விரவின.

அளவடியான் வரும்பாக்களே பெரும்பாலும் சீர்தளை நியமமுடையன. அவை போல மற்றையன நியமமுடையனவல்ல. விருத்தபேதங்களுள்ளும் மற்றைப் பாவினங்களுள்ளும் சிலசில சீர்தளை நியமமுடையனவாகவும் வருகின்றன. அவையெல்லாந் தனித்தனி கூற அமைவனவாகா. ஆங்காங்கு நோக்கி அறிக. (௬)

## அடிகட்குப்புறனடை.

இயற்றளை வெள்ளடி வஞ்சியின் பாத மகவலுள்ளான்
மயக்கப் படாவல்ல வஞ்சி மருங்கிலெஞ் சாவகவல்
கயற்கணல் லாய்கலிப் பாதமு நண்ணுங் கலியினுள்ளான்
முயக்கப் படுமுதற் காலிரு பாவு முறைமையினே.

வெண்பாவடி, வஞ்சியடி.

இயற்றளைவெள்ளடி வஞ்சியின்பாதம் அகவலுள்ளால் மயக்கப்படாவல்ல:—

*இயற்சீர்வெண்டளையமைந்து வரும் வெண்பாவினடிகளும், வஞ்சியடிகளும் அகவற்பாவினுள்ளே விரவிவருமாறு புணர்க்கப்படாதனவல்ல.*

*இயற்றளை வெள்ளடியும், வஞ்சியடியும் அகவற்பாவினுள்ளே சிறுபான்மை விரவிவரும் என்றவாறு. சிறுபான்மை என்றற்கே மயக்கப்படாவல்ல என எதிர்மறைமுகத்தாற் கூறினர். மயக்குதல் - புணர்த்துதல். இயற்றளை - இயற்சீராலாகுந்தளை.*

*உதாரணம்.*

*எறும்பி யளையிற் குறும்பல் சுனைய*
*உலைக்கல் லன்ன பாறை யேறிக்*
*கொடுவி லெயினர் பகழி மாய்க்குங்*
*கவலைத் தென்பவவர் தேர்சென்ற வாறே*
*அதுமற் றவலங் கொள்ளாது*
*நொதுமற் கலுழுமிவ் வழுங்க லூரே.* குறுந்தொகை.

*இவ்வகவற்பாவில் வருமடிகளுள்ளே எறும்பி யளையிற் குறும்பல் சுனைய என்பது இயற்றளை வெள்ளடி.*

*இருங்கட லுடுத்த பெருங்கண் மாநிலத்*
*துடைகிலை நடுவண திடைபிறர்க் கின்றித்*
*தாமே யாண்ட வேமங் காவலர்*
*இடுதிரை மணலினும் பலரே சுடுபிணக்*
*காடு பதியாகிப் போகித் தத்தம்*
*நாடு பிறர்கொளச் சென்று மாய்ந்தனரே*

*அதனுள்,*

நீயுங் கேண்மதி யத்தை வீயா
துடம்பொடு நின்ற வுயிரு மில்லை
மடங்க லுண்மை மாயமோ வன்றே
கள்ளி வேய்ந்த முள்ளியம் புறங்காட்டு
வெள்ளில் போகிய வியலு ளாங்கண்
உப்பிலாஅ வவிப்புழுக்கல்
கைக்கொண்டு பிறக்குநோக்கா
திழிபிறப்பினோ னீயப்பெற்று
நிலங்கல னாக விலங்குபலி மிசையும்
இன்னா வைகல் வாரா முன்னே
செய்திநீ முன்னிய வினையே
முந்நீர் வரைப்பக முழுதுடன் றுறந்தே. புறநானூறு.

இவ்வகவற்பாவிலே உப்பிலாஅ வவிப்புழுக்கல் என்பதும், கைக்கொண்டு பிறக்குநோக்காது என்பதும், இழிபிறப்பினோ னீயப்பெற்று என்பதும் வஞ்சியடி.

---

அகவலடி.

வஞ்சிமருங்கில் அகவலெஞ்சா:—

வஞ்சிப்பாவிலே அகவற்பாவினடிகள் குறைவின்றி வந்து மயங்கி வழங்கும்.

பெரும்பாலும்வந்து மயங்கி நடக்கும் என்றவாறு. எஞ்சாமை- குறையாமை. எஞ்சா வினைமுற்று. உரைகாரர் யாவரும் எஞ்சா வகவல் எனக்கூட்டி எச்சமாகக் கொண்டுரைப்பர். அது பொருந்தாமை அறிக.

உதாரணம்.

அகனகர் வியன்முற்றத்துச்
சுடர்நுதன் மடநோக்கி
னேரிழை மகளி ருணங்குணாக் கவருங்
கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழை
பொற்காற் புதல்வர் புரவியின் றுருட்டு
முக்காற் சிறுதேர் முன்வழி விலக்கும். பட்டினப்பாலை.

இவ்வடிகளுள்ளே நேரிழை மகளி ருணங்குணாக் கவரும் என்பது முதலிய நான்கடியும் அகவற்பாவினடி. சில வெண்டளை

யுறினும் அகவலடியேயாம். பட்டினப்பாலை என்னும் வஞ்சிப்பாட்டுள் வந்து மயங்கிய அகவலடிகள் இன்னும் பல.

---

கலியடி.

கலிப்பாதமும் நண்ணும்:—

வஞ்சிப்பாவிலே கலியடியும் சிறுபான்மை வந்து மயங்கி நடக்கும்.

உதாரணம்.

கருங்கொழிற் கலிமாக்கள் கடலிறவின் சூடுதின்றும்
வயலாமைப் புழுக்குண்டும் வறளடம்பின் மலர்மிலைந்தும்.

இவை பட்டினப்பாலை என்னும் வஞ்சிப்பாட்டுள்ளே வந்து மயங்கிய கலியடிகள்.

---

வெண்பாவடி, அகவலடி.

கலியினுள்ளால் முதற்காலிருபாவும் முறைமையின் முயக்கப்படும்:—

கலிப்பாவினுள்ளே வெண்பா அகவற்பா என்னும இருபாக்களினடிகளும் விரவிவருமாறு புணர்த்துப் பாடப்படும்.

நாலவகைப்பாக்களுள்ளே வெண்பாவும், அகவற்பாவும் முன்னிற்றல்பற்றி முதற்காலிருபா எனப்பட்டன. கால் இடப்பொருளுணரநின்ற உருபு. அடியன்றிப் பாக்களே வருமென்பாருமுளர். கலித்தொகையிலே வரும் "காமர்கடும்புனல்" என்பது முதலிய வாய இருவகையும் மருவிநிற்கும் கலிப்பாக்களை உதாரணமாக நோக்கிக்கொள்க. (ச.)

---

ஐஞ்சீரடியும், முரண்டொடையும்.

அருகிக் கலியோ டகவன் மருங்கினைஞ் சீரடியும்
வருதற் குரித்தென்பர் வான்றமிழ் நாவலர் மற்றொருசார்
கருதிற் கடையே கடையிணை பின்கடைக் கூழையுமென்
றிரணத் தொடைக்கு மொழிவ ரிடைப்புணர் வென்பதுமே

கலியோடகவன்மருங்கின் ஐஞ்சீரடியும் அருகிவருதற்கு உரித்தென்பர் வான்றமிழ்நாவலர்:—

கலிப்பாவிலும், அகவற்பாவிலும், ஐஞ்சீரடியாகிய நெடிலடியும் அருகிவருதற்கு உரிமையுடைத்தென்று கூறுவர் செந்தமிழ் நன்குணர்ந்த நாவலர்.

பெரும்பாலும் வாராதென்பார் அருகிவருதற்குரித்து என்றார். அருகிவருதல் - சிறுபான்மையாய் வருதல்.

உதாரணம்.

அணிகிளர் சிறுபொறி யவிர்துத்தி மாநாகத் தெருத்தேறித்
துணியிரும் பனிமுந்நீர் தொட்டுழந்து மலைந்தனையே.

இக்கலியடிகளுள்ளே முன்னையது ஐஞ்சீரடி.

உமணர்ச் சேர்ந்து கழிந்த மருங்கி னகன்றலை
யூர்பாழ்த் தன்ன வோமையம் பெருங்காட்
டின்னா வென்றி ராயின்
இனியவோ பெரும தமியேற்கு மனையே. குறுந்தொகை.

இவ்வகவற்பாவின் அடிகளுள்ளே முதலாமடி ஐஞ்சீரடி.

முரண்டொடை.

கருதின் கடையே கடையிணை பின் கடைக்கூழையும்
என்று மற்றொருசார் இரணத்தொடைக்கு மொழிவர் இடைப்புணர்வு என்பதும்:—

ஆராயுங்கால் கடைமுரண், கடையிணைமுரண், பின்முரண், கடைக்கூழைமுரண் என்பனவும் வரும் என்று சிலநூலார் முரண்டொடைக்கு வாக்கியசேடம் கூறுவர். அவற்றுடன் இடைப்புணர்வுமுரண் என்பதனையும் சேர்ப்பர்.

இரணத்தொடை - முரண்டொடை. சிலர்கொள்கையாதல் பற்றி முன்னர்க் கூறிற்றிலர்.

---

கடைமுரண்.

அடிகளினிறுதிச்சீர்கள் முரணிநிற்குமாறு தொடுக்கப்படுந்தொடை கடைமுரண்டொடை. கடை - இறுதி.

உதாரணம்.

வாழி திருமன்றங் கண்ட மலர்க்கண்கள்
வாழி பெருமான் புகழ்கேட்ட வார்செவிகள்
வாழி யவனை வணங்கு முடிச்சென்னி
வாழியவன் சீர்பாடும் வாய். சிதம்பரச்செய்யுட்கோவை.

இங்கே கடைச்சீர்கள் கண், செவி முதலிய பொருளான் முரணிநிற்றலால் இது கடைமுரண்டொடை.

---

கடையிணைமுரண்.

அடிகளிலே பிற்சீரிரண்டும் தம்முள்ளே முரணிநிற்குமாறு தொடுக்கப்படுந்தொடை கடையிணை முரண்டொடையாகும்.

உதாரணம்.

மீன்றேர்ந்து வருந்திய கருங்கால் வெண்குருகு
தேனார் ஞாழல விரிசினைக் குழூஉந்
தண்ணந் துறைவன் றவிர்ப்பவுந் தவிரான்
தேரோ காணலங் காண்டும்
பீரோர் வண்ணமுரு சிறுநுதல் பெரிதே.

இவ்வகவற்பாவிலே கடையிருசீர்களாகிய கருங்கால், வெண்குருகு என்பனவும், விரிசினை, குழூஉம் என்பனவும், தவிர்ப்பவும, தவிரான் என்பனவும், காணலம், காண்டும் என்பனவும், சிறுநுதல், பெரிதே என்பனவுந் தம்முள்ளே முரணின்றன.

---

பின்முரண்.

இரண்டாஞ்சீரும், இறுதிச்சீருந் தம்முள்ளே முரணிநிற்குமாறு தொடுக்கப்படுந்தொடை பின்முரண்டொடையாகும்.

உதாரணம்.

சார லோங்கிய தடந்தாட் டாழை
கொய்ம்மலர் குவிந்து தண்ணிழல் விரிந்து
தமிய மிருந்தன மாக நின்றுதன்
நயனுடைப் பணிமொழி நன்குபல புகழ்ந்து

வீங்குதொடிப் பணைத்தோ ணெகிழத்
துறந்தோ னல்லனெம் மேனியோ தீதே.

இவ்வகவற்பாவிலே இரண்டாஞ்சீரும் இறுதிச்சீருமாய் நின்ற குவிந்து, விரிந்து என்பனவும், இருநதனம், நின்றுதன் என்பனவும், நல்லனெம், தீதே என்பனவும் தம்முள்ளே முரணிநின்றன.

---

கடைக்கூழைமுரண்.

முதலாஞ்சீரொழிந்த மூன்றுசீர்களும் தம்முள்ளே முரணிநிற்குமாறு தொடுக்கப்படுந்தொடை கடைக்கூழை முரண்டொடையாகும்.

உதாரணம்.

காவியங் கருங்கட் செவ்வாய்ப் பைந்தொடி
பூவிரி சுரிமென் கூந்தலும்
வேய்புரை தோளு மணங்குமா லெமக்கே.

இவ்வகவற்பாவிலே கருங்கண், செவ்வாய், பைந்தொடி என்னும் சீர்கள் மூன்றும் தம்முள்ளே முரணி நின்றன.

---

இடைப்புணர்வுமுரண்.

இடையிருசீர்களும் தம்முள்ளே முரணிநிற்குமாறு தொடுக்கப்படுந் தொடை இடைப்புணர்வுமுரண்டொடையாகும்.

உதாரணம்.

வணங்கு சிறுமருங்குற் பேரமர்க் கண்மாதர்க்
கணங்கு புரிவ தறமாற்—பிணங்கி
நிணங்காலு முத்தலைவே னீள்சடையெங் கோமாற்
கிணங்காத போலு மிரவு. சிதம்பரச்செய்யுட்கோவை

இவ்வெண்பாவிலே முதலாமடியிலே இடையிருசீர்களாய் நின்ற சிறுமருங்குல், பேரமர்க்கண் என்பன தம்முள்ளே முரணிநின்றன. (ரு)

எதுகையும் மோனையும்.

வருக்க நெடிலினம் வந்தா லெதுகையு மோனையுமென்
றுருக்கப் பெயரா னுரைக்கப் படுமுயி ராசிடையிட்

வடிகெழுவேல் வல்லோன் வளருங் கருடக்
கொடியுடையோன் பந்தன்வரக் கூடு. பந்தனந்தாதி.

இங்கே சேர்ந்து என்புழி ரகரமெய்க்கு ஏய்ந்திழைந்த என்புழி யகரமெய் எதுகையாயிற்று.

---

வருக்கமோனை.

முன்வந்த எழுத்திற்கு அதன்வர்க்கமாயுள்ள எழுத்து வந்து மோனையாய் நிற்பது வருக்கமோனையாகும். பகலே,

பல்பூங் கானற் கிள்ளை யோப்பியும்
பாசிலைக் குளவியொடு கூதளம் விரைஇப்
பின்னுப் பிணியவிழ்ந்த நன்னெடுங் கூந்தல்
பீர்கப் பெய்து தேம்படத் திருகிப்
புனையீ ரோதி செய்குறி நசைஇப்
பூந்தார் மார்ப புனைதுட் டோன்றிப்
பெருவரை யடுக்கத் தொருவே லேந்திப்
பேயு மறியா மாவழங்கு பெருங்காட்டுப்
பைங்க ணுழுவைப் படுபகை வெரீஇப்
போங்கு சினந்தணியாப் பூணுத லொருத்தல்
போகாது வழங்கு மாரிரு ணடுநாள்
பௌவத் தன்ன பாயிரு ணீந்தி
இப்பொழுது வருகுவை யாயின்
நற்றூர் மார்ப நீண்டலெங் கதுப்பே.

இங்கே முன்வந்த பகரவெழுத்திற்குப் ப, பா முதலிய அதனை வர்க்கமெல்லாம் மோனையாயின. எழுவாயெழுத்துடன் எல்லாம் அடிமோனையாகுமாறு மெய்யளவில் ஒன்றின.

---

நெடின்மோனை.

முன்வந்த நெட்டெழுத்தல்லாத மற்றொரு நெட்டெழுத்து அதற்கு மோனையாய் வந்து நிற்பது நெடின்மோனையாகும்.

உதாரணம்.

ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை. முதுமொழிக்காஞ்சி.

இங்கே முதலிலே நின்ற ஆ என்பதற்கு ஓ என்பது நெடின் மோனையாயிற்று. மற்றைத்தொடை ஒன்றினும் அமையாமையால் மாத்திரையொப்புமை நோக்கி நெடின்மோனை என்றே இதனை வழங்குவர்.

---

### இனமோனை.

வல்லின மெல்லின இடையினங்களுள் யாதேனும் முன்வந்த எழுத்திற்கு அதனினவெழுத்து வந்து மோனையாகி நிற்பது இனமோனையாகும்.

உதாரணம்.

கயலே ருண்கண் கலுழ நாளும்
சுடர்புரை திருநுதல் பசலை பாயத்
திருந்திழை யமைத்தோ ளரும்பட ருழப்பப்
போகல் வாழி யைய பூத்த
கொழுங்கொடி யணிமலர் தயங்கப்
பெருந்தண் வாடை வரூஉம் பொழுதே.

இங்கே முன்வந்த ககரவல்லெழுத்திற்குச் சகரம் முதலிய வல்லெழுத்துக்கள் பின்னர் வந்து மோனையாயின. இது வலவின மோனைக்கு உதாரணம் என்று கையனார்காட்டிய பாட்டென்பர். வருக்கமோனை முதலிய மூன்றும் அடியில் வந்த அடிமோனைகள்.

ஓரடியிலே வருமெனப்பட்ட மோனைவகையுள் அமையாது சீரினிறுதியினிற்கும் அசையிலே தொடுக்கப்படும் மோனையும் சிறுபான்மையுண்டு. "தேனார்கமழ் தொங்கன் மீனவன் கேட்பத் தெண்ணீரருவி" என்புழி முதலில்வந்த தே என்பதற்குக் கேட்பத்தேன் என்னும் சீரினிறுதியசையின் முதலிலே நின்ற தே என்பது மோனையாயிற்று. "குமர வேள்குற மங்கையொ டிவ்விடை" என்புழிமோனையுமது.

---

### மோனை.

மோனைத்தொடையமைக்குங்கால் அளவடிசிந்தடிகளுக்கு மூன்றாஞ்சீர்க்கண்ணும், நெடிலடிக்கு மூன்றாஞ்சீர்க்கண்ணும் ஐந்தாஞ்சீர்க்கண்ணும் அமைப்பது சிறப்பினைக்கொடுக்கும். கழிநெடிலடிகளுள்ளே ஒருதூக்காய் வரும் அறுசீரடிக்கு மூன்றாஞ்சீர்க்கண்ணும் ஐந்தாஞ்

சீர்க்கண்ணும் அமைப்பது சிறப்பினைக்கொடுக்கும். "பிறியார் பிறிவே தென்னும் பெரியோய் நகவோ வென்னும்" என்பது போலப் பாதியடி ஒருதூக்கும் மற்றைப்பாதியடி ஒருதூக்குமாகச் சந்தமிரட்டி வரும் அறுசீரடிக்கு மூன்றாஞ்சீரிலே மோனைவருகைநியமம். எழுசீரடிக்கும் எண்சீரடிக்கும் ஐந்தாஞ்சீரிலே வருகைநியமம். சந்தமிரட்டி வரும் பன்னிருசீரடி முதலியவைகட்கு முதல்வந்த தூக்குற்று நின்ற பாகம் போலவே மற்றைப்பாகங்களுக்கும் மோனைவருகைநியமம். இன்னும் சான்றோர் செய்யுள்களிலே அமைந்திருக்கும் மோனைகளை ஆங்காங்கு நோக்கி அவ்வாறு அமைத்தல் நன்று.

---

## கடையாகெதுகை.

உயிர் ஆசிடையிட்டிருக்குமொருசார் இரண்டடி மூன்றாமெழுத்தும் ஒன்றி நிற்கும் எதுகையென்றாலும் சிறப்பில:—

உயிரெழுத்தும் ஆசாகவரும் எழுத்தும், இடைவிட்டு வைக்கப்பட்டிருக்கும் ஒருசாரனவும் இரண்டடியும், மூன்றாமெழுத்தும் இயைந்து இசையில் நிறைந்து நிற்கும் எதுகையும் உண்டென்று சிலநூல் சொல்லுமாயினும் அவையெல்லாம் சிறப்பில என்க.

ஒருசார் - சில. மூன்றாமெழுத்தும் என்புழி உம்மை இறந்தது தழீஇயிற்று. தலையாகெதுகை, இடையாகெதுகை, கடையாகெதுகை என எதுகைமூவகை. தலையாகெதுகையாவது சீர்முழுவதும் எழுத்தொன்றிவருவது. இடையாகெதுகையாவது இரண்டாமெழுத்து மாத்திரம் ஒன்றிவருவது. மற்றையவெல்லாம் கடையாகெதுகை என்பர். சிறப்பில என்பது பற்றி இவைகளைக் கடையாகெதுகை என்கின்றாம்.

---

## உயிரெதுகை.

முன்வந்த உயிர்மெய்யில் உயிர்மாத்திரம் பின்னும் வந்து எதுகையாய் ஒன்றி நிற்பது உயிரெதுகையாகும்.

உதாரணம்.

பனிமயிர் குளிர்ப்பன பஞ்சின் மெல்லிய
கனிமயிர் குளிர்ப்பன கண்கொ ளாதன

எலிமயிர்ப் போர்வைவைத் தெழினி வாங்கினார்
ஒலிமயிர்ச் சிகழிகை யுருவக் கொம்பனார். சிந்தாமணி.

இங்கே இரண்டாமெழுத்தாய் நின்ற உயிர்மெய்யில் நின்ற உயிரெழுத்துப் பின்னும் வந்தொன்றி எதுகையாயிற்று.

---

## ஆசெதுகை.

இரண்டாவதாய் முன்வந்த எழுத்து ஆசாய் நிற்றற்குரிய ய, ர, ல, ழ என்னும் நான்குமெய்களுள் யாதாயினும் ஒன்றன்பின் வந்து மூன்றும் எழுத்தாய் நின்று எதுகையாய் ஒன்றுவது ஆசெதுகையாகும்.

ஆசென்பதற்குப் பொருள் ஆசிடைகேரிசை என்புழிக் கூறினும்.

உதாரணம்.

யகரவாசெதுகை.

வேந்தர்கட் கரசொடு வெறுக்கை தேர்பரி
வாய்ந்தநற் றுகிலொடு வரிசைக் கேற்பன
ஈந்தனன் பல்லியந் துவைப்ப வேகிநீர்
தோய்ந்தனன் சரயுநற் றுறைக்க ணெய்தியே.
இராமாவதாரம்.

இங்கே இரண்டாமெழுத்தாய் முன் வந்த நகரமெய் வாய்ந்த என்புழியும், தோய்ந்தனன் என்புழியும் யகரமெய்யின் பின்வந்து மூன்றுமெழுத்தாய் நின்று ஆசெதுகையாயிற்று.

ரகரவாசெதுகை.

மாக்கொடி மாலையு மௌவற் பந்தரும்
கார்க்கொடி முல்லையுங் கலந்து மல்லிகைப்
பூக்கொடிப் பொதும்பரும் பொன்ன ஞாழலுந்
தூக்கொடி கமழ்ந்துதான் றுறக்கமொத்ததே. சூளாமணி.

இங்கே இரண்டாமெழுத்தாய் முன் வந்த ககரமெய் கார்க்கொடி என்புழி ரகரமெய்யின் பின்வந்து மூன்றுமெழுத்தாய் நின்று ஆசெதுகையாயிற்று.

லகரவாசெதுகை.

ஆலவே றுருவின வாயினு மாபயந்த
பால்வே றுருவின வல்லவாம்—பால்போல்

ஒருதன்மைத் தாகு மறநெறி யாபோல்
உருவு பலகொள லீங்கு. நாலடியார்.

இங்கே இரண்டாமெழுத்தாய் முன்வந்த வகரவேகாரம் பால் வேறு என்புழி லகரமெய்யின்பின்வந்து மூன்றுமெழுத்தாய் நின்று ஆசெதுகையாயிற்று.

ழகரவாசெதுகை.

அந்தரத் துள்ளே யகங்கை புறங்கையாய்
மந்தரமே போலு மனைவாழ்க்கை—மந்தரத்துள்
வாழ்கின்றே மென்று மகிழன்மின் வாளுநும்
போகின்ற பூளையே போன்று.

இங்கே வாழ்கின்றேம் என்புழி ழகரத்தின்பின் மூன்றுமெழுத்தாய் நின்ற ககரவிகரமும் போகின்ற என்புழி இரண்டாமெழுத்தாய் நின்ற ககரவிகரமும் ஒன்றி ஆசெதுகையாயிற்று.

---

இரண்டடியெதுகை.

முன்னிரண்டடியும் ஒருவகையாகப் பின்னிரண்டடியும் மற்றொருவகையாய் வருமெதுகை இரண்டடியெதுகையாகும்.

உதாரணம்.

முழவுஞ் சங்கமு முன்றின் முழங்குவ
விழவும் வேள்வும் விடுத்தலொன் றின்மையாற்
புகழ்த லாம்படித் தன்றிது பொன்னகர்
அகழ்தன் மாக்கடலன்னதொர் சும்மைத்தே. சிந்தாமணி.

இங்கே முன்னிரண்டடியும் ழகரவெதுகையாகப் பின்னிரண்டடியும் ககரவெதுகையாயிற்று.

---

மூன்றமெழுத்தெதுகை.

இரண்டாமெழுத்தொன்றுதலின்றி மூன்றுமெழுத்தொன்றி நிற்பது மூன்றுமெழுத்தொன்றெதுகை.

உதாரணம்.

மனைக்குப்பாழ் வாணுத லின்மைதான் செல்லுந்
திசைக்குப்பாழ் நட்டோரை யின்மை—இருந்த

அவைக்குப்பாழ் மூத்தோரை யின்மை தனக்குப்பாழ்
கற்றறி வில்லா வுடம்பு. நான்மணிக்கடிகை.

இங்கே இரண்டாமெழுத்தொன்றுதலின்றி மூன்றுமெழுத்தாய் நின்ற ககரமொன்றி எதுகையாயிற்று.

ஆதித் தனைச்சென் றரவந் தொடவந் நகரிலுள்ளார்
பாலித்தமுத்தும் பவளமுந் தொட்டனர் பைந்தொடியாள்
சேனைத் தலைவனைச் செங்கோ லசதியைச் சென்றுருகாற்
கூடக் கடவ னெனவேதொட் டாடன் குவிமுலையே.
அசதிக்கோவை.

இங்கே மூன்றுமெழுத்தாய் வந்த தகரமெய்க்கு இனமாகிய நகரமெய்யும் நான்காமடியில் எதுகையாயிற்று.

---

## இடையிட்டெதுகை.

முதலடியில் இரண்டாவதாய் வந்த எழுத்து இடைவிட்டு வந்து எதுகையாய் நிற்பது இடையிட்டெதுகை. இடையிட்டு வருதலால் இதனை இடையிட்டெதுகை என்றுவழங்குவர்.

உதாரணம்.

தோடா ரெல்வளை நெகிழ நாளும்
நெய்த லுண்கண் பைதல கலுழ
வாடா வவ்வரி புதைஇப் பசலையும்
வைக றோறும் பையப் பெருகின
நீடா ரிவரென நீமனங் கொண்டார்
கேளார் கொல்லோ காதலர் தோழி
ஆடாப் பௌவ மறமுகந் தெழிலி
பருவஞ் செய்யாது வலனேர்பு வளைஇ
ஓடா மலையன் வேலிற்
கடிது மின்னுமிக் கார்மழைக் குரலே.

இங்கே முதலாமடியில் வந்த இரண்டாமெழுத்து இடைவிட்டு வந்தொன்றி எதுகையாயிற்று. இங்கே சொல்லப்பட்ட உயிரெதுகை, இரண்டடியெதுகை முதலியன இக்காலத்தில் வழங்கப்படவில்லை. ஆசெதுகை ஒரோவழி உண்டு. (சு)

---

## தரவுதாழிசைகட்கடிவரையறை.

சுருங்கிற்று மூன்றடி யேனைத் தரவிரு மூன்றடியே
தரங்கக்கும் வண்ணகக் குந்தர வாவது தாழிசைப்பா
சுருங்கிற் றிரண்டடி யோக்க மிரட்டி சுரும்பிமிருந்
தரங்கக் குழலாய் சுருங்குந் தரவினிற் றாழிசையே.

### த ர வு.

சுருங்கிற்று மூன்றடி:—*தரவுகளுள்ளே சுருங்கியது மூன்றடியான் வருந் தரவேயாம்.* ஏனைத்தரவு:—*சுருங்கியதல்லாததாய தரவிற்கு அடிவரையறையில்லை.* தரங்கக்கும் வண்ணகக்கும் தரவாவது இருமூன்றடியே:—*அம்போதரங்கவொத்தாழிசைக்கலிப்பாவுக்கும், வண்ணகவொத்தாழிசைக்கலிப்பாவுக்கும் தரவென்று சொல்லப்பட்டு வருவது ஆறடியுடையதேயாம்.*

*சுருங்கிற்று வினைப்பெயர். சுருங்கதிற்கு மூன்றடி என்றெல்லை கூறுதலால பெருக்கமாகிய ஏனைத்தரவிற்கு என்பதன்பின் அடிவரையறை இல்லை என்பது குறிப்பெச்சமாகக் கொள்ளப்பட்டது. தரங்கதிற்கும் வண்ணகதிற்கும் என்பன தரங்கக்கும் வண்ணகக்கும் என விகாரமாயின. தரங்கம் என்றது அம்போதரங்கத்தினை. இருமூன்றடியே என்புழி ஏகாரம் தேற்றேகாரத்தால் அவ்விரண்டிற்குமுரிய தரவு கூடுதலும் குறைதலுமின்றி ஆறடியாயே வரும் என்பது பொருள்.*

*அம்போதரங்கவொத்தாழிசைக்கலிப்பாவின் தரவும், வண்ணகவொத்தாழிசைக்கலிப்பாவின் தரவும் ஆறடியே பெற்றுவரும் என்பதும், மற்றைக்கலிப்பாவின தரவுகளுள்ளே சுருங்கிய தரவிற்கு அடிவரையறை மூன்று என்பதும், பெருகி வருந் தரவிற்குப் பாடுவோர் கருதியதெல்லையன்றி இத்துணை என்னும் அடிவரையறை இல்லை என்பதும் இங்கே கூறப்பட்ட பொருளென உணர்க.*

---

### தா ழி சை.

தாழிசைப்பா சுருங்கிற்று இரண்டடி:—*தாழிசைப்பாக்களுள்ளே சுருங்கியது இரண்டடியான் வரும் தாழிசையாம்.* ஓக்கம் இரட்டி:—*தாழிசைகளுள்ளே பெருகியதாய் உயர்ந்து நீண்டது நான்கடியான் வரும் தாழிசையேயாம்.* தாழிசை தரவினின் சுருங்கும்:—*தாழிசைகளினடிகள் தரவினடிகளினின்றும் குறைந்து வரும்.*

ஒக்கம் - ஒங்குதலுடையது. இரட்டி - இரட்டுதலுடையது. தாழிசைப்பா இரண்டடியானுவது மூன்றடியானுவது நான்கடியானுவது வரும் என்பதும், முன்னிற்கும் தரவினடிகளினின்றும் தாழிசையினடிகள் சுருங்கி வரும் என்பதும் இங்கே கூறப்பட்ட பொருளென உணர்க.

முன்னர் வந்த கலிப்பாக்களை நோக்கி இவைகட்கும் உதாரணம் அமைத்துக்கொள்க. (எ.)

---

பொருளோ டடிமுத னிற்பது கூனது வேபொருந்தி
இருள்சேர் விலாவஞ்சி யீற்றினு நிற்கு மினியொழிந்த
மருடீர் விகாரம் வகையுளி வாழ்த்து வசைவனப்புப் [டியே.
பொருள்கோள் குறிப்பிசை யோப்புங்குறிக்கோள்பொலங்கொ

கூன்.

பொருளோடு அடிமுதல் நிற்பது கூன்:—பொருளினைத் தழுவி அடியின் முதற்கண்ணிற்பது கூன் எனப்படும். அதுவே இருள்சேர்விலாவஞ்சியீற்றினும் பொருந்தி நிற்கும்:— அதுதானே மயக்கமில்லாத வஞ்சியடியின் இறுதியினும் பொருந்திநிற்கும்.

கூன்போன்று நிற்றலிற் கூன் எனப்பட்டது. கூன் - ஒருவகைப்பாத்திரத்தின் பெயர். கூனெனினும் தனிச்சொல்லெனினும் ஒக்கும் எனபாருமுளர். ஈற்றினும் என்புழியும்மையால் வஞ்சியடியினிடையிலும் கொள்ளப்படும். இருள் - மயக்கம்.

உதாரணம்.

உதுக்காண்,

சுரந்தானு வண்கைச் சுவணமாப் பூதன
பரந்தானுப் பல்புகழ் பாடி—யிரந்தார்மாட்
டின்மை யகல்வது போல விருளிங்க
மின்னு மளிதோ் மழை.

இவ்வெண்பாவிலே உதுக்காய் என்பது பொருளைத்தழுவி அடியின்முதலிலே தனிநிற்றலாற் கூனாயிற்று.

அவரே,

கேடில் விழுப்பொருள் டருமார் பாசிலை
வாடா வள்ளியங் காடிறந் தோரே

யானே,

தோடா ரெல்வளை நெகிழ நாளும்
பாடமை சேக்கையுட் படர்கூர்ந் திசினே
அன்ன ளளிய ளென்னாது மாமழை
இன்னும் பெய்ய முழங்கி
மின்னுந் தோழியெ னின்னுயிர் குறித்தே. குறுந்தொகை.

இவ்வகவற்பாவிலே அவரோ என்பதும், யானே என்பதும் பொருளைத்தழுவி அடியின் முதலிலே தனிநிற்றலாற் கூனாயின.

உலகினுள்,

பெருந்தகையார் பெருந்தகைமை பிறழாவே பிறழினும்
இருந்தகைய விறுவரைமே லெரிபோலச் சுடர்விடுமே
சிறுதகையார் சிறுதகைமை சிறப்பெனினும் பிறழ்வின்றி
உறுதகைமை யுலகினுக்கோ ரொப்பாகித் தோன்றுமே.

இக்கலிப்பாவினடியின் முதலிலே உலகினுள் என்பது பொருளோடு தனிநிற்றலாற் கூனாயிற்று.

உலகே.

முற்கொடுத்தார் பிற்கொளவும்
பிற்கொடுத்தார் முற்கொளவும்
உறுதிவழி யொழுகு மென்ப

அதனால்,

நற்றிற நாடுத னன்மை
பற்றற யாவையும் பரிவறத் துறந்தே.

இவ்வஞ்சிப்பாவிலே உலகே என்பது பொருள்தழுவி அடியின் முதலிலே தனிநிற்றலாற் கூனாயிற்று. இங்கே அடிகளின் முதலிலே கூனாய் நின்றனபோலவும் [illegible] அறிக

களிறணைப்பக் கலங்கின காஅ
தேரோடத் துகள்கெழுமின தெருவு
மாவழங்கலின் மயக்குற்றன வழி
கலங்கழாலிற் றுறை கலக்குற்றன — புறநானூறு

இவ்வஞ்சியடிகளிலுள்ள காஅ, தெருவு, வழி, துறை என்பன நான்குங் கூன். காஅ, தெருவு என்பன அடியிறுதியில் நின்ற சீராகிய கூன்கள். வழி என்பது அடியிறுதியினின்ற அசையா

ஞய கூன். துறை என்பது அடியின் நடுவிலே நின்ற அசையாகிய கூன். இவ்வாறே சீரும் அசையும் கூனாய் நின்றவாறுணர்க. அடி கூனாய்வரும் என்பாருமுளர்.

---

### விகாரமும் பிறவும்.

இனி ஒழிந்த விகாரம் வகையுளி வாழ்த்து வசை வனப்பு பொருள்கோள் குறிப்பிசை ஒப்பும் குறிக்கோள்:—

*இப்போது சொல்லப்படாதொழிந்த விகாரம், வகையுளி, வாழ்த்து, வசை, வனப்பு, பொருள்கோள், குறிப்பிசை, ஒப்பு என்பனவற்றையும் ஆராய்ந்து அறிந்து கொள்க.*

### விகாரம்.

*செய்யுள் செய்தற்கண் சீர், தளை முதலியன அமையாது முட்டுற்றுழிச் சொற்களிற் செய்துகொள்ளப்படும் வேறுபாடு விகாரம் எனப்படும்.*

**விகாரம்**-இயற்கைநிலையினின்றும் வேறுவது. அது வலித்தல், மெலித்தல, நீட்டல், குறுக்கல், விரித்தல், தொகுத்தல் என அறுவகைப்படும். ஒருமொழிமூவழிக்குறைதலுஞ் சேர ஒன்பது வகை.

அவற்றுளே வலித்தலாவது மெலலெழுத்தினை வல்லெழுத்தாக்குதல். மெலித்தலாவது வல்லெழுத்தினை மெல்லெழுத்தாக்குதல. நீட்டலாவது குற்றெழுத்தினை நெட்டெழுத்தாக்குதல். குறுக்கலாவது நெட்டெழுத்தினைக் குற்றெழுத்தாக்குதல். விரித்தலாவது இயைபுடைய ஒரெழுத்தினை வருவித்தல. தொகுத்தலாவது இயைபுடைய ஒரெழுத்தினை மறைத்துவிடுதல. இவற்றை நன்னூல் முதலிய இலக்கணநூலகளிற் பார்த்துணர்க.

---

### வகையுளி.

*அடியின்கண் அசையொடு சீர்களை இலயம்படுமாறு இசையறுத்துக் கூறுங்கால் மொழிசிதைந்து பிரிந்திசைப்பது வகையுளியாகும்.*

**வகையுளி** - பிரிவுள்ளது. வகை - கூறுபாடு. இதனைத் தொல்காப்பியர் அசைகளையும் சீர்களையும் இசையொடு சேர்த்தி வேறுபடுத்தலென்பர். பொருளினை நோக்காது இசையையே நோக்கி

விட்டிசைக்குமாறு சொற்களைப்பிளந்து உச்சரித்தலே வகையுளி என்பாருமுளர்.

உதாரணம்.

போதலர்கா வேரிக்கும் பூம்புகார்க் கும்புதிய
காத லெனப்பிறந்த காகளைத—தாதா
வரிவண்டார் பூங்குழலாய் யாப்பத் தனைப்போற்
பரிவுண்டோ பாவலர்தம் பேல். பந்தனந்தாதி.

இங்ஙே போதலர்கா வேரிக்கும் என்றது வகையுளி. சிதைந்து விட்டிசைத்த மொழி காவேரி என்பது. காவேரி என்பதிற் கா என்பது முன்னாச் சென்று போதலர்கா என்றாய் ஒரு சீரா யிற்று. வேரிக்கும் என்பது மற்றையசீர். சிதைந்து விட்டிசைக்கும் மொழியாகாது காவேரி என்று இசைபெறத் துச்சரிக்கப்படுமா யின், இசையும் வெண்பாவிலிலக்கணமுஞ் சிதையுபடும். பூம்பு கார்க் கும்புதிய, யாப்பத் தனைப்போல் என்பனவும் வகை யுளி. மறையைவன சீர் முடிந்தும்ச சொற்களும் விட்டிசையாது முடிந்து பொருள்பயக்க நிரலால வகையுளியாகா. பாடுநர்க்கும் என்புழிப் போலச் சேர்ந்திசைப்பதையும் சிலர் வகையுளி எனபர். பாடுநர்க்கும் என்பதிலே நர் என்பது விகுதி. மேலே சொகதொடு கூடி டுநர் என நிரையாகக் கொள்ளப்படும்.

---

வாழ்த்து.

மெய்வாழ்த்தும் இருபுறவாழ்த்தும் என வாழ்த்து இரண்டு வகையாகி வழங்கப்படும் என்பர்.

உதாரணம்.

மெய்வாழ்த்து.

கார்நறு நீலங் கடிகயத்துள் வைகலும்
நீரிலே நின்ற பயன்கொல்லோ—கூர்நுனைவேல்
வண்டிருக்க நக்கதார் வாயான் வழுதியாற்
கொண்டிருக்கப் பெற்ற குணம். முத்தொள்ளாயிரம்.

இருபுறவாழ்த்து.

பண்டு மொருகாற்றன் பைந்தொடியைக் கோட்பட்டு
வெங்கடத்து வில்லேற்றிக் கொண்டிருந்தான்—தென்
பூமான் திருமகளுக் கின்னும் புலம்புமால் [களந்தைப்
வாமான்றேர் வையையார் கோ.

---

## வகை.

மெய்வகையும் இருபுறவகையும் என வகையும் இரு வகையாகி வழங்கப்படும் என்பர்.

உதாரணம்.

மெய்வகை.

*தந்தை யிலைச்சுமடன் றாய்தோழி தான்பார்ப்பான்*
*எந்தைக் கிளைதெங்ஙன் பட்டதுகொன்—முந்தை*
*அவிபுணவி ஞர்தேரின் யாவதாங் கொல்லோ*
*கவிகண்ண ஞர்தம் பிறப்பு.*

இருபுறவகை.

*படையொடு போகாது நின்றெறிந்தா னென்றுங்*
*கொடையொடு நல்லார்கட் டாழ்ந்தான்—படையொடு*
*பாடி வழங்குந் தெருவெல்லாந் தான்சென்று*
*கோடி வழங்கு மகன்.*

இரும்புறவாழ்த்து என்றும், இரும்புறவகை என்றும் பாடாந் தரமுமுண்டு. இவையிரண்டும் நன்கு புலப்படாமையால் விரித்துக் கூறப்படவில்லை.

---

## வனப்பு.

வனப்பாவது பலவாகிய உறுப்புக்கள் ஒருங்கு திரண்டவழிப் பெறுவதொரு விசேடவழகு.

அஃது அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என எட்டுவகைப்படும். இவை பெரும்பாலும் தொடர்நிலைச் செய்யுட்கே உரியன. இவற்றின் விரிவைத் தொல்காப்பியவுரையிற் காண்க.

---

## பொருள்கோள்.

பொருள்கோளாவது செய்யுள்களிலே தொடுக்கப் பட்டிருக்கும் சொற்களை இணங்கும் வழியறிந்து புணரச் செய்து பொருள்கொள்ளும் முறை.

அது நிரனிறை, சுண்ணம், அடிமறி, மொழிமாற்று, பூட்டுவில், யாற்றுநீர், தாப்பிசை, அளைமறிபாப்பு, கொண்டு கூட்டு என ஒன்பது வகைப்படும்.

அவற்றுள்ளே சுண்ணமாவது அளவடியாய்நின்ற ஈரடிக்கண்ணுளவாகிய எண்சீரைத் துணித்து இயையும்வழி அறிந்து கூட்டி இயற்றப்படுவது.

சுண்ணம்போலச் சிதராய்ப்பரந்து கிடத்தலிற் சுண்ணம் எனப்பட்டது. சுண்ணம் அளவடியிரண்டனுளல்லது வாராது.

உதாரணம்.

சுரையாழ வம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை.

இங்கே ஆழ, மிதப்ப, நீத்து, நிலை என்பனவும், சுரை, அம்மி, யானை, முயற்கு என்பனவும் நின்றுழி நிற்ப இயையாமையின் சுரைமிதப்ப, அம்மியாழ, யானைக்குநிலை, முயற்குநீத்து எனத்துணித்துக் கூட்ட இயைந்தவாறு காண்க.

மற்றைய நிரனிறை, அடிமறிமுதலியவைகளை நன்னூல் முதலிய இலக்கணநூல்களிற் காண்க. பொருள்கோளை யாப்பிற் கூறியது வடநூன் மதம்.

---

குறிப்பிசை.

குறிப்பிசையாவது சொற்குக் காரணமாகிய எழுத்திசையல்லாததாய் ஒன்றினின்றும் தோன்றும் இசையைக் குறிப்பாகக்காட்டி அதற்கு அநுகரணமாய் வரும் இசையாகும்.

அநுகரணம் - ஒப்பாகத் தோன்றுவது. இது செய்யுளில் வருங்காற் சீர்தளைகட்கு இயையுமாறு அசையாகக் கொள்ளப்படும்.

உதாரணம்.

மன்றலங் கொன்றை மலர்மிலைந் துஃகுவஃ
தென்று திரியு மிடைமகனே—சென்று
பறியாட்டை யுண்ணுமை வன்கையால் வல்லே
அறியாயோ வண்ணுக்கு மாறு. இடைக்காடர் ஊசிமுறி.

இவ்வெண்பாவில் வரும் முதலாம் அடியின் நான்காஞ்சீர் குறிப்பிசை. இதற்கு எழுத்துக்கள் அமைத்துக்கொள்வது அரிது. ஆயினும் உஃகுவஃ எனக்கொண்டு தேமாங்காய் என்னும் வாய்பாட்டு வெண்சீராகக் கொள்ளப்படும். உஃ - நேர். கு - நேர்,

வஃ - நேர். இவ்வாறு கொள்ளாக்கால் இடைக்காடர் இயற்றிய ஊசிமுறியாகிய இவ்வெண்பா தனக்குரிய இலக்கணத்தினின்றும் சிதைவுறும்.

---

## ஒப்பு.

சீர், அடி முதலியவற்றால் மிக்கும், குறைந்தும் வேறுபட்டுப் பாவிலாவது பாவினத்திலாவது யாதாயினும் ஒன்றனைப்போன்று வருவது ஒப்பு எனப்படும்.

ஒப்பாகிநிற்றலுடைமையால் ஒப்பெனப்பட்டது.

உதாரணம்.

*உதிரந் துவரிய வேங்கை யுகிர்போல்*
*எதிரி முருக்கரும்ப வீர்ந்தண்கார் நீங்க—எதிருநர்க்*
*கின்பம் பயந்த விளவேனில் காண்டொறுந்*
*துன்பங் கலந்தழியு நெஞ்சு.* ஐந்திணையைம்பது.

இங்கே இரண்டாமடி ஒருசீர் மிக்கு ஐஞ்சீரடியாய் வரினும் வெண்பாவுக்குரிய இலக்கணம் பெரிதும் அமைந்து நிற்றலால் வெண்பாவினை ஒப்பதெனக்கொண்டு இதுவும் அதன்பாற்சார்த்தி வழங்கப்படும். ஐஞ்சீரடியும் வெண்பாவில வரும் என்று தொல்காப்பியம் கூறுமாயினும் இந்நூலாசிரியருக்கு அது கருத்தன்மை "அருகிக் கலியொடுகவன்மருட்கினையுஞ் சீரடியும் வருதற்குரித் தென்பா" என்பதனாற் பெறப்பட்டது.

*வஞ்சி வெளிய குருகெல்லாம் பஞ்சவன்*
*நான்மாடக் கூடலிற் கல்வளிது*
*சோழ னுறந்தை கரும்பினிது தொண்டைமான்*
*கச்சியுட் காக்கை கரிது.* ஔவைபாடல்.

இரண்டாமடி ஒருசீர்குறைந்து முச்சீரடியாய் வரினும் வெண்பாவுக்குரிய இலக்கணம் பெரிதும் அமைந்து நிற்றலால் இதுவும் அதன்பாற் சேர்த்து வழங்கப்படும். இதனைச் சவலைவெண்பா என்று மற்றொருவகையாக்குவாருமுளர்.

*கோழியுங் கூவின குக்கில் குரலியம்புந்*
*தாழியு ணீலத் தடங்கணீர் போதுமினோ*
*ஆழிசூழ் வையத் தறிவ னடியேத்திக்*
*கூழை நனையக் குடைந்துங் குளிர்புனல்*
*ஊழியுண் மன்னுவோ மென்றேலோ ரெம்பாவாய்.*

இது நாற்சீர்கொண்ட அளவடி ஐந்தினால் வந்த விருத்தம். இதனைச் சிலர் கலிவிருத்தத்திலும், சிலர் தரவுகொச்சகத்திலும் அமைப்பர்.

நீல நிறத்தனவாய் நெய்கனிந்து போதவிழ்ந்து
கோலங் குயின்ற குழல்வாழி நெஞ்சே
கோலங் குயின்ற குழலுங் கொழுஞ்சிகையும்
காலக் கனலெரியின் வேம்வாழி நெஞ்சே
காலக் கனலெரியின் வேவன கண்டாலும்
சால மயங்குவ தென்வாழி நெஞ்சே. வளையாபதி.

இது நாற்சீர்கொண்ட ஆறடியான் வந்த விருத்தம். இதனை யுஞ் சிலர் கலிவிருத்தம் என்றும், சிலர் தரவுகொச்சகம் என்றுங் கூறுவர்.

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே.
தேவாரம்.

இறுதிச்சீர் அசைமிகுந்து வரினும் இதனைச் சந்தமிகுந்துவந்த அறுசீர்விருத்தம் என்றே கொள்ளப்படும். வேறு சிலர் தேவாரமா யிருத்தலால் இசைப்பாவில் அமைக்கவேண்டும் என்பர்.

திங்கட் குடையுடைச் சேரனுஞ் சோழனும் பாண்டியனும்
மங்கைக் கறுகிட வந்துநின் றார்பணப் பந்தரிலே
சங்கொக்க வெண்குருத் தீன்றுபச் சோலை சலசலத்துக்
கொங்கிற் குறத்தி குவிமுலை போலக் குரும்பைவிட்டு
நுங்குக்கண் முற்றி யடிக்கண் கறுத்து நுனிசிவந்து
பங்குக்கு மூன்று பழந்தர வேண்டும் பனந்துண்டமே.
ஔவைபாடல்.

ஐஞ்சீர்கொண்ட ஆறடியான் வரினும் கட்டளைக்கலித்துறைக்குரிய இலக்கணம் அமைந்து வருதலால் இதனையும் கட்டளைக் கலித்துறையில் அமைப்பர். இன்னும் சான்றோர் செய்யுள்களுள்ளே இவ்வாறே ஒப்பெனப்படுமாறு வருவன பல. அவைகளையெல்லாம் ஆராய்ந்து பாவிலாவது பாவினத்திலாவது பொருந்துமியல்புடையதொன்றில் அமைத்து முடித்தல் அறிஞர் கடனாகும்.

இனி ஒப்பும் என்புழியும்மையால் புனைந்துரை, அங்கதம், பிசி, மந்திரம் முதலியனவும், செய்யுள்களிலே வரற்பாலனவல்ல என விலக்கப்பட்ட குற்றங்களும் பிறவும் கொள்ளப்படும்.

புனைந்துரையாவது இல்லதனையும் உள்ளதனையும் அலங்கரித்துக் கூறுவது. அது சிறியதொன்றைப் பெரியதாகவும் பெரியதொன்றைச் சிறியதாகவும் கூறுதல் முதலாயின. அங்கதம், பிசி முதலியனவற்றைத் தொல்காப்பியத்திற் காண்க.

செய்யுள்களை அறிஞராயுள்ளோர் அங்கீகரியாவண்ணம் செய்வனவாகிய வழுக்களைத் தமிழ்நூலாருள்ளே சிலர் எழுத்துவழு, சொல்வழு, பொருள்வழு, யாப்புவழு, அணிவழு, அனந்தவழு என ஆறாகக் கூறுவர். அவற்றுள்ளே சொல்வழு, பொருள்வழு எனனும் இரண்டினையும் சிலர் முக்கியமாகக் கொள்வர். வடநூலாருள்ளே சிலர் சொல்வழு, சொற்றொடர்வழு, பொருள்வழு என வழுக்களை மூன்றாக்கி மூன்றையுந் தனித்தனி பதினாறாக விரித்துக் கூறுவர்.

அவற்றுள்ளே வடநூலார் கூறிய சொல்வழுக்களையும், தமிழ்நூலார் கூறிய அனந்தவழுக்களையும் ஈண்டுக் கூறுதும்.

சொல்வழு.

| | |
|---|---|
| க. அசாது. | கூ. கிலிட்டம். |
| உ. அப்பிரயுக்தம். | க0. கூடார்த்தம். |
| ௩. கஷ்டம். | கக. நேயார்த்தம். |
| ச. அநர்த்தகம். | கஉ. சந்திக்தம். |
| ரு. அநபியார்த்தம். | க௩. விருத்தம். |
| சா. அபுட்டார்த்தம். | கச. அப்பிரயோசகம். |
| எ. அசமர்த்தம். | கரு. தேசியம். |
| அ. அப்பிரதீதம். | கசா. கிராமியம். |

க. இவற்றுள்ளே அசாதுவாவது இலக்கணநூல்களுக்கு மாறுபாடாயுள்ள சொற்பிரயோகம். அசாது - சாதுவல்லாதது. அ - அன்மை. சாது - இலக்கணத்திற்கு இயைந்தசொல், நற்சொல்.

உ. அப்பிரயுக்தமாவது முன்னரோரிடத்தும் கற்றுணர்ந்த சான்றோர்களாற் பிரயோகிக்கப்படாத சொற்பிரயோகம். அப்பிரயுக்தம் - பிரயோகிக்கப்படாதது.

௩. கஷ்டமாவது கேட்போர் காதுக்கு இன்பம் பயவாத சொற்பிரயோகம். கஷ்டம் - பீடைபயப்பது. தொல்காப்பியர் இதனைக் "கேட்போர்க்கின்னா யாப்பிற்றாதல்" என்பர்.

௪. அனர்த்தகமாவது அடிகளை நிரப்பும்பொருட்டாக இடருற்றுச் சேர்த்துப் பொருத்தி முடிக்கும் பயனில்லாச் சொற்பிரயோகம். அனர்த்தம் - பயனில்லாதது.

௫. அந்நியார்த்தமாவது கருதியபொருள் பயத்தற்கேற்ற ஆற்றலழிந்து வேறு பொருள்பயக்கும் சொற்பிரயோகம். அந்நியார்த்தம் - வேறுபொருள்.

௬. அபுட்டார்த்தமாவது அற்பமான ஒரு சொல்லினாலே சொல்லி முடிக்கும் ஒரு பொருளின்பொருட்டு வீணே சொலப்படும் வெருசொற்பிரயோகம். அபுட்டார்த்தம் - பெலமில்லாப் பொருளுடையது.

௭. அசமர்த்தமாவது கருதிய பொருட்குப் பொருத்தமில்லாத சொற்பிரயோகம். அசமர்த்தம் - பொருத்தமில்லாதது.

௮. அப்பிரதீதமாவது அப்பியாசத்திரங்கொண்டன்றி மற்றெவ்வழியாலும் பொருளறியப்படாத சொற்பிரயோகம். அப்பிரதீதம் - அறியப்படாதது.

௯. கிலிட்டமாவது வெருசொற்படித்துக் கிலேசமுற்று வெகுதூரஞ் சென்றபின் கருதிய பொருள்பயக்குஞ் சொற்பிரயோகம். கிலிட்டம் - கிலேசமபயப்பது.

௧௦. கூடார்த்தமாவது கருதிய பொருட்கு வழக்கமில்லாத அப்பிரசித்தமான சொற்பிரயோகம். கூடார்த்தம் - மறைபொருளுடையது.

௧௧. நேயார்த்தமாவது வெளிரொன்றினாலும் புலப்படாமற் பாடுவோனாலே கற்பிதது வைக்கப்பட்ட சொற்பிரயோகம். நேயார்த்தம்-புலப்படும் வரையும் கொண்டுபோகப்படும் பொருளுடையது.

௧௨. சந்திக்தமாவது இதுவோ அதுவோ என ஐயுறுதற்கிடமான பொருளுடைய சொற்பிரயோகம். சந்திக்தம - சந்தேகத்தோடு கூடியது.

௧௩. விபரீதமாவது கருதிய பொருட்கு மறுதலைப் பொருள் பயக்குஞ் சொற்பிரயோகம். விபரீதம் - பிரதிகூலம்.

௧௪. அப்பிரயோசகமாவது குறித்த பொருளுக்கு அநுகூலமாகாத அடைமொழிப்பிரயோகம். அப்பிரயோசகம் - பிரயோசனமில்லாதது.

௧௫. தேசியமாவது வியுற்பத்திசெய்தற்கு இசையாதனவாயுள்ள வேற்றுத் தேசச் சொற்பிரயோகம். தேசியம்-தேசசம்பந்தமானசொல்.

கசு. கிராமியமாவது கேட்போர்க்கு அருவருப்பினை விளைவிக்கும் அசப்பியம், அமங்கலம், நிந்தை முதலிய பொருளமைந்த சொற்பிரயோகம். கிராமியம் - கிராமத்திற்பிறந்தது, இழிசனர்மொழி.

இப்பதினாறுமே சொல்வழுக்கள். தமிழ்நூலாருள்ளே சிலர் சொல்வழுவை எழுவகையாகக் கூறுவர். வடநூலார் கூறிய சொற்றொடர்வழுவையும், பொருள்வழுவையும், தமிழ்நூலார் கூறிய ஆனந்தவழுவொழிந்த மற்றை வழுக்களையும் ஆங்காங்குக் கண்டுகொள்க. இனி ஆனந்தக்குற்றத்தையுங் கூறுதும்.

## ஆனந்தக்குற்றம்.

செய்யுளிலே அமைக்கப்பட்டிருக்கும் பொருட்குக் கேடுபயக்கும் குற்றம் ஆனந்தக்குற்றம் எனப்படும்.

ஆனந்தம் - கேடு, சாக்காடு. அஃது எழுத்தானந்தம், சொல்லானந்தம், பொருளானந்தம், யாப்பானந்தம், தூக்கானந்தம், தொடையானந்தம் என அறுவகைப்படும் என்பர். அவற்றுள்ளே முக்கியமாயுள்ள எழுத்தானந்தம், சொல்லானந்தம் என்னும் இரண்டினையும் ஈண்டுக் கூறுதும்.

### எழுத்தானந்தம்.

பாட்டுடைத்தலைவனுடைய இயற்பெயரைச் சார்ந்து நிற்குமாறு அளபெடைவைத்துப் பாடப்படுவது எழுத்தானந்தம் என்னும் குற்றமாகும்.

உதாரணம்.

ஆழி யிழைப்பப் பகல்போ மிரவெல்லாந்
தோழி துணையாத் துயர்தீருந்—தோழி
நறுமாலை தாரார் திரையவோஒ வென்னுஞ்
செறுமாலை சென்றடையும் போது. பொய்கைவாக்கு.

இங்கே திரையன் என்னும் பாட்டுடைத்தலைவனுடைய இயற்பெயரைச்சார்ந்து அளபெடைநின்றதலால் திரையவோஒ என்பது எழுத்தானந்தம்.

### சொல்லானந்தம்.

பாட்டுடைத்தலைவனுடைய இயற்பெயரைச்சார்த்தி அமங்கலம் பயக்கும் வினைச்சொற்களை வைத்துப்பாடுவது சொல்லானந்தம் எனப்படும் குற்றமாம். அமங்கலம் - தீமை.

உதாரணம்.

என்னிற் பொலிந்த திவள்முக மென்றெண்ணித்
தன்னிற் குறைபடுவான் றண்மதிய—மின்னி
விரிந்திலங்கும் வெண்குடைக்கீழ்ச் செங்கோல் விசயன்
எரிந்திலங்கும் வேலி னெழும்.

இங்கே விசயன் என்னும் இயற்பெயரைச் சார்ந்து எரிந்து என்னும் அமங்கலச்சொல் வைக்கப்பட்டிருத்தலால் விசயனெரிந் திலங்கு என்பது செயலானதும்.

முன்னுரைகாரர் யாவரும் ஒப்பும் என்பதி உண்மைகொண்டே வண்ணங்களையும் நாட்டிச் சேர்த்து விரித்துரைத்தார். இந் நூலாசிரியர் வண்ணங்களுக்குச் சுருக்கவிதியாகக் கூறிய "தூங்கேந்தடுக்கு" என்னுங் காரிகையை உரைக்கு மேற்கோளாக்கிக் கூறினர். அவரெல்லாம் ஆசிரியர் வண்ணங்களைப்பற்றிக் கூறிற்றிலராயின், இறுதியிலே நூலிற் கூறிய விடயங்களுக்குத் தொகை கூறுங்கால் "ஒழுகிய வண்ணங்க ணூறு" என்றார் என்பதனையும் நோக்கிலர். ஒழிபிற்காரிகைகளின் முதனினைப்புக்களுணர்த்திய "மிகைநிரை விட்டிசை" என்னுங் காரிகையிலே "சீய தூங்கேந்தடுக்கு" என்ற முதனினைப்பினையும் நோக்கிலர். இங்ஙனம் விடப்பட்ட "தூங்கேந்தடுக்கு" என்னுங் காரிகையை முறையே நாட்டிச் சேர்த்து வண்ணங்கள் நூற்றினையும் ஆசிரியர் கூறியவாறு கூறுதும். (௮)

---

வண்ணம்.

தூங்கேந் தடுக்கல் பிரிதன் மயங்கிசை சேர்ந்தவற்றைப்
பாங்கே யகவ லொழுகல் வலிமெலிப் பாற்படுத்தி
ஓங்கோர் குறினெடில் வல்லின மெல்லின மோடிடையைத்
தாங்கா வுறழ்தர வண்ணங்க ணூறுந் தலைப்படுமே.

இ - ள். தூங்கு, ஏந்து, அடுக்கல், பிரிதல், மயங்கு என்னும் ஐந்தொடும் இசை என்பதனைச் சேர்த்துச்சொல்லி அவையைந்தனையும் அகவல், ஒழுகல், வலி, மெலி என்னும் நான்கிற்கும் பின்னிறுத்தி குறில், நெடில், வலி, மெலி, இடை என்னும் ஐந்தனையும் அவற்றின்முன்னே நிறுத்தி உறழ்ந்து முடிக்க வண்ணங்கள் நூறும் வந்து விரிந்து பொருந்தும். எ - று.

## வரலாறு.

### தூங்கிசைவண்ணம் உ0.

குறிலகவற்றூங்கிசை.
நெடிலகவற்றூங்கிசை.
வலியகவற்றூங்கிசை.
மெலியகவற்றூங்கிசை.
இடையகவற்றூங்கிசை.
குறிலொழுகற்றூங்கிசை.
நெடிலொழுகற்றூங்கிசை.
வலியொழுகற்றூங்கிசை.
மெலியொழுகற்றூங்கிசை.
இடையொழுகற்றூங்கிசை.

குறில்வல்லிசைத்தூங்கிசை.
நெடில்வல்லிசைத்தூங்கிசை.
வலிவல்லிசைத்தூங்கிசை.
மெலிவல்லிசைத்தூங்கிசை.
இடைவல்லிசைத்தூங்கிசை.
குறின்மெல்லிசைத்தூங்கிசை.
நெடின்மெல்லிசைத்தூங்கிசை.
வலிமெல்லிசைத்தூங்கிசை.
மெலிமெல்லிசைத்தூங்கிசை.
இடைமெல்லிசைத்தூங்கிசை.

---

### ஏந்திசைவண்ணம் உ0.

குறிலகவலேந்திசை.
நெடிலகவலேந்திசை.
வலியகவலேந்திசை.
மெலியகவலேந்திசை.
இடையகவலேந்திசை.
குறிலொழுகலேந்திசை.
நெடிலொழுகலேந்திசை.
வலியொழுகலேந்திசை.
மெலியொழுகலேந்திசை.
இடையொழுகலேந்திசை.

குறில்வல்லிசையேந்திசை.
நெடில்வல்லிசையேந்திசை.
வலிவல்லிசையேந்திசை.
மெலிவல்லிசையேந்திசை.
இடைவல்லிசையேந்திசை.
குறின்மெல்லிசையேந்திசை.
நெடின்மெல்லிசையேந்திசை.
வலிமெல்லிசையேந்திசை.
மெலிமெல்லிசையேந்திசை.
இடைமெல்லிசையேந்திசை.

---

### அடுக்கிசைவண்ணம் உ0.

குறிலகவலடுக்கிசை.
நெடிலகவலடுக்கிசை.
வலியகவலடுக்கிசை.
மெலியகவலடுக்கிசை.
இடையகவலடுக்கிசை.
குறிலொழுகலடுக்கிசை.
நெடிலொழுகலடுக்கிசை.
வலியொழுகலடுக்கிசை.
மெலியொழுகலடுக்கிசை.
இடையொழுகலடுக்கிசை.

குறில்வல்லிசையடுக்கிசை.
நெடில்வல்லிசையடுக்கிசை.
வலிவல்லிசையடுக்கிசை.
மெலிவல்லிசையடுக்கிசை.
இடைவல்லிசையடுக்கிசை.
குறின்மெல்லிசையடுக்கிசை.
நெடின்மெல்லிசையடுக்கிசை.
வலிமெல்லிசையடுக்கிசை.
மெலிமெல்லிசையடுக்கிசை.
இடைமெல்லிசையடுக்கிசை.

---

### பிரிந்திசைவண்ணம் உ0.

குறிலகவற்பிரிந்திசை.
நெடிலகவற்பிரிந்திசை.

வலியகவற்பிரிந்திசை.
மெலியகவற்பிரிந்திசை.

இடையகவற்பிரிந்திசை.
குறிலொழுகற்பிரிந்திசை.
நெடிலொழுகற்பிரிந்திசை.
வலியொழுகற்பிரிந்திசை.
மெலியொழுகற்பிரிந்திசை.
இடையொழுகற்பிரிந்திசை.
குறில்வல்லிசைப்பிரிந்திசை.
நெடில்வல்லிசைப்பிரிந்திசை.
வலிவல்லிசைப்பிரிந்திசை.
மெலிவல்லிசைப்பிரிந்திசை.
இடைவல்லிசைப்பிரிந்திசை.
குறின்மெல்லிசைப்பிரிந்திசை.
நெடின்மெல்லிசைப்பிரிந்திசை.
வலிமெல்லிசைப்பிரிந்திசை.
மெலிமெல்லிசைப்பிரிந்திசை.
இடைமெல்லிசைப்பிரிந்திசை.

### மயங்கிசைவண்ணம் 20.

குறிலகவன்மயங்கிசை.
நெடிலகவன்மயங்கிசை.
வலியகவன்மயங்கிசை.
மெலியகவன்மயங்கிசை.
இடையகவன்மயங்கிசை.
குறிலொழுகன்மயங்கிசை.
நெடிலொழுகன்மயங்கிசை.
வலியொழுகன்மயங்கிசை.
மெலியொழுகன்மயங்கிசை.
இடையொழுகன்மயங்கிசை.
குறில்வல்லிசைமயங்கிசை.
நெடில்வல்லிசைமயங்கிசை.
வலிவல்லிசைமயங்கிசை.
மெலிவல்லிசைமயங்கிசை.
இடைவல்லிசைமயங்கிசை.
குறின்மெல்லிசைமயங்கிசை.
நெடின்மெல்லிசைமயங்கிசை.
வலிமெல்லிசைமயங்கிசை.
மெலிமெல்லிசைமயங்கிசை.
இடைமெல்லிசைமயங்கிசை.

### தூங்கிசைவண்ணம்.

குறிலகவற்றூங்கிசை முதலிய தூங்கிசைவண்ணங்கள் இருபதும் முதுபிடி நடந்தாற்போலவும் ஒந்தி நடந்தாற்போலவும் நாரைப்பறவை நடந்தாற்போலவும் தூங்கி இசைத்து வரும். இது தூங்கியிசைத்து வரலாற் றூங்கிசை எனப்பட்டது. தூங்கல் - எழுச்சியும் விரைவுமின்றித்தாழ்தல்.

உதாரணம்.

வினையொழி பொழுதின்கட் செல்வமே போல வஃகிச்
சுனையெழு குவளையு மாம்பலுந் தீந்து வாடிக்
கனையெரி கழைநீண்டிக் காடுவெந் தோடு கில்லா
நனைகவு ளெழில்வேழ நாவசைந் தெய்தி யாங்கு.

இதுவும், இதுபோன்ற பிற செய்யுள்களும், ஆசிரியப்பாக்களும், பாவைப்பாட்டும், இன்னோரன்னபிறவும் குறிலகவற்றூங்கிசைவண்ணம் எனப்படும். பாவைப்பாட்டுத் திருவாசகம் முதலியவைகளிலே வரும் திருவெம்பாவைப்பாட்டு. இங்கே காட்டப்பட்ட உதாரணத்திலே குற்றெழுத்துப் பயின்ற அகவற்சீர் பெரும்

பாலும் வருதலுந் தூங்கிசை பிறத்தலும் அறிதற்பாலன. இவ்வாறே நெடில், வலி, மெலி, இடை என்னும் மற்றை எழுத்துக்களோடு வரும் அகவற்றூங்கிசைகளையும் அறிந்துகொள்க.

கோலமலர் கொண்டுசில மந்திமலி வுடைத்தாய்ச்
சோலைதொறுந் தாழ்ந்துபொழிற் சோர்விலுயர் விஞ்சை
நீலமலர்க் கண்ணினவர் நீடுகனி யேத்தச்
சீலமிகு நாதனடி சேரவினை சேரா.

இதுவும், இதுபோன்ற பிற செய்யுள்களும், வஞ்சிப்பாவும் வஞ்சிப்பாவினினமும் குறிலொழுகற்றூங்கிசை எனப்படும். இவ்வாறே நெடில், வலி, மெலி, இடை என்னும் மற்றை எழுத்துக்களோடு வரும ஒழுகற்றூங்கிசைகளையும் அறிந்துகொள்க.

ஏறுயர் கொடியி னிருவிசும் பதிரு
 மெறிமுர சதிர்கடற் றானை
வீறுயர் மணிக்கால் வெண்குடை யோங்கு
 தண்டுறை யின்பழை யாற்று
மாறடு படிவ மதியுறு நகருண்
 மாதவ னேதமில் பாதம்
வீறடு நெறிக ளாழ்கதி வீழ
 விளங்கிய விழுத்துணை யாமே.

இதுவும், இதுபோன்ற பிற செய்யுள்களும் குறில்வல்லிசைத் தூங்கிசைவண்ணம் எனப்படும். இவ்வாறே நெடில், வலி, மெலி, இடை என்னும் மற்றையெழுத்துக்களோடு வரும் வல்லிசைத்தூங்கிசைகளையும் அறிந்துகொள்க.

தாழி பொங்கு மலர்க்கண் ணவர்தன்னடி
பாழி பொங்கு புனலார் பழையாற்றுள்
ஊழி நின்ற மதியான் மதிசேர்ந்து
வாழி யென்று வணங்க வினைவாரா.

இதுவும், இதுபோன்ற பிற செய்யுள்களும் குறின்மெல்லிசைத்தூங்கிசைவண்ணம் எனப்படும். இவ்வாறே மற்றையெழுத்துக்களோடு வரும் மெல்லிசைத் தூங்கிசைகளையும் அறிந்துகொள்க.

இங்கே தூங்கிசைவண்ணம் இருபதுள்ளே குறிலடுத்துவரும் அகவல், ஒழுகல், வலி, மெலி என்னும் நான்கிசைகளுங் காட்டப்பட்டன.

## ஏந்திசைவண்ணம்.

குறிலகவலேந்திசை முதலிய ஏந்திசைவண்ணங்கள் இருபதும் மதயானை நடந்தாற்போலவும், பாம்புபடமெடுத்தோங்கினாற்போலவும், புள்ளோங்கிப் பறந்தாற்போலவும் ஏந்தலாய் இசைத்து வரும். ஏந்தல் - உச்சம். புள் - பறவை.

### உதாரணம்.

களவினாற் றொணர்ந்தவெங் காணமும் விழுப்பொருளும்
உளவெனினும் யான்றுய்ப்ப னுலவாது கிடந்தமையால்
வளையினாற் பொலிந்தகை வாட்கண்ணாள் வழிப்படூஉங்
களைவாரிற் கனையிருட்கட் காணேன்மற் றதுவல்லால்.

இதுவும், இதுபோன்ற பிற கலிப்பாக்களும், தும்பிப்பாட்டும் குறிலகவலேந்திசைவண்ணம் எனப்படும். இவ்வாறே நெடில், வலி, மெலி, இடை என்னும் மற்றையெழுத்துக்களோடு வரும் அகவலேந்திசைகளையும் அறிந்துகொள்க. தும்பிப்பாட்டுத் திருவாசகம் முதலியவற்றிலே வரும திருக்கோத்தும்பிப் பாட்டு.

வரையென மாடங்க ளோங்குபொன்
மதிலின் வஞ்சிமன்னவன்
புரைபுரை நின்றலர் பூந்தொடையற்
பொறையன்று னருளானேற்
கரையெனக் காலையுங் காண்பரிய
கடல்போலுங் கல்வையும்
அரையின் மேகலை யோடவோடு
மிவளாவி யாற்றுதே.

இதுவும், இதுபோன்ற ஆசிரியச்சிறுவிருத்தங்களும், வெண்பாக்களும், வெள்ளொத்தாழிசைகளும் குறிலொழுகலேந்திசைவண்ணம் எனப்படும். இவ்வாறே நெடில், வலி, மெலி, இடை என்னும் மற்றையெழுத்துக்களோடு வரும் ஒழுகலேந்திசைகளையும் அறிந்துகொள்க.

இட்ட கன்றனை யானினி யென்செய்கோ
கட்டெ ழில்லழ காகடி தென்னவே
மட்டெ ழின்மலர்த் தார்ப்பொலி மார்பனுங்
கெட்டெ ழுந்திறை கூறுவ னேயெனா.

இதுவும், இதுபோன்ற பிறசெய்யுள்களுங் குறில்வல்லிசையேந்திசைவண்ணம் எனப்படும். இவ்வாறே நெடில், வலி, மெலி, இடை என்னும் மற்றையெழுத்துக்களோடு வரும் வல்லிசையேந்திசைகளையும் அறிந்துகொள்க.

மான்வீடு போழ்திற் பிணையின்னுயிர் போவ தேபோல்
யான்வீடு போழ்தி னிதுவேகொ ளினக்கு மென்னுந்
தேனூறு மின்சொன் மடவாயழு தாற்ற கில்லாய்
வானூடு போய வரைகாணிய சென்ற காலை.

இதுவும்,இதுபோன்ற பிறசெய்யுள்களும், உழவரோதை எனப்படும் பாட்டும் குறின்மெல்லிசையேந்திசைவண்ணம் எனப்படும். இவ்வாறே நெடில், வலி, மெலி, இடை என்னும் மற்றையெழுத்துக்களோடு வரும் மெல்லிசையேந்திசைகளையும் அறிந்துகொள்க.

இங்கே ஏந்திசைவண்ணம் இருபதுள்ளே குறிலடுத்து வரும் அகவல், ஒழுகல, வல்லிசை, மெல்லிசை என்னும் நான்கிசைகளுங் காட்டப்பட்டன.

---

### அடுக்கிசைவண்ணம்.

குறிலகவலடுக்கிசை முதலிய அடுக்கிசைவண்ணங்கள் இருபதும் ஒவ்வாநிலத்திலே வண்டியுருண்டாற்போலவும், நாரைப்பறவை இரைந்தாற்போலவும், தாராப்பறவையுந் தார்மணியும் ஒலித்தாற்போலவும் அடுக்கிசையாய் இசைத்துவரும். தார்மணி - கிங்கிணிமாலை.

உதாரணம்.

கொடியிடை மாமைமேனி குவளைமல ருண்க ணென்று
பிடிநடை மாதர்மாண்ட நடைதானென வேறு செய்தும்
வடிவொடுவார்ந்தமென்றோள்வளைசேர்ந்தகைகாந்தளென்
இடையிடை நின்றுநின்று பலகால முவப்பதென்னோ. [றும்

இதுவும், இதுபோன்ற பிற செய்யுள்களும், எழுசீரடியால் வருஞ் செய்யுள்களும் குறிலகவலடுக்கிசைவண்ணம் எனப்படும். இவ்வாறே நெடில், வலி, மெலி, இடை என்னும் மற்றையெழுத்துக்களோடுவரும் அகவலடுக்கிசைகளையும் அறிந்துகொள்க.

மாலையால் வாடையா லந்தியான் மதியான்
மனமுன முணர்ந்து நோஒய் செய்த

சோலையாற் றென்றலாற் சுரும்பிவர் பொழிலாற்
 சொரிதரு காரொடு விரிதரு பொழுதே
கோலவால் வளையாற் கொடிப்படி யானோற்
 கொள்வது முயிரொடு பிறரொடு மன்றே
காலையார் வ டகோத்தலு மாயகோர்
 காலையென் னுங்கட னீந்திய வினையேன்.

இதுவும், இதுபோன்று எண்சீரடிமிக்குவருஞ் செய்யுள்களும் குறிலொழுகலடுக்கிசைவண்ணம் எனப்படும். இவ்வாறே நெடில், வலி, மெலி, இடை என்னும் மற்றையெழுத்துக்களோடு வரும் ஒழுகலடுக்கிசைகளையும் அறிந்துகொள்க.

கடியான் வெயிலெறிப்பக் கல்லளையில்
 வெதும்பிய கலங்கற் சின்னீர்
அடியா னுலகளந்த வாழியா
 னுக்கிய வமிழ்தென் றெண்ணிக்
கொடியான் கொடுப்பக் குடங்கையாற்
 கொண்டிருந்து குடிக்க நோற்று
வடியேர் தடங்கண்ணி வருசிக்கோம்
 பின்றுளிவ் வருவா ளாமே.

இதுவும், இதுபோன்று அறுசீரடியால் வருஞ்செய்யுள்களும் குறில்வல்லிசையடுக்கிசைவண்ணம் எனப்படும். இவ்வாறே நெடில், வலி, மெலி, இடை என்னும் மற்றையெழுத்துக்களோடுவரும் வல்லிசையடுக்கிசைகளையும் அறிந்துகொள்க.

கடுமுடையை நாறுகரு மேனியினை யாகிப்
படுமுடையுண் மாகுலவர் பாத்துணையு மீயார்
இடமுடைய காடுநனி போகெனவும் போகித்
தடமுடைய களமுழைய னுடமிய னாகி.

இதுவும், இதுபோன்ற பிறசெய்யுள்களும் குறின்மெல்லிசையடுக்கிசைவண்ணம் எனப்படும். இவ்வாறே நெடில், வலி, மெலி, இடை என்னும் மற்றையெழுத்துக்களோடு வரும் மெல்லிசையடுக்கிசைகளையும் அறிந்துகொள்க.

இங்கே அடுக்கிசைவண்ணம் இருபதுள்ளே குறிலையடுத்து வரும் அகவல், ஒழுகல், வலி, மெலி என்னும் நான்கிசைகளும் காட்டப்பட்டன.

### பிரிந்திசைவண்ணம்.

குறிலகவற் பிரிந்திசை முதலிய வண்ணங்கள் இருபதும்பெருங்குதிரைப்பாய்ச்சலும்அறுத்துக்கொட்டும்போலப்பிரிந்திசைத்துவரும். கொட்டு-தாளவகையுளொன்று.

உதாரணம்.

குர வணங்கிலை மாவொடு சூழ்கரைச்
சர வணம்மிகு தானனி போலுமால்
அர வணங்குளி லாண்டகை சான்றவன்
பிரி வுணர்ந்துழி வாரல னென்செய்கோ.

இதுவும், இதுபோன்ற பிறசெய்யுள்களும் குறிலகவற்பிரிந்திசைவண்ணம் எனப்படும். இவ்வாறே நெடில, வலி, மெலி, இடை என்னும் மற்றையெழுத்துக்களோடு வரும் அகவற்பிரிந்திசைகளையும் அறிந்துகொள்க. குர, சர, அர, பிரி என்பன அசைச்சீர்கள்.

அறிவல் லறிவல் லமிழ்தே யமிழ்தே
எறிவெண் டிரைபோ லிகலற் றறிவல்
இறுகல் லிறுகல் லிதுகே ளிதுகேள்
பெறுவல் பெறுவல் பிழைப்பொன் றுபெறாய்.

இதுவும், இதுபோன்ற பிறசெய்யுள்களும் குறிலொழுகற்பிரிந்திசைவணணம் எனப்படும். இவ்வாறே மற்றையெழுத்துக்களோடு வரும் ஒழுகறபிரிந்திசைகளையும் அறிந்துகொள்க.

களிபுந்தி விழ்ந்த கதிர்ச்செய்ய வெய்யோன்
ஒளியுந்தி நீண்ட குடையொருவ னல்கானேல்
நிலமுந்தி யோடும் வளைமுல்லை மெல்ல
நகுமந்தி யாகின்ற தாவியா தாங்கொலோ.

இதுவும், இதுபோன்ற பிறசெய்யுள்களும் குறின்மெல்லிசைப் பிரிந்திசைவண்ணம் எனப்படும். இவ்வாறே குறில்வல்லிசைப்பிரிந்திசையையும் நெடில், வலி, மெலி, இடை என்னும் மற்றையெழுத்துக்களோடு வரும் வல்லிசைப்பிரிந்திசைகளையும் அறிந்துகொள்க.

இங்கே பிரிந்திசைவண்ணம் இருபதுள்ளே குறிலையடுத்து வரும் அகவல், ஒழுகல, மெலி என்னும் மூன்றிசைகள் காட்டப்பட்டன.

---

### மயங்கிசைவண்ணம்.

குறிலகவன்மயங்கிசை முதலிய மயங்கிசைவண்ணம் இருபதும் வண்டினிசைபோலவும், தாரையிசைபோலவும்,

ஆர்ப்பிசைபோலவும், வாச்சியவிசைபோலவும், தேரைக் குரல்போலவும் மயங்கிசையாய் இசைத்து வரும். தாரை - சிறுசின்னம். ஆர்ப்பு - யுத்தம்.

உதாரணம்.

வாங்குபுகோ ளரிகின்றான் வாரண வாசிமன்னன்
தேங்கம ழொலிமென் கூந்தற் றேவிநாட்டுறை
ஆங்கவ ளருகல்லா ளத்தின புராரசன்
வான்புகழ் மங்கைப் பூசிற மன்னமேனி.

இதுவும், இதுபோன்ற பிறசெய்யுள்களும் குறிலகவன்மயங்கிசைவண்ணம் எனப்படும். இவ்வாறே நெடில், வலி, மெலி, இடை என்னும் மற்றையெழுத்துக்களோடு வரும் அகவன்மயங்கிசைகளையும் அறிந்துகொள்க.

தாமத் தூண்களைத் தருக்கொடு முருக்குந்தன் முரணும்
தூமத தூங்கலி னெடுத்தகோட் டிணையினை யேயும்
வாமத் தோள்களின் வலித்தனன் புடைத்தெடுத் தாற்றும்
பேய்மைத் தீத்தொழில் பெருக்கிய வரசனு முணர்ந்தான்.

இதுவும், இதுபோன்ற பிறசெய்யுள்களும் குறில்வல்லிசை மயங்கிசைவண்ணம் எனப்படும். இவ்வாறே நெடில், வலி, மெலி, இடை என்னும் மற்றையெழுத்துக்களோடு வரும் வலலிசைமயங்கிசைகளையும் அறிந்துகொள்க.

உருகா தார்தம் மின்னுயிர்சாத்
   தொழிய லாமோ வுணர்ந்தார்க்கு
வருகார் போல வளஞ்சுரந்திவ்
   வையங் காக்கும் வயமாறன்
முருகா ரார மார்பினன்
   முரச மார்ப்ப முல்லைகாள்
குருகார் பௌவ முண்டிருண்ட
   கொண்ட லென்று குழைத்தீரே.

இதுவும், இதுபோன்ற பிறசெய்யுள்களும், குறின்மெல்லிசை மயங்கிசைவண்ணம். இவ்வாறே குறிலொழுகன் மயங்கிசையையும் நெடில், வலி, மெலி, இடை என்னும் மற்றையெழுத்துக்களோடு வரும் ஒழுகன்மயங்கிசைகளையும் அறிந்துகொள்க.

இங்கே மயங்கிசைவண்ணம் இருபதுள்ளே குறிலையடுத்து வரும் அகவல், வலி, மெலி என மூன்றிசைகள் காட்டப்பட்டன.

தூங்கிசைவண்ணம் முதலியன தம்முள்ளே பிறவிசைகள் மயங்கிவரினும் மிக்கதனாற் பெயர்கொடுத்து வழங்கப்படும். இவற்றுள்ளே நின்ற அகவலிசை சுழிக்காற்றும், நீர்ச்சுழியும் போன்று வரும். ஒழுகலிசை நீரினொழுக்கும், காற்றினொழுக்கும் போன்று வரும். வல்லிசை தோற்கயிறும் இரும்புத் திரித்தாற் போன்றும், கல்லின்மேற்கல்லுருட்டினாற்போன்றும் வரும். மெல்லிசை அன்னநடைபோன்றுந் தண்ணம்பறைபோன்றும் வரும். தண்ணம் - ஒருகட்பறை. இங்கே காட்டப்பட்ட உபமானங்கள் தொழிலவகையால் ஒருபுடை ஒப்பன.

வண்ணங்கள் தொகையான் ஐந்தும், வகையான் இருபதும், விரியான் நூறுமாய் வரும் என்பாருமுளர். இந்நூலாசிரியர் அவிநயர் கூறியவாறே நூறுகவருத்தார். தொல்காப்பியர் வகுத்தவண்ணம் இருபது. அவைகளையும் இங்கே கூறிமுடிப்பாம்.

## இருபதுவண்ணம்.

| | |
|---|---|
| பாஅவண்ணம். | அகப்பாட்டுவண்ணம். |
| தாஅவண்ணம். | புறப்பாட்டுவண்ணம். |
| வல்லிசைவண்ணம். | ஒழுகுவண்ணம். |
| மெல்லிசைவண்ணம். | ஒரூஉவண்ணம். |
| இயைபுவண்ணம். | எண்ணுவண்ணம். |
| அளபெடைவண்ணம். | அகைப்புவண்ணம். |
| நெடுஞ்சீர்வண்ணம். | தூங்கல்வண்ணம். |
| குறுஞ்சீர்வண்ணம். | ஏந்தல்வண்ணம். |
| சித்திரவண்ணம். | உருட்டுவண்ணம். |
| நலிபுவண்ணம். | முடுகுவண்ணம். |

## பாஅவண்ணம்.

சொற்சீரடியுடையதாய் நூற்பாவிலே பயின்று வருவது பாஅவண்ணம் எனப்படும். இது நூற்பாவிலே வருதல்பற்றிப் பாஅவண்ணம் எனப்பட்டது. நூற்பா - சூத்திரயாப்பு.

### உதாரணம்.

அவ்வழி,

ஆவி யிடைமை யிடமிட றாகும்
மேவு மென்மைமூக் குரம்பெறும் வன்மை.

இங்கே அவ்வழி என்பது சொற்சீரடி.

## தாஅவண்ணம்.

எதுகை இடைவிட்டு வருவது தாஅவண்ணம் எனப்படும். இஃது இடைவிட்டுப் பாய்ந்து வருதலால் தாஅவண்ணம் எனப்பட்டது. தாவுதல் - பாய்தல். முன்னர் இடையிட்டெதுகைக்குக் காட்டப்பட்ட "தோடாரெல்வளை" என்பதை இதற்கும் உதாரணமாக்கி அறிக. பொழிப்பெதுகை ஒரூஉவெதுகைகளுக்குக் காட்டப்பட்ட உதாரணங்களைக் கொள்ளினும் பொருந்தும்.

---

## வல்லிசைவண்ணம்.

வல்லெழுத்துப் பெரும்பாலும் பயின்று வருவது வல்லிசை வண்ணம் எனப்படும். வல்லிசை - வல்லெழுத்தாலாகும் இசை.

உதாரணம்.

வட்டொட்டி யன்ன வனர்ப்புடப் புன்னைக்கீழ்க்
கட்டிட்டுக் கன்னி தொடுப்பவர் தாழ்ப்பூத்
தொட்டிட்டுக் கொள்ளுங் கடற்சேர்ப்ப நின்னொடு
விட்டொட்டி யுள்ளம் விடாது கிளைபுமேல்
ஒட்டொட்டு நீங்காதே யொட்டு.

---

## மெல்லிசைவண்ணம்.

மெல்லெழுத்துப் பெரும்பாலும் பயின்று வருவது மெல்லிசை வண்ணம் எனப்படும். மெல்லிசை - மெல்லெழுத்தாலாகும் இசை.

உதாரணம்.

பொன்னி னன்ன புன்னை நுண் டாது
மணியி னன்ன நெய்தலங் கானம்
மணலென வுதிரு மாநீர்ச் சேர்ப்ப
மாண்வினை நெடுந்தேர் பூண்மணி யொழிய
மம்மர் மாலை வாரீ
நன்மா மேனி நயந்தனை யெனினே.

---

## இயைபுவண்ணம்.

இடையெழுத்துப் பெரும்பாலும் பயின்று வருவது இயைபு வண்ணம் எனப்படும். இது வன்மைக்கும் மென்மைக்கும் இடைநிகரனவாய எழுத்தால் வருதலின் இயைபுவண்ணம் எனப்பட்டது.

உதாரணம்.

வால்வெள் ளருவி வரைமிசை யிழியவும்
கோள்வல் லுழுவை விடரிடை யியம்பவும்
வாளுகி ருளியம் வரையக மிசைப்பவும்
வேலொளி விளக்கி னர்வரினே
யாரோ தோழி வாழ்கிற் போரே.

---

அளபெடைவண்ணம்.

அளபெடை பெரும்பாலும் பயின்று வருவது அளபெடை வண்ணம் எனப்படும். இஃது அளபெடைபெற்று வருதலின் அளபெடைவண்ணம் எனப்பட்டது.

உதாரணம்.

தாஅம் படுநகர்க்குத் தண்ணீ ருளகொலோ
ஆஅம் பலபழி யனைனை யறிவுறில்
வாஅம் புரவி வழுதியொ டெம்மிடைத்
தோஒப தவழுமிவ் வூர்.

---

நெடுஞ்சீர்வண்ணம்.

நெட்டெழுத்தே அசையாய்நிற்குஞ் சீர்பெற்றுவருவது நெடுஞ்சீர்வண்ணம் எனப்படும். நெடுஞ்சீர் - நெட்டெழுத்து அசையாய் நிற்குஞ்சீர்.

உதாரணம்.

நீடூர் பாணு யாறே காடே
நீளூர் காயா பூவீ யாதே
காநூர் பாணு மாவே யானே
யாரோ சாமே வாழா மோரே
பூநூர் பாகா தேரே
பீநூர் தோளாள் பேரூ ராளே.

---

குறுஞ்சீர்வண்ணம்.

குற்றெழுத்தே அசையாய் நிற்குஞ் சீர்பெற்று வருவது குறுஞ்சீர்வண்ணம் எனப்படும். குறுஞ்சீர் - குற்றெழுத்து அசையாய் நிற்குஞ்சீர்.

உதாரணம்.

உறுபெய லெழிலி தொகுபெயல் பொழியச்
சிறுகொடி யவரை பொரிதனை யவிழக்
குறிவரு பருவ மிதுவெனை மறுகுபு
செறிதொடி நலமில்லை யழியல்
அறிபவில யரிவை கருதிய பொருளே.

---

சித்திரவண்ணம்.

குற்றெழுத்தும், நெட்டெழுத்துஞ் சமமாகப் பயின்றுவருவது சித்திரவண்ணம் எனப்படும். சித்திரம் - பலவிதம்.

உதாரணம்.

ஊர வாழி பூர நேர
தார வாரி பேர சேரி
கார வேரி பாய வாரி
பீர நீர தோழி தோளே.

---

நலிபுவண்ணம்.

ஆய்தவெழுத்துப் பெரும்பாலும் பயின்று வருவது நலிபு வண்ணம் எனப்படும். நலிபு - ஆய்தம். இது நலிந்துச்சரிக்கப்படுதலின் நலிபு எனப்பட்டது.

உதாரணம்.

எஃகொ டவன்காப்ப வேமார்ந்தான் போதகதாள
அஃகுசிர்க் கான்யாற் றயன்மனை லெக்கர்மேல்
இஃதோநின் பாவை திருந்தடி பின்னை
அஃதோ விடலை யடி.

---

அகப்பாட்டுவண்ணம்.

இறுதியடி முடிவுபெற்றும் முடிவுபெறாத இடையடிபோன்று நிற்பது அகப்பாட்டுவண்ணம் எனப்படும். இஃது இறுதியடி இடையடிபோல உட்படுதலின அகப்பாட்டுவண்ணம் எனப்பட்டது. அகப்பாடு - உட்படுவது.

உதாரணம்.

பன்மீ னுணங்கற் படுபுள் ளோப்பியும்
புன்னை நுண் டாது நம்மொடு தொகுத்தும்

பன்னாள் வந்து பணிமொழி பயிற்றித்
தோளி னீங்காமை சூளிற் றேற்றியும்
மணந்ததற் கொவ்வான் றணந்து புறமாறி
இனைய னாகி யிங்குறைத் துறந்தோன்
பொய்த்த லாயத்துப் பொலந்தொடி மகளிர்
கோடியர் வெண்மணற் குன்றி லேறி
ஓடுகலங் காணுந் துறைவன் றோழீ.

இங்கே "ஓடுகலங்காணுந் துறைவன் றோழீ" என்னும் இறுதி யடி முடிவுபெற்றும் முடியாததுபோன்று காட்டி நிற்றல் அறிக.

புறப்பாட்டுவண்ணம்.

இறுதியடி முடிவுபெறாது நின்றும் முடிந்ததுபோலக் காட்டிப் புறத்திறப்பட்டு நிற்பது புறப்பாட்டுவண்ணம் எனப்படும். புறப்பாடு - புறத்திறப்படுவது.

உதாரணம்.

நிலவுமணா லகன்றுறை வலவ னேவலின்
எரிமணிப் புள்ளின மொய்ப்ப நெருநலும்
வந்தன்று கொண்கன் றேரே யின்றும்
வருகுவ தாயிற் சென்று சென்று
தோன்றுபு துறைதந்த புன்னைத் தாதுகு
தண்பொழின் மெல்லக வனமுலை நெருங்கப்
புல்லி னெவனோ மெல்லிய னீயு
நல்காது விடுகுவை யாயி னல்கலும்
படர்மெலி புள்ளமொடு மடன்மா வேறி
உறுதுய ருலகுட னறியநஞ்
சிறுகுடிப் பாக்கத்துப் பெரும்பழி தருமே.

இங்கே "தருமே" என இறுதியடி ஏகாரத்தான் முடிந்தது போலக் காட்டிப் புறத்திறப்படினும் பொருளான முடிவுபெறாமை அறிக.

ஒழுகுவண்ணம்.

ஒழுகிய வோசைபெற்று நீரொழுக்குப் போல இனிதுசெல் வது ஒழுகுவண்ணம் எனப்படும். ஒழுகுதல் - நேரேசெல்லல்.

உதாரணம்.

அம்ம வாழி தோழி காதலர்க்
கின்னே பனிக்கு மின்னா வாடையொடு
புன்கண் மாலை யன்பின்று நலிய
உய்யல ளிவளென வுணரச் சொல்லிச்
செல்லுநர்ப் பெறினே செய வல்ல
இன்னளி யிறந்த மன்னவர்
பொன்னணி நெடுந்தேர் பூண்ட மாவே.

---

ஒரூஉவண்ணம்.

சொல்லப்பட்ட பொருள் பிறிதொன்றை அவாவாது யாற்றின் ஒழுக்குப்போல அற்றற்றுச் செல்லுவது ஒரூஉவண்ணம் எனப்படும். ஒருவுதல் - இடைவிடுதல். செந்தொடையான் வருவதை ஒரூஉவண்ணம் என்பாருமுளர்.

உதாரணம்.

யானே யீண்டை யேனே யென்னலனே
ஆனா நோயொடு கான லஃதே
துறைவன் றமரூ ராணே
மறையல ராகி மன்றத் தஃதே. குறுந்தொகை.

---

எண்ணுவண்ணம்.

செம்மையெண், உம்மையெண், எனவெண் முதலிய எண்ணுப் பயின்று வருவது எண்ணுவண்ணம் எனப்படும். இஃது எண்ணுப் பயின்று வருதலின் எண்ணுவண்ணம் எனப்பட்டது.

உதாரணம்.

பொறையன் செழியன் போர்வேற் கிள்ளி
கொல்லி கொற்கை கல்லிசைக் குடந்தை
பாவை முத்தம் பல்லிதழ்க் குவளை
ஆயிதழ் நல்லா ளரிவை
மாயோள் முறுவன் மழைப்பெருங் கண்ணே.

இது எண்ணிடைச் சொற்கெடுக்கு வருதலாற் செவ்வெண் என்க.

---

### அகைப்புவண்ணம்.

அறுத்தறுத்துச் சொல்லுமாறு ஒருவழி நெடிலும், ஒருவழிக் குறிலும் பயின்று விட்டுவிட்டுச் செல்வது அகைப்புவண்ணம் எனப்படும். அகைத்தல் - அறுத்தல்.

உதாரணம்.

தொடுத்த வேம்பின் மிசைத்துதைந்த போந்தை
அடைய வகைந்த வார்மலைப் பாட்டூர்
அன்ன மென்போ னியன்ற சேனை
முரசிரங்குந் தானையெதிர் முயன்ற
வேந்தருயிர் முருக்கும் வேலி னன்னவன்.

---

### தூங்கல்வண்ணம்.

தூங்கிய வோசையுடையதாய் வருவது தூங்கலவண்ணம் எனப்படும். வஞ்சிப்பாக்களில் ஒன்றை உதாரணமாக்கி இதனை அறிக.

---

### ஏந்தல்வண்ணம்.

முன்னர்ச் சொல்லப்பட்ட சொலலானே சொல்லப்படும் பொருளும் பின்னுஞ் சொல்லப்பட்டு வருவது ஏந்தல்வண்ணம் எனப்படும். இது முன்னர்ச் சொல்லப்பட்ட சொல் பின்னும் மிக்கு வருதலின் ஏந்தலவண்ணம் எனப்பட்டது. ஏந்தல்-மிகுதல்.

உதாரணம்.

கூடுவார் கூடல்கள் கூட லெனப்படா
கூடலுட் கூடலே கூடலும்—கூடல்
அருவலிய முல்லை யரும்பவிழு மாலை
பிரியிற ‌பிரிவே பிரிவு.

---

### உருட்டுவண்ணம்.

அராகந் தொடுக்கப்பட்டுச் செலலுவது உருட்டுவண்ணம் எனப்படும். இஃது உருட்டிச் சொல்லப்படுதலின உருட்டுவண்ணம் எனப்பட்டது.

உதாரணம்.

அணிகிளர் சிறுபொறி யவிர்துத்தி மாநாகத்தெருத்தேறித்
துணியிரும் பனிமுந்நீர் தொட்டுழந்து மலைந்தனையே.

---

## முடுகுவண்ணம்.

அராகம் போன்று வந்து அடிநீண்டு செல்வது முடுகுவண்ணம் எனப்படும். வீரசோழியவுரைகாரர் அடியிறுதற்றி லாகா தாய் நீண்டவழித் தான் அராகத்தோடு கூடிவருவதை முடுகுவண்ணம் என்பர். முடுகுதல் - விரைதல்.

### உதாரணம்.

நெறியறி செறிகுறி புரிதிரி பறியா வறிவனை முந்துறீஇத்
தகைமிகு தொகைவகை யறியுஞ் சான்றவ ரினமாக
வேய்புரை மென்றோட் பசலையு மாயப்ப.

நாற்கடியாகவும், ஒவ்வோரடியும் இரண்டுகலையுடையதாகவும், ஒவ்வொருகலையும் மூன்றுசீருடையதாகவும், துள்ளலோசையுடையதாகவும் வரும் வண்ணமுமன்றிறவுமாக இன்னும் பல விகற்பமாக வண்ணங்கள் வரும். அவைகளையெல்லாம் இவற்றுக்குரிய சாத்திரத்து அறிந்துகொள்க. கலை - பங்கு.

வண்ணமுஞ் சந்தமும் ஒன்றெனக் கொள்வாருமுளர். வண்ணமும் வேறு. சந்தமும் வேறு. வண்ணமாவது எழுத்துச்சார்ந்து நிற்கும் வகையினாலே இசையைத் தோற்றுவித்துத் தமிழ்மொழிக்கே உரியதாய்வழங்கப்படுவது. சந்தம் வடமொழிக்குரியதாய்த் தமிழ்மொழியிலும் வழங்கப்படுவது.

---

## சந்தம்.

இவ்வளவென்று நியமிக்கப்பட்ட எழுத்துக்களினளவும் மாத்திரை முதலியனவுமுடைய நான்கடி முதலியவற்றிலே இசையைத் தொடர்பித்து வருவது சந்தம் எனப்படும். அஃது உக்தை முதலாக இருபத்தாறு வகைப்படும். பிறவும் உண்டு.

### இருபத்தாறு சந்தம்.

| | | |
|---|---|---|
| உக்தை. | பங்தி. | அதிதிருதி. |
| அத்தியுக்தை. | திருட்டுப்பு. | கிருதி |
| மத்தியை. | சகதி. | பிரகிருதி. |
| பிரதிட்டை. | அதிசகதி. | ஆக்கிருதி. |
| சுப்பிரதிட்டை. | சக்குவரி | விகிருதி. |
| காயத்திரி. | அதிசக்குவரி. | சங்கிருதி. |
| உட்டிணிக்கு. | அட்டி. | அபிக்கிருதி. |
| அநுட்டுப்பு. | அத்தியட்டி. | உற்கிருதி. |
| விருகதி. | திருதி. | |

இந்த இருபத்தாறு வகைகளையும் வடமொழியிலே விருத்தரத்நாகரகாரர் விரித்துக்கூறினர். வீரசோழியவுரைகாரரும் தம் முறையிற் காட்டி உதாரணங்களுங் கூறினர். இவை ஓரெழுத்திலே தொடங்கி ஒவ்வோர் எழுத்தேறி இருபத்தாறெழுத்து வரைக்கும் வரும். ஓரெழுத்தடியால் வரும் உக்தை என்பதும், ஈரெழுத்தடியால் வரும் அத்தியுக்தை என்பதும், மூவெழுத்தடியால் வரும் மத்திமை என்பதும் தமிழ்மொழியிலே உதாரணங் கூறற்கு இயைபுடையனவாகா. நான்கு முதலிய எழுத்துக்கள் பெற்று வரும் அடிகளையுடையவைகளே தமிழ்மொழியில் உதாரணங் காட்டத்தக்கனவாகும். யாப்பருங்கல விருத்திகாரரும் நான்கு முதலாக இருபத்தாறு வரையும் வருகின்ற எழுத்தின்கட் சந்தம் உண்டாகும் என்றும், அது அளவியற்சந்தம் என்றும் அளவழிச்சந்தம் என்றும் இருவகையாகும் என்றும், எழுத்தளவை ஒத்துக் குருவும் இலகுவும் ஒத்த அடிகளால் வருவது அளவியற்சந்தம் என்றும், அவையொவ்வாத அடிகளால் வருவது அளவழிச்சந்தம் என்றும் கூறி விரித்துரைப்பர்.

இங்கே நாலெழுத்தடியால் வருவதாகிய பிரதிட்டையினின்று தொடங்கிச் சிலசில காட்டிச்செல்லுதும்.

உதாரணம்.

தக்கன் வேள்வி
பொக்கந் தீர்த்த
மிக்க தேவர்
பக்கத் தோமே. தேவாரம்.

இது நான்கடிகளும் நான்கெழுத்து என்னும் அளவொத்து வருதலாற் பிரதிட்டை என்னுஞ் சந்தம் எனப்படும். பிரதிட்டையை வீரசோழியவுரைகாரர் நிலை என்பர். ஒற்றுக்கள் எண்ணப்படுதலில்லை.

மன்ன னேரியன்
சென்னி மாநதன்
கன்னி காவலன்
பொன்னி நாயகன்.

அடிகள் நான்கும் ஐந்தெழுத்தடிகளாய் ஒத்து வருதலால் இது சுப்பிரதிட்டை என்னுஞ் சந்தம் எனப்படும். சுப்பிரதிட்டையை வீரசோழியவுரைகாரர் நன்னிலை என்பர்.

கருவி வானமே
வருவ மாதிரம்
பொருவி லாமிதே
பருவ மாவதே.

அடிகள் நான்கும் ஆறெழுத்தடிகளாய் ஒத்து வருதலால் இது காயத்திரி என்னும் சந்தம் எனப்படும்.

அணிதங்கு போதி வாமன்
பணிதங்கு பாத மல்லாற்
றுணிபொன் றிலாத தேவர்
மணிதங்கு பாத மேவார்.

அடிகள் நான்கும் எட்டெழுத்தடிகளாய் ஒத்துவருதலால் இஃது அநுட்டுப்பு என்னுஞ் சந்தம் எனப்படும்.

தன்னே ரில்லா மங்கையர் செங்கைத் தளிர்மானே
அன்னே தேனே யாரமிர் தேயென் றடிபோற்றி
முன்னே முன்னே மொய்ம்மலர் தூவி முறைசாரப்
பொன்னேர் சோதிப பூவி னெருங்கிய பொலிகின்றாள்.
இராமா.

அடிகள் நான்கும் பதின்மூன்றெழுத்தடிகளாய் ஒத்து வருதலால் இஃது அதிசகதி என்னுஞ் சந்தம் எனப்படும்.

அண்டர் குலபதி யாமவிடை வாகன
னம்பொ னடிமலர் சூடிடு சேகரன்
எண்டி சையுமனு நீதிசெய் கோலின
னெங்கு மொருகுடை யாலிடு நீழலன
மண்டு கிரண சிகாமணி மௌலியன்
வண்டு மதுநுகர் தாதகி மாலையன்
மிண்டு முதுபுலி யேறு பதாகையன்
வென்றி வளவனை யார்நிக ராவரே. பாரதம்.

அடிகளெல்லாம் இருபத்துநான்கெழுத்தடிகளாய் ஒத்து வருதலால் இது சங்கிருதி என்னுஞ் சந்தம் எனப்படும்.

மணியிலகு செறிதளிரொ டலரொளிய
நிழலரசி மருவியறவோர்
பிணியிரவு துயரமொடு பிறவிகெட
வுரையருளும் பெரியவருளோன்

துணியிலகு சடருடைய வாசரொடு
பிரமர்தொழு தலைமையவர்மா
அணியிலகு கமலமல ரனையவெழி
லறிவனிணை யடிகடொழுவாம்.

அடிகளெல்லாம் இருபத்தாறெழுத்தடிகளாய் ஒத்து வருத லால இஃது உற்கிருதி என்னுஞ் சந்தம் எனப்படும்.

இருபத்தாறு சந்தங்களுள்ளே சிலசில இங்கே காட்டப்பட் டன. காட்டாதொழிந்த மற்றைச் சந்தங்களை ஆங்காங்கு வருஞ் செய்யுள்களை எழுத்தளவைகளோடு நோக்கி அறிந்து கொள்க. அடிகள் இருபத்தாறெழுத்தின மேற்பெற்று வருவனவெல்லாம் தாண்டகம் எனப்படும்.

---

## தாண்டகம்.

இருபத்தேழெழுத்து முதலாக எழுத்துக்களைப்பெ ற்று வரும் அடியான் வருவனவெல்லாம் தாண்டகம என பபடும், இது தண்டகசம்பந்தமுடைமைபற்றித் தாண்ட கம் எனபபட்டது.

தண்டகம் - ஆரியத்தில் வரும் ஒருவகைச்செய்யுள்.

உதாரணம்.

வானிலவி முகிலார்பப மருவி மாண்பான்
மயில்வலமாய் வந்துலவச் சுரும்பு பாடத்
தேனுலவி நறுமுல்லை முறுவ லிப்பத்
திசையினறுந் தேந்தளவஞ் சிறந்து பூப்பக்
கானிலவி மலிகொன்றை விரிந்து ஞாலக்
கவினியவாய்ச் சார்ந்ததுதான் கலந்து கண்ணோர்
மானிலவு மடநோக்கி நெடிய வாட்கண்
வனமுலையாய் மாறுமனம் வருந்த லீயே.

இஃது அடிகளெல்லாம் இருபத்தேழெழுத்தடிகளாய் அள வொத்து வருதலால் அளவியற்றாண்டகம் எனப்படும். அளவொவ் வாது வருவது அளவழித்தாண்டகம் எனப்படும்.

செறிகழலுந் திருவடியுந் தோன்றுந் தோன்றும்
திரிபுரத்தை யெரிசெய்த சிலையுந் தோன்றும்

நெறியதனை விரித்துரைத்த நேர்மை தோன்றும்
நெற்றிமேற் கண்டோன்றும் பெற்றந் தோன்றும்
மறுபிறவி யறுத்தருளும் வகையுந் தோன்றும்
மலைமகளுஞ் சலமகளு மலிந்து தோன்றும்
பொறியரவு மிளமதியும் பொலிந்து தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனித னார்க்கே.

இஃது அடிகளெல்லாம் அளவொவ்வாமையால் அளவழித்தாண்டகம் எனப்படும். தாண்டகத்தினை சந்ததத்தாண்டகம், தாண்டகச்சந்தம், சமசந்தத்தாண்டகம் என்றும் வகைக்கூறும் உள. அவைகளையும் மற்றை எழுத்தளவைகளான் வரு தாண்டகங்களையும் யாப்பருங்கல விருத்தி முதலியவற்றிற் காண்க.

---

## பொருளுந் தொகையும்.

எழுத்துப் பதின்மூன் றிரண்டசை சீர்முப்ப தேழ்தளையைந்
தீழுக்கி லடிதொடை நாற்பதின் மூன்றைந்து பாவினமூன்
றொழுக்கிய வண்ணங்க ணூறென்ப தொண்பொருள்கோளிரு
வழுக்கில் விகாரங் வனப்பெட் டியாப்புள்வகுத்தனவே

இ - ள். எழுத்துக்கள் பதின்மூன்று. அசைகள் இரண்டு. சீர்கள் முப்பது. தளைகள் ஏழு. அடிகள் ஐந்து தொடைகள் நாற்பத்துமூன்று. பாக்கள் ஐந்து. பாவினங்கள் மூன்று. வண்ணங்கள் நூறு. பொருள்கோள்கள் ஒன்பது. விகாரங்கள் ஆறு. வனப்புக்கள் எட்டு. இவைகளை இந்த யாப்பருங்கலக்காரிகையிற் சொல்லப்பட்ட பொருள்களாகும். எ - று. (க0)

---

## ஒழிபியற்காரிகைமுதனினைப்பு.

சீரோடு விட்டிசை மாஞ்சீ ரியற்றளை சேர்ந்தருகி
வாரடர் கொங்கை வருக்கஞ் சுருங்கிற்ற வான்பொருளும்
சீரிய தூங்கேந் தடுக்குச் சிறந்த வெழுத்துமன்றே
ஆரு மொழிபியற் பாட்டின் முதனினைப் பாகுமன்றே. கக.

---

யாப்பருங்கலக்காரிகை முற்றிற்று.

# அருஞ்சொற்பொருள்கோள்.

அகவல்—அகவற்பா, அகவற்பா வினிசை.

அகவலவிருத்தம்—ஆசிரிய விருத்தம்.

அகவற்றுறை—ஆசிரியத்துறை.

அகவுதல்—ஆடுதல், ஒலித்தல.

அங்கம்—ஆருகதருடைய ஆகமங்கள் மூன்றனுள் ஒன்று.

அசைத்தல்—வைத்தல், இருத்துதல். "பிடியின் புறத்தசைத் தகை."

அசைதல்—இளைத்தல், வருந்துதல், இருத்தல்.

அடிகள்—பெரியோன், கடவுள், தலைவன்.

அடுக்கம்-பக்கமலை, மலைச்சாரல்.

அடும்பு—அடம்பங்கொடி.

அதர்—வழி.

அந்தரதுந்துபி—தேவதுந்துபி.

அந்திலை—அவ்விடம, அசைநிலைகளுள் ஒன்று.

அநந்த சதுட்டயம்—ஆருகதசமயத்திலே வீடுபெறெனச் சொல்லப்பட்ட அநந்தஞானம், அநந்ததரிசனம், அநந்தவீரியம், அநந்தசுகம், என்னும் நான்மை. "வீடெனப்படும் வினைவிடுதல் பெற்றதங் - காடெழிற்றோனிறு யநந்தநான்மையே" என்றார் சீவகசிந்தாமணிகாரர்.

அமலல்—நெருங்குதல்.

அரற்று—பலவுஞ்சொல்லித்தன் குறை கூறுதல்.

அரிக்குரல்—தவளையினொலி.

அரிமா—சிங்கவேறு.

அரும்பெறல்—பெறற்கரியது.

அலவன்—ஆணஞெண்டு.

அள்ளல—சேறு.

அளிதல்—கனிதல.

அறரூர்—பொருளில்லாதவர்.

அறப்புறம்—இறையிலிநிலம்.

அறிந்திசினோர்—அறிந்தோர், இசின் ஓரிடைச்சொல்.

அனுங்கல்—கெடுதல்.

ஆதி—ஆருகதருடைய ஆகமங்கள் மூன்றனுள் ஒன்று.

ஆம்பல—மூங்கில், ஒருபண்.

ஆய்தல்—உள்ளதனிற் சுருங்குதல்.

ஆர்கலி—கடல்.

ஆருகதர்—ஆருகசமயத்தார்.

ஆலல்—ஆரவாரித்தல்.

ஆவணம்—உரிமையோலை.

ஆழியான்—விட்டுணு.

ஆழியிழைத்தல--நாயகனை நினைந்து வருந்தும் நாயகி நாயகனைக் கூடுதல சம்பவிக்குமோ சம்பவியாதோ என்பதறிதற்கோர் குறியாகக் கண்களை மூடிக்கொண்டு மணலிலே வட்டமாகச் சுழித்தல். "சேர்ந்துவரமணலைச் செங்கையாற் றான்பரப்பி — ஏய்ந்திழைத்த கூடலே யென்னுவாய்" என்றார் ஒளவையார். வட்டமாகிய சுழியினிருதலையும் சாதிக்குமாயின் கூடுதலுளதென்று நிச்சயிக்கப்படும். வேறுங்கூறுவர்.

ஆற்றுக்காலாட்டி — மருதநிலப்பெண்.

ஆறு—வழி.
ஆறுமை—நீங்காமை.
இலக்கியம்—உதாரணம்.
இவர்தல்—ஏறுதல.
இறத்தல் — கடத்தல், செல்லுதல்.
இறவு—தேன்கூடு.
இறுதல்—முடிதல்.
இறும்பு—குறுங்காடு, சிறுமலை, சிறுதூறு.
இறுவரை—பெருமலை.
இழுக்கு—தவறு.
இனியநீர் மூன்று — கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் என்னும் மூன்றுங் கலந்தூறிய நீர்.
உதாரணம்—எடுத்துக்காட்டு.
உடுவிலான்—சந்திரன்.
உடை—வஸ்திரம்.
உலவை—சிறுகொம்பு.
உறந்தை—உறையூர்.
உறழ்தல்—நத்தல.
உருவியர்—உருதொழிக. "கேள் வரும்போதினெழாதாய்க்குருவியரோ."
எல—பகல்.
எழால்—எழாதொழிக.
எறும்பி—யானை.
எனும—சிறிதும். "அருளெனு மிலராய்." என்னும் என்பது எனும என இடைக்குறையாயிற்று.
ஏதில—அயல.
ஏய்த்தல்—ஒத்தல்.
ஏர்—ஒருவமவுருபு.
ஏற்றை—விலங்கினாண்.
ஏனல—தினைப்புனம்.
ஒல்லுதல்—இயலுதல்.
ஒப்புதல்—நீக்குதல.
கடம்—காடு.
கடம்பாடவி—மதுரை.
கடாசலம்—யானை.
கடுத்தல்—ஒத்தல்.
கடைமணி—பூண். "கடைமணியையவேலசதி."

கண்கூடுதல்—சேருதல்.
கதிர்ப்பு—பிரகாசம்.
கம்பலை—ஒலி.
கயந்தலை—யானைக்கன்று.
கராம்—முதலையிலொருவகை.
கல்—ஒரொலிக்குறிப்பு.
கலவர்—மரக்கலமோட்டுவோர்.
கவலை—கவர்வழி.
கவுசி—குசிகராசன்மகள்.
கழுப்படிதம்—கழுக்கூடது.
காஞ்சி—ஒருமரம்.
காரிகை—க. பெண். உ. கட்டளைக்கலித்துறை. ௩. அற்பமான எழுத்துக்களால் ஆக்கப்பட்டு மிக விரிந்தனவாய பொருள்களை அறிவிக்கும் பாட்டு (சூத்திரம்). ௪. ஒருவகைவிருத்தம்.
கானல—கடற்கரைச்சோலை.
கிங்கிணி—சதங்கை.
குணில்—குறுந்தடி.
குருகு—பறவை.
குரூஉ—நிறம்.
குலை—அரும்பு, பூ, இலை முதலியன கூடியிருக்கும் தாறு. "குருதிப்பூவின் குலைக்காந்தட்டே."
குளவி—காட்டுமல்லிகை.
குறளை—புறங்கூறல், அற்பவார்த்தை.
கூவிளி—ஆரவாரம்.
கேள்—கேள்வன்.
கொங்கு—நறுமணம். "கொங்கலர்சோலையின்."
கோடரம்—குரங்கு.
கோபுரம்—நகரவாயில்.
கோள்—குலை. "வேர்க்கோட்பலவின்."
கோழி—உறையூர்.
சகடம—வண்டி, தேர்.
சானகி—சீதை.
சால—மிக.
சாலிகை—சட்டை.
சிலம்புதல்—ஒலித்தல்.
சிரகம்—கரகம், வட்டில்.

சிறத்தல்—மிகுதல்.
சினை—மரக்கொம்பு.
சுணங்கு—தேமல்.
சும்மை—ஒலி.
சுரரமகளிர்—தேவப்பெண்கள்.
சூரல்—பிரம்பு, சூரற்கொடி.
செவ்வண்—நேர்மை.
சேதிபன்—சேதிதேசராசனாகிய சிசுபாலன்.
சேய்—முருகக்கடவுள்.
சேர்நர்—இடைவிடாது சிந்திப்போர்.
சோர்தல்—சொரிதல்.
ஞாழல்—புலிநகக்கொன்றை.
தருதி—நடுவுநிலைமை.
தகை—அழகு.
தட-வளைவு. "தடந்தாட்டாமை."
தடுமாற்றம்—மயக்கம்.
தபனியம்—பொன்.
தபுதல்—கெடுதல்.
தம்முன்—தமையன். "தம்முனுடைய பாலசரிதை" என்றார் சிலப்பதிகாரகாரர்.
தமி—தனி.
தலையல்—மழைபெய்து விடுதல், சொரிதல.
தலையளித்தல — தண்ணளிசெய்தல்.
தவச்சிறிது—மிகச்சிறிது.
தவளம்—வெண்மை.
தாம்—தாளத்தைக் கருதும் ஓர் ஒலிக்குறிப்பு.
தார்—மாலை.
திகிரி—தேர்.
திமில்—தோணி.
தீரபு—தீர்தல்.
துடுப்பு—முகை.
துவறல்—துளித்தல்.
துன்பம்—துயர்; வடசொல்.
தேன்—வண்டு.
தொழு—பட்டி.
தோடு—கூட்டம்.
நந்தன்—ஓரிடையன்.
நயந்தார்—விரும்பப்பட்டார்.
நயப்பு—இன்பம்.
நனந்தலை—விசாலமான இடம்.
நனவு—சாக்கிரம்.
நாகம்—பாம்பு.
நாவலர்—பண்டிதர்
நாவல்—நெல்லரிதொழுவரை விளிக்கும் ஒருவார்த்தை.
நிரை—பசு.
படர்—துயர்.
பனை—பெருமை.
பந்தம்—கட்டு.
பரக்கழிவு—பழிவிளக்கை.
பல்லவம்—தளிர்.
பழுது—பொய்.
பறநாடு—பறம்புமலையையுடைய நாடு.
பறை—சிறை.
பனி—மழை.
பாசறை—பகைமேற்சென்றோர் உறையுமிடம்.
பார்த்திவர்—அரசர்.
பாரி—கடையெழுவள்ளல்களில் ஒருவன.
பாவித்தல--நன்றாக எண்ணுதல்.
பிண்டி—அசோகமரம்.
பீர—பசலை.
புணாச்சி—இணக்கம்.
புய்த்தல—பிடுங்குதல்.
புலம்பு—தனிமை.
புறங்காடு—சுடுகாடு.
பூரவம்—ஆருகதருடைய ஆகமங்களுள் ஒன்று.
பைதல—துயர்.
பொய்தல—விளையாட்டு.
மடுத்தல்—இடைப்படுத்தல.
மதுகரம்—வண்டு.
மதுசூதனன்—விட்டுணு.
மதுதண்டு—வீரர்குடிக்கும் பானம் வைத்திருக்கும் குழாய். மது-கள்ளுமுதலியன. தண்டு-குழாய். "மாம்பழக் கனிகளு மதுதண்டீட்டமும்." சீவகசிந்தாமணிகாரரும் "மதுத்தண்டோடுடையாடை" என்றார்.
மநதாநிலம்—தென்றற்காற்று.
மருட்டுதல்—மயக்குதல்.

மன்ற — நிச்சயம்.
மாதவன் — விட்டுணு.
மிதிலை — சூரியகுலத்து மிதி என்னும் அரசனாலே தாபிக்கப்பட்ட ஒரு பிரதான நகரி.
முகுரானன் — திருதராட்டிரன்.
முத்தலைவேல் — சூலப்படை.
முதுக்குறைவு — பேரறிவு.
முருகுகல் — அவிழ்தல்.
மேதி — எருமை.
மோடு — பெருமை.
யாதவன் — கண்ணபிரான். யது வமிசத்தவன் எனப் பொருள் படும். ஒரு தந்திரோபாயத்தன்.
வகை — பிரிவு.
வஞ்சி — ஒரூர்.
வடி — மாம்பிஞ்சின் பிளவு.
வடு — பிஞ்சு.
வதி — வழி.
வரதன் — வரங்கொடுப்போன்.
வரைவயிரம் — மூங்கில் வயிரம்.
வழி — மகன்.
வாள் — கொலை.
வானவன் — சேரன்.
வெள்ளில் — பாடை.
வெறி — நறுநாற்றம்.
வேரல் — சிறுமூங்கில்.
வேலாவலயம் — கடல்.
வேள்வு — வேள்வி.

# அநுக்கிரமணிகை.

பக்கம்.

தற்சிறப்புப்பாயிரம். க
அவையடக்கம். உ

## உறுப்பியல்.

எழுத்து. ௩

அசை. ௫
நேரசை. ௫
நிரையசை. ௬

சீர். எ
அகவற்சீர். அ
வெண்சீர். க0
வஞ்சிச்சீர். கக
பொதுச்சீர். கஉ
அசைச்சீர். க௫

தளை. க௬
நேரொன்றாசிரியத்தளை. கஅ
நிரையொன்றாசிரியத்தளை. கஅ
வெண்சீர்வெண்டளை. க௯
இயற்சீர்வெண்டளை. க௯
ஒன்றியவஞ்சித்தளை. உ0
ஒன்றாதவஞ்சித்தளை. உ0
கலித்தளை. உக

அடி. உஉ
குறளடி. உஉ
சிந்தடி. உ௩
அளவடி. உ௩
நெடிலடி. உ௪
கழிநெடிலடி. உ௫

தொடை. உ௯
மோனை. ௩0
இயைபு. ௩க
எதுகை. ௩உ
முரண். ,,

பக்கம்.

அளபெடை. ௩உ
அடிமோனைத்தொடை. ௩௩
அடியியைபுத்தொடை. ,,
அடியெதுகைத்தொடை. ,,
அடிமுரண்டொடை. ,,
அடியளபெடைத்தொடை. ,,
அந்தாதித்தொடை. ௩௫
இரட்டைத்தொடை. ௩௬
செந்தொடை. ௩௬
இணைமோனைத்தொடை. ௩அ
இணையியைபுத்தொடை. ,,
இணையெதுகை. ,,
இணைமுரண். ,,
இணையளபெடை. ,,
பொழிப்புமோனைத்தொ. ௩அ
பொழிப்பியைபுத்தொடை. ,,
பொழிப்பெதுகைத்தொ. ,,
பொழிப்புமுரண்டொடை. ,,
பொழிப்பளபெடைத்தொ. ,,
ஒரூஉமோனைத்தொடை. ௩௯
ஒரூஉவியைபுத்தொடை. ,,
ஒரூஉவெதுகைத்தொடை. ,,
ஒரூஉமுரண்டொடை. ,,
ஒரூஉவளபெடைத்தொ. ,,
கூழைமோனைத்தொடை. ௩௯
கூழையியைபுத்தொடை. ,,
கூழையெதுகைத்தொடை. ,,
கூழைமுரண்டொடை. ,,
கூழையளபெடைத்தொ. ,,
மேற்கதுவாய்மோனைத்தொ. ,,
மேற்கதுவாயியைபு. ,,
மேற்கதுவாயெதுகை. ,,
மேற்கதுவாய்முரண். ,,
மேற்கதுவாயளபெடை. ,,
கீழ்க்கதுவாய்மோனை. ,,
கீழ்க்கதுவாயியைபு. ,,
கீழ்க்கதுவாயெதுகை. ,,
கீழ்க்கதுவாய்முரண். ,,
கீழ்க்கதுவாயளபெடை. ௪0

# அநுக்கிரமணிகை.


| | பக்கம். |
|---|---|
| முற்றுமோனைத்தொடை. | ௪௦ |
| முற்றியைபுத்தொடை. | ,, |
| முற்றெதுகைத்தொடை. | ,, |
| முற்றுமுரண்டொடை. | ,, |
| முற்றளபெடைத்தொடை. | ,, |

## செய்யுளியல்.

| | |
|---|---|
| வெண்பா. | ௫௩ |
| குறள்வெண்பா. | ௫௪ |
| நேரிசைவெண்பா. | ௫௫ |
| இன்னிசைவெண்பா. | ௬௦ |
| பஃறொடைவெண்பா. | ௬௨ |
| சிந்தியல்வெண்பா. | ௬௩ |

### வெண்பாவினம்.

| | |
|---|---|
| வெள்ளைச்செந்துறை. | ௬௭ |
| குறட்டாழிசை. | ௬௮ |
| வெளிவிருத்தம். | ௭௦ |
| வெண்டாழிசை. | ௭௧ |
| வெண்டுறை. | ௭௧ |

| | |
|---|---|
| ஆசிரியப்பா. | ௭௩ |
| நேரிசையாசிரியப்பா. | ௭௪ |
| இணைக்குறளாசிரியப்பா. | ௭௫ |
| நிலைமண்டிலவாசிரியப்பா. | ௭௬ |
| அடிமறிமண்டிலவாசிரிய. | ௭௭ |

### ஆசிரியப்பாவினம்.

| | |
|---|---|
| ஆசிரியத்தாழிசை. | ௭௯ |
| ஆசிரியத்துறை. | ௭௯ |
| ஆசிரியவிருத்தம். | ௮௧ |

| | |
|---|---|
| கட்டளைக்கலிப்பா. | ௯௩ |

| | |
|---|---|
| கலிப்பா. | ௯௫ |
| நேரிசையொத்தாழிசை. | ௯௬ |
| அம்போதரங்கவொத்தா. | ௯௭ |
| வண்ணகவொத்தாழிசை | ௧௦௦ |
| வெண்கலிப்பா. | ௧௦௩ |
| தரவுகொச்சகக்கலிப்பா. | ௧௦௭ |
| தரவிணைக்கொச்சகக்க. | ௧௦௭ |
| சிஃறாழிசைக்கொச்சக. | ௧௦௮ |
| பஃறாழிசைக்கொச்சக. | ௧௦௯ |
| மயங்கிசைக்கொச்சகக். | ௧௧௦ |

### கலிப்பாவினம்.

| | |
|---|---|
| கலித்தாழிசை. | ௧௧௩ |
| கலித்துறை. | ௧௧௪ |
| கட்டளைக்கலித்துறை. | ௧௧௬ |
| கலிவிருத்தம். | ௧௧௮ |

| | |
|---|---|
| வஞ்சிப்பா. | ௧௨௦ |

### வஞ்சிப்பாவினம்.

| | |
|---|---|
| வஞ்சித்தாழிசை. | ௧௨௧ |
| வஞ்சித்துறை. | ௧௨௨ |
| வஞ்சிவிருத்தம். | ௧௨௨ |

| | |
|---|---|
| மருட்பா. | ௧௨௩ |

## ஒழிபியல்.

| | |
|---|---|
| எழுத்துப்புறனடை | ௧௨௯ |
| அசைகட்குப்புறனடை. | ௧௩௫ |
| அடிகட்குப்புறனடை. | ௧௪௨ |
| முரண்டொடை. | ௧௪௫ |
| எதுகையும் மோனையும். | ௧௪௭ |
| தரவுதாழிசைகட்கடிவ. | ௧௫௬ |
| கூன். | ௧௫௭ |
| விகாரம். | ௧௫௯ |
| வகையுளி. | ,, |
| வாழ்த்து. | ௧௬௦ |
| வசை. | ௧௬௧ |
| வனப்பு. | ,, |
| பொருள்கோள். | ,, |
| குறிப்பிசை. | ௧௬௨ |
| ஓப்பு. | ௧௬௪ |
| சொலவழு. | ௧௬௫ |
| ஆக்கக்குற்றம். | ௧௬௭ |
| வண்ணம். | ௧௬௮ |
| சந்தம். | ௧௮௧ |
| தாண்டகம். | ௧௮௧ |

# காரிகைக்கிரமசூசிகை.


| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| அசையடி | ௧00 | தண்ணிழல் | ௮ |
| அடிவரை | ௧௧௩ | தன்சீர்தனை | ௧௭ |
| அந்தமில்பாதம் | ௬௭ | தரவேதரவிணை | ௧0௬ |
| அந்தமுதலாத் | ௩0 | தரவொன்று | ௯௫ |
| அருகிக்கலி | ௧௪௪ | தருக்கியமுழிசை | ௭௮ |
| அறத்தாறிது | ௨௭ | திருமழையுள்ளார் | ௧௭ |
| இயற்றளைவெள்ளடி | ௧௪௨ | திரைத்தவிருது | ௨௨ |
| இருசீர்மிசை | ௩௭ | தூங்கேந்தடுக்கல் | ௧௬௮ |
| ஈரசைநாற்சீர் | ௮ | தென்றலிடை | ௧௨௩ |
| ஈரடிவெண்பா | ௫௪ | தேமாபுளிமா | ௮ |
| உருவுகண்டெள்ளா | ௫௪ | தேனார்கமழ் | ௨ |
| எழுத்தப்பதின்மூன் | ௧௮௮ | நற்கொற்றவாயில் | ௬௪ |
| எழுவாயெழுத்தொன்றின் | ௩0 | நின்றுவிளங்கு | ௧00 |
| ஒன்றும்பலவும் | ௫௯ | நேரிசையாகு | ௭௪ |
| கடையயற்பாதம் | ௭௪ | நேரிசையினிசை | ௬௪ |
| கந்தமடிவில் | ௧ | பண்பாபுறநிலை | ௧௨௩ |
| கந்தமுந்தேனும் | ௪௬ | பொருளோடடி | ௧௫௭ |
| கன்றுகுணிலா | ௭௮ | மடப்பிடி | ௧௨0 |
| கூடநிலைத்தனை | ௧0௬ | மாஞ்சீர்கலி | ௧௩௮ |
| குறளடிநான | ௧௨0 | மாவும்புண் | ௩0 |
| குறளிருசீரடி | ௨௨ | மூன்றடியாலும் | ௬௭ |
| குறிலேநெடிலே | ௫ | மோனைவிகற்பம் | ௪௧ |
| குறினெடிலாவி | ௪ | வருக்கநெடிலினம் | ௧௪௭ |
| குன்றக்குறவன் | ௮ | வளமபடவென்பது | ௪௮ |
| கொண்டன்முழங்கின | ௬௭ | வாணெடுங்கண் | ௯௬ |
| கொய்தினையாயினை | ௧௧௩ | விட்டிசைத்தல்லால் | ௧௩௫ |
| சீருந்தளையுஞ் | ௧௨௬ | வெண்பாவகவல | ௪௮ |
| சீரொடுவிட்டிசை | ௧௮௮ | வெண்பாவளம்பட | ௧௨௬ |
| சுருக்கமில | ௨ | வெள்ளைக்கிரண்டடி | ௨௭ |
| சுருங்கிறுமூன்றடி | ௧௫௬ | வைகலும் | ௬0 |

# சோதநசூசிகை.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௬ | ௧0 | ஒற்றுப் | க்குறில். |
| ௮ | ௨௧ | சீர் | சீர்க் |
| ௨௪ | ௧௨ | யாிய | யாிய |
| ௨௧ | ௧ | வஞ்சியடிய | வஞ்சியடி |
| ௧௮ | ௧௧ | மற்றைநயோனை | மற்றையவை. |
| ௫0 | ௧௫ | அகவற்பர் | அகவற்பா. |
| ௫௧ | ௨௧ | வண்டா | வன்பா |
| ௬௬ | ௧௨ | வினையொ | னெடினொ |
| ௯௭ | ௮ | வென்பால்வ | வென்பவால |
| ௧௪0 | ௨௬ | இரையகக் | இரையக |
| ௧௧0 | ௧0 | போலாதே | போதுமே |
| ௧௫௫ | ௧௧ | இடையிட்டெதுகை | (இவ்விரண்டும் [illegible] னடிபெதுகை என்பதன் முன் கொண்டு வாசிக்க.) |
| ௧௬௧ | ௨0 | மருட்கினைய | மருட்கினை |

# விலைப்புத்தக விக்கியாபநம்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| தண்டியலங்காரப்புத்துரை. இது முதனூலாகிய காவ்யாதர்சத்தோடும் வேறு பல அலங்கார நூல்களோடும் சேரவைத்து ஆராய்ந்து நன்கு விளக்கி, புத்துதாரணங்களும், சித்திரகவிப்படங்களும் விசேடமாகச்சேர்த்து அச்சிடப்பட்டிருக்கின்றது. | ௧ | 0 |
| யாப்பருங்கலக்காரிகைப்புத்துரை. இது முன்னுரைகளைப் பெரும்பாலும் விலக்கி முன்னுதாரணங்களோடு புத்துதாரணங்களும் இன்றியமையாத பல விஷயங்களுஞ் சேர்க்கப்பட்டிருக்கிறது. | ௧ | 0 |
| ஹிதோபதேசம். இது பஞ்சதந்திரத்திலும், மகாபாரதம் முதலிய நூல்களிலுமிருந்தெடுக்கப்பட்ட நீதிவாக்கியங்களையும் அவற்றிற்கியைந்த விநோதமான கதைகளையுமுடையது. | 0 | ௮ |
| நீதிநெறிவிளக்கவுரை. இது பழையவுரைகளினும் வேறான பலவிதமான திருத்தங்களையும், பரிமேலழகர் செய்த முதனூலுரைகளோடு இசையும் பொருத்தங்களையும், பல நீதிநூற் பிரமாணங்களையுமுடையது. | 0 | ௬ |
| இலக்கணசந்திரிகை. இது நன்னூல், சின்னூல் முதலிய இலக்கணங்களிலே அமையாது பாரதம், இராமாயணம் முதலியவற்றில் வந்து வழங்கும் ஆரியபதங்கட்கும், அரியனவாய தமிழ்ப்பதங்களுக்கும் பெரும்பாலும் விதிகாட்டி விளக்குவது. | 0 | ௪ |
| மேகதூதக்காரிகை. இது குபேரன்சாபத்தினாற் பிரிந்திருந்த இயக்கனொருவன் தன்மனைவிக்கு முகிலைத் தூது விட்டதாகப் பலவித வருணனையமைத்து வடமொழியிலே காளிதாச மஹாகவிசெய்த மேகதூதத்தின் பொருள்களையமைத்துக் கட்டளைக்கலித்துறையிற் செய்தது. | 0 | ௮ |

மகாமகோபாத்தியாய, டாக்டர்
வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

| | | ரூ. | |
|---|---|---|---|
| ௭. | சூடாமணிநிகண்டு; முதலாவது. இஃது அருகன், சிவன் முதலிய தேவர்களின் நாமங்களாகிய அருகன், எண்குணன், சங்கரன், உருத்திரன் முதலிய பதங்களுக்கெல்லாம் வடநூல்களிலுந் தமிழ்நூல்களிலுந் தேடி எழுதப்பட்ட ஒன்றும் பலவுமாய பொருள்களையுஞ் சிலவற்றின் கதைகளையு முடையது. | 0 | ௪ |
| ௮. | சூடாமணிநிகண்டு; இரண்டாவது இதுவும் முதலாவதுபோல எழுதப்பட்ட பொருளுடையது. | 0 | ௫ |
| ௯. | இரகுவமிசக் கருப்பொருள். | 0 | ௪ |
| ௧0. | திருவாதவூரர் புராணமூலம். | 0 | ௪ |
| ௧௧. | திருவாதவூரர் புராணவுரை. | 0 | ௧௨ |
| ௧௨. | யாப்பருங்கலப்பொழிப்புரையும் வெண்பாப் பாட்டியலும். | 0 | ௫ |
| ௧௩. | ஆத்திசூடிவெண்பா; கதைகளோடு. | 0 | ௪ |
| ௧௪. | நகுலமலைக்குறவஞ்சிநாடகம். | 0 | ௪ |
| ௧௫. | கலைசைச்சிலேடைவெண்பா; அரும்பதவுரை. | 0 | ௨ |
| ௧௬. | மறைசையந்தாதி; அரும்பதவுரை. | 0 | ௨ |
| ௧௭. | சதாசாரக் கவித்திரட்டு. | 0 | ௨ |
| ௧௮. | ஆசாரக்கோவை. | 0 | ௨ |
| ௧௯. | பழமொழிவிளக்கம். | 0 | ௨ |
| ௨0. | ஏகவிருத்தபாரதாதி. | 0 | ௨ |
| ௨௧. | மிலேச்சமதவிகற்பக்கும்மி. | 0 | ௨ |
| ௨௨. | மாவைப்பதிகம், மாவையிரட்டைமணிமாலை. | 0 | ௧ |
| ௨௩. | உரிச்சொனிகண்டு. | 0 | ௪ |

இவற்றுள்ளே தண்டியலங்காரப் புத்துரையும், யாப்பருங்கலக்காரிகைப்புத்துரையும் சென்னை தங்கசாலைவீதியில் ௧00-ம் இலக்கவீட்டிலுள்ள வித்தியாநுபாலனயந்திரசாலையிலும், சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் பெற்றுக்கொள்ளத்தக்கன. தபாற்கூலிவேறே.

யாழ்ப்பாணத்துச் சுன்னாகம்,
பிலவங்க௵ பங்குனிமீ.

இங்ஙனம்,
அ. குமாரசுவாமிப்பிள்ளை.